KURIKULUM STANDARD SEKOLAH MENENGAH

# தமிழ்மொழி
# Bahasa Tamil

## Tingkatan 2
## படிவம் 2


**PENULIS** / ஆசிரியர்கள்

CHANDRAN VERAMUTTHU
சந்திரன் வீரமுத்து

SARASWATHY KANNAN
சரஸ்வதி கண்ணன்

**EDITOR** / பதிப்பாசிரியர்கள்

RAJENDRAM PERUMAL
இராஜேந்திரம் பெருமாள்

AMUTHA VALLI PERUMAL
அமுதவள்ளி பெருமாள்

**PEREKA BENTUK** / வடிவமைப்பாளர்

AMOS RAJA
ஆமோஸ் ராஜா

APPUTHI MURUGAYA
அப்பூதி முருகையா

**ILUSTRATOR** / ஓவியர்

AZRUL HELMI BIN ABD. WAHAB
அஸ்ருல் ஹெல்மி பின் அப்துல் வஹாப்

MASEH BIN SUPIAN
மாசேஹ் பின் சுபியான்



Multi Educational Book Enterprise
2017

KEMENTERIAN
PENDIDIKAN
MALAYSIA

No Siri Buku : 0067

KPM2016 ISBN 978-967-2046-12-7
Cetakan Pertama 2017

**© Kementerian Pendidikan Malaysia**

Hak Cipta Terpelihara. Mana-mana bahan dalam buku ini tidak dibenarkan diterbitkan semula, disimpan dalam cara yang boleh dipergunakan lagi, ataupun dipindahkan dalam sebarang bentuk atau cara, baik dengan cara bahan elektronik, mekanik, penggambaran semula mahupun dengan cara perakaman tanpa kebenaran terlebih dahulu daripada Ketua Pengarah Pelajaran Malaysia, Kementerian Pendidikan Malaysia. Perundingan tertakluk kepada perkiraan royalti atau honorarium.

**Diterbitkan untuk**
**Kementerian Pendidikan Malaysia oleh:**

**Multi Educational Book Enterprise**
No. 22A-2, Jalan PJS 8/4,
Dataran Mentari, Bandar Sunway,
46150 Petaling Jaya,
Selangor Darul Ehsan.
Tel: 03-5636 2568
Faks: 03-5636 0825
Laman Web: http://www.multiedu.com.my

**Reka Letak dan Atur Huruf**

**Multi Educational Book Enterprise**
Muka Taip Teks: Dhanyeta
Saiz Muka Taip Teks:12/11 poin

**Dicetak oleh :**

Aslita Sdn. Bhd. (146102-U)
No. 20, Jalan 4/10B, Spring Crest Industrial Park,
Batu Caves, 68100 Kuala Lumpur.
Tel:03-61867645
Faks:03-61867635

# PENGHARGAAN

Penerbitan buku teks ini melibatkan kerjasama banyak pihak. Sekalung penghargaan dan terima kasih ditujukan kepada semua pihak yang terlibat:

- Jawatankuasa Penambahbaikan Pruf Muka Surat, Bahagian Buku Teks, Kementerian Pendidikan Malaysia.
- Jawatankuasa Penyemakan Pembetulan Pruf Muka Surat, Bahagian Buku Teks, Kementerian Pendidikan Malaysia.
- Jawatankuasa Penyemakan Naskhah Sedia Kamera, Bahagian Buku Teks, Kementerian Pendidikan Malaysia.
- Pegawai-pegawai Bahagian Buku Teks dan Bahagian Pembangunan Kurikulum, Kementerian Pendidikan Malaysia.
- Jawatankuasa Peningkatan Mutu Penerbit
- Kementerian Pelancongan dan Kesenian Malaysia
- Kementerian Kesihatan Malaysia
- Kementerian Belia dan Sukan
- MASS Rapid Transit Corporation Sdn. Bhd.
- SMK Raja Mahadi, Klang. Selangor
- SMK Vivekananda, Brickfields, Kuala Lumpur
- SMK Chaah, Johor
- Yayasan Sukan dan Kebudayaan India, Malaysia
- Akhbar Harian Makkal Osai
- CH Supermarket Sdn. Bhd.
- Ahsni Beauty Care & Hair Saloon
- Barathi Fine Arts, Taman Melawati, Kuala Lumpur
- NEPWIN Fire Fighting Engineering & Services

Ribuan terima kasih juga diucapkan kepada pihak yang telah memberi sumbangan dalam menjayakan penerbitan buku teks ini. Pelbagai inisiatif telah diambil oleh pihak penerbit untuk mengesan semua pemilik hak cipta bahan dalam buku teks ini. Walau bagaimanapun, pihak penerbit mengalu-alukan jasa baik pihak berkenaan untuk membenarkan kami menerbit semula bahan itu. Diharapkan maklumat pihak berkenaan dapat kami peroleh supaya dapat merakamkan ucapan penghargaan dalam edisi yang akan datang.

# உள்ளடக்கம்


முன்னுரை iv

மொழிக்கூறுகளுக்கான படச் சின்னங்கள் v

சிந்தனை வரைபடம் vi

தொகுதி படர்ச்சி vii


தொகுதிகள்


| | | |
|---|---|---|
| 1 | வளமான குடும்பம் | 1 |
| 2 | நலம் போற்றுவோம் | 12 |
| 3 | தகவல் தொடர்புத் தொழில் நுட்பம் | 22 |
| 4 | அறிவியல் உலகம் | 32 |
| 5 | உணவே மருந்து | 42 |
| 6 | பொதுப் போக்குவரத்து | 54 |
| 7 | சுற்றுச்சூழலும் நாமும் | 66 |
| 8 | தமிழைப் போற்றுவோம் | 79 |
| 9 | வணிகவியல் | 89 |
| 10 | நன்னெறிப் பண்பு | 103 |
| 11 | நல்லறம் கூறும் இலக்கியம் | 114 |
| 12 | சமூகவியல் | 126 |
| 13 | நவீன வளர்ச்சி | 134 |
| 14 | விளையாடுவோம் வாரீர் | 144 |
| 15 | வரலாறு அறிவோம் | 156 |
| 16 | புவியியலும் அறிஞர்களும் | 167 |
| 17 | இறையருள் பெறுவோம் | 176 |
| 18 | பாதுகாப்பும் நாமும் | 186 |
| 19 | பயனீட்டாளர் கல்வியும் சுகாதாரமும் | 197 |
| 20 | மலேசியர்களின் பண்பாடுகள் | 208 |
| 21 | மொழியும் நாமும் | 220 |

அகர நிரல் குறிப்பு 229

துணை நூல் பட்டியல் 230




# முன்னுரை

தமிழ்மொழி, உலகின் தொன்மையான மொழிகளுள் ஒன்றாகும். அள்ள அள்ளக் குறையாத எண்ணக் கருவூல மையம் தமிழ்மொழியே என்றால் அது மிகையாகாது! இத்தகைய பெருமை வாய்ந்த தமிழ்மொழியை மாணவர்களிடத்தே வேரூன்றச் செய்வதில் தமிழ்மொழிப் பாட நூல்கள் பெரிதும் பங்காற்றுகின்றன.

இலக்கண இலக்கியங்களையும் புராணங்களையும் தமிழ்மொழிப் பாடநூல்கள் மாணவர்களுக்குச் சிறப்புற எடுத்துரைக்கின்றன. இலக்கணங்களை முறையாகப் பயன்படுத்தும் வழிமுறைகளையும் மாணவர்களுக்குத் தெள்ளத் தெளிவாக எடுத்துரைப்பதும் பாடநூல்களேயாகும்.

எளிமை, இனிமை, தொன்மை எனும் தனிப்பண்புகளுடைய தமிழ்மொழியை மாணவர்கள் கற்பதன் மூலம் ஆளுமைத்திறன், பொது அறிவு, நற்பண்பு, குடிமை, பிற சமுதாயப் பண்பாடுகளை மதித்தல், சமய நெறிகளைப் போற்றிப் பாதுகாத்தல் ஆகிய உயர்ந்த கூறுகளையும் பெற்றுச் சிறந்து விளங்கிட இயலும்.

கல்வி கற்ற சமுதாயமே ஆற்றல் மிகு சமுதாயமாக உருவாக முடியும் என்பதை உணர வைப்பதே பாடநூல்கள்தான்.

**எளிய நடையில், தமிழ்நூல் எழுதிடவும் வேண்டும்!**
**இலக்கணநூல் புதிதாக இயற்றுதலும் வேண்டும்!**
**வெளியுலகில், சிந்தனையில், புதிதுபுதி தாக**
**விளைந்துள்ள எவற்றினுக்கும், பெயர்களெல்லாங் கண்டு,**
**தெளிவுறுத்தும் படங்களொடு, சுவடியெலாம் செய்து,**
**செந்தமிழைத் செழுந்தமிழாய்ச் செய்வதும் வேண்டும்!**

என்றார் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன். அவரின் கூற்றுக்கு ஏற்ப இப்பாடநூலில் மொத்தம் 21 தொகுதிகள் இலகுவான முறையில் படைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு தொகுதியிலும் கேட்டல் பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய கூறுகள் மட்டுமின்றி மொழியணிக் கூறுகளும் இலக்கணக் கூறுகளும் தொடர்ந்து இணைக்கப்பட்டுள்ளன.

மேலும், உயர்நிலைச் சிந்தனைக் கேள்விகளையும் உள்ளடக்கிய இடுபணிகளும் சேர்க்கப்பட்டுள்ளன. கற்றல் நடவடிக்கைகளை வலுவாக்கவும், மகிழ்வூட்டவும் இணையத்தள நோக்குக் குறியீடுகளான QR & AR பயன்பாடுகளும் சிறப்புச் சேர்க்கின்றன.

கற்றல் பணியில் நல்லாசான்களாகிய நாம் ஒன்றிணைந்து கல்விப் பாதையைச் சிறப்புறச் செய்வோம். இறுதியாக, எங்களின் எண்ணங்களை எழுத்து வடிவமாக்கி அவற்றைத் தொகுத்துச் சிறந்ததொரு பாடநூலாக உருமாற்ற உதவி நல்கிய மலேசிய கல்வி அமைச்சின் பாடநூல் பிரிவுக்கு எங்களின் மனமார்ந்த நன்றியினைச் சமர்ப்பிக்கின்றோம்.

‘சென்றிடுவீர் எட்டுத் திக்கும் - கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்குச் சேர்ப்பீர்’
- பாரதியார்

நன்றி,
ஆசிரியர்கள்

## மொழிக்கூறுகளுக்கான படச் சின்னங்கள்

கேட்டல் பேச்சு

வாசிப்பு

எழுத்து

செய்யுளும் மொழியணியும்

இலக்கணம்

குறைநீக்கல்

அறிந்து கொள்க

வளப்படுத்துதல்

உயர்நிலைச் சிந்தனை

### இணையத் தளம் QR நோக்குக் குறியீடு

App Store | Google play

ஒரு தலைப்பின் உள்ளடக்கத்திற்குத் தொடர்புடைய அகப்பக்கத்தைத் தேட மாணவர்களை ஊக்குவித்தல்.

தொடர்புடைய தேடுபொருளைப் பயனீட்டாளர்கள் விரைவில் தேடிட (QR) நோக்குக் குறியீடு துணை புரிகிறது.

### ஜாப்பரைப் (ZAPPAR) பெறவும்

App Store | Google play


முன்கூட்டியே ஜாப்பர் (Zappar) எனும் செயலியைப் பதிவிறக்கம் செய்து இந்நோக்குக் குறியீட்டை அடையவும்.

இங்கு நோக்குக

AR நோக்குக் குறியீடு


# சிந்தனை வரைபடம்

1




வட்ட வரைபடம்
(சூழலுக்கு ஏற்ப வரையறுத்தல்)

2




குமிழி வரைபடம்
(சொல் சொற்றொடர்களைக் கொண்டு விவரித்தல்)

3




பல்நிலை நிரலொழுங்கு வரைபடம்
(காரணங்களையும் விளைவுகளையும் ஆராய்தல்)

4




இரட்டிப்புக் குமிழி வரைபடம்
(ஒற்றுமை வேற்றுமைகளை அறிதல்)

5




இணைப்பு வரைபடம்
(முழுமைப் பொருளையும் பகுதியையும் பகுப்பாய்வு செய்தல்)

6




நிரலொழுங்கு வரைபடம்
(கருத்துகளை நிரல்படுத்துதல்)

7



மர வரைபடம்
(வகைப்படுத்துதல்; குழுமப்படுத்துதல்)

8



பால வரைபடம்
(ஒற்றுமையைக் காணுதல்)

# தொகுதி படர்ச்சி

| கருப்பொருள் | தலைப்பு | கற்றல் தரம் | மொழியணி / இலக்கணம் | சிந்தனை வரைபடம் | உயர்நிலைச் சிந்தனைத்திறன் |
|---|---|---|---|---|---|
| **தொகுதி 1**<br><br>**வளமான குடும்பம்** | 1. குடும்ப நலம் காப்போம்<br>2. கூட்டுக் குடும்பம்<br>3. பெற்றோர் கடமை<br>4. செய்யுளும் மொழியணியும் | 1.1.2<br>2.1.4<br>3.1.3<br>4.1.2 | இரட்டைக் கிளவி | இரட்டிப்புக் குமிழி வரைபடம் | பாடம் 1:<br>இடுபணி 2<br>இடுபணி 3 |
| **தொகுதி 2**<br><br>**நலம் போற்றுவோம்** | 1. ஆரோக்கியமான வாழ்க்கை<br>2. கரப்பான் நோய்<br>3. டிங்கிக் காய்ச்சல்<br>4. இலக்கணம் | 1.2.2<br>2.3.4<br>3.2.3<br>5.1.2 | இலக்கணம் -<br><br>அகவினா<br>புறவினா | குமிழி வரைபடம் | பாடம் 2:<br>இடுபணி 2 |
| **தொகுதி 3**<br><br>**தகவல் தொடர்புத் தொழில்நுட்பம்** | 1. திறன்பேசியின் பயன்கள்<br>2. இணையம்<br>3. நாமும் தகவல் தொழில்நுட்பமும்<br>4. செய்யுளும் மொழியணியும் | 1.4.3<br>2.2.3<br>3.2.4<br>4.2.2 | திருக்குறள் (517) | மர வரைபடம் | பாடம் 2:<br>இடுபணி 4 |
| **தொகுதி 4**<br><br>**அறிவியல் உலகம்** | 1. அறிவியல் வளர்ச்சியும் விளைவுகளும்<br>2. அறிவியல் மேதை ஏ.பி.ஜே. அப்துல் கலாம்<br>3. அறிவியல் சாதனங்கள்<br>4. இலக்கணம் | 1.3.4<br>2.3.6<br>3.3.2<br>5.6.1 | இலக்கணம் -<br><br>விழைவு வாக்கியம் | மர வரைபடம் | பாடம் 2:<br>இடுபணி 2 |
| **தொகுதி 5**<br><br>**உணவே மருந்து** | 1. கீரைகளை அறிவோம்<br>2. உணவும் உண்ணும் முறையும்<br>3. ஆரோக்கியமான உணவு<br>4. செய்யுளும் மொழியணியும் | 1.5.2<br>2.1.5<br>3.4.12<br>4.4.2 | இணைமொழி | இணைப்பு வரைபடம் | பாடம் 1:<br>இடுபணி 2<br><br>பாடம் 2:<br>இடுபணி 2 |

| கருப்பொருள் | தலைப்பு | கற்றல் தரம் | மொழியணி / இலக்கணம் | சிந்தனை வரைபடம் | உயர்நிலைச் சிந்தனைத்திறன் |
|---|---|---|---|---|---|
| **தொகுதி 6**<br>**பொதுப் போக்குவரத்து** | 1. அதிவிரைவு இரயில்<br>2. மலேசியாவில் பொதுப் போக்குவரத்து<br>3. எங்கள் கடமை<br>4. இலக்கணம் | 1.4.4<br>2.4.2<br>3.1.4<br>5.3.2<br>5.3.3 | இலக்கணம் -<br>தோன்றல் விகாரம் | இரட்டிப்புக் குமிழி வரைபடம்<br>குமிழி வரைபடம்<br>மர வரைபடம் | பாடம் 1: இடுபணி 2<br>பாடம் 2: இடுபணி 2 |
| **தொகுதி 7**<br>**சுற்றுச்சூழலும் நாமும்** | 1. நன்றி நவில்வோம்<br>2. பசுமையை நேசிப்போம்<br>3. மரம் நடுவோம்<br>4. செய்யுளும் மொழியணியும் | 1.3.3<br>2.1.4<br>3.4.10<br>4.5.2 | உவமைத் தொடர் | | |
| **தொகுதி 8**<br>**தமிழைப் போற்றுவோம்** | 1. தமிழ் அறிஞர்கள்<br>2. தமிழ்க் கவிதையும் கவிஞனும்<br>3. மலேசியத் தமிழ்ப்பள்ளிகள்<br>4. இலக்கணம் | 1.2.2<br>2.3.5<br>3.3.2<br>5.2.3 | இலக்கணம் -<br>உரிச்சொல் | குமிழி வரைபடம் | பாடம் 2:<br>இடுபணி 2<br>இடுபணி 4<br>இடுபணி 5<br>இடுபணி 6<br>இடுபணி 7 |
| **தொகுதி 9**<br>**வணிகவியல்** | 1. தையல் கலையின் சிறப்பு<br>2. வியாபாரம் செய்வோம்<br>3. கைவினைக் கலை<br>4. செய்யுளும் மொழியணியும் | 1.4.3<br>2.1.5<br>3.4.11<br>4.3.2 | பல்வகைச் செய்யுள்<br>நாலடியார் | மர வரைபடம் | பாடம் 2: இடுபணி 2 |
| **தொகுதி 10**<br>**நன்னெறிப் பண்பு** | 1. பண்புள்ள மாந்தர்<br>2. உளிபடாத கல் சிலையாவதில்லை<br>3. விவேகச் சிந்தனையாளர்<br>4. இலக்கணம் | 1.3.4<br>2.2.3<br>3.2.3<br>3.4.12<br>5.4.2 | இலக்கணம்<br>- வலிமிகும் இடங்கள் | மர வரைபடம் | பாடம் 2: இடுபணி 2 |

| கருப்பொருள் | தலைப்பு | கற்றல் தரம் | மொழியணி / இலக்கணம் | சிந்தனை வரைபடம் | உயர்நிலைச் சிந்தனைத்திறன் |
|---|---|---|---|---|---|
| **தொகுதி 11**<br>**நல்லறம் கூறும் இலக்கியம்** | 1. இன்பத் தமிழ் இலக்கிய விழா<br>2. சங்க இலக்கியத்தில் திருக்குறள்<br>3. பல்லினப் பண்பாட்டு விழா<br>4. செய்யுளும் மொழியணியும் | 1.3.3<br>2.4.2<br>3.4.8<br>4.6.2 | மரபுத்தொடர் | குமிழி வரைபடம் | பாடம் 2:<br>இடுபணி 2 |
| **தொகுதி 12**<br>**சமூகவியல்** | 1. பள்ளிச் சிற்றுண்டிச் சாலை<br>2. உடல் நலம் காப்போம்<br>3. நலமிகு சமுதாயம்<br>4. இலக்கணம் | 1.1.2<br>2.3.4<br>3.1.4<br>5.2.4 | இலக்கணம் -<br>இயற்சொல்<br>திரிசொல் | குமிழி வரைபடம் | பாடம் 2:<br>இடுபணி 2 |
| **தொகுதி 13**<br>**நவீன வளர்ச்சி** | 1. மறைக்காணி<br>2. விண்வெளிப் பயணம்<br>3. நிலவிலும் சாத்தியமே!<br>4. செய்யுளும் மொழியணியும் | 1.4.4<br>2.3.6<br>3.4.13<br>4.2.2 | திருக்குறள் (664) | | பாடம் 2:<br>இடுபணி 2 |
| **தொகுதி 14**<br>**விளையாடுவோம் வாரீர்** | 1. சதுரங்கம்<br>2. பூப்பந்து வீரர்<br>3. நம்மால் முடியும்<br>4. இலக்கணம் | 1.4.4<br>2.1.5<br>3.3.2<br>5.5.3 | இலக்கணம்<br>ஐந்தாம் வேற்றுமை உருபு | குமிழி வரைபடம் | பாடம் 2:<br>இடுபணி 2 |
| **தொகுதி 15**<br>**வரலாறு அறிவோம்** | 1. தமிழை வளர்ப்போம்<br>2. கல்வெட்டு எழுத்துகள்<br>3. மொழிக் கழகம்<br>4. செய்யுளும் மொழியணியும் | 1.2.2<br>2.3.5<br>3.4.9<br>4.7.2 | பழமொழி | குமிழி வரைபடம் | பாடம் 2:<br>இடுபணி 1<br>இடுபணி 2<br>இடுபணி 4 |

| கருப்பொருள் | தலைப்பு | கற்றல் தரம் | மொழியணி / இலக்கணம் | சிந்தனை வரைபடம் | உயர்நிலைச் சிந்தனைத்திறன் |
|---|---|---|---|---|---|
| **தொகுதி 16**<br>**புவியியலும் அறிஞர்களும்** | 1. நமது பூமி<br>2. அறிவியல் அறிஞர்கள்<br>3. நேசிப்போம் சுவாசிப்போம்<br>4. இலக்கணம் | 1.4.4<br>2.3.6<br>3.1.3<br>5.2.4 | இலக்கணம் -<br>வடசொல்<br>திசைச் சொல் | மர வரைபடம்<br>இணைப்பு வரைபடம் | பாடம் 2:<br>இடுபணி 1 |
| **தொகுதி 17**<br>**இறையருள் பெறுவோம்** | 1. வழிபாட்டுத் தலங்கள்<br>2. அன்பே கடவுள்<br>3. நம்பிக்கை வேண்டும்<br>4. செய்யுளும் மொழியணியும் | 1.4.3<br>2.1.4<br>3.4.14<br>4.3.2 | பல்வகைச் செய்யுள்<br>நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் | நிரலொழுங்கு வரைபடம் | பாடம் 2:<br>இடுபணி 2 |
| **தொகுதி 18**<br>**பாதுகாப்பும் நாமும்** | 1. உயிரை மதிப்போம்<br>2. வீட்டில் பாதுகாப்பு<br>3. சுற்றுச்சூழல் பாதுகாப்பு<br>4. இலக்கணம் | 1.1.2<br>2.1.5<br>3.2.4<br>3.4.12<br>5.4.3 | இலக்கணம்<br>வலிமிகுதல் | இரட்டிப்புக் குமிழி வரைபடம் | பாடம் 2:<br>இடுபணி 2 |
| **தொகுதி 19**<br>**பயனீட்டாளர் கல்வியும் சுகாதாரமும்** | 1. மலேசிய சுகாதார அமைச்சு<br>2. நெகிழியால் ஆபத்து!<br>3. விழிப்புணர்வு<br>4. செய்யுளும் மொழியணியும் | 1.5.2<br>2.3.4<br>3.4.9<br>4.7.2 | பழமொழி | குமிழி வரைபடம் | பாடம் 1:<br>இடுபணி 3<br>பாடம் 2:<br>இடுபணி 1 |
| **தொகுதி 20**<br>**மலேசியர்களின் பண்பாடுகள்** | 1. பண்பாட்டைக் காப்போம்<br>2. தீபத் திருநாள்<br>3. திருமண வைபவம்<br>4. இலக்கணம் | 1.3.4<br>2.2.3<br>3.4.10<br>5.5.4 | இலக்கணம்<br>ஆறாம் வேற்றுமை உருபு | | பாடம் 2:<br>இடுபணி 2<br>இடுபணி 4 |
| **தொகுதி 21**<br>**மொழியும் நாமும்** | 1. டேவான் பஹாசா டான் புஸ்தாக்கா<br>2. தாய்மொழிக் கல்வி<br>3. தமிழ் எழுத்தாளரானால்...<br>4. செய்யுளும் மொழியணியும் | 1.5.2<br>2.3.5<br>3.4.13<br>4.2.2 | திருக்குறள் (305) | குமிழி வரைபடம்<br>மர வரைபடம் | பாடம் 1<br>இடுபணி 2<br>பாடம் 2:<br>இடுபணி 2 |

தொகுதி 1 வளமான குடும்பம்

பாடம் 1 குடும்ப நலம் காப்போம்

## குழுவில் கலந்துரையாடுக.

உயர்ந்த எண்ணமும் பணிவான செயலும் இனிமையான பேச்சும் மகிழ்ச்சியான குடும்பத்திற்கு அடிப்படையாக விளங்குகின்றன.

பெற்றோரின் அன்பான போதனையும் அறிவான வழிகாட்டலும் நல்ல பண்பான குடும்பத்தை உருவாக்குகின்றன.

இறைநம்பிக்கையும் ஆன்மிகச் சிந்தனையும் மிகுந்த குடும்பத்தில் அன்பும் பணிவும் மிளிர்கின்றன.



நல்லதொரு குடும்பம்

உடல்நலமும் உளநலமும் பேணப்படும் குடும்பத்தில் ஆரோக்கியம் மிகுந்திருக்கின்றது.

ஆக்ககரமான சிந்தனையும் அறிவார்ந்த செயல்திட்டமும் வளமான குடும்பம் உருவாக அடித்தளமாக அமைகின்றன.

விட்டுக் கொடுத்து வாழ்வதும், புரிந்துணர்வுடன் செயல்படுவதும், சகிப்புத்தன்மையைக் கையாள்வதும் நல்லதொரு குடும்பத்திற்கு இலக்கணமாக விளங்குகின்றன.

செவிமடுத்திடுக

1.1.2 • செவிமடுத்தவற்றிலுள்ள கருத்துகளைத் தொகுத்துக் கூறுவர்.

தொகுதி 1

## இடுபணி 1

**நல்லதொரு குடும்பம் தொடர்பான கருத்துகளைத் தொகுத்துக் கூறுக.**



## இடுபணி 2

**வினாக்களுக்கு விடை கூறுக.**

அ. பண்பான குடும்பத்தை எவ்வாறு உருவாக்கலாம்?

ஆ. வளமான குடும்பத்திற்கு அடித்தளமாக விளங்குவது என்ன?

இ. நல்லதொரு குடும்பத்தின் இலக்கணம் யாது?

ஈ. பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு எவ்வாறு முன்மாதிரியாக விளங்கலாம்?

உ. எதிர்காலத்தில் நல்லதொரு குடும்பத்தை நீ எவ்வாறு உருவாக்க விரும்புகிறாய்?

## இடுபணி 3

**நல்லதொரு குடும்பத்தை உருவாக்குவதன் அவசியத்தைத் தொகுத்துக் கூறுக.**

## இடுபணி 4

**பத்தியிலுள்ள கருத்துகளைத் விவரித்துக் கூறுக.**

அ. பெற்றோர்களே பிள்ளைகளின் முதன்மை வழிகாட்டிகளாகத் திகழ்கின்றனர். வாழ்க்கைக்கு அவசியம், அநாவசியம், அத்தியாவசியம் எவை என்பனவற்றை ஆராய்ந்தறிய வழிகாட்ட வேண்டும். நல்லது கெட்டது யாதெனப் பகுத்தறிய வழிகாட்ட வேண்டும். பெற்றோரின் அறிவும் அனுபவமும் பிள்ளைகளுக்குத் துணை புரிய வேண்டும்.

ஆ. விட்டுக் கொடுப்பவர்கள் கெட்டுப் போவதில்லை என்பது போல குடும்பத்தினர் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து வாழ வேண்டும். சகிப்புத்தன்மை மிகுந்த குடும்பத்தில் அமைதியும் சுபிட்சமும் நிலவும் என்பது திண்ணம். குடும்பத்தினரின் குற்றங்களையும் குறைகளையும் பெரிதுபடுத்தாமல் மன்னித்து மறப்பது அவசியமாகும்.

இ. குடும்ப உறுப்பினர்கள் அடிக்கடி மனம் விட்டுப் பேசுவது மட்டுமின்றி சொந்த சிக்கல்களைப் பகிர்ந்து கொண்டு அவற்றைக் களைந்திட முயற்சிக்க வேண்டும். மனச் சுமைகளை இறக்கி வைத்தால்தான் மன அழுத்தத்திலிருந்து விடுபட முடியும்.

இடுபணி 5

வரைபடத்திலுள்ள கருத்துகளைப் படங்களின் துணையுடன் தொகுத்துக் கூறுக.



# பாடம் 2 கூட்டுக் குடும்பம்

## வாசித்து அறிக.

மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே,
அறிவுசால் ஆசிரியப் பெருந்தகையினரே, அன்பார்ந்த மாணவ நண்பர்களே உங்கள் அனைவருக்கும் இனிய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வினிய வேளையில் 'கூட்டுக் குடும்பத்தின் சிறப்புகள்' எனும் தலைப்பில் ஓர் உரை நிகழ்த்தவுள்ளேன்.

அன்புசால் வருகையாளர்களே,
**தனிக் குடும்பம்**, கூட்டுக் குடும்பம் என்று இரண்டு குடும்ப வாழ்வு முறைகள் இருந்தாலும், இன்று கூட்டுக் குடும்பத்தின் சிறப்புகளைப் பற்றியே உரையாற்ற வந்துள்ளேன். ஒருவரை ஒருவர் சார்ந்து ஒருமித்த கருத்துடன் ஒன்றுகூடி வாழ்வதே கூட்டுக் குடும்பத்தின் சிறப்பியல்பாகும். அம்மா, அப்பா, தாத்தா, பாட்டி, குழந்தைகள், அக்காள், மாமா, அண்ணன், அண்ணி, உறவினர்கள் ஆகியோருடன் ஒரே குடும்பமாக **இணைந்து** வாழும் முறையே கூட்டுக் குடும்ப முறை எனப்படுகிறது.

அறிவார்ந்த நண்பர்களே,
முன்னதைப் பார்த்துப் பின்னது போகும் என்பதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? குடும்பத்தில் மூத்தவர்களின் அனுபவமும் அறிவும் நல்ல வழிகாட்டலாக அமைய கூட்டுக் குடும்பம் வழிவகுக்கின்றது. தாத்தா, பாட்டியின் **அனுபவங்கள்** நமக்குக் கலை, பண்பாடு



ஆகியவற்றை அறிந்து கொள்ளவும் பல தெளிவுகளையும் விளக்கங்களையும் பெறத் துணை புரிகின்றன. நற்பண்புகளும் நன்னெறிகளும் நமக்குப் பெரியவர்களால் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. பண்டிகைகள், விழாக்கள் பற்றிய விளக்கங்களும் சமையற்கலை, உணவு முறை பற்றிய தெளிவுகளும் வழங்கப்படுகின்றன. மேலும் உடல் **நலம்** பேணும் வழிமுறைகளும் நமக்குப் போதிக்கப்படுகின்றன.

பெரியோர்களே,

குடும்பத்தில் ஏதேனும் சிக்கல்கள் தோன்றினால் ஆலோசனைகளும் **தீர்வுகளும்** பெரியோர்களால் வழங்கப்படுகின்றன. அவைமட்டுமா? கணவன் மனைவி உறவுகள் மேம்பட நல்வழிகளைக் காட்டுவதோடு உறவுகளில் **விரிசல்கள்** ஏற்படாதவாறு வாழ்ந்தும் காட்டுகின்றனர். கூட்டுக் குடும்பத்தின் சிறப்புகளை மேலும் கூறட்டுமா? கூட்டுக் குடும்பத்தில் அன்பும் பாசமும் பரிவும் மேலோங்கி இருக்கும். மனம் துவண்டு போகும் வேளையில் பெரியவர்களின் ஆறுதல் மொழிகள் நல்ல மருந்தாக அமையும். கூட்டுக் குடும்பத்தில் பாதுகாப்பு உறுதி செய்யப்படுகின்றது. கூட்டுக் குடும்பத்தில் யாருக்கேனும் உடல் நலக்குறைவு ஏற்பட்டால், அனைவரும் பாசத்துடன் அருகிலிருந்து பார்த்துக் கொள்வர்.

அவையோர்களே,

கூட்டுக் குடும்பத்தில் விழாக் காலங்களில் **குதூகலத்திற்கும்** மகிழ்ச்சிக்கும் அளவே இல்லை. தீபாவளி, பொங்கல், நோன்புப் பெருநாள், சீனப் புத்தாண்டு காலங்களில் ஒன்றுகூடிச் சிரித்துப் பேசி மகிழ்வார்கள். கூட்டுக் குடும்பத்தின் சிறப்புகளை அறிந்து ஒற்றுமையாக வாழ்வோம் என்று கூறி விடைபெறுகிறேன். நன்றி.



**2.1.4** • உரையைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர்.

## இடுபணி 1


**வண்ணமிடப்பட்ட சொற்களுக்குப் பொருள் கூறுக.**

## இடுபணி 2

**கூட்டுக் குடும்பத்தின் சிறப்புகள் பற்றிய உரையைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக் குறிகளுக்கேற்ப வாசித்திடுக; கருத்துரைத்திடுக.**

## வளப்படுத்துதல்

**தனிக் குடும்ப வாழ்க்கை முறைக்கும் கூட்டுக் குடும்ப வாழ்க்கை முறைக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை இரட்டிப்புக் குமிழி வரைபடத்தில் எழுதுக; வாசித்திடுக.**





## குறைநீக்கல்

**உரையைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு, ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கு ஏற்ப வாசித்திடுக.**



நண்பர்களே! தனிக் குடும்பமாக வாழும் வாழ்க்கையில் மன அமைதியும் மகிழ்ச்சியும் சுதந்திரமும் மிகுந்திருக்கும் என்பதை யாரும் மறுக்க முடியாது. மேலும் தனிக் குடும்பத்தில் சிக்கனமாகவும் நினைத்த காரியத்தைத் தடைகளின்றியும் செய்ய முடியும். கூட்டுக் குடும்பத்தில் முடியுமா?



பெரியோர்களே! இன்றைய நவீன காலத்தில் பாதுகாப்பாக இருப்பதற்கும் ஆபத்து அவசர வேளைகளில் ஒருவருக்கொருவர் உதவிக் கொள்ளவும் கூட்டுக் குடும்பமாக வாழ்ந்தால் மட்டுமே சாத்தியமாகும். அனுபவமிக்க தாத்தா, பாட்டி வசிக்கும் கூட்டுக் குடும்பத்தில் சிக்கல்கள் ஏற்பட வாய்ப்பில்லை. அப்படியே ஏற்பட்டாலும் சிக்கல்களை எளிதாக களைந்துவிடலாம். இது தனிக் குடும்பத்தில் எப்படிச் சாத்தியமாகும்?

## பாடம் 3 பெற்றோர் கடமை

### வாசித்து எழுதுக.

நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் என்று **உரை**ப்பர். அன்பான, அறிவான, பண்பான, மகிழ்ச்சியான, பாசமான, அமைதியான குடும்பத்தை உருவாக்குபவர்கள் பெற்றோர்களே. குழந்தைகளுக்கு நல்லுரைகள் வழங்கும் **உறை**விடமாக இல்லம் திகழ்கின்றது.



எல்லா நிலைகளிலும் ஆரோக்கியமான பிள்ளைகளை உருவாக்குவது பெற்றோரின் கடமை. பறவை தனது குஞ்சுகளுக்கு **இரை** தேடி வழங்குவது போல நாம் நம் குழந்தைகளுக்குச் சத்துள்ள உணவுகளை வழங்குவதில் கவனம் வைக்க வேண்டும். அதே வேளையில் **இறை** ஞானத்தைப் பிள்ளைகளுக்கு ஊட்ட வேண்டும். ஒழுக்கமுள்ள நல்ல பிள்ளைகளை உருவாக்குவது பெற்றோரின் தலையாய கடமையாகும்.

பிள்ளைகள் பல **அரிய** தகவல்களை அறிந்திருப்பது அவசியம். அறிவார்ந்த பிள்ளைகளால் மட்டுமே இந்நவீன உலகில் பீடு நடை போட முடியும். பொதுத் தகவல்களைப் பிள்ளைகள் **அறிய** பெற்றோர்கள் வழிவகுக்க வேண்டும். நாட்டில் நடைபெறுகின்ற கருத்தரங்குகளுக்கும் சொற்பொழிவுகளுக்கும் பிள்ளைகளை அழைத்துச் சென்று வாழ்க்கைக்கான தெளிவுகளை ஏற்படுத்த வேண்டும். பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு முன்மாதிரியாக விளங்க வேண்டும்.



### இடுபணி 1

**பத்திகளில் இடம்பெற்றுள்ள ரகர, றகரச் சொற்களைக் கொண்டு வாக்கியம் அமைத்திடுக.**

3.1.3 • ரகர, றகரப் பொருள் வேறுபாடு விளங்க வாக்கியம் அமைப்பர்.

தொகுதி 1

## இடுபணி 2

**கொடுக்கப்பட்ட ரகர, றகரச் சொற்களைப் பொருள் விளங்க வாக்கியத்தில் அமைத்திடுக.**

1. புரம் - புறம்
2. உரி - உறி
3. பரி - பறி
4. கூரை - கூறை
5. எரி - எறி
6. இரக்கம் - இறக்கம்
7. சொரி - சொறி
8. அரை - அறை
9. துரவு - துறவு
10. மரம் - மறம்

## இடுபணி 3

**பொருத்தமான ரகர, றகரச் சொற்களைத் தெரிவு செய்து எழுதுக.**

1. தாமான் பைடூரியில் மின்கம்பி ________ விழுந்ததால் மின்சார விநியோகத் தடை ஏற்பட்டது. (அருந்து, அறுந்து)
2. மருத்துவமனையில் தீப்பற்றிக் கொண்டதால் நோயாளிகளும் பொதுமக்களும் ________யடித்துக் கொண்டு வெளியே ஓடினர். (அலரி, அலறி)
3. ________ மீனவர்களின் வாழ்விடமாகவும், பொருளாதார மையமாகவும் விளங்கி வருகின்றது. (பரவை, பறவை)
4. ________ நம்பிக்கை மிகுந்த பிள்ளைகளை உருவாக்குவது பெற்றோரின் கடமையாகும். (இரை, இறை)
5. தீபாவளியன்று அம்மா செய்த ________ உருண்டையைத் தம்பி சுவைத்துத் தின்றான். (பொறி, பொரி)

## வளப்படுத்துதல்

**ரகர, றகரச் சொற்களில் காணும் பிழைகளைத் திருத்தி எழுதுக.**

ஞானி ஒருவர் தமது சீடர்களுடன் ஒரு நகறத்திற்கு வறுகை புறிந்தார். அந்த ஊறில் இறுந்த ஒரு சில இளைஞர்களைத் தவிற மற்றவர்கள் அவறுக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. அவறைக் கேலி செய்தனர். அவர்கள் ஒவ்வொறுவரையும் உங்களுக்கு இரையாசி கிடைக்கட்டும் என்று வாழ்த்தினார் அந்த ஞானி. அவரது இந்தச் செயல் சீடற்களுக்குப் புரியவில்லை. கேலி செய்தவர்களை ஏன் வாழ்த்துகிரீர்கள்? என்று அவரிடமே கேட்டனர். அதற்கு ஞானி ஒவ்வொறுவறும் தங்களிடம் இறுப்பதைத்தானே கொடுக்க முடியும் என்று அமைதியுடன் பதிலுறைத்தார். இதுதான் உண்மையான பெறுந்தன்மை என்று சீடற்கள் அறிந்து கொண்டனர்.

## குறைநீக்கல்

**பின்வரும் விடுகதைகளில் காணும் ரகர, றகரச் சொற்களை அடையாளங்கண்டு எழுதுக.**

1. சருகு சேலைக்காரி சமையலுக்குக் கெட்டிக்காரி.
2. சிறகில்லாமல் பறவை தேசமெங்கும் பறந்து திரியுது.
3. பறக்கத் தெரிந்தவனுக்கு நடக்கத் தெரியாது.
4. பிறந்த வீட்டைப் பிரியும்போது உருவம் மாறுவான்.
5. கறுப்பு நிறத்தழகி குளித்து வந்தால் வெள்ளைக்காரி.

### அறிந்து கொள்க

ஒற்றைக் குடும்பந்தனிலே பொருள்
ஓங்க வளர்ப்பவன் தந்தை
மற்றைக் கருமங்கள் செய்தேமனை
வாழ்ந்திடச் செய்பவள் அன்னை
(மகாகவி பாரதியார்)

பொருள் ஈட்டுவது தந்தையின் கடமை. வருவாய்க்கு ஏற்ற செலவு செய்வது அன்னையின் கடமை.

பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## இரட்டைக் கிளவிகளை அறிக.

கடந்த வாரம் ஞாயிற்றுக்கிழமை நாங்கள் கோலாலம்பூரில் அமைந்துள்ள தேசிய வனவிலங்குப் பூங்காவுக்குச் சென்றோம். என் தந்தை திரு. வேலப்பன், தாயார் திருமதி மாரியம்மாள், பாட்டி, தம்பி திலகன், தங்கை அமுதினி ஆகியோர் சென்றோம். காலை மணி 10:00க்கு நாங்கள் அவ்விடத்தை அடைந்தோம். அங்கு வாகனத்தை நிறுத்தும் பொழுதே மழை தூர ஆரம்பித்தது. வாகனத்தை விட்டு இறங்கி நாங்கள் **விறுவிறு**வென நுழைவாயிலை நோக்கி நடந்தோம்.

நுழைவுச் சீட்டை வாங்கிய பிறகு சிறிது நேரம் அங்கே நின்று கொண்டிருந்தோம். மழை நின்ற பிறகு மகிழ்ச்சியாக உள்ளே சென்றோம். நடைபாதையின் நெடுகிலும் விலங்குகள் பற்றிய பதாகைகள், அறிவிப்புப் பலகைகள் ஆங்காங்கே பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. புலியின் உறுமல் கேட்டுத் திரும்பினோம். தாய்ப் புலியுடன் குட்டிப் புலிகள் ஓடியாடி விளையாடிக் கொண்டிருந்தன. சிங்கம், கரடி, ஒட்டகச்சிவிங்கி போன்ற விலங்குகளையும் அவற்றின் சாகசங்களையும் பார்த்து வியந்தோம். யானைகளின் கூட்டம் **திமுதிமு**வெனக் காட்டுப் பகுதியிலிருந்து வெளிவருவதைப் பார்த்தோம். தரைவாழ் பிராணிகளுள் யானையே பெரிய மிருகம் என்பதைத் தம்பியும் தங்கையும் பார்த்துப் புரிந்துகொண்டனர்.

தொடர்ந்து, முதலைப் பண்ணைக்குச் சென்றோம். பாதாளத்தில் பல முதலைகள் அசையாமல் வாயைத் திறந்த வண்ணம் இருந்தன. பாட்டி, தம்பியையும் தங்கையையும் எச்சரிக்கையாக இருக்கும்படி கேட்டுக் கொண்டார். அங்கிருந்து பாம்புகள், ஆமைகள் இருக்குமிடங்களுக்குச் சென்றோம். அவற்றைப் பார்த்து இரசித்ததோடு படங்களும் எடுத்துக் கொண்டோம். தொடர்ந்து, பறவைகளின் இருப்பிடத்திற்குச் சென்றோம். கூண்டுகளில் பல வகையான வண்ணப் பறவைகளைப் பார்த்து, அவற்றின் இனிய கீச்சொலிகளைக் கேட்டு மகிழ்ந்தோம். அம்மாவும் அப்பாவும் பறவைகள் பற்றிய தகவல்களை எங்களிடம் பகிர்ந்து கொண்டனர். அவ்வேளையில் தங்கை தம்பியுடன் **தொணதொண**வெனப் பேசிக் கொண்டிருந்ததால் அப்பா அவர்களை அமைதி காக்குமாறு வேண்டினார்.

சிறிது நேரம் அங்கேயே அமர்ந்து ஓய்வெடுத்துக் கொண்டோம். ஓய்வுக்குப் பிறகு, குரங்குகளின் சாகசம் நடக்கும் இடத்திற்குச் சென்றோம். அங்கு, மக்கள் கூட்டம் அதிகமாக இருந்தது. குரங்குகள் போட்டி போட்டுக் கொண்டு மரத்திற்கு மரம் தாவிச் சென்றன. மரக் கிளைகளில் தாவித் தாவிச் செல்லும்போது சில கிளைகள் **சடசட**வென முறிந்து விழுந்தன. எவற்றையும் பொருட்படுத்தாமல் தங்களின் தாவலில் குரங்குகள் கவனத்தை வைத்திருந்தன. எந்தச் செயலில் இறங்குகிறோமோ அதில் முழுக் கவனம் தேவை என்பதை நான் உணர்ந்து கொண்டேன். மாலை நேரத்தில் இனிய நினைவுகளோடு இல்லம் திரும்பினோம்.

### இரட்டைக்கிளவியும் பொருளும்

| | | |
|---|---|---|
| **விறுவிறு** | ⟶ | விரைவாக |
| **திமுதிமு** | ⟶ | பலரோ மிருகங்களோ கூட்டமாகச் செல்லுதல் |
| **தொணதொண** | ⟶ | வெறுப்பு உண்டாக்கும்படி ஓயாமல் பேசுவது |
| **சடசட** | ⟶ | கடுமையான ஓசை |

4.1.2
- இரண்டாம் படிவத்திற்கான இரட்டைக் கிளவிகளைச் சூழலுக்கேற்பச் சரியாகப் பயன்படுத்துவர்.

தொகுதி 1

## இடுபணி 1

**இரட்டைக்கிளவிகளைப் பொருள் விளங்க வாக்கியங்களில் அமைத்திடுக.**

| | | | |
|---|---|---|---|
| விறுவிறு | திமுதிமு | தொணதொண | சடசட |

## இடுபணி 2

**பொருத்தமான இரட்டைக்கிளவியை எழுதுக.**

அ. கற்றல் கற்பித்தலின்பொழுது பிறருக்குத் தொல்லை கொடுக்கும் வகையில் ______ வென்று பேசிக் கொண்டு பாடத்தில் கவனம் செலுத்தாமல் இருக்கும் மாணவர்கள் தேர்வில் தோல்வியைச் சந்திக்கின்றனர்.

ஆ. கேமரன் மலையில் தேயிலைத் தோட்டங்கள் உள்ளன. அத்தோட்டங்களில் பணிபுரியும் பெண்கள் தங்களின் தோளில் கூடையை மாட்டிக் கொண்டு தேயிலைகளை ______ வெனப் பறித்துக் கூடையில் போட்டுக் கொள்வர்.

இ. மாட்டுப் பண்ணை வைத்திருப்பவர்கள் மாடுகளை மேய்ச்சலுக்கு அழைத்துச் செல்வது வழக்கம். காலையில் மாடுகள் ______ வென்று தொழுவங்களிலிருந்து வெளியேறி மேய்ச்சலுக்குச் செல்லும். பிறகு, மாலையில் மீண்டும் தொழுவங்களுக்குத் திரும்பும்.

## வளப்படுத்துதல்

**இரட்டைக்கிளவிகளைக் கொண்டு சூழலைத் தொடர்ச்சியாக எழுதுக.**

**சூழல் 1**

**விறுவிறு**

அன்று வெள்ளிக்கிழமை. இளமதி கோவிலுக்குச் செல்லத் தயாரானாள்.

______

______

______

______

**சூழல் 2**

**தொணதொண**

முகிலரசி இரண்டாம் படிவ மாணவி. அரையாண்டுத் தேர்வு நெருங்குவதை அவள் உணர்ந்தாள்.

______

______

______

______

**சூழல் 3**

திமுதிமு

வனத்துறை அதிகாரிகள் காட்டுக்குள் பயணம் மேற்கொண்டனர். காட்டுக்குள் நுழையும்பொழுது மேகம் இருண்டு காணப்பட்டது.

**சூழல் 4**

சடசட

கடந்த ஆண்டு புக்கிட் ஜாலில் விளையாட்டரங்க வளாகத்தில் தீபாவளிச் சந்தை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.


## குறைநீக்கல்

**பொருத்தமான இரட்டைக்கிளவிகளை எழுதுக.**

| திமுதிமு | சடசட | தொணதொண | விறுவிறு |
| --- | --- | --- | --- |

1. நேற்றுப் பெய்த கனத்த மழையினால் தோட்டத்திலுள்ள மாமரத்துக் கிளைகள் ______ வென முறிந்து விழுந்தன.

2. காலையில் தாமதமாக எழுந்ததால் முத்து தனது பள்ளிப் பேருந்தைத் தவறவிட்டான். எனவே, பள்ளிக்கு ______ வென்று நடந்தே சென்றான்.



3. பள்ளி முதல்வர் சபைக்கூடலில் முக்கியத் தகவல்களைப் பகிர்ந்து கொண்டிருக்கும் வேளையில் ______ வென பேசிக் கொண்டிருந்த மாணவர்களைக் கடிந்து கொண்டார்.

4. தேசிய அளவிலான கபடி விளையாட்டுப் போட்டியைக் கண்டு இரசிக்க நாட்டின் பல பகுதிகளிலிருந்து வந்த பார்வையாளர்கள் விளையாட்டு அரங்குக்குள் ______ வென நுழைந்தனர்.

# தொகுதி 2 நலம் போற்றுவோம்

## பாடம் 1 ஆரோக்கியமான வாழ்க்கை

கலந்துரையாடுக.



யோகப் பயிற்சி



உடற்பயிற்சி



ஓட்டப் பயிற்சி





மனமகிழ் நடவடிக்கை



சரிவிகித உணவு





மலையேறுதல்

1.2.2 • கூடுதல் விவரங்கள் பெறக் கேள்விகள் கேட்பர்.


தொகுதி 2

**இடுபணி 1**

படங்களின் துணையுடன் ஆரோக்கியமான வாழ்க்கை முறை பற்றிய கூடுதல் விவரங்களைக் கேட்டறிக.

**இடுபணி 2**

பின்வரும் நோய்கள் பீடிக்காமல் இருக்க ஒருவர் மேற்கொள்ள வேண்டிய வழிவகைகளைக் கேட்டறிக.




**இடுபணி 3**

ஆரோக்கியமான வாழ்க்கை வாழ உன் நண்பன் மேற்கொள்ளும் நடவடிக்கைகளைப் பற்றிக்கேட்டறிக.


**இடுபணி 4**

பின்வரும் பாதிப்புகள் பற்றிய விவரங்களை அறிய படங்களின் துணையுடன் குழுவில் கலந்துரையாடுக.

அ.



ஆ.



## பாடம் 2 கரப்பான் நோய்

### வாசித்து அறிக.

கரப்பான் நோய் (Eczema) ஒரு வகை தோல் நோயாகும். இந்நோய் சுகாதாரமின்மை, முறையற்ற உணவுப் பழக்கம், நோய்க் கிருமிகளின் பாதிப்பு, **ஒவ்வாமை** போன்ற காரணங்களால் ஏற்படுகின்றது. தோலில் **அரிப்பு** ஏற்படுவது இந்நோய்க்கான அறிகுறியாகும். இந்நோய் முகம், கழுத்து, மார்பு, முழங்கை, முழங்கால் மூட்டு போன்ற பகுதிகளில் காணப்படும்.

இது தொற்றுநோய் அல்ல. பரம்பரை வழியாகத் தாய் தந்தையரிடமிருந்து குழந்தைகளுக்கு வரக்கூடும். இந்நோயை மருத்துவத்தின் மூலம் குணப்படுத்தலாம். ஆனால், சில காலம் கழித்து இந்நோய் மீண்டும் ஏற்பட **வாய்ப்புண்டு** என்கின்றனர் மருத்துவர்கள்.



கரப்பான் நோய் பீடிக்காமலும் பாதிக்காமலும் இருக்க சிறந்த வழிகள் உள்ளன. நாம் உண்ணுகின்ற உணவுகளுள் எவை **பாதிப்பை** ஏற்படுத்துகின்றன என்பதை அறிந்து அந்த உணவைத் தவிர்க்க வேண்டும். மேலும், நோய் எதிர்ப்புச் சக்தியைக் கொடுக்கும் உணவுகளை உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். தாய்மார்கள் தாய்ப்பாலையே குழந்தைகளுக்கு **இயன்றவரை** கொடுக்க வேண்டும்.

அழகு சாதனத் திரவியங்கள், இரசாயனக் கலவைகள் போன்றவற்றைப் பயன்படுத்தாமல் இருப்பது சாலச் சிறந்தது. இயற்கைப் பொருள்களான பச்சைப் பயறு, சிகைக்காய், மூலிகை போன்ற பொருள்களைப் பயன்படுத்தலாம். அதுமட்டுமின்றி, உடலை இறுக்காத பருத்தி ஆடைகளை அணியச் செய்யலாம்.

இந்நோயால் பாதிக்கப்பட்டவர்கள் கடுமையான வெயிலிலோ கடுமையான பனியிலோ வெளியே செல்வதைத் **தவிர்க்க** வேண்டும். புதியதாகத் தயார் செய்த உணவுகளையே சாப்பிட வேண்டும். பதப்படுத்தப்பட்ட உணவுகளை **உட்கொள்ளக்** கூடாது. பச்சைக் காய்கறிகள், கீரைகள், புளிப்பில்லாத பழங்கள் போன்றவற்றை உண்ணலாம்.

இந்நோயால் அவதிப்படுபவர்கள் புதினா இலையின் சாற்றைக் கரப்பான் நோயுள்ள தோலின் மீது பூசினால் நோயின் தாக்கம் குறையும். வேப்பம்பட்டை, வேப்பிலை ஆகியவற்றை நீரில் போட்டுக் கொதிக்க வைத்துப் பாதிக்கப்பட்ட இடத்தை அந்நீரால் கழுவி வந்தால் இந்நோய் குணமாகும். எல்லா நோய்களுக்கும் **தீர்வு** உண்டு; அதனை அறியாத வரை துன்பம்தான் நீடிக்கும். ‘உணவே மருந்து மருந்தே உணவு’ என்பதை உணர்ந்து நலமாக வாழ்வோம்.

2.3.4 • சுகாதாரம் தொடர்பான உரைநடைப் பகுதியை வாசித்துக் கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.

## இடுபணி 1

**வண்ணமிடப்பட்ட அருஞ்சொற்களுக்கு அகராதியின் துணைகொண்டு பொருள் அறிக; கூறுக.**

## இடுபணி 2

**வினாக்களுக்கு விடை கூறுக.**

1. கரப்பான் நோய் ஏற்படக் காரணம் என்ன?
2. கரப்பான் நோய் பீடிக்கப்பட்ட ஒருவருக்கு எவ்வாறான பாதிப்புகள் ஏற்படும்?
3. இரண்டாவது பத்தியின் வாயிலாக நீ என்ன அறிந்து கொள்ள முடிகின்றது?
4. கரப்பான் நோய் பீடிக்காமலும் பாதிக்காமலும் இருக்க ஒருவர் என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்?
5. 'உணவே மருந்து மருந்தே உணவு' எனும் சொற்றொடரின் வழி நீ என்ன அறிந்து கொள்ள முடிகின்றது? விளக்குக.

## வளப்படுத்துதல்

**பின்வரும் கூற்றுகளை விளக்கிடுக.**

அ. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

ஆ. எனது உடல் எனது பொறுப்பு

## குறைநீக்கல்

**ஏற்ற இணையுடன் இணைத்திடுக.**

| | |
|---|---|
| அளவுக்கு அதிகமாக உணவு உட்கொள்ளுதல் | வாந்தி வயிற்றுப் போக்கு |
| அசுத்தமான நீரில் விளையாடுதல் - குளித்தல் | நீரிழிவு நோய் |
| இனிப்புப் பொருள்களை அதிகமாகச் சாப்பிடுதல் | உடல் பருமன் |
| கெட்டுப் போன உணவை உண்ணுதல் | தோல் வியாதி |

### அறிந்து கொள்க

- தக்காளி
  - சருமத்திற்குச் சிறந்தது
- உலர்ந்த திராட்சை
  - அமிலத்தன்மையைப் போக்கும்
- புடலை
  - மலச்சிக்கலைப் போக்கும்
- வெந்தயம்
  - வாய்ப்புண், வயிற்றுப் புண்களைக் குணப்படுத்தும்

# பாடம் 3 டிங்கிக் காய்ச்சல்


**வாசித்து எழுதுக.**



ஏடிஸ் ஏசிப்டி (Aedes aegypti) எனும் கொசு கடிப்பதால் டிங்கிக் காய்ச்சல் பரவுகிறது.

பிளேவி வைரசு (Flavi virus) எனும் கிருமியால் டிங்கிக் காய்ச்சல் உண்டாகிறது.

இயல்பான டிங்கிக் காய்ச்சல், இரத்தக்கசிவு டிங்கிக் காய்ச்சல் என இரண்டு வகையாக இக்காய்ச்சலை வகைப்படுத்தலாம்.



டிங்கிக் கொசு ஒருவரைக் கடித்தபின் 5 அல்லது 6 நாள்கள் கழித்து கடுமையான காய்ச்சல் ஏற்படும்; மூட்டு எலும்புகள் வலிக்கும்; பற்களின் ஈறுகளில் இரத்தம் கசியும்.

எனவே, பல உயிர்கள் இந்நோயின் பாதிப்பால் பலியாகின்றன.

டிங்கிக் காய்ச்சலை உண்டாக்கும் வைரசு (Virus) கிருமிக்கு எதிரான மருந்து இன்னும் கண்டு பிடிக்கப்படவில்லை.

**இடுபணி 1**

**டிங்கிக் காய்ச்சல் தொடர்பான வாக்கியங்களைக் கோவையாகப் பத்தியில் எழுதுக.**

3.2.3 • வாக்கியங்களைக் கோவையாகப் பத்தியில் எழுதுவர்.

தொகுதி 2

இடுபணி 2

**வாக்கியங்களை நிரல்படுத்திக் கோவையாகப் பத்தியில் எழுதுக.**

- மாலை வேளையில் உடலுக்கும் மனத்திற்கும் ஓய்வு கொடுக்கும் பொருட்டு சிறிது நேரம் உறங்குவார்.
- ஒவ்வொரு நாளும் வைகறையில் எழுந்து யோகப் பயிற்சியைச் செய்வார். தொடர்ந்து தியானம் செய்வார்.
- இடைநிலைப்பள்ளி ஆசிரியரான திருமதி செண்பகம் உடல் ஆரோக்கியத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து வருகின்றார்.
- காலை உணவில் முட்டை, பால், தானியம் போன்ற சத்துள்ள உணவுகளைச் சேர்த்துக் கொள்வார்.
- இன்றுவரை அவருக்கு எந்த நோயும் பீடித்ததில்லை என்று உற்சாகத்துடன் கூறி வருகின்றார்.
- ஓய்வுக்குப் பின்னர் மாலை வேளையில் நடைப்பயிற்சி, மெதுவோட்டம் போன்ற உடல்நலப் பயிற்சிகளைச் செய்கின்றார்.
- இரவு வேளையில் கேழ்வரகு அப்பம், சப்பாத்தி, பால் போன்ற உணவுகளைச் சாப்பிடுவார்.
- மதிய உணவில் காய்கறிகளையும் பழங்களையும் அதிகமாகச் சேர்த்துக் கொள்வார்.



இடுபணி 3

**பின்வரும் நிரலொழுங்கு வரைபடத்தின் துணையுடன் வாக்கியங்களைக் கோவையாகப் பத்தியில் எழுதுக.**

தொடக்கம் → சிக்கல் → தீர்வு → முடிவு

இத்தூய்மைக்கேட்டிலிருந்து விடுபட அரசாங்கம் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்; சட்டங்களை வலுப்படுத்த வேண்டும். சுகாதாரத்தைப் பின்பற்றாதவர்களுக்கு அபராதம் விதிக்க வேண்டும்.

கால்வாய்களில் குப்பைகள் அடைபட்டு நீரோட்டம் தேக்கம் அடைகின்றது. அவ்விடத்தில் கொசுக்கள் முட்டையிட்டு இனவிருத்தி செய்கின்றன. கொசுக்கடியால் பாதிக்கப்பட்டவர்கள் பல நோய்களுக்கு ஆளாகித் தவிக்கின்றனர்; உயிரிழக்கின்றனர்.

எனவே, நோயின்றி வாழ நாம் ஒவ்வொருவரும் கால்வாய்களின் தூய்மையைக் காப்போம். சுகாதாரத்தைப் போற்றி ஆரோக்கியமான வாழ்க்கை வாழ்வோம். சுத்தம் சுகம் தரும் என்பார்கள்.

ஆரோக்கியமான வாழ்வு வாழ நாம் நம்முடைய சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டும். நம் வசிப்பிடத்திலுள்ள நீரோடைகளைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டும். ஒரு சிலரின் பொறுப்பற்ற செயலால் கால்வாய்கள் அசுத்தமடைகின்றன.

பாடம் 4 இலக்கணம்

## அகவினா புறவினா அறிக.

வினா எழுத்துகள் 5.
அவை எ, ஏ, யா, ஆ, ஓ.
இவை சொல்லின் முதலில் அல்லது இறுதியில் வரும்.

எ, யா → சொல்லின் முதல் எழுத்தாக வரும்.
**எ.கா:** எது? யாது?

ஆ, ஓ → சொல்லின் இறுதி எழுத்தாக வரும்.
**எ.கா:** அவளா? (அவள் + ஆ)
இதுவோ? (இது + ஓ)

ஏ → சொல்லின் முதலிலும் இறுதியிலும் வரும்.
**எ.கா:** ஏன்
சரிதானே?
= சரி + தான் + ஏ

வினா எழுத்து அகவினா, புறவினா என இருவகைப்படும்.

### அகவினா

சொல்லின் உள்ளிருந்து வினாப் பொருளைத் தருமாயின் அகவினா எனப்படும்.
இந்தச் சொல்லில் இருந்து வினா எழுத்தைப் பிரிக்க முடியாது.
**எ.கா:**
யார்? ஏன்? எப்படி?

### புறவினா

சொல்லின் புறத்தே இருந்து வினாப் பொருளைத் தருமாயின் புறவினா எனப்படும்.
இந்தச் சொல்லில் இருந்து வினா எழுத்தைப் பிரிக்க முடியும்.
**எ.கா:**
தம்பியா = தம்பி + ஆ
பெண்ணோ = பெண் + ஓ
எப்பையன் = எ + பையன்

5.1.2 • அகவினா, புறவினா அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

இடுபணி 1

**உரையாடலில் இடம்பெற்றுள்ள அகவினா, புறவினா சொற்களை அடையாளம் காண்க; வகைப்படுத்துக.**

**சூழல்:**
படிவம் இரண்டில் படிக்கும் முகிலனும் முத்துவும் நடைத் தடத்தில் சந்தித்து உரையாடுகின்றனர்.

முகிலன்: வணக்கம் முத்து. எப்படி இருக்கின்றாய்?

முத்து: நலமாக இருக்கிறேன் முகிலா. ஏன் நீ இன்று பள்ளிக்கு வரவில்லை? உடல்நலக் குறைவோ?

முகிலன்: இல்லை நண்பா என் அம்மாவுக்குத்தான்...

முத்து: என்ன உன் அம்மாவுக்கு?

முகிலன்: இன்று காலையில் சமையலறையில் அம்மா மயங்கி விழுந்து விட்டார். அப்பாவோ குளித்துக் கொண்டிருந்தார். பதற்றத்துடன் சிறிது நீரை அம்மாவின் முகத்தில் தெளித்தேன். அப்பாவும் வந்துவிட்டார். உடனடியாகச் சீனி கரைசலைக் கொண்டுவந்து அம்மாவின் வாயில் கொஞ்சம் ஊற்றினார். என்ன ஆச்சரியம் அம்மா உடனே விழித்துக் கொண்டார்.

முத்து: அம்மா ஏதேனும் மருந்து உட்கொள்கிறாரா? நீரிழிவு நோயால் ஏதும் பாதிக்கப்பட்டுள்ளாரா?

முகிலன்: ஆமாம் முத்து. தொடர்ந்து மூன்று நாள்களாக இரவில் மருந்து சாப்பிட மறந்துவிட்டதால் மயங்கி விழுந்துவிட்டார் என்று அப்பா கூறினார்.

முத்து: எந்நோயால் பாதிக்கப்பட்டிருந்தாலும் மருத்துவர் ஆலோசனையின்படி மருந்தை மறவாமல் உட்கொள்ள வேண்டும். எதிர்காலத்தில் நாம் இதுபோன்ற நோய்களால் அவதியுறாமல் இருக்க உடற்பயிற்சியும் சரியான உணவு முறையும் அவசியம்.

முகிலன்: உண்மைதான் நண்பா. வருமுன் காப்போம்! நலமாய் வாழ்வோம்!



## இடுபணி 2

**அகவினா புறவினாச் சொற்களை வாக்கியத்தில் அமைத்துக் காட்டுக.**

1. எது
2. எப்படி
3. எவரோ
4. யாரிடம்
5. மகனா
6. எவ்வீடு
7. எச்சிறுவன்
8. அரசனோ
9. உண்மைதானே
10. முடியுமா
11. எதற்கு
12. யாதொரு

## வளப்படுத்துதல்

**விளம்பரத்தின் துணையுடன் அகவினா புறவினாச் சொற்களைப் பயன்படுத்திக் கேள்விகளை உருவாக்குக.**




## குறைநீக்கல்

**அகவினா புறவினாச் சொற்களைப் பட்டியலிடுக.**

எம்மரம் | எங்கு | தெரியுமோ | எவ்வழி | எ∴து | யாவை | ஓடுமா | மங்கையோ | யாவர் | எப்படி | ஏது | தருவாயா | ஓய்வுதானே | எந்த | வருவாளா

| அகவினா | புறவினா |
|---|---|
| | |
| | |
| | |
| | |

# தொகுதி 3 தகவல் தொடர்புத் தொழில்நுட்பம்

## பாடம் 1 திறன்பேசியின் பயன்கள்




அளாவி மகிழலாம்




விரைவாகத் தொடர்பு கொள்ளலாம்




குறுந்தகவல் அனுப்பலாம்




தகவல்களைத் திரட்டலாம்





வலையொளி பயன்படுத்தலாம்




**இடுபணி 1**

**திறன்பேசியின் பயன்கள் பற்றிய தகவல்களை விவரித்துக் கூறுக.**








புலனத்தில்
தொடர்பு கொள்ளலாம்




மின்னஞ்சல்
அனுப்பலாம்



மனமகிழ் விளையாட்டுகளை
விளையாடலாம்



படம்
பிடிக்கலாம்




படவரி
நிகழ்த்தலாம்



முகநூல்
பகிர்வு செய்யலாம்

**1.4.3** • தகவல்களை விவரித்துக் கூறுவர்.

## இடுபணி 2

**படங்களின் துணையுடன் தகவல் தொடர்புப் பரிமாற்ற முறை பற்றிய தகவல்களை விவரித்துக் கூறுக.**




## இடுபணி 3

**பின்வரும் தகவல் சாதனங்களின் பயன்பாட்டைப் பற்றிக் கொடுக்கப்பட்ட குறிப்புகளின் துணையுடன் விவரித்துக் கூறுக.**

தகவல் தொடர்புச் சாதனங்கள்

**கைப்பேசி - திறன்பேசி**

- உடனடியாகத் தொடர்பு கொண்டு பேசலாம்.
- தகவல் பரிமாறலாம்.
- குறுஞ்செய்தி அனுப்பலாம்.
- குரல் பதிவு செய்து அனுப்பலாம்.

**கணினி - மடிக்கணினி**

- மின்னஞ்சல் வழி தகவல் பரிமாறலாம்.
- தகவல்கள் - செய்திகள் திரட்டலாம்.
- தகவல்களைப் பதிவிறக்கம், பதிவேற்றம் செய்யலாம்.
- முகம் பார்த்து உரையாடலாம்.

**தொலைக்காட்சி - வானொலி**

- செய்திகளை அறியலாம்.
- தகவல் பரிமாற்றம் செய்யலாம்.
- அறிவிப்புகள், விளம்பரங்கள் வெளியிடலாம்.
- கருத்துரை கேட்கலாம்.

பாடம் 2 இணையம்

**வாசித்து மகிழ்க.**

உலக நடப்புகளையும் தகவல்களையும் விரல் சொடுக்கும் நேரத்தில் நம் கண்முன்னே கொண்டு வந்து, அவற்றைத் தொகுத்துப் **பகுத்துக்** காட்டும் திறம் வாய்ந்த அறிவியல் சாதனம் கணினியாகும். இக்காலகட்டத்தில் கணினி ஒரு மனிதனின் அத்தியாவசியத் தேவைகளுள் ஒன்றாகிவிட்டது. மேசைக் கணினி, மடிக்கணினி, கையேட்டுக் கணினி, உள்ளங்கைக் கணினி எனப் பரிணமித்து இன்று கைத்தொலைபேசிக் கணினியாகப் **பிரவேசம்** செய்துள்ளது.

இணையத்தைத் தன்னுள் இணைத்துக் கொண்ட கணினி தனது செயல்பாட்டைத் துரிதமடையச் செய்துள்ளது. ஓர் இடத்தில் இருந்துகொண்டே உலகின் எந்த மூலையில் என்ன நிகழ்ந்தாலும் அதனை இணையத்தின்வழி தகவல் பரிமாற்றம் செய்து கொள்ள முடியும். மின்னஞ்சல் வாயிலாக ஒருவருக்குத் தகவல் அனுப்பலாம். அனுப்பிய தகவல் போய்ச் சேர்ந்ததா, தகவலைப் படித்தாரா என்றும் **கணப்பொழுதில்** அறிந்து கொள்ளலாம். நாம் நமது அலுவலகத்தின் அனைத்துத் தகவல்களையும் கணக்கு வழக்குகளையும் மின்காந்த வட்டுகளில் கோப்புறைகளில் கணினிக் கோப்புகளாகச் சேமித்து வைக்க இயலும். மேலும், அலுவலகத் தகவல்கள் அனைத்தையும் **மையப்படுத்தி,** தரவுத் தளத்தில் சேமித்து, பின்னர் அவற்றைத் திறப்பதற்குப் பயனர் பெயர் மற்றும் கடவுச் சொல்லைப் பயன்படுத்தித் தேவையான கோப்புகளைப் **பதிவிறக்கம்** செய்ய முடியும்.

மாணவர் சமுதாயம் பயன்பெற இணையம் பல வகையில் துணைபுரிகின்றது. மாணவர்கள் பாடக் குறிப்புகளைப் பெறுதல், ஐயங்களைக் கேட்டுத் தெளிவு பெறுதல், **மெய்நிகர்** வகுப்பறையில் பாடம் கேட்டல், தேர்வுக்கு விண்ணப்பித்தல், தேர்வை எழுதுதல், தேர்வு முடிவுகளை அறிதல், இடுபணிகளைச் செய்தல் போன்ற செயல்பாடுகளில் ஈடுபடலாம். இணையத்தின் மூலமே கல்வி பயின்று பட்டம் பெற முடியும் என்பதற்கு மெய்நிகர் பல்கலைக்கழகங்கள் சான்று பகர்கின்றன.

இணையம் மனித வாழ்வில் எல்லாத் துறைகளிலும் தனது ஆதிக்கத்தைச் செலுத்தி வருகின்றது. புதியதோர் உலகம் **உருவாக** இணையம் துணை புரிகின்றது. இணையத்தின் பயன்களை அறிந்து நன்முறையில் பயன்படுத்தி வாழ்வில் முன்னேறுவோம்; பிறரையும் முன்னேற்றுவோம்.



2.2.3 • வாசிப்புப் பகுதியிலுள்ள முக்கியக் கருத்துகளை அடையாளம் காண்பர்.

தொகுதி 3

தொகுதி 3

## இடுபணி 1

**வாசிப்புப் பகுதியிலுள்ள முக்கியக் கருத்துகளை அடையாளம் காண்க.**

## இடுபணி 2

**வாசிப்புப் பகுதியில் வண்ணமிடப்பட்ட சொற்களுக்கு அகராதியின் துணைகொண்டு பொருள் எழுதுக.**

## இடுபணி 3

**வாசிப்புப் பகுதியில் கணினி தொடர்பான சொல், சொற்றொடர்களைப் பட்டியலிடுக.**

## இடுபணி 4

**வினாக்களுக்கு விடை காண்க.**

1. இணையத்தின் பயன்கள் யாவை?
2. மாணவர் சமுதாயத்திற்கு இணையம் எவ்வாறு துணை புரிகின்றது?
3. 'புதியதோர் உலகம் உருவாக இணையம் துணை புரிகின்றது' எனும் கூற்றை விளக்குக.

### அறிந்து கொள்க

- புலனம்
- முகநூல்
- வலையொளி
- தொலைவரி
- அருகலை
- ஊடலை

## இடுபணி 5

**பின்வரும் துறைகளில் இணையத்தின் பங்கினை மர வரைபடத்தின் துணையுடன் விளக்குக.**

**இணையத்தின் பங்கு**

| வணிகத் துறை | இசைத் துறை | காவல் துறை |
|---|---|---|
| | | |
| | | |
| | | |


## வளப்படுத்துதல்

**பனுவலிலுள்ள முக்கியக் கருத்துகளை அடையாளம் கண்டு கூறுக; எழுதுக.**

சமூக ஊடகங்கள் இன்று பலவிதத்தில் மக்களுக்கு உதவிகரமாக இருக்கின்றன. இருப்பினும், இளைஞர் பலரை எந்த வேலையையும் பார்க்க விடாமல் முகநூல், புலனம் போன்றவற்றில் மூழ்க வைத்துவிடுகின்றது என்பதை யாரும் மறுக்க இயலாது. பல குடும்பங்களில் பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்குமிடையே சிக்கல்கள் எழக் காரணமாக இருப்பதும் இவையே. குடும்பத்தில் கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் மனம்விட்டுப் பேசாமல், குழந்தைகளுடன் நெருங்கிப் பழகாமல் தங்கள் நண்பர்களுடன் வலைத்தளத்தில் பேசி மகிழ்கின்றவர்கள் அதிகமாக இருக்கின்றார்கள். மேலும், சிலர் முகநூலில் அறிமுகமான ஒருவரை நம்பி அவரை நேரில் சந்திக்கச் சென்று தம் வாழ்க்கையை அந்த முகநூல் நபரிடம் தொலைத்துவிடும் செய்திகளைக் கேட்டும் பார்த்தும் கொண்டுதான் இருக்கின்றோம். நம் உடனிருக்கும் உறவினர்கள் நண்பர்களைக் காட்டிலும் எங்கோ முகம் தெரியாமல் இருக்கும் நபருக்கு நாம் அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றோம். சமூக ஊடகங்கள் சமூக நல்லுறவுக்கு வழிவகுக்க வேண்டும்.

## குறைநீக்கல்

**பின்வரும் சொற்குவியலில் கணினி தொடர்பான கலைச் சொற்களை அடையாளம் காண்க.**



| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ம் | க | க் | ற | வி | தி | ப | க | த | வு | ப | றி |
| ம | ன | ம் | த | ர | ம் | தி | டு | ட் | வ | றி | செ |
| கு | ரு | லி | பி | ம | து | வே | வ | வி | ர் | மு | அ |
| மு | ரி | ர | ற | ச | பு | ற் | ண் | ர | ண | ர | ல் |
| க | சு | வி | சை | கு | க | ற | ண | வி | ய | சு | சொ |
| நூ | ப | தி | வ் | வ | ட | ம் | ம் | ப | ப | ப | ச் |
| ல் | ச | ஞ் | ன | ன் | மி | டு | கி | தி | சு | க | வு |
| கு | கு | று | ந் | த | ட் | டு | ளி | ல் | தி | ழி | ட |
| ர | வ | எ | ட | ள் | ரு | பொ | ன் | மெ | பு | ம | க |
| வி | ழி | ல | பு | ற | ம் | வ | லை | த் | த | ள | ம் |
| இ | ணை | ய | ம் | க | க் | ப | ப் | க | அ | தி | க |
| ப | சி | ன் | கு | ட | ம் | வ | வ் | த | ர | து | ப |

**இடமிருந்து வலம்**

1.
2.
3.
4.

**வலமிருந்து இடம்**

1.
2.
3.
4.

**கீழிருந்து மேல்**

1.
2.
3.
4.

**மேலிருந்து கீழ்**

1.
2.
3.
4.

# பாடம் 3 நாமும் தகவல் தொழில்நுட்பமும்

## முன்னுரையையும் முடிவுரையையும் அறிக.

**முன்னுரை**
- தலைப்பைப் பற்றிய விளக்கம்
- எழுதவிருக்கும் கருத்துகளின் முன்னோட்டம்
- கட்டுரையின் அமைப்புக்கு ஏற்ற தொடக்கம்

**முடிவுரை**
- எழுதப்பட்ட கருத்துகளின் சுருக்கம்
- பரிந்துரைகளை முன் வைத்தல்
- வேண்டுகோள்; அறைகூவல் விடுத்தல்

## இடுபணி 1

**‘புலனத்தினால் (வாட்ஸ்அப்) மாணவர் சமுதாயம் அடையும் பயன்கள்’ எனும் தலைப்புக்கு ஏற்ற முன்னுரையையும் முடிவுரையையும் சட்டகத்தின் துணையுடன் எழுதுக.**

**முன்னுரை** → தகவல் தொழில்நுட்பம் - வளர்ச்சி - பல பயன்கள் - அறிவார்ந்த மாணவர்கள் - கல்வி - துணைபுரிதல்

**முடிவுரை** → மாணவர் சமுதாயம் - தேவையறிந்து - பெற்றோர் - கண்காணிப்பு - சிறப்புத் தேர்ச்சி - உயர்நிலை




3.2.4 • கட்டுரைத் தலைப்பிற்கேற்ற முன்னுரையையும் முடிவுரையையும் பத்தியில் எழுதுவர்.

## இடுபணி 2

**'திறன்பேசியால் ஏற்படும் விளைவுகள்' எனும் கட்டுரைத் தலைப்புக்குரிய கருத்துப் பகுதியை வாசித்து அதற்கான முன்னுரையையும் முடிவுரையையும் பத்தியில் எழுதுக.**



திறன்பேசியின் வாயிலாக நாம் ஒருவரிடம் எளிதில் தொடர்புகொள்ள முடிகின்றது. தகவலை விரைவாகப் பரிமாறிக் கொள்ள இயல்கின்றது. நாம் நமது நண்பர்களுடனும் உறவினர்களுடனும் நல்லுறவையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்திக் கொள்ள திறன்பேசி வழிவகுக்கின்றது. மேலும், அவசர வேளைகளில் காவல் துறையையோ மருத்துவமனையையோ தொடர்பு கொண்டு உடனடி சேவை பெறத் துணை புரிகின்றது. உலக நடப்புகளை எளிதாகவும் துல்லியமாகவும் அறிந்துகொள்ள உதவுவதோடு, நமது பொது அறிவை வளர்த்துக் கொள்ள களம் அமைக்கின்றது. அரசியல், பொருளாதாரம், கல்வி, விளையாட்டு போன்ற துறைகளில் அவ்வப்போது ஏற்படுகின்ற மாற்றங்களை அறிந்து கொள்ளவும் திறன்பேசி உறுதுணையாக இருக்கின்றது.

திறன்பேசி நமக்குப் பல நன்மைகளை அளித்தாலும் சில வேளைகளில் தீமைகளையும் ஏற்படுத்திவிடுகின்றது. இந்நவீன காலத்தில் சிறியோர் முதல் பெரியோர் வரை அனைவரும் திறன்பேசியைக் காலவரம்பில்லாமல் பயன்படுத்துகின்றனர். இதனால், உடல்நலம் பாதிப்படைகின்றது. பொன்னான நேரமும் வீணாகின்றது. மேலும், சிலர் தகாத காணொளிகளையும் படங்களையும் செய்திகளையும் பதிவேற்றம் செய்து சமூகச் சீர்கேட்டுக்கு வித்திடுகின்றனர்.

## இடுபணி 3

**தலைப்புக்கேற்ற முன்னுரையையும் முடிவுரையையும் பத்தியில் எழுதுக.**

**நவீன தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தினால் நாடு அடையும் நன்மைகள்**

கருத்து 1
**வெளியுறவு**
- உள்நாட்டு வெளிநாட்டு உறவு வலுப்பெறுகிறது.
- உலகத் தலைவர்களின் ஆட்சித் திறனை அறிய முடிகிறது.

கருத்து 2
**தொழில் துறை**
- தொழில் நிருவாகம் செய்தல்.
- வேலையாட்களைப் பராமரித்தல்.

கருத்து 3
**சுற்றுலாத்துறை**
- சுற்றுப் பயணிகளுக்கு வழிகாட்டியாக அமைகிறது.
- சுற்றுலாத் துறையை மேம்படுத்த உதவுகிறது.

கருத்து 4
**பொருளாதாரத் துறை**
- நாட்டின் வரவு செலவு கணக்குகள் அறிய முடிகிறது.
- பங்கு மாற்றுச் சந்தை நிலவரம் அறிய முடிகிறது.

கருத்து 5
**மின்சாரத்துறை**
- மின்சார விநியோக நிருமாணிப்பு.
- மின்சாரக் கட்டணம் அறிதல்.

பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## திருக்குறளையும் பொருளையும் அறிக.



வாவாசான் இடைநிலைப்பள்ளியில் கடந்த வாரம் படிவம் ஐந்தில் பயிலும் மாணவர்களுக்குத் தொழில் முன்னேற்ற வழிகாட்டிக் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அக்கருத்தரங்கை வழிநடத்த அதிகாரி திரு.மு. அண்ணாதுரை அவர்கள் அழைக்கப்பட்டிருந்தார். இவ்வழிகாட்டிக் கருத்தரங்கில் இடைநிலைப்பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு உயர்நிலைக் கல்வியைத் தொடர விரும்பும் மாணவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய வழிமுறைகளை அவர் தெளிவாக விளக்கினார். மேலும், இன்றைய சூழலில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தொழில்நுட்பத் துறையில் காணப்படும் உயர்கல்வி வாய்ப்புகளையும் காணொளி காட்சியின்வழி துல்லியமாக விளக்கினார். இத்துறையில் உயர்கல்வியைத் தொடர விரும்பும் மாணவர்கள் பெறவிருக்கின்ற நிதியுதவியையும் கடன் வாய்ப்புகளையும் அருமையாகவும் ஆர்வத்தைத் தூண்டும் வகையிலும் விளக்கினார். தொடர்ந்து, கேள்வி பதில் அங்கத்தில் மாணவர்கள் கேட்ட அனைத்துக் கேள்விகளுக்கும் பொறுமையாகப் பதிலளித்ததோடு கருத்தரங்கைக் கலகலப்பாகவும் வழிநடத்திச் சென்றார்.

**இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து**
**அதனை அவன்கண் விடல்.** (குறள் 517)

என்ற வள்ளுவனின் வாக்குக்கு ஏற்ப திரு.மு. அண்ணாதுரை அவர்கள் இத்துறையில் நிபுணத்துவம் பெற்றவர் என்பதை அவருடைய படைப்பு உணர்த்தியது. தகுதியான ஒருவர் தகுதியான பதவிக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார் என்பதையும் புலப்படுத்தியது. அதனால்தான் வாவாசான் இடைநிலைப்பள்ளியின் முதல்வர் அவரைத் தெரிவு செய்து அக்கருத்தரங்கை வழிநடத்தப் பணித்திருக்கின்றார் என்று மாணவர்கள் பெருமிதம் கொண்டனர்.

### திருக்குறளும் பொருளும்

**இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து**
**அதனை அவன்கண் விடல்.** (குறள் 517)

**பொருள்:** இந்தத் தொழிலை இன்னின்ன காரணத்தால் இவன் செய்து முடிக்கத் தக்கவன் என்பதை ஆராய்ந்தறிந்து அத்தொழிலை அவனிடம் ஒப்படைத்துவிட வேண்டும்.

**கருத்து:** ஒருவரின் திறமையறிந்து ஒரு பணியை மேற்கொள்ளும் பொறுப்பை வழங்க வேண்டும்.

4.2.2 • இரண்டாம் படிவத்திற்கான திருக்குறளையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

## இடுபணி 1

**குறளையும் பொருளையும் மனனம் செய்து கூறுக; எழுதுக.**

## இடுபணி 2

**குழுவில் கலந்துரையாடி குறளுக்குப் பொருத்தமான சூழல் ஒன்றனை எழுதுக.**

## வளப்படுத்துதல்

**குறளில் இடம்பெற்றுள்ள சொல், சொற்றொடர்களுக்கு ஏற்புடைய பொருளையும் விளக்கத்தையும் எழுதுக; கூறுக.**

| சொல் - சொற்றொடர் | பொருள் | விளக்கம் / எடுத்துக்காட்டு |
|---|---|---|
| இதனை | இந்தத் தொழிலை | காற்பந்துப் பயிற்றுநர் |
| இதனால் | | |
| இவன்முடிக்கும் | | |
| என்றாய்ந்து | | |
| அதனை | | |
| அவன்கண் | | |
| விடல் | | |

## குறைநீக்கல்

**குறளுக்குப் பொருத்தமான வாக்கியங்களுக்கு (✓) என்று அடையாளமிடுக.**

1. நல்லொழுக்கம் நிறைந்த மாணவனை ஆசிரியர் வகுப்புத் தலைவனாக நியமித்தார்.
2. ஆங்கிலப் பாடத்திற்கான பிரத்தியேக வகுப்புக்கு மாணவர்கள் திருமதி திலகம் கோவிந்தன் அவர்களின் இல்லத்திற்குச் சென்றனர்.
3. அப்பா தமது வாகனத்தைப் பழுதுபார்க்க திரு. சுப்பையாவின் பட்டறைக்குச் சென்றார்.
4. தனிமனிதனுக்குள் அமைதி ஏற்பட வேண்டும் என்றெண்ணிய சீடர்கள் பழநி மலையை நோக்கிப் பயணித்தனர்.
5. காலத்தால் அழியாத கல்வியைக் கற்கவும் கற்பிக்கவும் பெற்றோர்கள் தயங்கக் கூடாது.

# பாடம் 1 அறிவியல் வளர்ச்சியும் விளைவுகளும்

**வாசித்து விவாதித்திடுக.**



அறிவியல் வளர்ச்சியினால் மனிதர்கள் பல நன்மைகளை அடைந்து வருகின்றனர். தனி மனிதனின் முன்னேற்றத்திற்கும் குடும்ப வளப்பத்திற்கும் நாட்டின் செழிப்புக்கும் உலக வளர்ச்சிக்கும் பல வகையில் அறிவியல் துணை புரிகின்றது.



அறிவியல் வளர்ச்சியினால் மக்கள் பல அடிப்படைப் பண்புகளை இழந்து நிற்கின்றனர். விஞ்ஞானம் விண்வெளிக்குப் போகப் போக மனிதநேயம் புதைக்கப்படுகின்றது. அமைதியாக வாழ வேண்டிய வாழ்வு இயந்திர மயமாக மாறி வருகின்றது. அணுக் குண்டுகளும் ஏவுகணைகளும் மனித நல்வாழ்வுக்கு மருட்டலாக அமைகின்றன.



பணியிடங்களில் வேலைகளை இலகுவாகவும் விரைவாகவும் செய்ய இயலுகின்றது. மின்வணிகம் மூலம் வாணிபத்தை உலகளவில் விரிவாக்கம் செய்யவும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ளவும் வழிவகுக்கின்றது.



அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை முழுச் சோம்பேறியாக மாற்றிவிடுகின்றன. மனிதன் எளிமையான வேலைகளைக்கூட இயந்திரங்களால் செய்கின்றான்; உடல் வணங்கி வேலை செய்யும் தன்மையை இழக்கின்றான்; உட்கார்ந்து கொண்டே எல்லா வேலைகளையும் செய்து, நோய்கள் ஏற்பட பாதை வகுக்கின்றான்.



குறுகிய காலத்தில் எளிய முறையில் விவசாயத் துறையில் பயிர் செய்து அறுவடை செய்ய முடிகின்றது. நாட்டு மக்களின் தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்ற முடிகின்றது. மேலும், போக்குவரத்துத் துறையில் கடல், ஆகாயம், தரை மார்க்கங்களாகப் பயணம் செய்ய அறிவியல் வகை செய்கின்றது. தொடர்ந்து, வீட்டில் இல்லத்தரசிகளின் பணிகளை அறிவியல் கண்டுபிடிப்புக் கருவிகள் இலகுவாக்குகின்றன. கல்வித் துறையிலும் அறிவியலின் பங்கு அளப்பரியது.



அறிவியல் வளர்ச்சியால் இளைய சமுதாயத்தினர் தங்களின் உடலுக்கும் மனத்திற்கும் பல கேடுகளை ஏற்படுத்திக் கொள்கின்றனர். அதுமட்டுமல்லாமல், சுற்றுச்சூழல் பாதிப்படைந்து ஆரோக்கியமற்ற சமுதாயம் உருவாக இன்றைய அறிவியல் வளர்ச்சி காரணமாகின்றது.

**1.3.4** • தலைப்பையொட்டிப் பண்புடன் விவாதம் செய்வர்.

## இடுபணி 1

அறிவியல் வளர்ச்சியினால் மாணவர்களுக்கு ஏற்படும் விளைவுகளைக் குழுவில் பண்புடன் விவாதித்திடுக.

## இடுபணி 2

நீர்மத் தாவர (ஹைட்ரோபோனிக்ஸ்) வளர்ப்பு முறை இன்றைய சூழலுக்கு அவசியமான ஒன்றாக விளங்குகின்றது. விவாதித்திடுக.



என்னை நுணுகுக


## இடுபணி 3

இன்றைய 21ஆம் நூற்றாண்டில் அறிவியல் பல வகையில் மனிதனுக்குத் துணையாக இருக்கின்றது. விவாதித்திடுக.



பாடம் 2 **அறிவியல் மேதை ஏ.பி.ஜே. அப்துல் கலாம்**

### வாசித்து அறிக.



தலைசிறந்த அறிவியல் அறிஞர், தொழில்நுட்ப வல்லுநர், இந்தியாவின் 11 ஆவது குடியரசுத் தலைவர், இந்திய ஏவுகணை நாயகன், இந்திய விஞ்ஞான வளர்ச்சியின் தந்தை, சிறந்த ஆசிரியர், அனைவராலும் மதிக்கத்தக்க அற்புதமான பேச்சாளர், இளைஞர்களின் **முன்மாதிரி** என்று உலகத்தாரால் போற்றப்படுபவர் மறைந்த மாபெரும் மேதை ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்கள். அறிவியல் உலகத்திற்கு அவர் ஆற்றிய சாதனைகள் **அளப்பரியவை.**

'இளைஞர்களே கனவு காணுங்கள்' என்று முழங்கி இளைய சமுதாயத்தினரை வீறுகொண்டு எழச் செய்தார். 'ஊக்குவிப்பவன் தோன்றிவிட்டால் ஒரு நாள் ஊக்கு விற்பவன் கூட தேக்கு விற்பான்' என்பதற்கு இணங்க அனைவருக்கும் ஊக்குவிப்பையும் தன்னம்பிக்கையையும் வழங்கினார். மனத்தால் ஊனமுற்ற இளைய சமுதாயத்திற்குத் தன்னம்பிக்கையை **ஊட்டினார்.** ஏவுகணை போன்றவற்றை உருவாக்கிச் சாதனைகளைப் படைத்திருந்தாலும் அவருக்குப் பெரு மகிழ்ச்சியும் ஆத்ம திருப்தியும் எப்பொழுது ஏற்பட்டது தெரியுமா?



"நானும் என் குழுவினரும் எஸ்.எஸ்.வி.3 கோளோடி மற்றும் அக்னி ஏவுகணையை விண்ணில் செலுத்திய போதும், பொக்ரானில் அணுக்குண்டுச் சோதனையை நடத்திய போதும் மகிழ்ச்சி கலந்த **பெருமிதம்** அடைந்தோம். அந்த மகிழ்ச்சியைவிட ஊனமுற்ற குழந்தைகளுக்குக் குறைந்த எடையில் செயற்கைக் கால்கள் தயாரித்ததுதான் மனத்திற்கு நிம்மதியையும் திருப்தியையும் அளித்தது. முன்பெல்லாம் ஊனமுற்ற குழந்தைகள் 4 கிலோ எடை உள்ள செயற்கைக் கால்களைத்தான் பயன்படுத்த வேண்டியிருந்தது. அந்தப் பிஞ்சுக் கால்கள் அவ்வளவு **கனமான** செயற்கைக் கால்களுடன் நடந்து சென்ற கொடுமையை நானே நேரில் பார்த்துத் துயர் அடைந்தேன். அதனைத் தொடர்ந்து, 4 கிலோவுக்குப் பதிலாக வெறும் 400 கிராமில் செயற்கைக் கால்களைத் தயாரித்துக் கொடுத்ததுதான் நான் செய்த சாதனைகளுள் பெருமகிழ்ச்சி அளிப்பது," என்று மனம் **நெகிழ்ந்து** கூறினார்.

**என்னை நுணுகுக**



2.3.6
- அறிவியல் தொடர்பான உரைநடைப் பகுதியை வாசித்துக் கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.

## இடுபணி 1

**வண்ணமிடப்பட்ட சொல்லுக்கு அகராதியின் துணைகொண்டு பொருள் கூறுக.**

## இடுபணி 2

**வினாக்களுக்கு விடை கூறுக.**

1. உலகத்தார் ஏ.பி.ஜே.அப்துல் கலாம் அவர்களை எவ்வாறெல்லாம் போற்றுகின்றனர்?
2. மனத்தால் ஊனமுற்றவர்கள் என்று ஏன் குறிப்பிடப்பட்டுள்ளது?
3. ‘ஊக்குவிப்பவன் தோன்றிவிட்டால் ஒரு நாள் ஊக்கு விற்பவன்கூட தேக்கு விற்பான்’ எனப்படும் கூற்றை விளக்குக.
4. குறைந்த எடையுள்ள செயற்கைக் கால்கள் உருவாக்கப்பட்டதன் நோக்கம் யாது?
5. அறிவியல் மேதை ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்களை நீ ஒரு முன்மாதிரியாகக் கொள்வாயா? ஏன்?

## வளப்படுத்துதல்

**அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியால் பூமியில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் தொடர்பாக ஒரு திரட்டேட்டைத் தயாரித்திடுக.**

## குறைநீக்கல்

**அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியினால் விளைந்துள்ள நன்மை தீமைகளை மர வரைபடத்தில் எழுதுக.**

**அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி**


| நன்மைகள் | தீமைகள் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

# பாடம் 3 அறிவியல் சாதனங்கள்

**ஆராய்ந்து எழுதுக.**

2013ஆம் ஆண்டில் மலேசியாவிலுள்ள நிறுவனங்களில்
அறிவியல் சாதனங்களின் பயன்பாடுகள்.






**குறியீடுகள்**

- உயர்நிலைக் கல்விக் கூடங்கள்
- அரசாங்க நிறுவனங்கள்
- ஆய்வுக் கூடங்கள்
- அரசு சார்ந்த தனியார் நிறுவனங்கள்
- மருத்துவமனைகள்

**மூலம்: மலேசிய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப தகவல் மையம் (2013).**

**இடுபணி 1**


**வட்டக் குறிவரைவிலுள்ள விவரங்களைத் தொகுத்து எழுதுக.**

3.3.2 • குறிவரைவிலுள்ள விவரங்களைத் தொகுத்து எழுதுவர்.

## இடுபணி 2

**குறிவரைவிலுள்ள விவரங்களைத் தொகுத்து எழுதுக.**

2016ஆம் ஆண்டில் மருத்துவமனையொன்றில் பணியாற்றிய தாதியர்களின் எண்ணிக்கையும் அவர்களின் தரநிலையும்.




### அறிந்து கொள்க

**தொகுத்து எழுதுதல் வழிமுறைகள்:**

- ஒரே பத்தியில் எழுதுதல்
- முன்னுரை
- தெரிநிலை கருத்துகளை அடையாளம் காணுதல்
- புதைநிலை கருத்துகளை ஆராய்ந்து எழுதுதல்
- முடிவுரை

**என்னை நுணுகுக**

# பாடம் 4 இலக்கணம்

## விழைவு வாக்கியம் அறிக.

- வாக்கியங்களைக் கருத்து, அமைப்பு எனும் அடிப்படையில் பிரிக்கலாம்.
- கருத்து அடிப்படையில் 4 வகை வாக்கியங்கள் உள்ளன. அவை, செய்தி வாக்கியம், வினா வாக்கியம், விழைவு வாக்கியம், உணர்ச்சி வாக்கியங்களாகும்.
- விழைவு வாக்கியத்தை 4 பிரிவுகளின் அடிப்படையில் பிரிக்கலாம். அவை:-



வேண்டுகோள்
**எ.கா:** நாளை என் இல்லத்திற்கு வருக.

கட்டளை
**எ.கா:** குப்பையைக் கீழே போடாதே.

சபித்தல்
**எ.கா:** ஒழிந்து போ!

வாழ்த்துதல்
**எ.கா:** நீடுழி வாழ்க!

## இடுபணி 1

**விழைவு வாக்கியங்களை வகைப்படுத்துக.**

1. அந்தக் குளத்தில் இறங்க வேண்டாம்.
2. வீட்டுப் பாடங்களைச் செய்து வருக.
3. இணை பிரியாமல் பல்லாண்டு வாழ்க!
4. தினமும் தியானம் செய்வீராக.
5. தயவுசெய்து உதவுங்கள்.
6. அனுமதியின்றி பூக்களைப் பறிக்காதீர்கள்.
7. இறையருள் கிட்டட்டும்!
8. நீ அவமானப்பட்டே தீருவாய்!
9. மிருகங்களை வதைக்காதீர்.
10. அலட்சியமாக இருக்காதே.

5.6.1 • விழைவு வாக்கியத்தை அறிந்து கூறுவர்; எழுதுவர்.


இடுபணி 2

**உரையாடலில் இடம்பெற்றுள்ள விழைவு வாக்கியங்களை அடையாளங்கண்டு கூறுக; எழுதுக.**

**சூழல்:**
காட்டிலுள்ள முயல்கள் ஒரு நாள் கூட்டமாகக் கூடிக் கலந்துரையாடின. அவை காட்டில் எதிர்நோக்கும் சிக்கல்களைப் பற்றிக் கலந்து பேசின.



சந்திப்புக்குப் பிறகு, குளக்கரையை நோக்கி நடந்து சென்றன. முயல்கள் வரும் சத்தத்தைக் கேட்டுக் குளக்கரையில் இருந்த தவளைகள் பயந்து போய் குளத்திற்குள் குதித்தன.






## வளப்படுத்துதல்

**வேண்டுகோள், கட்டளை, சபித்தல், வாழ்த்துதல் ஆகிய அடிப்படையிலான விழைவு வாக்கியங்களைக் கூறுக; எழுதுக.**

## குறைநீக்கல்

**பின்வரும் வாக்கியங்களுள் விழைவு வாக்கியங்களை மட்டும் தெரிவு செய்க.**

1. மரக் கிளைகள் முறிந்து விழுந்தன.
2. புல் தரையில் யாரும் நடக்க வேண்டாம்.
3. தயவுசெய்து அமைதியாக இருக்கவும்.
4. வாழ்வாங்கு வாழ்வாயாக!
5. அவன் நாசமாகப் போகட்டும்!
6. ஐயோ, அவமானமாக இருக்கிறதே!
7. மறவாமல் மீண்டும் வருக.
8. எப்பொழுது அவர் வருவார்?

## தொகுதி 5 உணவே மருந்து

### பாடம் 1 கீரைகளை அறிவோம்

கலந்துரையாடுக.



**பொன்னாங்கண்ணிக் கீரை**

- கண் பார்வைக்கு நல்லது
- மேனி அழகு கூடுதல்





**முருங்கைக் கீரை**

- நீரிழிவு நீங்குதல்
- உடல் பலம் பெறுதல்



**சிறுகீரை**

- உடல் வலிமை பெறுதல்
- குடல், இரத்தம், இருதயம் சீர் பெறுதல்



**முளைக்கீரை**

- நரம்புத் தளர்ச்சி நீங்குதல்
- சொறிசிரங்கு நிவாரணி
- மாலைக்கண்ணோய் விலகுதல்
- மலச்சிக்கல் நீங்குதல்



**முடக்கத்தான் கீரை**

- கைகால் முடக்கம் நீங்குதல்
- வாயு நீங்குதல்



**சிறு பசலைக் கீரை**

- உடல் சூடு தணிதல்
- மலச்சிக்கல் நீங்குதல்



**புதினாக் கீரை**

- இரத்தம் சுத்தி செய்தல்
- அஜீரணம் அகற்றுதல்



**வல்லாரைக் கீரை**

- மூளை பலம் பெறுதல்
- ஞாபக சக்தி பெருகுதல்



**என்னை நுணுகுக**

1.5.2 • வரிபடக் கருவியிலுள்ள தகவல்களையொட்டிக் கருத்துரைப்பர்; முடிவு கூறுவர்.

## இடுபணி 1


**வரிபடத்திலுள்ள தகவல்களைக் கருத்துரைத்திடுக; முடிவு கூறுக.**

## இடுபணி 2

**நமது அன்றாட உணவில் கீரைகள் அவசியம் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்பதைப் பற்றிக் கருத்துரைத்திடுக; முடிவு கூறுக.**

## இடுபணி 3

**ஊட்டச் சத்து உணவுகள் பற்றிக் கருத்துரைத்திடுக; முடிவு கூறுக.**



## இடுபணி 4

**சரிவிகித உணவு உட்கொள்வதன் அவசியத்தைக் குழுவில் கருத்துரைத்திடுக; முடிவு கூறுக.**

## இடுபணி 5

**பழங்கள் தொடர்பான தகவல்களையொட்டிக் கருத்துரைத்திடுக; முடிவு கூறுக.**

### பழங்கள்




#### கொய்யாப்பழம்

- கால்சியம், துத்தநாகம் நிறைந்தது.
- நார்ச்சத்து, மாவுச்சத்து அதிகம்.
- இரத்தசோகை குணமாகும்.
- மலச்சிக்கல் நீங்கும்.
- வைட்டமின் ஏ, பி. இ. கே உள்ளது.



#### சீத்தாப்பழம்

- மாவுச்சத்து, நார்ச்சத்து நிறைந்தது.
- வைட்டமின் பி, சி, இ உள்ளது.
- கால்சியம், இரும்புச் சத்து, தாமிரம் முதலிய தாது உப்புகள் உள்ளன.
- உயர் இரத்த அழுத்தம் மற்றும் காசநோயைக் கட்டுப்படுத்தும்.
- இதயத்தைப் பலமாக்கும்.



#### அன்னாசிப்பழம்

- நார்ச்சத்து அதிகம்.
- வைட்டமின் ஏ, சி உள்ளது.
- குடலில் உருவாகும் புழுக்களைக் கொல்லும்.
- எலும்புகளை உறுதியாக்கும்.
- செரிமான சக்தி மேம்படும்.



#### மாதுளை

- நினைவாற்றல் பெருகும்.
- புற்றுநோயைத் தடுக்கும்.
- இரத்தத்தில் சிவப்பு அணுக்கள் (ஹெமோ குளோபின்) அளவு அதிகரிக்கும்.
- வைட்டமின் ஏ, சி, இ உள்ளது.
- நோய் எதிர்ப்புச் சக்தி உள்ளது.
- இருதய நோய்களைத் தடுக்கும்.



#### சப்போட்டாப்பழம்

- தாமிரம், இரும்புச்சத்து நிறைந்தது.
- வைட்டமின் ஏ, சி நிறைந்தது.
- குடலிலுள்ள நச்சுக்களை நீக்குகிறது.
- கெட்ட கொழுப்பைக் கரைக்கிறது
- இரத்தக் கசிவைத் தடுக்கும்.




#### பப்பாளி

- வைட்டமின் ஏ, பி, இ, இருக்கிறது.
- நார்ச்சத்து அதிகம்.
- மலச்சிக்கலை நீக்கும்.
- புற்றுநோய் அணுக்களை வளர விடாமல் தடுக்கும்.

# பாடம் 2 உணவும் உண்ணும் முறையும்

**தக்க தொனியுடன் வாசித்திடுக.**

**சூழல்:**
வீட்டுச் சமையலறையில் அம்மாவும் மகளும் உணவு தொடர்பான தகவல்களைப் பற்றி உரையாடிக் கொண்டிருக்கின்றனர்.





அம்மா: ஓ! அதுவா? உனக்குப் பிடிக்குமென்று இட்டலி, தோசை, உப்புமா செய்திருக்கிறேன்.

காவியா: மிக்க நன்றி அம்மா. இ∴தென்ன தட்டில் வைத்திருக்கின்றீர்கள்?

அம்மா: காலையுணவில் புரதச் சத்து அவசியம் என்பதால் கொண்டைக் கடலையும் சுதேசிக் கடலையையும் அவித்து வைத்திருக்கிறேன் காவியா! பசும்பாலும் இருக்கின்றது.

காவியா: என்னுடைய ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறை காட்டுகிறீர்கள். மிக்க நன்றி அம்மா.

அம்மா: சரி காவியா. காலையுணவுக்குப் பிறகு நாம் சந்தைக்குச் செல்ல வேண்டும். மதிய உணவுக்கான சமையல் பொருள்களை வாங்க வேண்டும்.




காவியா: அடேயப்பா! உணவு உண்பதில் இவ்வளவு தகவல்களைக் கூறுகின்றீர்களே அம்மா?

அம்மா: இன்னும் சொல்கிறேன் கேள். சாப்பிடும்போது அதிகமாக நீர் குடிக்கக்கூடாது. தேவை ஏற்பட்டால் மட்டுமே சிறிதளவு நீர் அருந்த வேண்டும். அதுமட்டுமின்றி, பசி ஏற்பட்ட பின்னர்தான் சாப்பிட வேண்டும். பசி ஏற்பட்டால்தான் முன்னதாகச் சாப்பிட்ட உணவு செரித்துவிட்டதாகக் கருத முடியும். பசி எடுக்காத நிலையில் சாப்பிட்டால் அஜீரணம் ஏற்பட்டு, உடலில் நச்சுப் பொருள்கள் தேங்கி பல்வேறு நோய்களுக்கு வழிவகுத்துவிடும்.

காவியா: அம்மா, இப்பொழுது எனக்குப் பசிக்கிறதே, நாம் சாப்பிடலாமா?

அம்மா: இரு நானும் வருகிறேன். உணவு உண்பதற்கு முன் சில நொடிகள் இறைவனுக்கு நன்றி செலுத்திவிட்டு உண்போம்.

**இடுபணி 1**

**உரையாடலைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக் குறிகளுக்கேற்ப வாசித்திடுக.**

**2.1.5** • உரையாடலைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர்.

## இடுபணி 2

**வினாக்களுக்குப் பதில் கூறுக.**

1. காவியாவின் காலையுணவுக்காக அம்மா என்னென்ன உணவுகளைத் தயாரித்து வைத்திருக்கிறார்?
2. உணவு உண்ணும்போது கடைப்பிடிக்க வேண்டியவற்றைப் பட்டியலிடுக.
3. பசி ஏற்பட்டால் மட்டுமே சாப்பிட வேண்டும் என்று அம்மா வலியுறுத்தியதன் காரணம் யாது?
4. காலையுணவில் புரதச் சத்து அவசியம் எனக் கூறப்படுவதற்கான காரணத்தை ஆராய்ந்து கூறுக.

## இடுபணி 3

**உரையாடல்களைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசித்திடுக.**

**சூழல்:**
உணவுகள் தத்தம் உணவுகளின் சிறப்புகளைப் பற்றி உரையாடுகின்றன.



வணக்கம் நண்பர்களே! நலமா? நான் மிகவும் அவசியமானவன். இட்டலி, தோசை, அப்பம், பால், முட்டை, ரொட்டி, போன்ற உணவு வகைகளை வைத்திருப்பேன். என்னைப் போதுமான அளவு உண்டால்தான் அன்றைய பணிகளைச் செவ்வனே செய்ய முடியும். என்னைச் சாப்பிடாதவர்கள் சோர்வுடன் காணப்படுவர். பெரும்பாலான நோய்கள் என்னைத் தவற விட்டதால்தான் ஏற்படுகின்றன. எனவே, என்னை மறவாமல் உண்டு ஆரோக்கியமாக வாழ வேண்டும்.

**காலை உணவு**

வணக்கம். என்னைப் பற்றி உங்களுக்குத் தெரியும்தானே! என் உணவில் ஊட்டச் சத்துகள் நிறைந்திருக்கும். பெரும்பாலும், மனிதர்கள் என்னைத் தவற விடுவதில்லை. ஏன் தெரியுமா? எனக்குப் பிறகுதான் அரிய பல நடவடிக்கைகளை ஓடியாடிச் செய்கின்றனர். மலேசியர்கள் சாதம், காய்கறிகள், பொரியல், கூட்டு போன்றவற்றை உட்கொள்கின்றனர். மேலும் சிலர் துவையல், இறைச்சி வறுவல், மீன் குழம்பும் இணைத்துக் கொள்கின்றனர். அதைவிடுத்து, சிவப்பு முள்ளங்கி, வெள்ளரிக்காய், வெங்காயம், புதினாக்கீரை போன்றவற்றைப் பச்சையாக நறுக்கிச் சாப்பிடுகின்றனர். சரிவிகித உணவு உண்ண வேண்டும் என்பதில் மலேசியர்கள் கவனமாக இருக்கின்றனர். மேலும், பழச்சாறு, பழங்கள் போன்றவற்றையும் உட்கொள்கின்றனர்.



**மதிய உணவு**



நண்பர்களே! என்னைப் பற்றியும் அறிந்து கொள்ளுங்கள். என் உணவில் சரிவிகித ஊட்டச் சத்து மிகுந்து இருக்கும். உறங்குவதற்கு 3 அல்லது 4 மணி நேரத்திற்கு முன்னரே என்னை உண்ண வேண்டும். சிலர் கோதுமை, அப்பம், மாவு, கேழ்வரகு ரொட்டி போன்றவற்றுடன் பருப்புக் கூட்டு, உருளைக் கிழங்குக் கூட்டு ஆகியவற்றைச் சேர்த்துக் கொள்கின்றனர். ஒரு சிலரோ அவ்வாறு சாப்பிடுவதில்லை. பாலும் பழமும் மட்டும் சாப்பிடுகின்றனர். உடல் எடையைக் குறைக்க வேண்டும் என்று ஒரு சிலர் என்னைக் கண்டு கொள்வதில்லை. சாப்பிடாமல் இருந்தால் உடல் எடை குறைந்துவிடுமா? நிச்சயமாக இல்லை! என்னைத் தவிர்த்தால் நோய் ஏற்பட வாய்ப்புண்டு.

**இரவு உணவு**


## வளப்படுத்துதல்

**துரித உணவு (fast food) உட்கொள்வதால் ஏற்படும் விளைவுகள் பற்றி நண்பருடன் உரையாடுக.**

**என்னை நுணுகுக**

## குறைநீக்கல்

**உரையாடலைச் சரியான வேகம் தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசித்திடுக.**



தம்பி: வணக்கம் அண்ணா. முக்கனிகள் என்றால் என்னவென்று விளக்க முடியுமா?

அண்ணன்: வணக்கம் தம்பி. கண்டிப்பாகச் சொல்கிறேன். மா, பலா, வாழை ஆகிய பழங்களை முக்கனிகள் என்பர். நம் முன்னோர்கள் இக்கனிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வந்தனர்.

தம்பி: அண்ணா! இக்கனிகள் நமக்கு எவ்வகையில் நன்மை அளிக்கின்றன?

அண்ணன்: முக்கனிகளைச் சாப்பிடுவதால் நம் உடல் பலம் பெறும்; செரிமானச் சக்தியைக் கூட்டும்; மலச்சிக்கலை நீக்கும்.

தம்பி: அப்படியா அண்ணா! மேலும் சொல்லுங்கள்.

அண்ணன்: மாம்பழத்தை விரும்பாதவர் எவரேனும் உண்டா? மாம்பழம் நம் இரத்தத்தின் நச்சுக்கிருமிகளை அழிக்கும். மேலும், நரம்புகளுக்கு வலுவைத் தந்து, சிறுநீர்ப்பையிலுள்ள கற்களைக் கரைக்கும் தன்மையுடையது. பலாப் பழத்தில் ‘ஏ’ உயிர்ச்சத்து இருக்கிறது. இரத்தத்தை விருத்தி செய்வதோடு தொற்றுநோய்கள் அணுகா வண்ணம் பாதுகாக்கும். வாழைப்பழம் உடல் சூட்டைத் தணிக்கும் குணம் கொண்டது. பித்தம் தொடர்பான நோய்களுக்குச் சிறந்த நிவாரணியாக வாழைப்பழம் விளங்குகிறது.

தம்பி: அருமையான தகவல்களைப் பகிர்ந்து கொண்டதற்கு மிக்க நன்றி அண்ணா.

# பாடம் 3 ஆரோக்கியமான உணவு

## வாசித்து எழுதுக.

ஆரோக்கியமான உணவு - உடல் நலம் காக்கும் - அளவறிந்து உண்ணல் - நீண்ட நாள் நலமுடன் வாழலாம்.



உடல் சக்தி பெறும் - சுறுசுறுப்பாகச் செயல்படலாம். மூளையின் செயல்திறன் பெருகும் - நோய் ஏற்படாது- மகிழ்ச்சியான வாழ்வு அமையும் - மன அமைதி ஏற்படும்.



ஆரோக்கியமான உணவு உண்ணாவிட்டால் - உடல் பருமன் - நோய் ஏற்படும் - மன உளைச்சல் - மருத்துவச் செலவு - திறம்படச் செயலாற்ற முடியாமை.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் - ஆரோக்கியமான வாழ்வை அமைப்போம் - மகிழ்ச்சியும் நிம்மதியும் பெறுவோம்.

உணவுக் கூம்பின் அடிப்படையில் உணவு உட்கொள்ளுதல் - உடல் நிலை, வயது, செய்யும் தொழில் ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளுதல் - தேவையறிந்து உண்ணுதல்.



### இடுபணி 1

**‘ஆரோக்கியமான உணவு’ எனும் தலைப்பில் 160 சொற்களில் சட்டகங்களின் துணையுடன் கருத்து விளக்கக் கட்டுரை எழுதுக.**

### இடுபணி 2

**‘பாரம்பரிய உணவு’ எனும் தலைப்பில் 160 சொற்களில் கருத்து விளக்கக் கட்டுரை எழுதுக.**

3.4.12 • 160 சொற்களில் கருத்து விளக்கக் கட்டுரை எழுதுவர்.

## பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

### இணைமொழிகள் அறிக.

**சூழல்:**
கடந்த பள்ளி விடுமுறையில் குகனும் இராதாவும் மேற்கொண்ட நடவடிக்கைகளைப் பகிர்ந்து கொள்கின்றனர்.



நான் என் மாமாவின் திருமண விருந்து நிகழ்ச்சிக்குச் சென்றேன். அந்நிகழ்ச்சி மிக விமரிசையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நிகழ்ச்சியின் நெறியாளர் மணமக்களை மேடைக்கு அழைத்த போது மணமகன் கம்பீரமாக நடந்து வந்தார். ஆனால், மணமகளோ **நாணிக் கோணி** அவரைப் பின் தொடர்ந்தார். மேடையில் மணமக்கள் அணிச்சலை வெட்டியும் ஊட்டியும் மகிழ்ந்தனர். தொடர்ந்து வாழ்த்துச் செய்தி இடம்பெற்றது. மணமக்களின் பெற்றோர்கள் ஆசியுரை வழங்கினர். இசைக் கச்சேரி தொடங்கியதும் சிறுவர்கள் **ஆடிப்பாடி** இன்புற்றனர். அறுசுவை உணவு பரிமாறப்பட்டது. நானும் என் மாமாவுக்குப் பூச்செண்டு வழங்கி வாழ்த்துகளைத் தெரிவித்தேன்.

நான் என் தாத்தாவின் கிராமத்திற்குச் சென்றிருந்தேன். என் தாத்தாவின் வீடு அரண்மனை போல இருக்கும். வீட்டின் **உள்ளும் புறமும்** தூய்மையாகவும் அழகாகவும் இருக்கும். மாலையில் தாத்தாவுடன் மல்லிகைத் தோட்டத்திற்குச் சென்றேன். பலர் அங்கு வேலை செய்து கொண்டிருந்தனர். வேலையாட்களுள் சிலர் தோட்டத்தில் மல்லிகைப் பூக்களை மொட்டு, மலர் எனப் பிரித்தனர். சிலர் மொத்த வியாபாரிகளிடம் கூடைகூடையாகப் பூக்களை விற்றுக் கொண்டிருந்தனர். மேலும் சிலர் தோட்டத்தில் **வாடி வதங்கி** விழுந்திருந்த இதழ்களைக் கூட்டிப் பெருக்கினர். வேலையாட்கள் கடைப்பிடிக்க வேண்டிய **சட்ட திட்டங்களைத்** தெளிவாகத் தாத்தா விளக்கியுள்ளார் என்பதை அவர்கள் வேலை செய்யும் முறையிலிருந்து தெரிந்துகொண்டேன். தாத்தாவின் கிராமத்திற்குச் சென்றதை எண்ணி மனம் மகிழ்கின்றேன்.



**இணைமொழிகளும் பொருளும்**

| | |
|---|---|
| **நாணிக் கோணி** | → மிகவும் வெட்கப்பட்டு |
| **ஆடிப்பாடி** | → மகிழ்ச்சியுடன் |
| **உள்ளும் புறமும்** | → உள்ளேயும் வெளியேயும் / எண்ணத்திலும் செயலிலும் |
| **வாடி வதங்கி** | → உலர்ந்து |
| **சட்ட திட்டம்** | → விதிமுறைகள் |

### இடுபணி 1

**இணைமொழிகளைப் பொருள் விளங்க வாக்கியத்தில் அமைத்துக் காட்டுக.**

4.4.2 • இரண்டாம் படிவத்திற்கான இணைமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

## இடுபணி 2

**சூழலுக்கு ஏற்ற இணைமொழியை எழுதுக.**

**சூழல் 1**

முனியன் படிவம் இரண்டில் பயிலும் மாணவன். பள்ளியில் அனைத்துப் பாடங்களிலும் சிறந்து விளங்கினான். பள்ளிப் புறப்பாட நடவடிக்கைகளிலும் மிகுந்த ஈடுபாடு காட்டுவான். ஒவ்வொரு நாளும் மாலையில் இறைவனை வழிபடக் கோயிலுக்குச் செல்வான். அவனுடைய எண்ணமும் செயலும் எப்பொழுதும் உயர்ந்தே இருக்கும்.

**சூழல் 2**

துன் சம்பந்தன் கிராமத்தில் சமீப காலமாகத் தூய்மைக்கேடு ஏற்பட்டு வருகிறது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அங்குச் சென்று விசாரணை நடத்தினர். புதிதாக நிறுவப்பட்ட தொழிற்சாலையிலிருந்து வெளியாகும் கழிவுப் பொருள்களும் குப்பைகளுமே அத்தூய்மைக்கேட்டுக்குக் காரணங்கள் எனக் கண்டறிந்தனர். தொழிற்சாலை நிருவாகி விதிமுறைகளைப் பின்பற்றத் தவறியதால் ஏற்பட்ட பாதிப்பு என்று அறிந்தனர். தொழிற்சாலையின் நிருவாகிக்குத் தக்க தண்டனை வழங்கப்பட்டது.

## வளப்படுத்துதல்

**இணைமொழிகளுக்கு ஏற்ற சூழலை உருவாக்கி எழுதுக.**

1. ஆடிப்பாடி
2. சட்ட திட்டம்
3. உள்ளும் புறமும்
4. வாடி வதங்கி
5. நாணிக் கோணி

### அறிந்து கொள்க

நாம் உண்ணும் உணவிலுள்ள ருசியை மட்டுமே நமது நாக்கு உணர்கிறது. அவ்வுணவு ஆரோக்கியத்திற்கு உகந்ததா இல்லையா என்பதை நம்முடைய மூளையால் மட்டுமே பகுத்துணர முடியும்.

**(ஆரோக்கியத்தின் திறவுகோல்)**

## குறைநீக்கல்

**அ. இணைமொழிக்கு ஏற்ற கருத்துடன் இணைத்திடுக.**

| | |
|---|---|
| ஆடிப்பாடி ● | ● கூச்சவுணர்வால் வெட்கப்படுதல். |
| வாடி வதங்கி ● | ● உட்புறமும் வெளிப்புறமும். |
| சட்ட திட்டம் ● | ● உலர்ந்து போதல். |
| உள்ளும் புறமும் ● | ● மிகுந்த மகிழ்ச்சியுடன். |
| நாணிக் கோணி ● | ● உருவாக்கப்பட்ட விதிமுறைகள். |

**ஆ. வாக்கியங்களில் ஏற்ற இணைமொழிகளை எழுதுக.**

1. வயலில் ________ இருந்த பயிர்களுக்கு விவசாயி நீர் பாய்ச்சினார்.
2. மாப்பிள்ளை வீட்டார் பெண் பார்க்க வீட்டுக்கு வந்திருந்தபோது என் அக்கா ________ நின்றாள்.
3. போக்குவரத்து ________ மேலும் வலுப்படுத்தப்பட்டால் கண்டிப்பாகச் சாலை விபத்துகள் குறையும்.
4. சுவாமி விவேகானந்தரின் ஆன்மிகச் சொற்பொழிவைக் கேட்க அரங்கின் ________ சீடர்கள் காத்திருந்தனர்.
5. பள்ளி ஆண்டு நிறைவு விழாவில் மாணவர்கள் மேடையில் ________ மகிழ்ந்தனர்.

வாசித்து மகிழ்க.


## ஆப்பிள் விருந்து

பரதனுக்கு அன்று பிறந்தநாள். தன் நண்பர்கள் பலரையும் அழைத்திருந்தான். அவன் அழைப்பை ஏற்று நண்பர்கள் பலர் வந்திருந்தனர்.

பரதனின் அம்மா சுவையான உணவுகளைச் சமைத்திருந்தார். பரதனின் தந்தையோ பட்டணத்திற்குச் சென்று பரதன் வாங்கி வரச் சொன்ன பொருள்களையும் அழகான அணிச்சலையும் வாங்கி வந்திருந்தார்.

காத்திருந்த நேரமும் வந்தது. பரதனுக்குப் பிறந்தநாள் வாழ்த்துப் பாடினர். அழகான அணிச்சலைப் பரதன் வெட்டினான். அணிச்சலைச் சுவைத்தனர். சுவையான உணவுகள், பலகாரங்களை உண்டனர். பிறந்தநாள் விருந்துக்குப் பிறகு நண்பர்களுடன் பரதன் கூடத்தில் அமர்ந்தான்.

ஏதோ நினைவுக்கு வரவே, பரதன் வீட்டினுள் சென்று ஒரு பெட்டியைத் தூக்கி வந்தான். நண்பர்கள் அனைவரும் கேள்விக்குறியோடு பரதனைப் பார்த்தனர். மௌனமாகப் பரதன் பெட்டியைத் திறந்தான். உள்ளே இருந்த ஆப்பிள் பழங்களை ஒவ்வொன்றாக எடுத்து மேசை மீது அடுக்கினான். ஒவ்வோர் ஆப்பிள் பழத்திலும் எண் எழுதி ஒட்டப்பட்டிருந்தது. அவற்றுள் ஓர் ஆப்பிள் பழத்தில் மட்டும் 0 என்று எழுதி ஒட்டினான். அடுக்கப்பட்ட ஆப்பிள் பழங்கள் நண்பர்களை ஈர்த்தன. பரதன் தன் புதிரை ஆரம்பித்தான்.




இங்குள்ள ஆப்பிள்களில் பத்து ஆப்பிள்களை மட்டும் இடம் மாற்றினால் அதிலுள்ள எண்களின் கூட்டுத்தொகை எப்படிக் கூட்டினாலும் முப்பது வரும். கண்டுபிடிப்பவர்கள் எல்லா ஆப்பிள்களையும் எடுத்துச் செல்லலாம் என்றான். நண்பர்கள் தேட ஆரம்பித்தனர். நீங்களும் முயன்று பாருங்களேன்!

# தொகுதி 6 பொதுப் போக்குவரத்து

## பாடம் 1 அதிவிரைவு இரயில்

படங்களைப் பார்த்து விவரித்துக் கூறுக.





1.4.4 • ஒரு பொருளைப் பற்றி விவரித்துக் கூறுவர்.

**இடுபணி 1**

**இரண்டு அடுக்குப் பேருந்து பற்றி விவரித்துக் கூறுக.**





**இடுபணி 2**

**மலேசியாவில் அதிவிரைவு இரயில் சேவைத் திட்டம் பற்றி விவரித்துக் கூறுக.**

**இடுபணி 3**


**ஆசிரியரின் துணையுடன் மலேசியாவில் விமானச் சேவையைப் பற்றித் திரட்டேடு தயாரித்திடுக.**





## இடுபணி 4

**கீழ்க்காணும் பொது வாகனங்களுக்கு இடையே உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை விவரித்துக் கூறுக.**




## இடுபணி 5

**படங்களின் துணையுடன் கடல் போக்குவரத்துப் பற்றி விவரித்துக் கூறுக.**


சொகுசு பயணக்கப்பல்


ஓடையிழுவை


சரக்குக் கப்பல்


விசைப் படகு

# பாடம் 2 மலேசியாவில் பொதுப் போக்குவரத்து

**கூர்ந்து வாசித்திடுக.**

## பொதுப் போக்குவரத்து

பொதுப் போக்குவரத்து இன்றைய காலக்கட்டத்தில் மிக அவசியமான ஒன்றாகக் கருதப்படுகின்றது. நாம் தரை மார்க்கமாகவும் நீர் மார்க்கமாகவும் ஆகாய மார்க்கமாகவும் பொதுப் போக்குவரத்துகளைப் பயன்படுத்தி வருகின்றோம்.

## தரைப் போக்குவரத்து

நமது அன்றாட வாழ்வில் பொதுப் பேருந்து, வாடகை வண்டி, அதிவிரைவு இரயில், தொடர்வண்டி, முச்சக்கர வண்டி, மூடுந்து போன்ற தரைப் போக்குவரத்துகளைப் பயன்படுத்தி வருகின்றோம். குறிப்பாகப் பட்டணத்தில் வாழும் மக்களுக்கு இம்முறையிலான போக்குவரத்து மிகவும் அவசியமாக விளங்குகின்றது. மலேசியாவில் தரைப்போக்குவரத்து குறைந்த விலையில் நிறைந்த சேவையை வழங்கி வருகிறது.

## நீர்ப் போக்குவரத்து

நீர்வழிப் போக்குவரத்தென்பது கப்பல், ஓடையிழுவை, நீர்மூழ்கிக் கப்பல், படகு போன்றவற்றின் மூலம் பயணிப்பதாகும். மலேசியாவில் பங்கோர் தீவு, புலாவ் பெசார், பினாங்கு தீவு, லங்காவி தீவு போன்ற தீவுப் பகுதிகளுக்குப் பயணிப்பவர்கள் நீர்ப் போக்குரவத்தையும் பயன்படுத்தி வருகின்றனர். இம்முறையிலான போக்குவரத்தின் வாயிலாகக் குறிப்பாகக் கப்பலில் ஒரே நேரத்தில் அதிகமானோர் பயணிக்க முடியும். மேலும், ஓடையிழுவையில் (ஃபெர்ரி) வாகனங்களையும் ஏற்றிச் செல்லலாம். எடை அதிகமாக உள்ள பொருள்களை அதிகளவில் ஒரே நேரத்தில் ஏற்றிச் செல்ல முடியும். இந்நீர்ப் போக்குவரத்து முறை பல நூற்றாண்டுகளாக வணிகத்துறையில் சேவையாற்றி வருகின்றது.

## ஆகாயப் போக்குவரத்து


உள்நாட்டிலும் வெளிநாடுகளுக்கும் பயணம் செய்ய ஆகாயப் போக்குவரத்து முறை செயல்படுத்தப்பட்டு வருகின்றது. வெளிநாடுகளுக்குக் குறைந்த விலையில் குறுகிய நேரத்தில் செல்ல முடிகின்றது. மலேசியாவில் உலகத் தரத்திலான அதிநவீன விமான



நிலையங்கள் உருவாக்கப்பட்டிருப்பது நமது நாட்டின் விமானப் போக்குவரத்துத் துறை வளர்ச்சி அடைந்துள்ளது என்பதற்குச் சான்றாகும்.

### பொதுப் போக்குவரத்தின் பயன்கள்

பொதுப் போக்குவரத்துத் துறையின் வளர்ச்சியால் நாட்டின் பொருளாதாரம் உயர்கின்றது; வேலை வாய்ப்புகள் அதிகரிக்கின்றன. மக்கள் மன அழுத்தமின்றிச் செயல்பட முடிகின்றது. எனவே, மலேசிய மக்கள் பொதுப் போக்குவரத்து வசதிகளை முறையாகப் பயன்படுத்தி மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ வேண்டும்.




2.4.2 • கூர்ந்த வாசிப்பு உத்தியைப் பயன்படுத்தி வாசிப்பர்.

**இடுபணி 1**

**பாடப் பகுதியைக் கூர்ந்த வாசிப்பு உத்தியைப் பயன்படுத்தி வாசித்திடுக.**

**இடுபணி 2**

**வினாக்களுக்கு விடை காண்க.**


1. என்னென்ன வகையான பொதுப் போக்குவரத்துகள் இப்பாடப்பகுதியில் விவரிக்கப்பட்டுள்ளன?

2. எதிர்காலத்தில் மலேசியாவில் பொதுப் போக்குவரத்துத் துறையில் எப்படிப்பட்ட மாற்றங்களை ஏற்படுத்தலாம் என்று நீ கருதுகின்றாய்?

**இடுபணி 3**

**வரைபடத்திலுள்ள தகவல்களைக் கூர்ந்து வாசித்திடுக; வினாக்களுக்குப் பதில் கூறுக.**

**சுங்கை பூலோ தொடங்கி காஜாங் வரையிலான அதிவிரைவு இரயில் சேவை**





1. காஜாங் டெபோட் நிலையத்தின் அருகில் உள்ள இரு நிலையங்களின் பெயர்களைக் கூறுக.

2. பாசார் செனி நிலையத்திற்கும் தாமான் முத்தியாரா நிலையத்திற்கும் இடையே உள்ள நிலையங்கள் யாவை?

3. கொக்ரேன் நிலையத்திற்கும் பண்டார் காஜாங் நிலையத்திற்கும் இடையில் எத்தனை ஓய்விடங்கள் உள்ளன?

## இடுபணி 4

**பொதுப் போக்குவரத்துகளைப் பயன்படுத்துவதனால் ஏற்படும் நன்மைகளைக் குமிழி வரைபடத்தில் எழுதி விளக்குக.**



## வளப்படுத்துதல்

**பொதுப் போக்குவரத்தினால் ஏற்படும் விளைவுகளைப் பட்டியலிடுக.**

பொதுப் போக்குவரத்து

| நன்மைகள் | தீமைகள் |
|---|---|
| | |
| | |
| | |

## அறிந்து கொள்க

**கூர்ந்த வாசிப்பு (Scanning)**

**நோக்கம்**

- கருத்துகளை விரைவாக அடையாளங்காண
- கேள்விகளுக்கு விரைவாக விடை அறிய
- தேவைப்படும் தகவல்களைக் கண்டறிய

**அணுகுமுறை**

- நாம் அறிய விரும்புவதைத் துல்லியமாகத் தெரிந்துகொண்டு நமது சிந்தனையைக் குவிநிலைப்படுத்த வேண்டும்.
- செய்திகளையும் கருத்துகளையும் அடையாளம் காண ஒவ்வொரு பக்கத்தின் மேற்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளையும் துணைத் தலைப்புகளையும் பயன்படுத்தலாம்.
- ஒவ்வொரு சொல்லையும் நிறுத்தி வாசிப்பதைத் தவிர்க்க வேண்டும். கண்களை விரைவாக நகர்த்தி வாக்கியத்தில் காணப்படும் முக்கியக் கருச்சொற்களை அடையாளம் காணும் திறனைப் படிப்படியாக வளர்க்க வேண்டும்.

**மூலம்: கலைத்திட்ட மேம்பாட்டுப் பிரிவு.**



## குறைநீக்கல்

**பின்வரும் கூற்றினைக் கூர்ந்து வாசித்திடுக.**

பொதுப் போக்குவரத்துக் குறித்து நான் பெருமைப்படுகிறேன். மக்களிடையே நிலவும் இடைவெளியை இப்போக்குவரத்துத் துறை குறைத்துள்ளது. நான் என்னுடைய வசிப்பிடத்திலிருந்து நாட்டிலுள்ள பல பகுதிகளுக்கும் எளிதாகச் செல்லக் கூடிய வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது. நான் முன்பு செல்ல முடியாத இடங்களுக்கு இப்பொழுது குறைந்த செலவில் விரைவாகச் செல்ல முடிகின்றது. வாழ்க்கைச் செலவினத்தை இப்பொதுப் போக்குவரத்துத் துறை குறைத்துள்ளது என்றால் மிகையாகாது. இன்றைய கன்னெய் (பெட்ரோல்) விலை உயர்ந்துள்ள காரணத்தால் என்னால் சொந்த வாகனத்தில் பயணிக்க இயலவில்லை.


பொதுப் போக்குவரத்து அன்றாடச் செலவுகளைக் குறைத்ததோடு மன அமைதியையும் மகிழ்ச்சியையும் மலேசியர்கள் மத்தியில் நல்லுறவையும் ஏற்படுத்தியுள்ளது. மலேசியப் பொதுப் போக்குவரத்துத் துறைக்கு நான் நன்றி கூறுகிறேன்.

பாடம் 3 எங்கள் கடமை

## வாசித்து எழுதுக.



நான் ஒரு மாலுமி. என்னுடைய வேலை கப்பலைச் செலுத்துவது ஆகும். **திரை** எழும் கடலில் **முனை**ப்புடன் கப்பலை மகிழ்ச்சியாகச் செலுத்துவேன். பல இன மக்களை நான் அன்றாடம் சந்திக்கின்றேன். என்னுடன் உதவி மாலுமியும் உடன் வருவார். பயணத்தின்போது சில முக்கிய இடங்களைப் பற்றி பயணிகளுக்கு அவர் அறிவிப்புச் செய்வார். பயணிகள் ஆர்வத்துடன் சாளரத்தின் **திரை**யை விலக்கிவிட்டுப் பார்த்து இன்புறுவர். கப்பல் இலக்கை அடைந்தவுடன் பணியாட்கள் கப்பலின் ஒவ்வொரு **முனை**யிலும் நங்கூரத்தை இறக்குவார்கள். பயணிகளைப் பாதுகாப்பாக அக்கரையில் இறக்கியவுடன் மனம் மகிழ்வேன்.



நான் ஒரு விமானி. என்னுடைய பணி விமானத்தைச் செலுத்துவது ஆகும். என்னுடன் மற்றொரு **இணை** விமானியும் **இணை**ந்து செயல்படுகின்றார். பயணிகளை விமானத்தில் ஏற்றுவதற்கு முன்பாக அனைத்துக் கருவிகளும் முறையாக இயங்குகின்றனவா என்பதைப் பொறியியல் நிபுணர்கள் உறுதிப்படுத்துவார்கள். அதனைத் தொடர்ந்து, பயணிகள் விமானத்தினுள் அமர அனுமதிக்கப்படுவார்கள். விமானப் பணிப் பெண்கள் அன்பு கலந்த **நகை**ப்புடன் பயணிகளை வரவேற்பார்கள். இருக்கைகளில் பயணிகள் அமர்ந்தவுடன் தங்களின் உடைமைகளான பணம், **நகை** ஆகியவற்றுள் கவனமாக இருக்கும்படி பணிப்பார்கள். மேலும், விபத்து ஏற்பட்டால் பயணிகள் எப்படிச் செயல்பட வேண்டும் என்பதைச் செய்து காட்டுவார்கள். பயணிகள் தயார் நிலைக்கு வந்தவுடன் விமானத்தைச் செலுத்தி மேலெழுப்புவேன். இலக்கை அடைந்தவுடன் பத்திரமாகத் தரை இறக்குவேன். என்னுடைய நிறுவனம் மற்ற விமான நிறுவனங்களுக்கு இணையான சேவையை வழங்குகிறது.

3.1.4 • இரு பொருள்பட வாக்கியம் அமைப்பர்.

## இடுபணி 1

**பனுவலில் வண்ணமிடப்பட்ட சொற்களின் பொருளை எழுதுக; வாக்கியம் அமைத்திடுக.**

## இடுபணி 2

**பின்வரும் சொற்களைக் கொண்டு இருபொருள்பட வாக்கியம் அமைத்திடுக.**

| | | | |
|---|---|---|---|
| 1. ஐயம் | | 6. கரி | |
| 2. அணை | | 7. காயம் | |
| 3. அலை | | 8. அறை | |
| 4. முதல் | | 9. கரை | |
| 5 அசை | | 10. தலை | |

## இடுபணி 3

**சொற்குவியலிலுள்ள சொற்களுள் இருபொருள் உணர்த்தும் ஏதேனும் ஐந்து சொற்களைத் தெரிவு செய்து வாக்கியம் அமைத்திடுக.**



# பாடம் 4 இலக்கணம்

## தோன்றல் விகாரம் அறிக.



இரு சொற்கள் புணரும்போது நிலைமொழியின் ஈற்றிலோ வருமொழியின் முதலிலோ மாற்றங்கள் ஏற்பட்டால் அது விகாரப் புணர்ச்சியாகும். விகாரப் புணர்ச்சி மூன்று வகைப்படும். அவை, தோன்றல் விகாரம், திரிதல் விகாரம், கெடுதல் விகாரம் என்பனவாகும்.

தோன்றல் விகாரம் எனப்படுவது நிலைமொழியும் வருமொழியும் புணரும்போது இடையில் ஓர் எழுத்துப் புதிதாகத் தோன்றும்.



**எ.கா:**

நிலைமொழி + வருமொழி

| | | | |
|---|---|---|---|
| அ | + | யாசகன்= | அவ்யாசகன் |
| ↓ சுட்டு எழுத்து | | ↓ யகரச் சொல் | |
| எ | + | யாத்திரை= | எவ்யாத்திரை |
| ↓ வினா எழுத்து | | ↓ யகரச் சொல் | |

**குறிப்பு:**
நிலைமொழியில் சுட்டும், எகர வினாவும் இருந்து வருமொழியில் யகரமும் வந்தால் இடையில் வகரம் தோன்றும்.

### அறிந்து கொள்க

- பிழைக்க விரும்பினால் உழைக்க விரும்பு.
- பிறரை நம்பி வாழாதே. பிறர் நம்பும்படி வாழ்.
- இரை தேடும் போதே இறைவனையும் தேடு.
- பெரியோரை வணங்கு. சிறியோரை வாழ்த்து.
- நிறைகளைப் பேசு! நிறையப் பேசாதே.

### இடுபணி 1

**நிலைமொழியில் சுட்டும் வருமொழியில் யகரமும் புணரும் சொற்களைச் சேர்த்தெழுதுக.**

1. அ + யாமம்= ______
2. இ + யாகம்= ______
3. உ + யாழ்= ______
4. அ + யாணர்= ______
5. இ + யாக்கை= ______
6. இ + யுகம்= ______
7. உ + யுவதி= ______
8. அ + யோகி= ______

5.3.2 • தோன்றல் விகாரப் புணர்ச்சியில் நிலைமொழியில் சுட்டும் வருமொழியில் யகரமும் புணர்தல் பற்றி அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

5.3.3 • தோன்றல் விகாரப் புணர்ச்சியில் நிலைமொழியில் எகர வினாவும் வருமொழியில் யகரமும் புணர்தல் பற்றி அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

## இடுபணி 2

**நிலைமொழியில் எகர வினாவும் வருமொழியில் யகரமும் புணரும் சொற்களைச் சேர்த்தெழுதுக.**

1. எ + யோசனை= ______
2. எ + யோகம்= ______
3. எ + யூகசாலி= ______
4. எ + யூதர்= ______
5. எ + யுக்தி= ______
6. எ + யுத்தம்= ______
7. எ + யாறு= ______
8. எ + யானை= ______

## இடுபணி 3

**சுட்டும், எகர வினாவும் யகரத்தோடு புணரும் சொற்றொடர்களை எழுதுக.**

| சுட்டு + யகரம் | எகர வினா + யகரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

## வளப்படுத்துதல்

**பின்வரும் சொற்றொடர்களைக் கொண்டு வாக்கியம் அமைத்திடுக.**

1. எவ்யாகம்
2. இவ்யாத்திரை
3. அவ்யுவதி
4. உவ்யானை
5. எவ்யானை
6. எவ்யாண்டு
7. இவ்யுகம்
8. அவ்யாசகன்

## குறைநீக்கல்

**பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.**

1. ______ யாருடையது என்று இசைஞானி கலைஞர்களிடம் கேட்டார். (எவ்யாழ், இவ்யாழ்)

2. ______ ஒவ்வொரு நாளும் யாசகம் கேட்டு இத்தெருவில் செல்வான். (அவ்யாசகன், எவ்யாசகன்)

3. ______ கரும்புத் தோட்டத்தில் புகுந்து அனைத்துக் கரும்புகளையும் தின்றது. (இவ்யானை, எவ்யானை)

4. ______ யை நீ காட்டில் சந்தித்து ஆசி பெற்றாய்? (இவ்யோகி, எவ்யோகி)

5. ______ இருக்கும்வரை நாட்டு நலனுக்காகப் பாடுபடுவேன் என்றார் டாக்டர் அம்பேத்கர். (அவ்யாக்கை, இவ்யாக்கை)

6. ______ தயிர்ச் சாதத்தை உண்டு மகிழ்ந்தார். (அவ்யாழ்ப்பாணர், எவ்யாழ்ப்பாணர்)

தொகுதி 6

# பாடம் 1 நன்றி நவில்வோம்

## வாசித்து உரையாற்றுக.



பெருமதிப்பிற்குரிய கோம்பாக் மாவட்ட நகராண்மைக் கழக அதிகாரி திரு. பூபாலன் காத்தமுத்து அவர்களே, கம்போங்பாரு கிராமத் தலைவர் திரு. ரவி வேலாயுதம் அவர்களே, குடியிருப்பார்களே, உங்கள் அனைவருக்கும் வணக்கம். நமது நலனுக்காகப் பாடுபடுகின்ற நகராண்மைக் கழகத்தினருக்கு நன்றி கூறுவதற்காக நாம் இங்குக் கூடியுள்ளோம்.

அவையோர்களே,
நமது கம்போங்பாரு கிராமத்தின் தூய்மைக்குக் கோம்பாக் மாவட்ட நகராண்மைக் கழகத்தின் பணி மகத்தானது. ஒரு வாரத்தில் குறைந்தது மூன்று நாள்கள் நமது கிராமத்துக் குப்பைகளும் கழிவுகளும் அகற்றப்படுகின்றன. நகராண்மைக் கழக ஊழியர்கள் தவறாமல் தங்களின் பணிகளைச் செவ்வனே செய்கின்றனர். மிகவும் பொறுமையாகவும் பணிவாகவும் செயலாற்றுகின்றனர். அவர்களுக்கு இவ்வேளையில் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

தோழர்களே,
நமது கம்போங்பாருவில் 280 வீடுகள் இருக்கின்றன. ஒவ்வொரு வீட்டிலிருந்தும் வெளியேற்றப்படும் குப்பைகளையும் கழிவுகளையும் சிதறாமல் பத்திரமாக அகற்றுகின்றனர். உங்களின் பொறுப்புணர்ச்சிக்கும் சகிப்புத் தன்மைக்கும் எங்களின் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அவையோர்களே,
நமது கிராமம் நமது பொறுப்பு என்ற உயரிய சிந்தனையில் நகராண்மைக் கழகத்தினர் செயலாற்ற முக்கியக் காரணமாக விளங்கும் அக்கழகத்தின் அதிகாரி திரு. பூபாலன் காத்தமுத்து அவர்களுக்கு இவ்வேளையில் எங்களின் நன்றி மலர்களைச் சமர்ப்பிக்கின்றோம்.

இங்குப் பேச வாய்ப்பளித்த நமது கிராமத்தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். நமது கிராமத்தின் தூய்மையை அனைவரும் தொடர்ந்து பாதுகாப்போம். நன்றி.

1.3.3 • நன்றியுரை ஆற்றுவர்.

**இடுபணி 1**

**உன் பள்ளியின் சுற்றுச்சூழல் வாரத்தை முன்னிட்டுச் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு இயக்கங்களின் சேவையைப் போற்றி குறிப்புகளின் துணையுடன் நன்றியுரை ஆற்றிடுக.**

### மலேசியச் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு இயக்கங்கள்

**அலாம் ஃபுளோரா**

- கழிவுப் பொருள்களை அப்புறப்படுத்துதல்.
- பொருள்களை மறுசுழற்சி செய்தல்.

**சுற்றுச்சூழல் இலாகா**

- சுற்றுச்சூழலின் தரத்தை நிர்ணயம் செய்தல்.
- தூய்மைக்கேடு ஏற்படாமல் பாதுகாத்தல்.
- கல்வி வாயிலாகச் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பராமரிப்புத் திட்டங்களை ஏற்று நடத்துதல்.

**தீபகற்ப மலேசிய வன இலாகா**

- காடுகள் பாதுகாப்புத் திட்டங்களை வகுத்தல்.
- தேசிய பூங்காக்களை உருவாக்குதல்.
- வைப்புக் காடுகளைப் பராமரித்தல்.

**வன விலங்கு மற்றும் தேசிய பூங்கா பாதுகாப்பு இலாகா**

- காடுகளைப் பாதுகாத்தல் தொடர்பான தெளிவைக் கொடுத்தல்.
- வன விலங்குகளையும் தேசிய பூங்காக்களையும் பாதுகாத்தல்.

**மலேசிய இயற்கை நேசிப்புக் கழகம்**

- சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல், பராமரித்தல்.
- கல்வியின்வழி மறுசுழற்சித் திட்டங்களை வகுத்தல்.
- விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள் செய்தல்.

**மலேசிய வன ஆய்வுக் கழகம்**

- வன மூலங்கள் தொடர்பான ஆய்வுகளையும் மேம்பாட்டுத் திட்டங்களையும் உருவாக்குதல்.

**அறிந்து கொள்க**

- நன்றியுரையில் நன்றியை வெளிப்படுத்த வேண்டும்.
- மற்றவர் முன்னிலையில் பேசுவதாக அமைய வேண்டும்.
- முகமன், அவை விளிப்பு, பேச்சாளரின் அறிமுகம், பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூற வேண்டும்.
- கருத்துப் பகுதியில் இடைவிளிப்புகள் இருக்க வேண்டும்.
- இறுதியில் எதிர்பார்ப்பை வைத்து நன்றி கூறி விடைபெற வேண்டும்.

**இடுபணி 2**

கடந்த வாரம் உன் பள்ளியில் சுற்றுச்சூழல் மாதத்தை முன்னிட்டுக் கூட்டுப்பணி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. அக்கூட்டுப்பணியில் ஈடுபட்டுச் சிறப்பாகச் செயல்பட்ட அனைவருக்கும் நன்றி கூறும் பொருட்டு, படங்களின் துணையுடன் நன்றியுரை ஆற்றிடுக.



செடிகளை நடுதல்



சுவரோவியங்கள் வரைதல்



குப்பைகளை வகைப்படுத்தி மறுசுழற்சிக்குத் துணை புரிதல்



கால்வாய்களைச் சுத்தம் செய்தல்

## இடுபணி 3

**இயற்கை வளம் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சிலிருந்து வந்திருந்த அதிகாரி ஒருவர் உன்னுடைய பள்ளி மாணவர்களுக்குச் ‘சுற்றுச்சூழல் தூய்மைக்கேடுகளும் அவற்றால் ஏற்படும் பாதிப்புகளும்’ எனும் தலைப்பில் படங்களின் துணையுடன் கருத்தரங்கினை நடத்தினார். அவருடைய சேவையையும் திறன்வாய்ந்த பகிர்வினையும் பாராட்டி மாணவர் தலைவன் என்ற முறையில் நன்றியுரை ஆற்றிடுக.**



தொகுதி 7

# பாடம் 2 பசுமையை நேசிப்போம்

## தக்க தொனியுடன் வாசித்திடுக.



மதிப்பிற்குரிய பெரியோர்களே! இளைஞர்களே! திரளாகக் கூடியிருக்கும் பொதுமக்களே! முதற்கண் உங்கள் அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இக்குடியிருப்புப் பகுதியின் தலைவனான நான் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன். என் உடன்பிறவா சகோதர சகோதரிகளான உங்கள் அனைவரையும் காண்பதற்கு வாய்ப்பளித்த இறைவனுக்கு நன்றி கூறுகிறேன்.

என் அன்புச் சகோதர சகோதரிகளே!

இன்று நாம் இங்குக் கூடியுள்ள காரணத்தை அறிய நீங்கள் அனைவரும் ஆவலாய் இருப்பதை என்னால் அறிய முடிகிறது. எனவே, நேரம் தாழ்த்தாமல் உங்கள் அனைவரின் ஆவலைப் பூர்த்தி செய்ய எண்ணியுள்ளேன்.

பெரியோர்களே! சகோதரர்களே!

நாம் குடியிருக்கும் இப்பகுதியில் ஒரு பொது மண்டபம் எழுப்புவது நம் அனைவரின் கனவாக இருந்தது. அக்கனவு நனவாகும் நேரம் வந்துவிட்டது. ஆம், நண்பர்களே! வெகுவிரைவில் இப்பகுதியில் பன்னோக்குப் பொதுமண்டபம் கட்டுவதற்கான ஆயத்தப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இம்மண்டபம் கட்டும் முழுச் செலவையும் அரசாங்கமே ஏற்றுக் கொள்ளும்.

எனதருமைச் சகோதரர்களே!

இம்மண்டபத்திற்கு வெளிப்புறத்தில் உள்ள பகுதியை ஓர் அழகுப் பூங்காவாக மாற்றுவது நம் அனைவரின் கடமையாக ஏற்றுக் கொள்ள வேண்டுமெனத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். இப்பகுதியை நறுமணம் வீசும் பூஞ்சோலையாக உருவாக்க உங்கள் அனைவரின் ஒத்துழைப்பை வேண்டுகிறேன்.

அன்பார்ந்த சபையோர்களே!

நம் பகுதியில் எழுப்பவிருக்கும் மண்டபத்தில் பலவகை நடவடிக்கைகளை

மேற்கொள்ளலாம். தியானப் பயிற்சி வகுப்புகள், நடன வகுப்புகள், முதியோர் கல்வி, மருத்துவ முகாம், சமய வகுப்புகள், தன்முனைப்புப் பட்டறைகள் எனப் பல நடவடிக்கைகளைச் செய்து நாம் அனைவரும் பயனடையலாம்.



அருமைச் சகோதரர்களே! இளைஞர்களே!

ஒரு நாட்டின் முதுகெலும்பாகத் திகழ்பவர்கள் நீங்களே. எனவே, உங்களின் ஆற்றலையும் திறமைகளையும் வெளிப்படுத்தி உங்கள் உடல் உழைப்பைத் தர முன் வாருங்கள். உங்கள் உழைப்பே நம் வசிப்பிடத்தின் பசுமைக்கு அடித்தளமாக விளங்கும் என்பதை நீங்களே கண்கூடாகக் காண்பீர்கள். மரங்களையும் பூச்செடிகளையும் நடுவதன் மூலம் நம் புதிய மண்டபம் மேலும் கம்பீரமாகக் காட்சி தரும்.

அன்பானவர்களே!

உங்களின் வற்றாத ஆதரவு என்றும் கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு நிறையவே இருக்கின்றது. இதுநாள்வரை நம் வசிப்பிடத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட அனைத்து நடவடிக்கைகளையும் சிறப்புறச் செய்த பெருமை உங்கள் அனைவரையுமே சாரும். எனவே, இந்தத் திட்டமும் இனிதே நிறைவேறும் என்பது திண்ணம்.

நாம் அனைவரும் கரம் கோர்த்து இத்திட்டத்தைச் சிறப்புற முடித்து வைப்போம். நம் வசிப்பிடத்தின் முன்னேற்றமும் பொலிவும் பலருக்கும் முன்னுதாரணமாக அமையும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

அன்பான வருகையாளர்களே!

இதுவரை உங்களின் பொன்னான நேரத்தை என்னோடு பகிர்ந்துகொண்டு பொறுப்பாகச் செவிமடுத்த அனைவருக்கும் நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி.

**இடுபணி 1**

**உரையைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசித்திடுக.**

2.1.4
- உரையைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக் குறிகளுக்கேற்ப வாசிப்பர்.

## இடுபணி 2

**உரையைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கு ஏற்ப வாசித்திடுக.**



நண்பர்களே!
நம் வாழ்க்கையில் நாம் குப்பைகள் என ஒதுக்குகின்ற அனைத்தையும் கழிவுப் பொருள்கள் என்றே கூறி வருகின்றோம். காகிதம், நெகிழி, தகரக் கலன், கண்ணாடிப் புட்டி, உணவுகளின் எச்சம் முதலியன இவற்றுள் அடங்கும். நாம் எச்சம் என்று ஒதுக்குகின்ற கழிவுப் பொருள்கள் நாளுக்கு நாள் பெருகி வருகின்றன. இவ்வாறு தொடர்ச்சியாக வீசிக் கொண்டிருந்தால் எதிர்காலத்தில் குப்பைகளைக் கொட்டுவதற்குக்கூட இடமே இல்லாமல் போகலாம். இச்சிக்கலை எவ்வாறு களைவது?

சகோதரர்களே!
அரசாங்கம் தற்பொழுது மறுபயனீட்டை ஊக்குவிக்கும் இயக்கத்தை மிகத் தீவிரமாக மேற்கொண்டுள்ளது. ஊடகங்களின்வழி விளம்பரப்படுத்தி வருகின்றது; ஆங்காங்கே பதாகைகளின்வழி அறிவிப்புகளையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்தி வருகின்றது. மறுபயனீட்டை ஊக்குவிப்பதற்குப் பல தரப்பினர் பங்காற்றலாம். பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுநலச் சேவையாளர்கள், பொது இயக்கங்கள், மன்றங்கள், அரசு சாரா இயக்கங்கள் ஆகியோரும் மறுபயனீடு வெற்றி பெற ஒத்துழைக்கலாம். நாம் நமது நாட்டை நமது வீடு போல எண்ணுவது சிறப்புதானே!



## வளப்படுத்துதல்

**சுற்றுச்சூழல் தொடர்பான தகவல்களைத் திரட்டி ஒரு திரட்டேடு தயாரித்திடுக; வாசித்திடுக.**

## குறைநீக்கல்

**கீழ்க்காணும் உறுதிமொழியை சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கு ஏற்ப வாசித்திடுக.**

இடைநிலைப்பள்ளி மாணவராகிய நான், எனது பள்ளியின் சுற்றுப்புறத் தூய்மையைப் பேணுவேன். எந்தச் சூழ்நிலையிலும் பள்ளி வளாகத்தை அசுத்தப்படுத்த மாட்டேன். என் பள்ளியை எனது வீடாகக் கருதுவேன். 'சுத்தம் சுகம் தரும்' என்ற சிந்தனையை எப்பொழுதும் என் மனத்தில் பதித்துச் செயல்படுவேன்! அனைவரும் சுத்தத்தைப் பேண வழிவகுப்பேன் என்று உறுதியளிக்கின்றேன்.

# பாடம் 3 மரம் நடுவோம்

## கடிதத்தை வாசித்து எழுதுக.

எண் 15, ஜாலான் பைடுரி 5,
தாமான் பைடுரி,
42700 பந்திங்,
சிலாங்கூர் டாருள் ஏசான்.
10 மே 20□□

அன்புத் தங்கை கனிமொழிக்கு,
வணக்கம்.
இங்கு நம் பெற்றோர், உடன் பிறப்புகள் அனைவரும் நலம். நீயும் அங்கு நலமாக இருக்க இறைவனை இறைஞ்சுகின்றேன். அன்புத் தங்கையே, சென்ற வாரம் நீ அனுப்பிய கடிதத்தில் நம் வசிப்பிடத்தில் இயங்கும் ருக்குன் தெத்தாங்கா பற்றிய விவரங்களையும் நிழற்படங்களையும் கேட்டிருந்தாய். நல்லவேளையாக என்னிடம் சில நிழற்படங்கள் உள்ளன.

தங்கையே,

நம் வசிப்பிடத்தில் உள்ள ருக்குன் தெத்தாங்கா மிகவும் சிறப்பாக இயங்குகின்றது. நம் அப்பாவும் அதில் ஓர் அங்கத்தினர் என்று உனக்கும் தெரியுமே! இப்பகுதி வாழ் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு ருக்குன் தெத்தாங்கா உறுப்பினர்கள் இயங்குகின்றனர்.

இவ்வியக்கத்தின் மூலம் நம் வசிப்பிடத்தில் பசுமை அதிகரித்துள்ளது என்றுதான் கூற வேண்டும். இயற்கை அழகு கூடியுள்ளது. மரங்கள் நடும் செயல் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

நடைபாதை நெடுகிலும் பூச்செடிகளும் நிழல் தரும் மரங்களும் நடப்பட்டுப் பசுமை நிறைந்த பூங்கா போல நம் வசிப்பிடங்கள் காட்சியளிக்கின்றன. மனத்திற்கு அமைதியையும் கண்களுக்குக் குளிர்ச்சியையும் அளிக்கின்றன.

இக்கடிதத்துடன் ருக்குன் தெத்தாங்கா இயக்கத்தின்கீழ் நடைபெற்ற மரம் நடும் நடவடிக்கைகளின் நிழற்படங்களையும் இணைத்து அனுப்புகிறேன். உன் திரட்டேடு நடவடிக்கைக்கு இப்படங்கள் நிச்சயம் தேவைப்படும் என்று நம்புகிறேன்.

சரி தங்கையே, இத்துடன் இம்மடலை முடித்துக் கொள்கிறேன். உனது பதில் மடலை ஆவலோடு எதிர்பார்க்கிறேன். மீண்டும் அடுத்த மடலில் சந்திப்போம்.

நன்றி.

அன்புடன், அண்ணன்
ம. மதியழகன்

**3.4.10** • 160 சொற்களில் உறவுக் கடிதம் எழுதுவர்.

## இடுபணி 1

**பின்வரும் குறிப்புகளின் துணையுடன் நீ உன்னுடைய வீட்டுச் சுற்றுப்புறத் தூய்மையைப் பராமரிக்கும் வழிமுறைகளை விளக்கி உன் மாமாவுக்கு ஒரு கடிதம் எழுதுக.**

**வீட்டுச் சுற்றுப்புறத் தூய்மையைப் பராமரிக்கும் வழிமுறைகள்.**

வீட்டைச் சுற்றி பூச்செடிகளை நடுதல்.

கால்வாய்களில் குப்பைகளை வீசாமல் இருத்தல்.

பூச்சாடிகளுக்கடியில் தேங்கியுள்ள நீரை அப்புறப்படுத்துதல்.





வளர்ந்த செடிகளுக்கிடையே உள்ள களைகளைப் பிடுங்குதல்.

குப்பைகளை வகைப்படுத்தி அப்புறப்படுத்துதல். (காகிதம், நெகிழி, கண்ணாடி).

வீட்டின் முன்புறமும் பின்புறமும் மரம் வளர்த்தல்.

நீர்த்தொட்டிகளை வாரத்திற்கு இருமுறை கழுவுதல்.

திறந்தவெளியில் குப்பைகளை எரிக்காமல் பார்த்துக் கொள்ளுதல்.





கால்வாயில் தேங்கியுள்ள நீரை வெளியேற்றுதல்.

புற்புதர்களை வெட்டி வீசுதல் - சுத்தம் செய்தல்.

**இடுபணி 2**

**கடந்த பள்ளி விடுமுறையில் நீ கேமரன் மலைக்கு உன் குடும்பத்தாருடன் சென்றிருந்தாய். அங்கு நீ கண்ட இயற்கை எழில், சுற்றுச் சூழல் பாதுகாப்புத் தொடர்பான தகவல்களைப் பற்றியும் விளக்கி உன் உறவினருக்கு ஒரு கடிதம் எழுதுக.**



பூந்தோட்டம்



தேயிலைத் தோட்டம்



பழத் தோட்டம்



மலைகள்



காய்கறித் தோட்டம்



அருவி

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## உவமைத்தொடர்களையும் பொருளையும் அறிக.

**சூழல்:**
பிள்ளைகளின் ஒழுக்கச் சீர்கேடுகளுக்கான காரணங்களைப் பற்றி படிவம் இரண்டு மாணவர்கள் வகுப்பறையில் விவாதம் செய்து கொண்டிருக்கின்றனர்.



**பெற்றோர்களே காரணம்**

வணக்கம். இன்றைய பெற்றோர்கள் தங்களின் பிள்ளைகளுக்கு அதிகம் செல்லம் கொடுக்கின்றனர். பிள்ளைகள் தவறு செய்தால் அவர்களைத் தண்டிக்கவும் கண்டிக்கவும் பயப்படுகின்றனர். அளவுக்கு மீறி கண்டித்தால் ஏதாவது செய்து கொள்வார்களோ என்று ஐயப்படுகின்றனர். பெற்றோர்களின் இயலாமையும் பலவீனமுமே பிள்ளைகளின் ஒழுக்கச் சீர்கேட்டுக்குக் காரணம் என்பது **உள்ளங்கை நெல்லிக்கனி போலத்** தெரிகின்றது.

தோழியரே, **நுனிப்புல் மேய்ந்தாற் போல** ஒன்றைப் பற்றி ஆழமாக ஆராயாமல் பெற்றோரைக் குறை சொல்லாதீர். பிள்ளைகளுக்குச் செல்லமும் கண்டிப்பும் கொடுப்பது பெற்றோரின் இயல்பு. அந்தப் புனித அன்புத் தெய்வங்களை ஒருபோதும் குறை சொல்லாதீர்.

**ஊடகங்களே காரணம்**

சரியாகச் சொன்னீர், ஊடகங்களின் தாக்கத்தால் பிள்ளைகள் ஒழுக்கச் சீர்கேட்டுக்கு ஆளாகியுள்ளனர். முகநூல், திறன்பேசி, புலனம், இணையம் போன்றவற்றோடு இன்றைய சினிமாவும் முக்கியக் காரணமாக விளங்குகின்றன. இன்று சினிமா திரையரங்குகளிலிருந்து **புற்றீசல் போல** மக்கள் கூட்டம் வெளிவந்து கொண்டிருப்பதை நாம் கண்கூடாகக் காண முடிகிறது. பொழுதுபோக்கு என்று கூறிக்கொண்டு சினிமாவிலேயே மூழ்கி, சினிமாவில் வரும் கதாநாயகன் கதாநாயகி, வில்லன் போல மாறிவிடுகின்றனர்; வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். குண்டர் கும்பல், அடிதடி, வெட்டுக்குத்து என்று ஈடுபட்டுச் சீரழிகின்றனர்.



### நண்பர்களே காரணம்

நண்பர்களே, உங்களுடன் ஒரு தகவலைப் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். கடந்த மாதம் என் தோழியின் பிறந்தநாள் விழாவிற்குச் சென்றிருந்தேன். அவள் மிகவும் அழகாகக் காட்சியளித்தாள். **அழகுக்கு அழகு சேர்ப்பது போல** அவள் புதிய நகைகளால் அலங்காரம் செய்யப்பட்டிருந்தாள். வந்திருந்தோர் அவளின் அழகைக் கண்டு புகழ்ந்தனர். அன்றுமுதல் அவள் தன்னை அழகுபடுத்திக் கொள்வதில் அதிக நாட்டம் கொண்டாள். மேலும், கூடா நட்பு அவளின் நடவடிக்கைகளை மாற்றியது. படிப்பில் சிறந்து விளங்கிய அவள் இறுதியில் கட்டொழுங்குச் சிக்கல்களில் சிக்கித் தவிக்கிறாள்.

உண்மைதான் தோழியே, நானும் என் தோழிகளும் சிற்றுண்டிச் சாலையிலிருந்து வாசிப்புக் குடிலை நோக்கிச் சென்று கொண்டிருந்தோம். அப்பொழுது, இராமு தன் நண்பர்களுடன் ஆண்கள் கழிப்பறையின் அருகில் புகைப்பிடித்துக் கொண்டிருந்தான். இராமு, கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கிய மாணவன்; கட்டொழுங்கு மிக்கவன்; புறப்பாட நடவடிக்கைகளிலும் சிறந்து விளங்கினான். ஆனால், சில தீய நண்பர்களின் சேர்க்கையால் தகாத செயல்களில் ஈடுபட ஆரம்பித்தான். இன்று, பள்ளியிலேயே புகைப்பிடிக்கவும் ஆரம்பித்துவிட்டான். இவற்றையெல்லாம் உடனடியாகக் கட்டொழுங்கு ஆசிரியர் திரு. மூர்த்தியிடம் சொல்ல வேண்டும் என்று அவரைத் தேடிச் சென்றோம். அப்பொழுது, திரு. மூர்த்தி எங்களை நோக்கி வருவதைக் கண்டு, **‘கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்தது போல’** என்றெண்ணி அவரிடம் நடந்ததைக் கூறினோம். ஆத்திரமும் வேதனையும் அடைந்த திரு. மூர்த்தி ஆண்கள் கழிப்பறையை நோக்கி விரைந்தார். சிறந்த மாணவனான இராமு தகாத நண்பர்களின் சேர்க்கையால் இப்படியாகிவிட்டானே என்று நாங்களும் வருத்தமடைந்தோம்.

**4.5.2** • இரண்டாம் படிவத்திற்கான உவமைத்தொடர்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர் .

## உவமைத்தொடரும் பொருளும்

- **உள்ளங்கை நெல்லிக்கனி போல**
  - மிகவும் தெளிவாகத் தெரிதல்.
- **நுனிப்புல் மேய்ந்தாற் போல**
  - ஒன்றைப் பற்றி மேலோட்டமாக மட்டும் தெரிந்து கொள்ளுதல்.
- **புற்றீசல் போல**
  - கூட்டமாக /அதிகமாக.
- **அழகுக்கு அழகு செய்வது போல**
  - அழகான ஒன்றுக்கு மேலும் அழகு சேர்த்தல்.
- **கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததுபோல**
  - யாரைச் சந்திக்க வேண்டும் என்று நினைக்கிறோமோ அவரே எதிரில் வருதல்.



### இடுபணி 1

**உவமைத்தொடரையும் பொருளையும் மனனம் செய்து கூறுக; எழுதுக.**

### இடுபணி 2

**உவமைத்தொடர்களைப் பொருள் விளங்க வாக்கியத்தில் அமைத்துக் காட்டுக.**

### வளப்படுத்துதல்

**சூழலை உன்னுடைய சொந்தக் கற்பனையில் முடித்துக் காட்டுக.**

1. அப்பாவின் மகிழுந்து சாலையில் நின்றுவிட்டது. செய்வதறியாது பதற்றம் அடைந்த போது சற்று தூரத்தில் அப்பாவின் நெருங்கிய...
2. காற்பந்தாட்டம் முடிந்ததும் ரசிகர்கள்...

### குறைநீக்கல்

**பொருத்தமான உவமைத்தொடரை எழுதுக.**

1. மக்கள் கூட்டம் அரங்கிலிருந்து வெளியேறியது.
2. ஆழமாகவும் தெளிவாகவும் ஒன்றைப் பற்றி அறியாமல் பேசுதல்.
3. கவர்ச்சியாகவும் பொலிவாகவும் உள்ள ஒன்றை மேலும் அலங்காரம் செய்தல்.
4. ஒரு செய்தி மிகவும் தெள்ளத் தெளிவாக வெளிப்படுதல்.
5. மனத்தில் நினைத்திருந்த ஒருவரை நேரில் கண்டு மகிழ்தல்.

# பாடம் 1 தமிழ் அறிஞர்கள்

## வினாக்கள் கேட்டுக் கலந்துரையாடுக.



மகாகவி பாரதியார்



தனித்தமிழ்த் தந்தை
மறைமலை அடிகள்



சிறுகதை மன்னர்
புதுமைப் பித்தன்



கவிக்கோ அப்துல்
ரஹ்மான்




முத்தமிழ்க் காவலர்
திரு. கி.ஆ. பெ.
விசுவநாதம்



முனைவர்
ரெ. கார்த்திகேசு



டாக்டர் மு. வரதராசனார்



இறையருட் கவிஞர்
சீனி நைனா முகமது

## இடுபணி 1

**தமிழ்ச் சான்றோர்கள் பற்றிக் கூடுதல் விவரங்களைப் பெறக் கேள்விகள் கேட்டிடுக.**

1.2.2 • கூடுதல் விவரங்கள் பெறக் கேள்விகள் கேட்பர்.

**இடுபணி 2**

**தமிழ் நூல்களைப்பற்றிக் கூடுதல் விவரங்கள் பெறக் கேள்விகள் கேட்டிடுக.**



பாடம் 2

# தமிழ்க் கவிதையும் கவிஞனும்

## வாசித்து அறிக.

உள்ளத்தை ஈர்த்து உணர்வை **மலர்த்துவது** கவிதை. கவிதைக்கு உடலும் உள்ளமும் உயிரும் உண்டு. இவை மூன்றும் **இயைந்து** இருந்தால் மட்டுமே உள்ளத்தை ஈர்த்து, உணர்வை மலர்த்தி, உயிர்க்கு இன்பம் சேர்க்கும். கவிதை என்பது படிப்பவர் உள்ளத்தைக் கவ்வும் தன்மை கொண்டதாய் இருக்க வேண்டும். 'நினைத்தால் வருவதல்ல கவிதை, மனம் **கனத்தால்** வருவதுதான் கவிதை' என்பது போலச் சிந்தித்து மனம் நெகிழ்ந்தால் மட்டுமே ஒருவர் கவிதை படைக்க முடியும். சிந்தனையின் நெகிழ்வுதான் கவிதை என்பதை நாம் உணர வேண்டும்.

கவிதை **படைப்பவரும்** படிப்போரும் கவிதையின் இலக்கணத்தை அறிந்திருத்தல் வேண்டும். கவிதைக்குக் கரை போன்றது இலக்கணம். கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள்,

உள்ளத் துள்ளது கவிதை - இன்பம்
உருவெ டுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழில் - உண்மை
தெரிந்து ரைப்பது கவிதை'

என்று கவிதையின் இலக்கணத்தைப் **பகர்கின்றார்**. மனத்தில் பீறிட்டு எழும் உணர்வு வீச்சுகளை அப்படியே கொட்டிவிடாமல், அவற்றை ஒரு கட்டுக்குள் அடக்கி ஆள வேண்டும். மன உணர்வுகளை அழகுபடுத்தவும் நெறிப்படுத்தவும் கவிதை இலக்கணம் தேவை.

கவிதைக்கு யாப்பு என்னும் பெயரும் உண்டு. எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை ஆகிய ஆறும் செய்யுளின் உறுப்புகளாகும். தொடையற்ற பாட்டு **நடையற்றுப்** போகும் என்று பண்டையர் கூறுவது போலக் கவிதை படைக்கும் கவிஞனுக்குச் செய்யுளின் உறுப்புகள் பற்றிய தெளிவு வேண்டும். எழுத்தும் அசையும் சீரும் தளையும் அடியும் தொடையும் கொண்டு கட்டப்படுவதே யாப்பு. கவிஞன் என்பவன் காலத்தின் கண்ணாடி போன்றவன். கவிஞன் ஒரு படைப்பாளி. மனிதனின் புறக் கண்களுக்குப் புலப்படாதவற்றை எல்லாம் உய்த்துணர்ந்து **உவந்தளிப்பவன்** கவிஞன். எதையும் அணுகியணுகிச் செல்வதும் நுணுகி நுணுகி ஆய்வதும் கவிஞனின் இயல்பாகும். உள்ளதை உள்ளபடி உரைப்பவன் கவிஞன். சில வேளைகளில் பொய் கூடப் **பொலிவைப்** பெறுகின்றது கவிஞனின் கிறுக்கல்களில். கவிஞனின் எழுதுகோல் தலைகுனியும்போது அவனைச் சார்ந்த சமுதாயம் தலைநிமிர வேண்டும் என்ற ஆதங்கம் மட்டுமே மேலோங்கி இருக்கும்.

## இடுபணி 1

**வண்ணமிடப்பட்ட அருஞ்சொற்களுக்கு அகராதியின் துணைகொண்டு பொருள் அறிக; கூறுக.**

2.3.5 • மொழி தொடர்பான உரைநடைப் பகுதியை வாசித்துக் கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.

தொகுதி 8

## இடுபணி 2

**வினாக்களுக்கு விடை கூறுக.**

1. கவிதை என்பது எப்படி இருக்க வேண்டுமென்று கூறப்படுகின்றது?

2. கவிதையின் இலக்கணத்தை விளக்குக.

3. யாப்பு எனப்படுவது யாது?

4. கவிஞனின் சிறப்புகள் யாவை?

5. கவிதையுலகில் உன்னை ஈடுபடுத்திக் கொள்வாயா? ஏன்?

6. சிந்தனையின் நெகிழ்வுதான் கவிதை எனக் கூறப்படுவதை விளக்குக.

## இடுபணி 3

**உம்மைக் கவர்ந்த கவிஞரைப் பற்றிய திரட்டேடு ஒன்றனைத் தயாரித்திடுக.**

## இடுபணி 4

**பனுவலை வாசித்துத் தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை காண்க.**

மனத்தில் தோன்றும் உணர்வுகளையும் எண்ணங்களையும் பிறரிடம் பகிர்ந்துகொள்ள மொழி ஒரு கருவியாகப் பயன்படுகின்றது. மனிதர்கள் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு செயலில் ஈடுபட மொழி காரணமாக விளங்குகின்றது. ஆரம்பக் காலத்தில் சைகை மொழியைக் கொண்டு ஒருவரையொருவர் தொடர்பு கொண்டனர். பின்னர், ஒலி வடிவ மொழி உருவாகி பேச்சு மொழியாகப் பரிணமித்தது. மனிதனின் சிந்தனை வளர்ச்சியின் விளைவாகப் பேச்சு மொழி வரிவடிவம் பெற்று எழுத்து மொழியாக வளர்ந்து மனித நாகரிகத்தின் மேன்மையை வெளிப்படுத்தியது. உலக மொழிகளுள் தொன்மை வாய்ந்தது தமிழ்மொழி என்றால் அது மிகையாகாது.

தமிழ்மொழிக்குரிய எழுத்து வடிவங்கள் எந்தக் காலத்தில் தோன்றின என்று அறுதியிட்டுக்கூற இயலாது என்றாலும் உண்மை வரலாற்றுச் சான்றுகளின்வழி நாம் பல தகவல்களை அறிய முடிகின்றது. பழங்குகைகளில் காணப்படும் கல்வெட்டுகள், நடுகற்களிலும் செப்பேடுகளிலும் காணப்படும் வட்டெழுத்துகள், இலக்கியச் சான்றுகள், வெளிநாட்டவர் வருகைக் குறிப்புகள், பழைய நாணயங்கள், அரசு சாசனங்கள், அரசர்களின் ஆவணங்கள், இயல், இசை, நாடகக் கலைகள், கோவில் ஒழுங்குகள், கட்டடக் கலைகள், சிற்பங்கள் ஆகியவை தமிழைப் பற்றியும் தமிழரினத்தைப் பற்றியும் தெரிந்துகொள்ள வாய்ப்பாக அமைகின்றன.



தமிழ்மொழி பழைமை வாய்ந்த மொழியாக இருந்தாலும் காலத்திற்கேற்ப மாற்றங்களை ஏற்படுத்திக்கொண்டு, புதுமைகளைத் தன்னுள் ஈர்த்துக் கொள்வதால் என்றும் இளமை குன்றாமல் கன்னித் தமிழாய் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

**வினாக்களுக்கு விடை காண்க.**

1. மொழியின் நோக்கம் யாது?

2. மனித நாகரிக வளர்ச்சிக்கு மொழியின் பங்கினை விளக்குக.

3. தமிழையும் தமிழரைப் பற்றிய வரலாற்றுச் சான்றுகளையும் நாம் எவ்வாறு அறியலாம்?

4. கன்னித் தமிழ் என்று கூறப்படுவதற்கான காரணத்தைக் கூறுக.

5. எதிர்காலத்தில் தமிழ்மொழியைக் காக்கவும் வளர்க்கவும் நீ எவ்வாறு உன்னுடைய பங்கை ஆற்றுவாய் என்று விளக்கிடுக.

### இடுபணி 5

**இன்றைய பெற்றோர்கள் கட்டாயம் தங்களுடைய பிள்ளைகளைத் தமிழ்ப்பள்ளிக்கு அனுப்ப வேண்டும் என்பதற்கான காரணங்களைக் குறிப்பிடுக.**

### இடுபணி 6


**இடைநிலைப்பள்ளியில் பயிலும் தமிழ் மாணவர்கள் தமிழ்மொழிப் பாடத்தைக் கண்டிப்பாகக் கற்க வேண்டும். விளக்குக.**

### இடுபணி 7

**உன்னுடன் பயிலும் சில மாணவர்கள் தமிழ்மொழிப் பாடத்தில் கவனம் செலுத்தாமல் உள்ளனர். ஆசிரியர் கொடுக்கும் பாடங்களைச் செய்வதில்லை. இறுதியில் வகுப்பைத் தவிர்க்கவும் ஆரம்பிக்கின்றனர். ஒரு நல்ல நண்பனான நீ அவர்கள் மீண்டும் ஆர்வத்துடன் செயல்பட என்ன செய்வாய்?**

### வளப்படுத்துதல்

**தமிழ்மொழி கற்றதால் நீ அடைந்த பயன்களைக் குமிழி வரைபடத்தில் எழுதிக் காட்டுக.**




### குறைநீக்கல்

**நீ தமிழ்மொழியைக் கற்க விரும்பிய காரணங்களைப் பட்டியலிட்டுக் கூறுக.**

# பாடம் 3 மலேசியத் தமிழ்ப்பள்ளிகள்

**வட்டக் குறிவரையை ஆராய்ந்திடுக.**

2011 முதல் 2016 வரை
மலேசியத் தமிழ்ப்பள்ளிகள்
மற்றும் மாணவர்களின் எண்ணிக்கை




**குறியீடுகள்:**

- ஆண்டு
- பள்ளிகளின் எண்ணிக்கை
- மாணவர் எண்ணிக்கை

**மூலம்: மலேசியக் கல்வி அமைச்சு**


3.3.2 • குறிவரைவிலுள்ள விவரங்களைத் தொகுத்து எழுதுவர்.

**இடுபணி 1**

**குறிவரைவிலுள்ள விவரங்களைத் தொகுத்து எழுதுக.**


**இடுபணி 2**

**குறிவரைவில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்களைத் தொகுத்து எழுதுக.**




**இடுபணி 3**


**கடந்த ஆறு ஆண்டுகளாக இடைநிலைப்பள்ளி ஒன்றில் தமிழ் இலக்கியப் பாடத்தை எஸ்.பி.எம் தேர்வுப் பாடமாகப் பயிலும் மாணவர் எண்ணிக்கை பற்றிய குறிவரைவிலுள்ள விவரங்களைத் தொகுத்து எழுதுக.**





## இடுபணி 4

**தமிழ்மொழிப் பாடத்தில் பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய அடிப்படைத் திறன்களில் எட்டு மாணவர்கள் பெற்ற அடைவுநிலை பற்றிய குறிவரையில் உள்ள விவரங்களைத் தொகுத்து எழுதுக.**




**குறியீடு :**

| அடைவுநிலை |
|---|
| 1. மிகக் குறைவு |
| 2. குறைவு |
| 3. திருப்தி |
| 4. நன்று |
| 5. சிறப்பு |
| 6. மிகச் சிறப்பு |

| திறன் | |
|---|---|
| நீலம் | பேச்சு |
| மஞ்சள் | வாசிப்பு |
| செம்மஞ்சள் | எழுத்து |



# பாடம் 4 இலக்கணம்

## உரிச்சொல் அறிக.

- உரிச்சொல் என்பது பொருள்களின் குணம், தொழில் ஆகிய பண்புகளை உணர்த்தும்.
- உரிச்சொல் ஒரு பொருள் குறித்த பல சொற்களாகவும் பல பொருள் குறித்த ஒரு சொல்லாகவும் இருக்கும்.
- உரிச்சொற்கள் என்பவை பெயர்ச்சொல், வினைச்சொல் முன் அமைந்து அச்சொற்களுக்கு அணி (சிறப்பு) சேர்க்கும்.

ஒரு பொருள் குறித்த பல சொற்கள்
சால, உறு, தவ, நனி, கூர், கழி

எ.கா: **சாலச்** சிறந்தது
**உறு** பொருள்
**தவப்** பெரிது
**நனி** நன்று
**கூர்** மதி
**கழி** பேருவகை

பல பொருள் குறிக்கும் ஒரு சொல்.

எ.கா: **கடி** நகர் (காப்பு)
**கடி** நுனை (கூர்மை)
**கடி** மாலை (மணம்)
**கடி** மார்பன் (அழகு)
**கடி** மிளகு (காரம்)




5.2.3 • உரிச்சொல் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

## இடுபணி 1

**பத்தியில் காணும் உரிச்சொற்களை அடையாளம் காண்க.**

மகிழ்மதி கூர்மதி மிக்கவள். ஒவ்வொரு நாளும் காலையில் துயிலெழுந்தவுடன் இறைவனை வணங்குவாள்; கடிதவம் மேற்கொள்வாள். காலையுணவுக்குப் பிறகு கடிமனையைச் சுத்தம் செய்வாள். தொடர்ந்து, நனிபசுக்களின் உறைவிடமான தொழுவத்தைக் கூட்டிப் பெருக்குவாள். கழிநடை மங்கையை அவளின் பெற்றோர் என்றென்றும் உறுபுகழ் பெற்று நீடுழி வாழ வாழ்த்துவர். நாமும் மகிழ்மதியைப் போலச் சாலச்சிறந்தவர்களாகத் திகழ முற்படுவோம்.

## இடுபணி 2

**வாக்கியங்களில் பொருத்தமான உரிச்சொற்களைத் தெரிவு செய்க.**

1. ரோஜா செடியில் பூத்திருந்த ________ அம்மாவின் கவனத்தை ஈர்த்தது.
2. ஆசிரியர் திரு. விவேகன் முனுசாமி நேற்று மேடையில் ________ ஆற்றினார்.
3. பூங்காவில் ________ மங்கையுடன் அண்ணன் உரையாடிக் கொண்டிருந்தார்.
4. டாக்டர் இரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் ________ பெற்ற ஓர் இலக்கியவாதியாவார்.
5. நேற்று பண்ணையிலிருந்து ________ பொழிந்த பாலை அப்பா வாங்கி வந்தார்.

கடிமலர் | உறுபுகழ் | கூர்விழி | நனிபசு | கடியுரை

## வளப்படுத்துதல்

**உரிச்சொற்களைக் கொண்டு பொருள் விளங்க வாக்கியம் அமைத்திடுக.**

கழி | நனி | உறு | கடி | சால | கூர்

## குறைநீக்கல்

**பெயர் உரிச்சொற்களையும் வினை உரிச்சொற்களையும் அடையாளங்கண்டு வண்ணம் தீட்டுக.**

| | | | |
|---|---|---|---|
| நனிபேதை | கடிவினை | சாலப்பெரிது | கடிமலர் |
| கழிநடை | நனிபசு | கழிபேச்சு | கழிபார்வை |
| கூர்விழி | உறுபொருள் | கூர்மனம் | உறுபுகழ் |
| கடியோட்டம் | நனியுரை | நனிசெய்து | கடியுரை |

# தொகுதி ௭ வணிகவியல்

## பாடம் 1 தையல் கலையின் சிறப்பு

**விவரித்துக் கூறுக.**



பலவகையான வண்ண ஆடைகளை உருவாக்குதல்



மனமகிழ்வு நடவடிக்கையாக அமைதல்



தையல் தொழில் செய்து வருமானம் ஈட்டுதல்



தையல் தொழிற்சாலைகளை அமைத்துப் பெரிய அளவில் வாணிபம் செய்தல்



தையல் கலையில் நிபுணத்துவம் பெற்றுப் பலருக்குக் கற்றுக் கொடுத்தல்

**இடுபணி 1**

**தையல் கலை தொடர்பான தகவல்களைப் படங்களின் துணையுடன் விவரித்துக் கூறுக.**

1.4.3 • தகவல்களை விவரித்துக் கூறுக.

### இடுபணி 2

**தையல் கலை கற்பதனால் ஏற்படும் நன்மைகளை விவரித்துக் கூறுக.**




### இடுபணி 3

**வாசித்துக் கலை தொடர்பான தகவல்களை விவரித்துக் கூறுக.**

- கலை என்பது உள்ளத்தை ஈர்க்கும் காவியமாகவும் கண்ணைக் கவரும் ஓவியமாகவும் ஐம்புலன்களைத் தன்வயப்படுத்தும் ஆற்றல் மிகுந்ததாகவும் கருதப்படுகின்றது.
- ஒரு நிலையில் அலைபாயும் மனத்தைக் கலையாமல் நிலைபெறச் செய்வது கலை என்றால் அது மிகையன்று.
- கலை என்பது கருத்தின் உறைவிடம். அழகின் பிறப்பிடம். இன்பத்தின் ஊற்று. கவர்ச்சியின் நிறைவு. மகிழ்ச்சியின் மாட்சி. பண்பாட்டின் கொடுமுடி. நாகரிகத்தின் ஒளிவிளக்கு எனலாம்.
- மேலை நாட்டறிஞர் டால்ஸ்டாய் அவர்கள், கலை என்பது உள்ளத்திற்கு உவகை ஊட்டுவது என்றும், உள்ளத்தைத் தன்பால் ஈர்க்க வல்லது என்றும், அஃது உணர்வின் வெளிப்பாடு என்றும் மொழிகின்றார்.
- கலைஞன் ஒருவன் தான் இயற்கையிலிருந்தும் பல்வகைச் சூழல்களிலிருந்தும் பெற்ற அனுபவங்களைத் தானறிந்த ஊடகத்தினூடாக வெளிப்படுத்துகையில் அது கலையாகின்றது.
- கலைகளைப் பயன்கலைகள், நுண் கலைகள் என்று இரு பகுப்புகளாகப் பிரித்துப் பார்க்கலாம்.
- பயன்கலைகளுள் வீட்டுக்கலை, தையல்கலை, சமையற்கலை, கோலக்கலை, ஒப்பனைக்கலை போன்றவற்றைக் குறிப்பிடலாம்.
- நுண் கலைகளுள் இசை, நடனம், நாடகம், ஆடை அலங்காரம், அழகுக்கலை போன்றவற்றைக் குறிப்பிடலாம்.
- ஐம்புலன்களுக்கு இன்பம் தரும் கலையினை இன்பக் கலை எனலாம்.
- இன்பமான பயனுள்ள வாழ்க்கை வாழ நாமும் கலைகளைக் கற்போம், பிறருக்கும் கற்பிப்போம்.

இடுபணி 4

**தையல் தொழில்துறை தொடர்பான கருத்துகளை விவரித்துக் கூறுக.**

தையல் தொழில்துறை

**தனிநபர்**

- திறன் வளரும்.
- மனமகிழ்ச்சி ஏற்படும்.
- பகுதி நேரத் தொழிலாக அமையும்.
- விருப்பமான ஆடைகளைத் தைத்துக் கொள்ளலாம்.

**குடும்பம்**

- குடும்ப வருமானம் பெருகும்.
- செலவுகளைக் குறைக்கலாம்.
- குடும்பக் கலையாகத் தொடர்ந்து வரும்.
- ஒரே மாதிரியான ஆடைகளை உடுத்தி மகிழலாம்.

**நாடு**

- நாட்டின் பொருளாதாரம் உயரும்.
- வேலையில்லாத் திண்டாட்டம் குறையும்.
- சமூகச் சீர்கேடுகள் குறையும்.
- எதிர்காலத்தில் தொழில் திறன். பெற்ற நிபுணர்களை உருவாக்கலாம்.

இடுபணி 5

**பாடல் உணர்த்தும் தகவல்களை விவரித்துக் கூறுக.**



கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்
கவலை உனக்கில்லை ஒப்புக்கொள்
எத்தொழில் எதுவும் தெரியாமல்
இருப்பது உனக்கே சரியாமோ

உழவும் தொழிலும் இல்லாமல்
உலகில் ஒன்றும் செல்லாது
விழவும் கலையும் விருதுகளும்
வேறுள இன்பமும் இருந்திடுமோ

நெசவுக்காரர்கள் நெய்யாமல்
நிலத்தவர் உடைக்கென் செய்வார்கள்
குயவன் செய்திடும் பாண்டமன்றோ
குடித்தனம் நடத்திட வேண்டுமென்றும்!



**- நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை**

என்னை நுணுகுக


# பாடம் 2 வியாபாரம் செய்வோம்

## தக்க தொனியுடன் வாசித்திடுக.

**சூழல்:**
கடந்த வாரம் புத்ரா வாணிப மையத்தில் சிறுதொழில் முனைவர் திட்டம் பற்றிய கண்காட்சியும் கருத்தரங்கமும் நடைபெற்றன. அங்கே இளங்கீரனும் கீர்த்தனனும் சந்தித்துக் கொண்டனர்.

இளங்கீரன்: கீர்த்தனன், நீயும் இங்கு வருவாய் என்று என்னிடம் சொல்லவில்லையே!

கீர்த்தனன்: ஆமாம், இளங்கீரன். என் அண்ணன் இங்கு வந்திருக்கிறார். நானும் சிறுதொழில் முனைவர் திட்டம் பற்றி அறிய அவருடன் வந்தேன்.





இளங்கீரன்: அப்படியா? ஆமாம், நீயும் உன் அண்ணனிடம் வாகனங்கள் பழுதுபார்க்கும் முறைகளைக் கற்றுள்ளாயே! அந்த அனுபவத்தைப் பயன்படுத்தலாமே!

கீர்த்தனன்: நான் என் அண்ணனிடம் கற்றுக் கொண்டது சிறிதளவே! இத்துறையை நான் முறையாகக் கற்றுக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் சுயமாகப் பட்டறை வைத்து நடத்த முடியும்.

இளங்கீரன்: அப்படியென்றால் உன் பள்ளிப் படிப்பை நிறுத்தப் போகிறாயா?

கீர்த்தனன்: அப்படியெல்லாம் நிச்சயம் செய்ய மாட்டேன். என்னால் வாகனங்களைப் பழுது பார்க்கும் வேலையைத் திறம்படச் செய்ய முடியும். அந்த வேலையைப் பழகுவதற்குத்தான் சில முயற்சிகளை மேற்கொள்கிறேன்.




இளங்கீரன்: எனக்கும் நினைவிருக்கிறது. உன் வீட்டில் பழுதடைந்த மிதிவண்டியை உன் சுய ஆற்றலில் ஏதேதோ பழுதுபார்த்துச் சரிப்படுத்தினாய் அல்லவா?

கீர்த்தனன்: ஆமாம் நண்பா உனக்கும் தெரியுமே! நாம் ஆரம்பப் பள்ளியில் பயிலும்போது என் எதிர்கால ஆசை சொந்த வியாபாரம் செய்வதுதான் என்பேனே!

இளங்கீரன்: மிக்க மகிழ்ச்சி கீர்த்தனன். எதிர்காலத்தில் உன் திறமைக்கு நீ நிச்சயம் சுய தொழிலில் உயர்வாய் என நம்புகிறேன்.

கீர்த்தனன்: உன் நம்பிக்கைக்கு நன்றி நண்பா. இதுபோன்ற கருத்தரங்கமும் கண்காட்சியும் நிச்சயம் நமக்குப் பயனளிக்கும்.

இளங்கீரன்: ஆமாம் நண்பா! இதுபோன்ற கண்காட்சிகளில் புதிதாக வெளிவந்துள்ள தொழில்நுட்பங்கள் காணக் கிடைக்கும். சரி வா, எல்லா இடத்திற்கும் செல்வோம்.

கீர்த்தனன்: வா இளங்கீரா, கண்டிப்பாக நமக்குத் தேவைப்படும் அனைத்து விவரங்களையும் இங்கே பெற்றுக் கொள்ளலாம் என்று நம்புகிறேன்.

**2.1.5**
- உரையாடலைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக் குறிகளுக்கேற்ப வாசிப்பர்.

## இடுபணி 1

**உரையாடலைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசித்திடுக.**

## இடுபணி 2

**வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. கண்காட்சியும் கருத்தரங்கமும் எங்கு, எப்பொழுது நடைபெற்றன?


2. கீர்த்தனன் எதில் அதிக ஆர்வம் கொண்டுள்ளான்?

3. சுய தொழில் செய்வதில் அதிக ஆர்வம் கொண்டுள்ளவர் யார்?

4. இளங்கீரன், கீர்த்தனன் இருவரில் யாருக்கு இக்கருத்தரங்கு மிக அவசியம் என நீ நினைக்கிறாய்? ஏன்?

## இடுபணி 3

**சுயமாகத் தொழில் செய்வதனால் ஏற்படும் நன்மை தீமைகளை மரவரைபடத்தில் எழுதிக் கூறுக.**



## வளப்படுத்துதல்

**நம் நாட்டில் வர்த்தகத்தில் வெற்றி பெற்ற ஒருவரைப் பற்றித் தகவல்களைத் திரட்டி திரட்டேடு தயாரித்திடுக.**

## குறைநீக்கல்

**உரையாடலைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக் குறிகளுக்கேற்ப வாசித்திடுக.**



மதன்: சுதன், சிறு தொழில் பற்றி அறிந்திருக்கிறாயா?

சுதன்: ஓ! எனக்குக் கொஞ்சம் தெரியும் மதன்.

மதன்: சிறு தொழில் பற்றி எனக்குச் சற்று விளக்க இயலுமா?

சுதன்: சிறிய தொகையை முதலீடாகக் கொண்டு ஆரம்பிக்கப்படும் தொழில்தான் இது. இச்சிறு தொழிலைத் தனி நபராகவும் குடும்ப உறுப்பினர்களுடன் சேர்ந்தும் செய்யலாம் மதன்.

மதன்: என் மாமாவும் சிறு தொழில் ஒன்றைத்தான் செய்கிறார் சுதன்.

சுதன்: அப்படியா! என்ன தொழில் செய்கிறார்?

மதன்: என் மாமா காளான் வளர்க்கும் தொழிலைச் செய்கிறார்.



சுதன்: நல்ல தொழிலாயிற்றே! இத்தொழிலின் மூலம் நிச்சயம் பெரிய அளவில் சாதிக்க முடியும் மதன்.

மதன்: ஆமாம் சுதன், காளான் உண்ணும் மக்களும் அதிகரித்துள்ளனர். மேலும் இக்காளான் மிகவும் சுவையாகவும் உள்ளது.

சுதன்: சிறு தொழிலைப் பற்றி மேலும் நாம் தெரிந்து கொள்ள உன் மாமாவை நேர்காணல் செய்வது சிறப்பு.

மதன்: அப்படியே செய்வோம் சுதன்.





தொகுதி 9

# பாடம் 3 கைவினைக் கலை

## கலந்துரையாடி எழுதுக.

**சூழல்:**
இளமாறன் பள்ளி விடுமுறையில் தன்னுடைய தாத்தாவின் கிராமத்திற்குச் சென்றிருந்தான். தமிழர்களின் கைவினைக் கலைப் பொருள்களைப் பற்றி அறிந்து கொள்ள தன் தாத்தாவுடன் உரையாடுகின்றான்.

இளமாறன்: வணக்கம் தாத்தா. தமிழர்களின் கைவினைக் கலைப் பொருள்களைப் பற்றி எனக்குக் கூற முடியுமா?

தாத்தா: நிச்சயமாகச் சொல்கிறேன் இளமாறன். தமிழர்களின் கைவினைக் கலைப் பொருள்களைப் பற்றி உலகமே வியந்து பாராட்டிக் கொண்டிருக்கிறது.


இளமாறன்: தமிழர்களின் கைவினைக் கலைப் பொருள்களுள் சிலவற்றைக் கூறுங்கள்.

தாத்தா: மண்பாண்டப் பொருள்கள், சுடுமண் சிற்பங்கள், மர வேலைப்பாடுகள், ஓலைப் பொருள்கள், பின்னல் பாய்கள், காகித பொம்மைகள், சப்பரம், தேர், தெய்வ அலங்காரங்கள், நெல்மணி, ஏலக்காய் மாலைகள் போன்றவை தமிழர்களின் கைவினைக் கலைப் பொருள்களுள் சிலவாகும்.



நம் தமிழர்களின் கைவினைக் கலைப் பொருள்களை நம் பண்டைய காலத்தவர்கள் வகைப்படுத்தி இருக்கின்றனரா தாத்தா?

ஆமாம். இவற்றை மண் சார்ந்த கலைகள், மரம் சார்ந்த கலைகள், ஓலை சார்ந்த கலைகள், காகிதம் சார்ந்த கலைகள் மற்றும் பிற கலைகள் என்று வகைப்படுத்தியுள்ளனர். இதன்வழி பல்வேறுபட்ட கலைப் பொருள்களையும் அவற்றின் சிறப்புகளையும் நன்கு உணர்ந்து கொள்ள இயலும்.



இளமாறன்: கேட்பதற்குப் பெருமையாக இருக்கின்றது. மேலும் சொல்லுங்கள் தாத்தா.

தாத்தா: மண் சார்ந்த கலை மிகவும் தொன்மையானது. கைத்திறனுடன் வண்ணம் கூட்டி மண்ணாலான புழங்கு பொருள்கள், தெய்வ உருவங்கள் போன்றவற்றைச் செய்கின்றவர்களைக் குயவர் என்று அழைக்கின்றோம். மரம் சார்ந்த பொருள்களான தேர், சப்பரம், நாற்காலி, கட்டில், வண்டி, இசைக்கருவிகள் ஆகியவற்றைப் படைப்பவர்களைக் கம்மாளர், தச்சர், ஆசாரி என்று அழைப்பதுண்டு. ஓலை சார்ந்த பொருள்களான விசிறி, வண்ணக் கொட்டான், சுளகு, கூடை, ஓலைப் பெட்டி போன்ற பொருள்களைக் குறிப்பிடலாம். தொடர்ந்து, காகிதம் சார்ந்த பொருள்களான பொம்மை, முகமூடி, கூடுகள் போன்ற பொருள்களைப் பாணர்கள் உருவாக்குகின்றனர். பிற கைவினைக் கலைப் பொருள்கள் எனக் குறிப்பிடப்படுவது என்னவென்றால் கொம்புகளைக் கொண்டு மயில், கொக்கு, புறா போன்ற உருவங்களைக் கலை நேர்த்தியுடன் செய்வதும்; உடலில் பச்சை குத்திக் கொள்வதும்; வண்ணக்கோலங்களைப் போடுவதும் அடங்கும்.

இளமாறன்: மிகத் தெளிவாகச் சொன்னீர்கள். நமது தமிழர்களின் கைவினைக் கலைப் பொருள்களைப் பற்றியும் அவற்றின் சிறப்புகளைப் பற்றியும் மேலும் அறிந்து கொள்ள விழைகிறேன். நன்றி தாத்தா.


பாய் முடைதல்


மூங்கில் கூண்டு


தோரணம் பின்னுதல்


குடுக்கை செய்தல்


கோலம் இடுதல்


மட்பானை வனைதல்



**இடுபணி 1**

**படங்களையும் குறிப்புகளையும் துணையாகக் கொண்டு 160 சொற்களில் கைவினைக் கலை பற்றி ஓர் உரையாடல் எழுதுக.**

3.4.11 • 160 சொற்களில் உரையாடல் எழுதுவர்.

**இடுபணி 2**


**மலேசியாவில் புகழ்பெற்ற ஓவியர் டாக்டர் எஸ். சந்திரன் அவர்களைப் பற்றிய குறிப்புகளைப் பயன்படுத்தி 160 சொற்களில் உரையாடல் எழுதுக.**



**சூழல்:**
பெர்மாத்தாங் இடைநிலைப்பள்ளியில் படிவம் இரண்டில் பயிலும் மாணவன் முருகானந்தன் மலேசியாவில் புகழ் பெற்ற ஓவியர் டாக்டர் எஸ். சந்திரன் அவர்களைக் கண்டு உரையாடுகிறான்.

- கலைக் குடும்பத்தைச் சார்ந்தவர். அவரின் அக்காள் பரத நாட்டியத்தில் ஈடுபாடு உள்ளவர்.
- சிரம்பானில் பிறந்து கோலாலம்பூரில் வளர்ந்தவர்.
- ஐந்து வயதிலேயே கலை ஆர்வம் ஏற்பட்டது.
- கலை நிகழ்ச்சிகளில் பிரபலங்களின் ஓவியங்களை மூன்று நிமிடங்களில் வரைந்து பிரபலமடைந்தார்.
- கோவில் சிற்பங்களும், நாட்காட்டியிலுள்ள ஓவியங்களும், சேலைகளில் நெய்யப்பட்ட சரிகை வேலைப்பாடுகளும் கலை உள்ளத்தை ஆட்கொண்டன.
- பப்ளிக் வங்கியின் பிரதான ஓவியராக 1987 முதல் 1992 வரை இருந்தார். முக்கியச் சின்னங்களையும் ஓவியங்களையும் வடிவமைத்தார்.
- பதின்ம வயதில் இந்தியாவிற்குச் சென்று கோவில்களில் நடக்கும் கலைப் பணிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார்.
- வண்ணக் கலைக் கல்லூரியில் பெரும் புகழ்பெற்ற ஓவியரான அல்போன்சோ தாஸ் மேற்பார்வையில் ஓவியக் கலையின் நுட்பங்களை ஆழமாகக் கற்றுத் தேர்ந்தார்.
- 2006இல் அமெரிக்க கெம்டன் பல்கலைக்கழகம் அவருக்குக் கௌரவ டாக்டர் பட்டம் அளித்துச் சிறப்பித்தது.
- புத்தரைப் பற்றிய ஞான ஓவியம் மிகுந்த வரவேற்பைப் பெற்றது.
- ‘வண்ணங்களுக்கு அப்பால்’ எனும் நூல் அவருடைய சிறந்த படைப்பாகும்.






**இடுபணி 3**

**படங்களின் துணையுடன் ஒப்பனைக்கலை பற்றி அழகு நிலையம் நடத்துநர் ஒருவரிடம் உரையாடுகின்றீர். அவ்வுரையாடலை 160 சொற்களில் எழுதுக.**











தொகுதி 9

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## செய்யுளை அறிக.



முகிலன் படிவம் ஐந்தில் பயிலும் மாணவன் பள்ளியில் அவன் சில நண்பர்களுடன் நெருக்கமாகப் பழகி வந்தான். மாலை வேளையில் அவர்களுடன் சேர்ந்து ஊர் சுற்றிவிட்டுத் தாமதமாகவே வீடு திரும்புவான். அவனுடைய நண்பர்கள் புகைப்பிடிப்பது, மது அருந்துவது போன்ற தீய பழக்கங்களைக் கொண்டிருந்தனர். முகிலனின் செயலை அவனுடைய பெற்றோர் கண்டித்தனர். அவனை அவ்வூரிலுள்ள பண்டிதர் ஒருவரின் வீட்டுக்கு அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தி வைத்தனர். ஒவ்வொரு நாளும் பள்ளி முடிந்ததும் தன்னுடைய வீட்டுக்கு வருமாறு அப்பண்டிதர் முகிலனைப் பணித்தார்.

அதேபோல ஒவ்வொரு நாளும் மாலை வேளையில் அப்பண்டிதரின் வீட்டுக்குச் சென்று வந்தான். அவனுக்குத் திருக்குறளும் அதன் சாரங்களும் போதிக்கப்பட்டன. நாளும் ஒரு குறள் என்று கற்றுத் தேர்ந்தான். அவனுடைய நண்பர்கள் பல நாள்களாக அவனை வெளியே அழைத்துச் செல்ல முற்பட்டனர். இருப்பினும், அவன் அவர்களோடு வெளியே செல்ல மறுத்தான். காலவோட்டத்தில் அந்த நண்பர்களின் தொடர்பு இல்லாமல் போனது. பண்டிதரின் அறிவுரையைக் கேட்டு நடக்கலானான். தேர்வில் நல்ல மதிப்பெண்களைப் பெற்றான். அவனுடைய பெற்றோர் மகிழ்ச்சி அடைந்தனர். பண்டிதருடனான அவனுடைய உறவு மேலும் வலுவடைந்தது.

### பல்வகைச் செய்யுள் (நாலடியார்)

**'பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்**
**வரிசை வரிசையா நந்தும் - வரிசையால்**
**வானூர் மதியம்போல் வைகலும் தேயுமே**
**தானே சிறியார் தொடர்பு'**

**பொருள்:-**

பண்பில் சிறந்த பெரியோரிடம் கொண்ட நட்பு வளர்பிறை போல் ஒவ்வொரு நாளும் முறையே வளரும். ஆனால், தீய குணங்களைக் கொண்ட சிறியோரின் நட்பு, தேய்பிறை போன்று நாளுக்கு நாள் குறையும்.

4.3.2
- இரண்டாம் படிவத்திற்கான பல்வகைச் செய்யுளையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

## இடுபணி 1

**நாலடியாரையும் அதன் பொருளையும் மனனம் செய்து கூறுக; எழுதுக.**

## இடுபணி 2

**கொடுக்கப்பட்டுள்ள பொருளுக்கேற்ற செய்யுள் வரிகளை எழுதுக.**

1. சிறியோரின் நட்பு தேய்பிறை போல தேய்ந்துகொண்டே போகும்.

2. பெரியவர்களுடன் கொள்ளும் நட்பு வளர்பிறை போல வளர்ந்து கொண்டே செல்லும்.

## இடுபணி 3

**இவர்களின் பண்பு நலன்கள் பற்றிக் கூறுக.**

அ. முகிலன்
இ. பண்டிதர்
ஆ. பெற்றோர்
ஈ. நண்பர்கள்

### அறிந்து கொள்க

- எல்லாரிடத்திலும் குறைகள் உண்டு. அந்தக் குறைகளை மறந்து நிறைகளை மட்டும் கண்டறிந்து பாராட்டுவதே நல்ல மனம் படைத்தோருக்கு அடையாளம்.
- நட்பு என்பது வெட்டிச் சாய்க்கும் வரை பிறருக்கு நிழல் தரும் மரம் போல இருக்க வேண்டும்.

- மூலம்: பகலில் இரவா?


## குறைநீக்கல்


**ஏற்ற இணையுடன் இணைத்திடுக.**


| | |
|---|---|
| பெரியவர் கேண்மை | நிதமும் தொய்வடையும் |
| வரிசையா நந்தும் | தீய பண்பாளர் நட்பு |
| வானூர் மதியம் | நிலவு போல என்றும் |
| வைகலும் தேயும் | பண்புடையவர் நட்பு |
| சிறியார் தொடர்பு | வளர்ந்து செல்லும் |
| பிறைபோல் நாளும் | வானிலுள்ள நிலவு |

தொகுதி 9

## சிரித்து மகிழ்க.






# தொகுதி 10 நன்னெறிப் பண்பு

## பாடம் 1 பண்புள்ள மாந்தர்

### பண்புடன் விவாதம் செய்க.




**இடுபணி 1**

**நண்பர்கள் பண்புள்ள மாந்தர் உருவாகக் காரணமாக உள்ளனர். இதனைப் பற்றி பண்புடன் விவாதம் செய்திடுக.**

1.3.4 • தலைப்பையொட்டிப் பண்புடன் விவாதம் செய்வர்.

## இடுபணி 2

**மாணவர்கள் அடிக்கடி பள்ளிக்கு மட்டம் போடுவதற்கான காரணங்களைக் குறிப்புகளின் துணையுடன் குழுவில் பண்புடன் விவாதம் செய்திடுக.**

**மாணவர்கள் அடிக்கடி பள்ளிக்கு மட்டம் போடுவதற்கான காரணங்கள்**

- குடும்ப வறுமை / ஏழ்மை நிலை
- ஆசிரியர் திட்டுவார் என்ற அச்சம்
- படிப்பைக் காட்டிலும் வேலை மீது நாட்டம்
- தீய நண்பர்களுடன் நட்பு வளர்த்தல்
- கல்வியின் முக்கியத்துவத்தை உணராமை

## இடுபணி 3

**அடுக்குமாடி வீடுகளில் வசிப்பதைப் பற்றி படங்களின் துணையுடன் நண்பர்களோடு பண்புடன் விவாதித்திடுக.**



**இடுபணி 4**

பிரத்தியேக வகுப்பு மையங்கள் (Tuition centres) மாணவர்களுக்குப் பயனாக அமைகின்றன. இத்தலைப்பைப் பண்புடன் விவாதித்திடுக.

**இடுபணி 5**

தமிழ்த் திரைப்படங்கள் நற்பண்பு மிகுந்த மாணவர்களை உருவாக்குகின்றன. இத்தலைப்பைப் பண்புடன் விவாதித்திடுக.

**இடுபணி 6**

தற்காப்புக் கலைகளைக் கற்பதனால் மாணவர்களின் மத்தியில் நற்பண்புகள் வளர்கின்றன. இத்தலைப்பைப் படங்களின் துணையுடன் பண்புடன் விவாதித்திடுக.





தொகுதி 10

# பாடம் 2 உளிபடாத கல் சிலையாவதில்லை

## வாசித்து அறிக.



வெறுமனே கிடக்கும் கல்லை யாரும் சட்டை செய்வதில்லை. கல்லாக இருக்கும்பொழுது அது கவனிப்பாரற்றுக் கிடக்கும். அந்தக் கல் மதிப்புப் பெற வேண்டுமானால், சிற்பி எனும் கலைஞன் செதுக்க வேண்டும். உளியால் செதுக்கப்படும்போது கல்லுக்கு வலிக்கும் என்றாலும் பொறுமையின் விளைவாக நல்ல சிலையாக இறுதியில் மிளிரும். வாழ்க்கையும் அப்படித்தான். பல காரியங்களுக்குப் பிறகுதான் நல்ல அறிவுத் தெளிவும் மனப் பக்குவமும் ஏற்படும். நம் வாழ்வின் முன்னேற்றத்தில் பலர் சிற்பிகளாகப் பாடுபட்டிருக்கின்றனர் என்பதை நாம் உணர வேண்டும். பொறுமை வெற்றிக்கு அடித்தளமாக அமைகின்றது.

வெற்றி என்பது தானாகப் பிறந்து விடுவதில்லை. நேற்றைய கல்தான் இன்றைய சிலை. நேற்றைய மொட்டுதான் இன்றைய மலர். நேற்றைய மகரந்தம்தான் இன்றைய தேன். நேற்றைய வண்ணம்தான் இன்றைய ஓவியம். நேற்றைய இழைதான் இன்றைய ஆடை. நேற்றைய பெண்தான் இன்றைய தாய். அதுபோல நேற்றைய தோல்விதான் இன்றைய வெற்றி. தோல்விகள் எல்லாம் தோல்விகள் அல்ல. தென்னங்கீற்றின் வீழ்ச்சிதான் தென்னை மரத்தின் வளர்ச்சி என்பதை நாம் மறந்திடலாகாது.



உலகின் மிகச் சிறந்த பியானோ இசை மேதை பீத்தோவன் படைத்த இசை நிகழ்ச்சிக்குப் பின், பெண்மணி ஒருவர் அவரைப் பார்த்து, “இறைவன் உங்களுக்கு அற்புதமான விரல்களைக் கொடுத்திருக்கின்றான். உங்கள் விரல்களைக் காட்டுங்கள்,” என்று கேட்டு அவற்றுக்கு முத்தம் கொடுத்தாள். அதற்கு பீத்தோவன், “அம்மணி ஒவ்வொரு நாளும் இடைவிடாமல் எட்டு மணி நேரம் இதற்காக நான் பயிற்சியை மேற்கொண்டேன். அதனால்தான் இன்று என்னால் இவ்வளவு சிறப்பாக இசைக்க முடிந்தது,” என்றார். ஒருவருடைய முயற்சியும் பயிற்சியுமே வெற்றிக்குக் காரணமாக அமைகின்றன என்பது தெளிவு.

ஒவ்வொரு மனிதரிடத்திலும் குறைகள் இருக்கலாம். ஆனால், அதனையே சொல்லிக் கொண்டு வாளாவிருக்கக்கூடாது. அழகாய் இல்லை என்ற குறையைக் கூடி வாழ்வதன் மூலம் காகங்கள் போக்கிக் கொண்டுள்ளன. காரணங்கள் சொல்பவர்கள் காரியங்கள் செய்வதில்லை.

**மூலம்: பகலில் இரவா?**

2.2.3 • வாசிப்புப் பகுதியிலுள்ள முக்கியக் கருத்துகளை அடையாளம் காண்பர்.

## இடுபணி 1

**வாசிப்புப் பகுதியிலுள்ள முக்கியக் கருத்துகளை அடையாளங்காண்க; கூறுக.**

## இடுபணி 2

**வினாக்களுக்கு விடை காண்க.**

1. வாழ்க்கையில் ஒருவர் வெற்றி பெறுவதற்குத் தேவையான பண்புகளை அடையாளங்காண்க.

2. இசை மேதை பீத்தோவன் கூறிய பதிலிலிருந்து நீ என்ன அறிந்து கொள்ள முடிகின்றது?

3. தென்னங்கீற்றின் வீழ்ச்சிதான் தென்னை மரத்தின் வளர்ச்சி - எனும் கூற்று உணர்த்தும் கருத்து யாது?

4. காக்கையின் ஒற்றுமை மனிதனுக்கு உணர்த்தும் படிப்பினை என்ன? விளக்குக.

5. தோல்வியைப் பற்றி உனது கருத்தென்ன?

## இடுபணி 3

**வாசிப்புப் பகுதியிலுள்ள முக்கியக் கருத்துகளை அடையாளம் காண்க.**

தற்காப்புக் கலையைக் கற்பதால் நம்மைத் தாக்குபவரிடமிருந்து தற்காத்துக் கொள்ள முடியும். உதாரணத்திற்கு, திருடர்கள் நம்மிடம் அவர்களின் கைவரிசையைக் காட்டினால் நம்மால் அவர்களிடமிருந்து தற்காத்துக் கொள்ள இயலும். அதுமட்டுமல்லாமல், தற்காப்புக் கலைக் குழுவினர் பல தற்காப்புக்கலைப் போட்டிகளைப் பல இடங்களில் ஏற்பாடு செய்தும் வருகின்றனர். இதன்வழி, தற்காப்புக் கலையைப் பயில்பவரிடம் இலைமறைகாய்போல் மறைந்திருக்கும் திறமையும் ஆற்றலும் வெளிப்படும். தற்காப்புக் கலை பயில்வது நல்ல பொழுதுபோக்காகவும் அமைகின்றது. இதன்வழி இளைஞர்கள் தங்கள் ஓய்வு நேரத்தைப் பயனுடையதாகவும் நல்ல வழியிலும் கழிக்கின்றனர். புகைப்பிடித்தல், போதைப் பொருள் உட்கொள்ளுதல், சுற்றித்திரிதல், வன்முறை போன்ற தீய செயல்களில் ஈடுபடாமல் இருக்கவும் தற்காப்புக் கலை துணை புரிகின்றது. மேலும், தற்காப்புக் கலையைப் பயில்பவரிடம் பல நன்னெறிப் பண்புகளையும் காண இயலும். இக்கலையைப் பயிலும் பயிற்சியாளர், கற்றுக் கொடுக்கும் பயிற்றுநரின் கட்டளைகளுக்குப் பணிய வேண்டும். இதனால், பயிற்சியாளர்கள் பணிவையும், கட்டொழுங்கையும் தொடக்கம் முதலாகக் கற்றுக் கொள்கின்றனர். ஐந்தில் வளையாதது, ஐம்பதில் வளையாது என்பர். இளவயது முதற்கொண்டு இத்தகைய நற்பண்புகள் விதைக்கப்படுவதால் பயிற்சியாளர்கள் எதிர்காலத்தில் சிறந்த மனிதராக உருவாக முடியும். நற்பண்புகளைத் தவிர்த்து, பயிற்சியாளர்கள் இத்தற்காப்புக் கலையை ஒரு சிறந்த உடற்பயிற்சியாகவும் கருதுகின்றனர். பயிற்சிகளில் ஈடுபடும்பொழுது உடலுறுப்புகள், எலும்புகள், தசைகள் யாவும் வலுப்பெறுகின்றன. இதனால், ஒருவர் திடமாகவும் நோயற்று வாழ்வதற்கும் வாய்ப்பாக அமைகின்றது.

## வளப்படுத்துதல்

**பனுவலிலுள்ள முக்கியக் கருத்துகளை அடையாளங்காண்க.**

பிள்ளைகள் மத்தியில் சமயச் சிந்தனையை வளர்ப்பதில் பெற்றோரின் பங்கு அளப்பரியது. வீட்டில் சமய வழிபாடுகளைச் செய்தல் வேண்டும். சமயத்தைப் போற்றியவர்களின் சரித்திரம், அவர்கள் மொழிந்த சாத்திரங்களையும் தோத்திரங்களையும் பிள்ளைகளுக்கு எடுத்துக் கூற வேண்டும். இல்ல வழிபாடு, ஆலய வழிபாடு போன்றவற்றின் மகத்துவத்தை விளக்க வேண்டும். ஆங்காங்கே நடைபெறும் சமயச் சொற்பொழிவுகளுக்கு அழைத்துச் செல்ல வேண்டும். சமயத்தைப் போற்றுபவன் தன்னையே போற்றுவான். தன்னையே போற்றுபவனை இறைவனும் போற்றுவான். சமயத்தை வளர்ப்பது அச்சமயத்தைச் சார்ந்தவர்களின் கடமையாகக் கருத வேண்டும்.

### அறிந்து கொள்க

- கையில் விழுந்த கோடுகளை வைத்து வாழ்வை முடிவு செய்யாதே. மனத்தில் விழுந்த கோடுகளைக் கொண்டு வாழக் கற்றுக்கொள்.
- பறக்கும்போது மின்மினி ஜொலிக்கிறது. உழைக்கும்போதுதான் மனிதன் ஜொலிக்கின்றான்.

**மூலம்: ஆசிரியர்**

## குறைநீக்கல்

**அறிஞர்கள் கூறும் முக்கியக் கருத்துகளை அடையாளங்காண்க.**



டாக்டர் எம். எஸ். உதயமூர்த்தி

ஆன்மிக அடிப்படைகளை வளர்த்துக் கொள்ளுங்கள். நல்லெண்ணங்களை மட்டும் மனத்தில் நிறுத்துங்கள். தீய எண்ணங்கள் மனத்தில் எழுமானால் அவற்றின் விளைவுகளை எண்ணிப் பயங்கொள்ளுங்கள்.



சொல்வேந்தர் சு.கி. சிவம்

அறியாமை எனும் இருட்டை விரட்டுங்கள். அறிவு எனும் ஒளியை ஏற்றுங்கள். சோம்பல் எனும் துரோகியை விரட்டிவிட்டுச் சுறுசுறுப்பு எனும் நண்பனை அரவணையுங்கள்.



டாக்டர் காதர் இப்ராஹீம்

உயர்ந்த எண்ணத்தையும் நம்பிக்கையான சொல்லையும் திடமான செயலையும் உங்கள் மனத்தில் பதிய வையுங்கள். வாழ்க்கையைச் சுவனப் பூங்காவாக மாற்றுங்கள்.

## பாடம் 3 விவேகச் சிந்தனையாளர்

### வாசித்து நிரல்படுத்துக.



- ஒவ்வொன்றையும் ஆராய்ந்தறியும் ஆற்றல் மிக்கவராக விளங்கிய நரேந்திரர் பின்னாளில் இராமகிருஷ்ண பரமஹம்சரிடம் சீடராகச் சேர்ந்தார்.

- அவருடைய அம்மா ஒவ்வொரு நாளும் இராமாயணம், மகாபாரதக் கதைகளை நரேந்திரருக்குக் கூறுவார்.

- 12.01.1863இல் கல்கத்தாவில் புகழ்பெற்ற டாட்டா குடும்பத்தில் நரேந்திரநாத் பிறந்தார்.

- இராமர் கதாபாத்திரத்தின்மேல் மரியாதை தோன்றி இராமரை வணங்கினார்; தியானத்தில் மூழ்கினார்; யோகாசனத்தையும் வேதாந்தங்களையும் கற்றுத் தேர்ந்தார்.

- 1893இல் அமெரிக்காவிலுள்ள சிகாகோ மாநிலத்தில் உலக ஆன்மிக மாநாட்டில் கலந்து கொண்டு சுவாமி விவேகானந்தர் சபையினரைத் தம் கம்பீரமான பேச்சால் ஈர்த்தார். பாராட்டுகளையும் பெற்றார்.

- 04.07.1902இல் தமது 39ஆவது வயதில் இறைவனடி சேர்ந்தார்.

- அவருடைய தந்தை கல்கத்தா உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞராகப் பணியாற்றினார். தாயார் புவனேஸ்வரி தேவி இராமாயணத்தையும் மகாபாரதத்தையும் நன்கு கற்று அறிந்திருந்தார்.

- இந்தியாவின் சிறப்பு, பகுத்தறிவின் முக்கியத்துவம், கல்வியின் அவசியம் ஏழைமையின் கொடுமை, ஆன்மிகம், ஞானம் எனப் பல்வேறு பொருள் பற்றி எண்ணிலடங்கா சொற்பொழிவுகளை நடத்தி மேலும் புகழ்பெற்றார்.

- மற்ற சீடர்களிடமிருந்து வேறுபட்டுத் துணிவும் விவேகமும் மிக்கவராக இருந்ததால் அவருக்கு விவேகானந்தர் என்ற பெயரைத் தம் குருநாதர் சூட்டினார்.

என்னை நுணுகுக

### இடுபணி 1

**நிரல்படுத்தி வாக்கியங்களைக் கோவையாகப் பத்தியில் எழுதுக.**

3.2.3
3.4.12

- வாக்கியங்களைக் கோவையாகப் பத்தியில் எழுதுவர்.
- 160 சொற்களில் கருத்து விளக்கக் கட்டுரை எழுதுவர்.

இடுபணி 2

**வாக்கியங்களை நிரல்படுத்திக் கோவையாகப் பத்தியில் எழுதுக.**

- சில நாள்களில் தீய பழக்கமுள்ள நண்பர்களுடன் சேர்ந்து பழகினான்.
- ஒரு நாள் திரு. தமிழமுதன் திடீரென நோய்வாய்ப்பட்டார்.
- விடாமுயற்சி, உண்மை, நேர்மை, நற்சிந்தனை ஆகிய நற்பண்புகளைப் பின்பற்றினால் வாழ்வில் முன்னேறலாம் என்பதை உணர்ந்தான்.
- திரு. தமிழமுதன் உணவகம் ஒன்றனை நடத்தி வந்தார்; அயராது உழைத்து அவ்வுணவகத்தை விரிவுபடுத்தினார்.
- தம்மால் இனித் தொடர்ந்து வியாபாரம் செய்ய இயலாது என்பதை உணர்ந்தார்.
- அதனால், தம் மகன் மதிவாணனிடம் உணவகத்தைத் தொடர்ந்து நடத்தும்படி பணித்தார்.
- ஒவ்வொரு நாளும் மாலை வேளையில் நண்பர்களுடன் கூடி மகிழ்ந்து பணத்தை அள்ளி இறைத்தான்.
- வியாபாரத்தில் ஈடுபாடு காட்டாமல் இருந்ததால் பெருத்த நட்டம் ஏற்பட்டது.
- தன் தவற்றை உணர்ந்து உணவகத்தைக் கண்ணும் கருத்துமாக நடத்தத் தொடங்கினான்.
- தந்தையின் ஆலோசனைப்படி உணவகத்தை ஏற்று நடத்தினான்.
- அவனிடம் பணம் இல்லாததை அறிந்த நண்பர்கள் அவனை விட்டுப் பிரிந்தனர்.
- அருமை நண்பனை ஆபத்தில் அறியலாம் என்பதை அப்போதுதான் உணர்ந்தான்.
- அனுபவங்கள் நம் வாழ்க்கையில் நிறைய பாடங்களைக் கற்றுத் தருவதோடு நல்ல படிப்பினையாகவும் அமைகின்றன.

இடுபணி 3

**கொடுக்கப்பட்ட குறிப்புகளின் துணையுடன் ‘அன்பு’ எனும் தலைப்பில் 160 சொற்களில் ஒரு கருத்து விளக்கக் கட்டுரை எழுதுக.**


- ஒருவரின் மனம் நெகிழ்ந்து வெளிப்படும் உணர்வு.
- தன்னலம் கருதாமல் பிறர் நலம் பேணுதல்.
- குடும்பத்தில் பிள்ளைகள் நலனுக்காகப் பாடுபடுதல். பிறர் உயிரைத் தன்னுயிர் போலக் காத்தல்.
- சமுதாய வளர்ச்சி மீது அன்பும் அக்கறையும் காட்டுதல்.
- உறவுகளுக்காகத் தியாகம் செய்யத் துணிதல்.
- உண்மை, நேர்மை அன்புக்கு இலக்கணம்.
- எந்தச் சூழலிலும் ஒருவரையொருவர் விட்டுக் கொடுக்காமல் இணைபிரியாமல் இருத்தல்.
- ஒத்த சிந்தனையுடன் நட்பு கொண்டு அன்பு பாராட்டுதல்.

இடுபணி 4

**ஒழுக்கம் எனும் தலைப்பில் 160 சொற்களில் கருத்து விளக்கக் கட்டுரை எழுதுக.**

பாடம் 4 இலக்கணம்

## வாசித்து அறிக.



உலக வரலாற்றில் வேறு எத்தலைவரும் பயன்படுத்தாத இரண்டு நெறிமுறைகளை இப்புனிதர் பயன்படுத்தினார். அகிம்சை, வாய்மை எனும் நெறிமுறைகளே அவை. அந்த வரலாற்று நாயகர் இந்தியாவின் தேசப் பிதா அண்ணல் காந்தியடிகள் என்றால் மிகையாகாது. மகாத்மா காந்திக்குத் தமது இளவயதில் அரிச்சந்திரா நாடகம் பார்க்கும் வாய்ப்புக் கிட்டியது. அச்சிறு வயதிலேயே அரிச்சந்திரன் கதாபாத்திரம் அவரது மனத்தில் ஆழமாகப் பதிந்தது. எச்சூழலிலும் உண்மையையே பேச வேண்டும் என்ற எண்ணத்தைத் தம் மனத்தில் ஆழமாகப் பதித்துக் கொண்டார்.

தென்னாப்பிரிக்காவுக்குக் காந்தி அடிகள் பயணம் மேற்கொண்டிருந்த போது அத்தேசத்தில் இனவொதுக்குக் கொள்கையும் நிறவெறிக் கொள்கையும் தலைவிரித்தாடியதைக் கண்டு திடுக்கிட்டுப் போனார். இந்திய மக்களுக்கு இழைக்கப்படும் அநீதியை எதிர்த்துப் போராடத் துணிந்தார். அத்துணிவின் மூலம் அவர் உலகுக்குத் தந்த பெரும் கொடைதான் சத்தியாகிரகம் என்ற அகிம்சை அறவழிப் போராட்டம். உண்மை பேசுவதைவிட ஒரு சிறந்த பண்பு இருக்க முடியாது என்று உளமார நம்பிய இப்புரட்சி நாயகர் ‘சத்திய சோதனை’ எனும் நூலை எழுதித் தம் வாழ்நாள் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டுள்ளார். எப்பருவத்தினரும் படித்துப் பயன்பெறும் அரிய சுயசரிதை அது.

## இடுபணி 1

**பாடப்பகுதியில் ‘அ’ , ‘இ’ என்னும் சுட்டெழுத்துச் சொற்களையும் ‘எ’ என்ற வினாவெழுத்துச் சொற்களையும் அடையாளங்கண்டு கூறுக; எழுதுக.**

5.4.2
- ‘அ’, ‘இ’ என்னும் சுட்டெழுத்தின் பின்னும் ‘எ’ என்னும் வினா எழுத்தின் பின்னும் வலிமிகும் என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

## இடுபணி 2

**பாடப் பகுதியில் 'அ', 'இ' என்னும் சுட்டெழுத்தின் பின்னும் 'எ' என்னும் வினா எழுத்தின் பின்னும் வலிமிகும் என்னும் விதிக்கு ஏற்பப் பின்வரும் சொற்களைச் சேர்த்தெழுதுக.**

1. அ + சிறுவன் = ______
2. இ + படை = ______
3. எ + தவளை = ______
4. இ + குதிரை = ______
5. அ + புதிர் = ______
6. எ + பிறவி = ______
7. இ + பிள்ளை = ______
8. எ + துறை = ______
9. அ + புலவர் = ______
10. எ + கடிதம் = ______
11 அ + பகுதி = ______
12. இ + குடும்பம் = ______

## வளப்படுத்துதல்

**'அ' ,'இ' என்னும் சுட்டெழுத்தின் பின்னும் 'எ' என்னும் வினா எழுத்தின் பின்னும் வலிமிகும் என்பதை அறிந்து சொற்களை உருவாக்குக; ஒவ்வொன்றுக்கும் மூன்று வாக்கியங்கள் அமைத்துக் காட்டுக.**

### அறிந்து கொள்க

'அ', 'இ' என்னும் சுட்டெழுத்தின் பின்னும் 'எ' என்னும் வினா எழுத்தின் பின்னும் வலிமிகும்.

**எ.கா:**

அ + படம்= அப்படம்

இ + காட்சி= இக்காட்சி

எ + சங்கம்= எச்சங்கம்

## குறைநீக்கல்

**அ. பிரித்தெழுதுக.**

1. அக்குடம் = ______
2. இப்படம் = ______
3. எப்பக்கம் = ______
4. இப்புத்தகம் = ______
5. அக்கடிகாரம் = ______
6. எக்கவிஞர் = ______
7. இக்குடை = ______
8. அத்திரைப்படம் = ______
9. எச்சமயம் = ______
10. இப்புதினம் = ______
11. எப்பருவம் = ______
12. இத்தகவல் = ______
13. அக்கருவி = ______
14. இச்சிலை = ______
15. எக்கடிதம் = ______
16. அப்பாடகர் = ______

வாசித்து மகிழ்க.

## கர்ணன் காட்டும் நன்றி

கர்ணன் என்பவன் மகாபாரதத்தில் வரும் பாத்திரங்களில் ஒருவன். இவன் நன்றிக் கடனுக்கே எடுத்துக் காட்டான ஒரு கதாப் பாத்திரமாவான்.

இவன் பாண்டவர்களுள் மூத்தவன். ஆனாலும், சந்தர்ப்ப பேதத்தால் தேரோட்டி மகனாக வாழ்ந்தான். இவன் மீனவர்கள் வீட்டில் வளர்ந்தான் என்றும் சில நூல்களில் எழுதப்பட்டுள்ளன.

கர்ணனின் திறமையைக் கண்டு இவனுடன் நட்பு கொண்டான் துரியோதனன். இவனை எல்லாரும் தேரோட்டியின் மகன் என்று கேலி செய்தனர். அதனால், கர்ணனுக்கு அங்க தேசத்தை வழங்கி அதற்கு அரசனாக முடி சூட்டியும் வைத்தான் துரியோதனன். துரியோதனன் தன்னை உயர்த்தியவன் என்ற எண்ணத்தினால் கர்ணனும் கடைசிவரை அவனுக்கு நன்றி உடையவனாகவே இருந்தான்.



கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் போர் ஆரம்பமாகும் நிலை வந்தது. கர்ணனை எப்படியாவது கலங்கச் செய்ய வேண்டும் என்று கருதிய கண்ணன் அவன் தாய் குந்திதேவியைக் கர்ணனிடம் அனுப்பி வைத்தான். அதுவரை குந்திதேவிதான் தன் தாய் என்பதைக் கர்ணன் அறியவில்லை.

போருக்கு முன் இந்த உண்மை கர்ணனுக்குத் தெரிந்தது. குந்திதேவி கர்ணனைப் பாண்டவர்கள் பக்கம் சேர்ந்திடும்படி கூறினாள். ஆனால், கர்ணன் மறுத்துவிட்டான். ஆயினும், குந்திதேவி கர்ணனிடம் இரு வரங்கள் கேட்டாள். அதில் ஒன்று அர்ஜுனனைத் தவிர மற்ற நால்வரையும் கொல்ல முயற்சிக்கக் கூடாது. மற்றொன்று கர்ணன் வைத்திருக்கும் நாகாஸ்திரத்தை அர்ஜுனன் மேல் ஒரே ஒரு முறைதான் பயன்படுத்த வேண்டும் என்பதே.

“உண்மையான வீரன் ஓர் அஸ்திரத்தை ஒரு முறைதான் பயன்படுத்துவான்!” என்று கூறி அவ்விரு வரங்களையும் குந்திதேவிக்குக் கொடுத்து அனுப்பினான் கர்ணன். தானும் அவளிடம் ஒரு வரத்தைப் பெற்றான். போர்க்களத்தில் தான் அர்ஜுனனால் இறந்து போகும் சந்தர்ப்பம் ஏற்பட்டால், அப்பொழுது குந்திதேவி அங்கு வந்து தன்னை மகன் என்று உலகம் அறியும்படி மடியில் கிடத்திக் கொள்ள வேண்டும் என்பதுதான்.



தொகுதி 10

## பாடம் 1 இன்பத் தமிழ் இலக்கிய விழா

உரையாற்றுக.



**சிறப்பு வருகை**

- மாவட்டத் தமிழ் இலக்கியக் கழகத் தலைவர் உயர்திரு. க. தமிழ்ச் செழியன்
- மாவட்டக் கல்வி அதிகாரி திருமதி ஹலிமா பிந்தி அலி
- பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் திருமிகு தான் சீ லாய்
- பள்ளி முதல்வர் மதிப்புமிகு அப்துல் அஜீஸ் பின் யாஹ்யா



**ஏற்பாடு**

தெலுக் பங்லிமா இடைநிலைப்பள்ளியின் தமிழ் இலக்கியக் கழகம்

**இணை ஏற்பாடு**

தெலுக் பங்லிமா இடைநிலைப்பள்ளியின் முன்னாள் மாணவர் சங்கம் மற்றும் பள்ளிப் பெற்றோர் ஆசிரியர் சங்கம்

**பரிசுகள் அன்பளிப்பு**

மாவட்ட இலக்கியக் கழகத்தின் இளைஞர் பிரிவுத் தலைவர் தொழிலதிபர் உயர்திரு சத்திய சீலன்

**ஆதரவு**

மின்னல் எ.ஃ.ப் எம், டி.எச்.ஆர் ராகா, அஸ்ட்ரோ வானவில், அஸ்ட்ரோ விண்மீன் மற்றும் உள்நாட்டுப் பத்திரிகைகள்

**இடுபணி 1**


**கொடுக்கப்பட்டுள்ள விளக்கங்களின் துணையுடன் நன்றியுரை ஆற்றிடுக.**

1.3.3 • நன்றியுரை ஆற்றுவர்.

தொகுதி 11

## இடுபணி 2

**குமிழி வரைபடத்தின் துணையுடன் நன்றியுரை ஆற்றிடுக.**




## இடுபணி 3

**உன் பள்ளியில் நடைபெற்ற தன்முனைப்புப் பயிற்சி முகாமில் கலந்து கொண்டு நல்ல பயன்களை அடைந்துள்ளாய். அந்நிகழ்ச்சியின் ஏற்பாட்டாளரைப் பாராட்டி நன்றியுரை ஆற்றிடுக.**



**இடுபணி 4**

**'இலக்கிய இன்பம்' எனும் நூல் வெளியீட்டு விழாவில் நன்றியுரையாற்றப் பணிக்கப்பட்டுள்ளாய். படங்களின் துணையுடன் அந்நன்றியுரையை ஆற்றிடுக.**



இலக்கிய இன்பம்


வரவேற்புரை ஆற்றுபவர்


நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கியவர்


நூலாய்வு செய்தவர்


நூல் வெளியீடு - முதல் நூல் பெறுநர்


சிறப்பு வருகையாளர்



ஏற்பாட்டுக் குழுவினர்


நூலைச் சிறப்பாக அச்சிட்டு வெளியிட்டவர்


சிற்றுண்டி வழங்கியவர்


விளம்பரம் செய்தவர்கள் (ஊடகத்தினர்)


நூல்களை வாங்கி ஆதரவு வழங்கியவர்கள்


நன்றி

தொகுதி 11

# பாடம் 2 சங்க இலக்கியத்தில் திருக்குறள்

**கூர்ந்து வாசித்திடுக.**



### சங்க இலக்கியம்

சங்க இலக்கியங்கள் பண்டைய தமிழர்களின் வாழ்க்கையை நம் கண்ணெதிரே கொண்டு வருகின்றன. சங்க இலக்கியங்களான பதினெண் மேற்கணக்கு நூல்களும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களும் பண்டைய தமிழர்களின் வாழ்வாதாரங்களாக விளங்குகின்றன.

### பண்டைத் தமிழ் நாட்டின் சிறப்பு

சங்க இலக்கியம் பண்டைய தமிழ் நாட்டின் மண், விண், மக்கள், மாக்கள், பயிர்கள், உயிர்கள், மலை, கலை ஆகியவற்றின் தோற்றத்தையும் ஏற்றத்தையும், வாழ்வையும் தாழ்வையும் துல்லியமாக நம் கண் முன்னே காட்சிப்படுத்துகின்றது.

### தமிழர்களின் அற ஆட்சி

தமிழர்களின் களவியலிலும் கற்பியலிலும், ஊடலிலும் கூடலிலும், நகையிலும் பகையிலும், போரிலும் புகழிலும், வளத்திலும் வறுமையிலும், கொடையிலும் படையிலும், கோபத்திலும் குணத்திலும் அறமே முற்றிலும் ஆட்சி செய்திருப்பதைச் சங்க இலக்கியம் பகர்கின்றது.

**என்னை நுணுகுக**



### சங்க இலக்கிய நூல்கள்

சங்க இலக்கிய நூல்களைக் கற்றுத் தேர்வது ஒவ்வொரு தமிழரின் தலையாய கடமையாகும். பதினெண் மேற்கணக்கு நூல்கள் பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் ஆகும். பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் 18 உள்ளன. அவற்றுள் திருக்குறளும் நாலடியாரும் குறிப்பிடத்தக்கன.

### திருக்குறள்

திருக்குறள் எச்சமயத்தாரும் ஏற்கும் பொதுமறை. ஈரடிகளில் உலகை ஆளும் திருக்குறள் அறம், பொருள், இன்பம் என்று முப்பால்களைக் கொண்டுள்ளது. 1330 குறள்களையும் பத்துப் பத்தாகப் பகுத்து 133 அதிகாரங்களில் படைக்கப்பட்டிருக்கின்றது. அறத்தை 380 குறள்களிலும், பொருளை 700 குறள்களிலும், காதல் பற்றிய இன்பத்தை 250 குறள்களிலும் காணலாம். உலக இலக்கியங்களுள் திருக்குறளைப் போன்ற சிறந்த அறம் உரைக்கும் நூலைக் கற்றுத் தெளிவு பெறுவோம்; அறவாழ்வு வாழ்வோம்; பிறரையும் வாழ்விப்போம்.

**இடுபணி 1**

**உரைநடைப் பகுதியைக் கூர்ந்த வாசிப்பு உத்தியைப் பயன்படுத்தி வாசித்திடுக.**

2.4.2 • கூர்ந்த வாசிப்பு உத்தியைப் பயன்படுத்தி வாசிப்பர்.

**இடுபணி 2**

**வினாக்களுக்கு விடை காண்க.**

1. தமிழர்களின் அற ஆட்சி எவ்வாறு இருந்தது?
2. திருக்குறளில் எத்தனை அதிகாரங்கள் உள்ளன?
3. பதினென் மேற்கணக்கு நூல்கள் யாவை?

**இடுபணி 3**

**வாசிப்புப் பகுதியைக் கூர்ந்து வாசித்திடுக.**

## கடையெழு வள்ளல்கள்

சங்க காலத்தில் சேர, சோழ, பாண்டியர் ஆகிய மூவேந்தர்களுக்கு நிகராக **வீரத்திலும் கொடையிலும் சிறந்தோங்கிய குறுநில மன்னர்கள்** வாழ்ந்தனர். அவர்களில் பறம்பு மன்னர் பாரி, மலையமான், பேகன், வள்ளல் ஓரி, ஆய், எழினி, நள்ளி ஆகியோர் **கடையெழு வள்ளல்கள்** எனப்படுகிறார்கள்.

## பாரி வள்ளல்

கடையெழு வள்ளல்களில் முதன்மையாளனாகக் கருதப்படுகின்ற **பாரி** இன்று பிரான்மலை என்று அழைக்கப்படும் **பறம்பு மலையை ஆண்ட மன்னன்**. பறம்பு மலை வளமிக்க மலையாக விளங்கியது. அழகிய நீரோடைகள், அருவிகள், சுவையான கனிகள் தரும் மரங்கள், சோலையில் எழிலை மேம்படுத்தும் பறவைக் கூட்டங்கள் என எங்கும் இயற்கையின் பங்களிப்பு விரிந்து கிடந்தது. **கொடை மனம் கொண்ட வள்ளலான பாரி**, எவர்க்கு எப்பொழுது எதைக் கொடுக்கலாம் என்ற வரையறை இல்லாமல் எவர்க்கும் எப்பொழுதும் எதையும் தரலாம் என்னும் **கடமை நெஞ்சம் உடையவன். பாரி கல்வியில் சிறந்தவன். தமிழ்ப் புலவர்களை ஆதரிக்கும் ஆவல் கொண்டவன்**. பாணர், விரலியர், புலவர், கூத்தர் எனத் தன்னை நாடி வந்தவர்களுக்குத் தன்னுடைய முன்னூறு ஊர்களையும் பரிசிலாகக் கொடுத்துவிட்டு அவன் பறம்பு மலையை மட்டும் ஆண்டு வந்தான்.

## கபிலரும் பாரியும்



அச்சமயத்தில், மதுரை தமிழ்ச் சங்கத்தின் தலைவராகக் கபிலர் இருந்தார். அவர் சங்கப் புலவர்களில் தலையாயவராகக் கருதப்பட்டார். கபிலர் பாரியை முதன்முதலாகச் சந்திக்க வந்தார். அந்நாளில் பறம்புமலை திருவிழாக் கோலம் பூண்டிருந்தது. **பாரி, அரசு பரிவாரங்களோடு ஊர் எல்லையில் கபிலருக்காகக் காத்திருந்தான்.** கபிலர் வந்ததும் ஒரு சக்கரவர்த்தியை வரவேற்பது போல யானையில் அவரை அமரச் செய்து மிகுந்த மரியாதையோடு அரண்மனைக்கு அழைத்து வந்தான்.

## வளப்படுத்துதல்

**வாசிப்புப் பகுதியைக் கூர்ந்து வாசித்திடுக.**



### இராஜ ராஜ சோழனின் ஆட்சி

இராஜ ராஜ சோழன் ஆட்சி மக்களுக்கு ஒரு பொற்காலம் எனப் போற்றப்பட்டது. இவரின் இயற்பெயர் அருள்மொழிவர்மன் என்பதாகும்.

### ஆபத்து சூழ்ந்தது

இம்மன்னரிடம் வலிமையான கடற்படை இருந்தது. இவர் சிறுவனாக இருந்தபோதே பல ஆபத்துகள் இவரைச் சூழ்ந்து இருந்தன. இம்மன்னனுக்கு எதிரிகள் நிறையவே இருந்தனர். எப்படியாவது இராஜ ராஜ சோழனைக் கொன்று அவனுடைய நாட்டைக் கைப்பற்றவே காத்திருந்தனர்.

### பகைவரைக் காத்தல்

இராஜ ராஜ சோழனை எப்பொழுதும் பகைவர்கள் தாக்காது மிக அருமையாகப் பாதுகாத்து வளர்த்து வந்தவர் அவருடைய தமக்கை குந்தவை நாச்சியார். இவர்தான் தமது சகோதரன் நல்ல பண்புள்ள மனிதராக வளரக் காரணமானவர் எனலாம். மேலும், தஞ்சை பெரிய கோவிலைக் கட்டுவதற்கு உறுதுணையாகவும் தூண்டுகோலாகவும் இருந்தார்.

### இலக்கியப் படைப்புகளைப் பாதுகாத்தல்

இராஜ ராஜ சோழனுக்குத் திருமுறை கண்ட சோழன் என்ற பெயரும் உண்டு. இப்பெயர் வரக் காரணமே இவர் செய்த அரிய தொண்டுதான். முற்காலத்தில் ஓலைச் சுவடிகளில் மட்டுமே தேவாரம், திருவாசகம் எழுதப்பட்டன. இந்தத் திருமுறை இலக்கியங்கள் யாவும் பாதுகாப்பின்றி அழியும் நிலையில் இருந்தன. அச்சமயம் இராஜ ராஜ சோழனே இலக்கியப் படைப்புகளைப் பாதுகாத்துத் தொகுத்தும் வைத்தார். இவரின் அரிய செயலால்தான் இன்று இந்த இலக்கியப் படைப்புகள் நமக்குக் காணக் கிடைக்கின்றன. இவரின் அளவற்ற இத்தொண்டினைக் கண்டே திருமுறை கண்ட சோழன் எனும் பட்டப் பெயரைப் பெற்றார். அன்பு, பண்பு, பரிவு, பண்பாட்டைக் காக்கும் துணிவு ஆகியவற்றைக் குந்தவை நாச்சியார் இராஜ ராஜ சோழனுக்குச் சிறந்த முறையில் கற்றுக் கொடுத்தார்.

## குறைநீக்கல்

**கூர்ந்த வாசிப்பு உத்தியைப் பயன்படுத்தி வாசித்திடுக.**

# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர், திரு. திருமதி / குமாரி.....................................................................................அவர்களுக்கு
நிகழும் மங்களகரமான ஏவிளம்பி வருடம் ஆனி மாதம் 10ஆம் நாள் (ஆங்கிலம் 24.06.2017) சனிக்கிழமை சுக்ல பட்சமும் பிரதமை திதியும், திருவாதிரை நட்சத்திரமும் சித்த யோகமும், கூடிய சுபயோக சுபதினத்தில் மாலை மணி 6:00க்கு மேல் 8:00க்குள் வரும் தனுசு லக்கினத்தில்

எண் 15, ஜாலான் வாரிசான் பெஸ்தாரி 3,
தாமான் வாரிசான் பெஸ்தாரி,
43800 டெங்கில், சிலாங்கூர் டாருள் ஏசான்.
**திரு.திருமதி இரா.சுப்பிரமணியம் - வீ. தெய்வானை**
தம்பதியரின் திருநிறை செல்வன்
**சு. ரூபன்**

எண் 38, லோரோங் சுங்கை பூலோ 8,
ஜாலான் ஹாஜி சிராட் பத்து 4, முக்கிம் காப்பார்,
42100 கிள்ளான், சிலாங்கூர் டாருள் ஏசான்.
**திரு. திருமதி வே. மாரியப்பன் - ரா.அன்னக்கொடி**
தம்பதியரின் திருநிறை செல்வி
**மா. யோகேஸ்வரி**

இவர்களின் இனிய திருமணம் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு நடைபெறவுள்ளது.

**வாசித்து அறிக; எழுதுக.**

**சிப்பாங் தேசிய இடைநிலைப்பள்ளி தமிழ்மொழிக் கழக**
**பல்லினப் பண்பாட்டு விழா நிகழ்ச்சியறிக்கை**

1.0 தொடக்கம்

சிப்பாங் தேசிய இடைநிலைப்பள்ளியின் தமிழ்மொழிக் கழகத்தின் ஏற்பாட்டில் கடந்த 19 மே 20□□ இரவு 7:00 மணிக்கு சிப்பாங் தேசிய இடைநிலைப்பள்ளி மண்டபத்தில் பல்லினப் பண்பாட்டு விழா மிக விமரிசையாக நடைபெற்றது. இவ்விழாவிற்குப் பள்ளி முதல்வர் சிறப்பு வருகையளித்து நிகழ்ச்சியை அதிகாரப்பூர்வமாகக் குத்துவிளக்கேற்றித் தொடக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியை மூவினத்தையும் சார்ந்த 300க்கும் மேற்பட்ட பள்ளி மாணவர்கள் கண்டுகளித்தனர்.

2.0 வரவேற்புரை

இவ்விழாவின் ஏற்பாட்டுக் குழுச் செயலாளர் செல்வன் அமுதன் முருகன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். அவர் தமதுரையில் இப்பள்ளியில் பயிலும் மூவினத்தவரும் மற்றவர்களின் மொழி, பண்பாடு, சமயம் போன்றவற்றைத் தெளிவாக அறிந்து ஒற்றுமையாக இருக்க இவ்விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். இவ்விழாவிற்கு வருகைபுரிந்து ஆதரவு நல்கிய அனைவருக்கும் நன்றி கூறியதுடன் நிகழ்ச்சியை இறுதிவரை இருந்து கண்டுகளிக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

3.0 தலைமையுரை

பள்ளியின் மாணவர் நலத் துணை முதல்வர் திரு. குணசேகரன் மாதவன் அவர்கள் தலைமையுரையாற்றினார். இவ்விழாவின் நோக்கத்தையும் மாணவர்களின் ஆற்றலையும் பற்றிப் பேசினார்.

4.0 திறப்புரை

பள்ளியின் முதல்வர் திரு. இரா. கருணாகரன் திறப்புரையாற்றினார். அவர் தமதுரையில் இத்தகு பயன்மிக்க நிகழ்வினை ஏற்பாடு செய்துள்ள சிப்பாங் தேசிய இடைநிலைப்பள்ளியின் தமிழ்மொழி கழகத்திற்குத் தம் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொண்டார். மேலும், மாணவர்கள் நல்லிணக்கப் போக்கைக் கடைப்பிடித்தால் நாட்டில் ஒற்றுமை நிலவும் என்றார். பல இன மக்களின் கலை, சமயம், பண்பாடு ஆகியவற்றை அறிந்து கொள்ள இந்நிகழ்ச்சி வழிவகுக்கிறது எனக் கூறி இப்பல்லினப் பண்பாட்டு விழாவை அதிகாரப்பூர்வமாகத் தொடக்கி வைத்தார்.

5.0 நடனங்கள்

இவ்விழாவில் பல்லினத்தைப் பிரதிபலிக்கும் நடனங்கள் இடம் பெற்றன. மலாய்க்காரர்களின் ஜோகேட், இனாங், ஜாப்பின் நடனங்களும், சீனர்களின் சிங்க நடனமும், இந்தியர்களின் பரதநாட்டியம், குச்சுப்பிடி, கரகாட்டம் போன்ற நடனங்களும் மக்கள் மனங்கவரும் வகையில் படைக்கப்பட்டன. அந்தந்த நடனங்களுக்கேற்ப அவர்கள் அணிந்திருந்த பல்வேறு விதமான பாரம்பரிய உடைகளும் கண்களைப் பறித்தன.

3.4.8 • 160 சொற்களில் நிகழ்ச்சியறிக்கை எழுதுவர்.

6.0 முடிவுரை

ஏற்பாட்டுக் குழுவின் துணைச் செயலாளர் செல்வன் க. முருகேசு அவர்கள் பள்ளி முதல்வருக்கும் இந்நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் நன்றி கூறினார். இரவு 10:00 மணிக்கு இப்பல்லினப் பண்பாட்டு விழா இனிதே நிறைவை எய்தியது.

அறிக்கை தயாரித்தவர், 23 மே 20□□

*அமுதன் முனியாண்டி*
அமுதன் முனியாண்டி
செயலாளர்,
தமிழ்மொழிக் கழகம்,
சிப்பாங் தேசிய இடைநிலைப்பள்ளி, சிலாங்கூர் டாருள் ஏசான்.

**இடுபணி 1**

**நிகழ்ச்சியறிக்கையைத் தொடர்ந்து 160 சொற்களில் எழுதுக.**

**வாரிசான் தேசிய இடைநிலைப்பள்ளி இலக்கிய விழா நிகழ்ச்சியறிக்கை 20□□.**

1.0 தொடக்கம்:
வாரிசான் தேசிய இடைநிலைப்பள்ளியின் இலக்கியக் கழகத்தின் ஏற்பாட்டில் கடந்த அக்டோபர் 10ஆம் நாள், காலை மணி 8:00க்குப் பள்ளி மண்டபத்தில் இலக்கிய விழா மிக விமரிசையாக நடைபெற்றது. இவ்விலக்கிய விழாவுக்குப் பள்ளியின் முதல்வர் சிறப்பு வருகையளித்திருந்தார். இவ்விழாவில் 500க்கும் மேற்பட்டோர் கலந்து சிறப்பித்தனர்.

2.0 வரவேற்புரை ____________________
____________________

3.0 தலைமையுரை ____________________
____________________

4.0 திறப்புரை ____________________
____________________

5.0 நிகழ்ச்சிகள் ____________________
____________________

6.0 முடிவுரை ____________________
____________________

அறிக்கை தயாரித்தவர் தேதி
__________ __________

பெயர்
பதவி
கழகம்
பள்ளியின் பெயர்

## இடுபணி 2


**உங்கள் பள்ளியில் இலக்கியக் கழகத்தின் ஏற்பாட்டில் மரபுக் கவிதைப் பயிலரங்கு சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் பல்வேறு அங்கங்கள் ஏற்பாடு செய்யப்பட்டு நடந்தேறின. பயிலரங்கின் ஏற்பாட்டுக் குழுச் செயலாளர் என்ற முறையில் அறிக்கை ஒன்றை எழுதுக. பின்வரும் குறிப்புகளைத் துணையாகக் கொள்க.**




- தலைப்பு - நாள் - இடம் - நேரம்
- நிகழ்ச்சி தொடக்கம்
- வரவேற்புரை
- தலைமையுரை
- அங்கங்கள்
- கேள்வி - பதில்
- சிறப்புரை
- பரிசளிப்பு
- முடிவுரை
- அறிக்கை தயாரித்தவர்

## இடுபணி 3

**உன் பள்ளியில் நடைபெற்று முடிந்த ‘கவித்திறன் போட்டி’ செயலாளர் என்ற முறையில் 160 சொற்களில் நிகழ்ச்சியறிக்கை ஒன்றனை எழுதுக.**



### அறிந்து கொள்க

**நிகழ்ச்சியறிக்கை அமைப்பு முறை**

- அறிக்கை அமைப்பில் இருத்தல்
- கழகப் பெயர் மற்றும் தலைப்பு எழுதப்பட்டிருத்தல்
- நிகழ்ச்சிகளைத் துணைத் தலைப்புகளில் எழுதியிருத்தல்
- துணைத் தலைப்புகளுக்கு எண் குறிக்கப்பட்டிருத்தல்
- அறிக்கை தயாரித்தவர் எனும் குறிப்பு முதலில் இருத்தல்
- கையொப்பம் மற்றும் பெயர் எழுதியிருத்தல்
- பதவி, கழகப் பெயர் குறிக்கப்பட்டிருத்தல்
- தேதி - வலப்புறம் எழுதப்பட்டிருத்தல்

தொகுதி 11

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## மரபுத்தொடர்களையும் பொருளையும் அறிக.

திரு. இரகுமூர்த்தி சீனர் கடையில் சமையல் வேலை செய்து வந்தார். அவருக்கு இரண்டு பெண் பிள்ளைகள் இருந்தனர். மூத்தவள் குமுதினி படிவம் இரண்டில் பயில்கிறாள். இளையவள் மாலதி படிவம் ஒன்றில் பயில்கிறாள். அவர்களின் தாயார் திருமதி அமுதா உடல்நலக் குறைவினால் வீட்டிலேயே இருந்து வந்தார். அவர்களுக்கென்று **வீடுவாசல்** இல்லாத காரணத்தால் உறவினர் வீட்டில் தங்கியிருந்தனர். ஒவ்வொரு மாதமும் வீட்டுச் செலவுக்கு RM500 கொடுத்து வந்தனர்.

ஒரு நாள் திரு. இரகு வேலை முடிந்து இல்லம் திரும்பும் வழியில் சாலையில் விபத்துக்குள்ளாகி மரணமுற்றார். அமுதாவின் குடும்பம் மீளாத் துயரில் ஆழ்ந்தது. வீட்டுச் செலவுக்கு உறவினர்களிடம் பணம் கொடுக்க இயலாமல் தவித்தனர். குமுதினியும் மாலதியும் தங்கள் பள்ளி ஆசிரியரிடம் குடும்பச் சூழலைப் பற்றியும் தற்போது அவர்களுடைய குடும்பம் எதிர்நோக்கும் சிக்கலைப் பற்றியும் **அளவளாவினர்.** தங்கள் தந்தையின் மறைவுக்குப் பிறகு உறவினர்களிடம் தாங்கள் ஒவ்வொரு நாளும் **பாட்டு வாங்குவதைப்** பற்றியும், தங்களின் தாயாரின் உடல்நிலையைப் பற்றியும் விரிவாக விளக்கினர். நிலைமையைப் புரிந்து கொண்ட ஆசிரியர் **எள்ளளவும்** மனம் வருந்த வேண்டாம் என்று ஆறுதல் கூறினார். மேலும், குறைந்த விலையில் ஒரு வீட்டை வாடகைக்கு ஏற்பாடு செய்தார்.



வீட்டுக்கான வாடகையையும் அவரே செலுத்த முன் வந்தார். பிள்ளைகள் உயர்கல்வி முடித்து வேலைக்குச் செல்லும்வரை தாமே அக்குடும்பத்தைப் பராமரிக்க விரும்புவதாக அவர்களின் தாயாரிடம் கூறினார். ஆசிரியர் கூறியதைக் கேட்டு அவர்கள் **உச்சி குளிர்ந்தனர்.**

### மரபுத்தொடர்களும் பொருளும்

1. **வீடுவாசல்** - சொத்துகள் (குறிப்பாக வீடு) குடும்பமும் குடும்பப் பொறுப்பும்
2. **அளவளாவுதல்** - கலந்துபேசுதல் / கூடிப்பேசுதல்
3. **பாட்டு வாங்குதல்** - திட்டப்படுதல் / ஏசப்படுதல்
4. **எள்ளளவும்** - சிறிதளவும் / கிஞ்சிற்றும்
5. **உச்சி குளிர்தல்** - பெரும் மனமகிழ்ச்சி அடைதல்

### இடுபணி 1

**மரபுத்தொடர்களைப் பொருள் விளங்க வாக்கியத்தில் அமைத்துக் காட்டுக.**

4.6.2 • இரண்டாம் படிவத்திற்கான மரபுத்தொடர்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

## இடுபணி 2

**விளக்கத்திற்கு ஏற்ற மரபுத்தொடரை எழுதுக.**

யாரைக் கண்டும் ஒரு துளிகூடப் பயப்படுவதில்லை → ______

ஒரு விசயத்தைப் பற்றிக் கலந்து பேசுதல் → ______

பிறருடைய ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளாகுதல் → ______

## வளப்படுத்துதல்

**கொடுக்கப்பட்ட இரு கட்டங்களில் உள்ள மரபு தொடர்களுள் ஒரு கட்டத்தைத் தெரிவு செய்து சூழல் கதை கூறுக.**

| | மரபுத் தொடர்கள் | |
|---|---|---|
| வீடு வாசல்<br>அளவளாவுதல்<br>உச்சி குளிர்தல் | | எள்ளளவும்<br>பாட்டு வாங்குதல்<br>உச்சி குளிர்தல் |

## குறைநீக்கல்

**ஏற்ற மரபுத்தொடரை எழுதுக.**

1. வீட்டுப் பாடத்தைச் செய்யாததால் நகுலன் ஆசிரியரிடம் ______.
2. கடந்த வாரம் நிகழ்ந்த தீ விபத்தில் வீடுகளை இழந்த மக்களுக்கு அப்பகுதி சட்டமன்ற உறுப்பினர் ______ கிடைக்க ஏற்பாடு செய்வதாக உறுதியளித்தார்.
3. போதைப் பொருளுக்கு அடிமையாகும் இளைஞர்கள் அதனால் ஏற்படும் விளைவுகளை ______ எண்ணிப் பார்ப்பதில்லை.
4. சிவா எஸ்.பி.எம். தேர்வில் 12 ஏக்களைப் பெற்றதால் அவனின் பெற்றோர் ______.
5. நீண்ட நாள்களாகப் பிரிந்திருந்த நண்பர்கள் நிகழ்ச்சியொன்றில் சந்தித்து ______.



# தொகுதி 12 சமூகவியல்

## பாடம் 1 பள்ளிச் சிற்றுண்டிச்சாலை

குழுவில் கலந்துரையாடுக.






பல்லின மாணவர்கள் பயிலும் இடைநிலைப்பள்ளியில் மாணவர்கள் ஒற்றுமையுடனும் நல்லிணக்கத்துடனும் செயல்படுகின்றனர். சிற்றுண்டிச்சாலையில் ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுத்துப் புரிந்துணர்வுடன் நடந்து கொள்கின்றனர். உணவு உண்ணும் முன் ஒரு நிமிடம் பிரார்த்தனை செய்கின்றனர். உணவு உண்ணும் பொழுது அமைதியைக் கடைப்பிடிக்கின்றனர்.

உணவு உண்ட பிறகு, உணவுப் பாத்திரங்களை முறையாக அடுக்கி வைக்கின்றனர். மேலும், குப்பைகளைக் குப்பைத் தொட்டியில் போடுகின்றனர். சிற்றுண்டிச்சாலையில் ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பதால் சிற்றுண்டிச்சாலை நடத்துநர்கள் அன்பாக உணவுகளைப் பரிமாறுகின்றனர்.

1.1.2 • செவிமடுத்தவற்றிலுள்ள கருத்துகளைத் தொகுத்துக் கூறுவர்.

### இடுபணி 1

**செவிமடுத்தவற்றிலுள்ள கருத்துகளைத் தொகுத்துக் கூறுக.**

### இடுபணி 2

**உடல் சுகாதாரம் பேணத் தவறியவர்கள் எதிர்நோக்குகின்ற சிக்கல்களைப் படங்களின் துணையுடன் தொகுத்துக் கூறுக.**



பூச்சிப் பற்கள்



வாந்தி பேதி

உடல் சுகாதாரத்தைப் பேணத் தவறுபவர்கள் ஆரோக்கியமற்ற வாழ்க்கை வாழ்கின்றனர். பூச்சிப் பற்கள், தோலில் சொறி சிரங்கு, தலைமுடியில் பேன், கால் விரல்களில் சேற்றுப் புண் போன்ற சிக்கல்கள் அனைத்தும் சுகாதாரத்தைப் பேணாததனால் ஏற்பட்ட விளைவுகள் என்றால் மறுப்பதற்கில்லை. ஆரோக்கியமற்ற உணவுகளை உண்பதாலும் தெருவோரங்களில் சுகாதாரமற்ற சூழலில் விற்கப்படும் உணவுகளை வாங்கி உண்பதாலும் உடலில் பல உபாதைகள் ஏற்படுகின்றன. வயிற்றுவலி, வாந்திபேதி, தலைவலி போன்ற சிக்கல்களுக்கு ஆளாகின்றனர். இதனால் பண விரயம் ஏற்படுகின்றது. எனவே, நலமான வாழ்வு வாழ சுகாதாரமான உணவுகளை உண்டு மகிழ்வோம்.



தோல் சொறி சிரங்கு



தலை முடியில் பேன்



காலில் சேற்றுப் புண்

### இடுபணி 3

**செவிமடுத்திடுக; தொகுத்துக் கூறுக.**



நான் படிவம் இரண்டில் பயின்று வருகின்றேன். ஒவ்வொரு நாளும் நான் என் உடல் நலத்தில் மிகுந்த கவனம் செலுத்துகின்றேன். காலையிலும் இரவிலும் தவறாமல் பல் துலக்குகிறேன். ஒரு நாளில் மூன்று முறை சுத்தமாகத் தேய்த்துக் குளிப்பேன். நான் என் கைகளை அடிக்கடி கழுவித் தூய்மையாக வைத்திருப்பேன். வெளியில் சென்று வந்தால் கை, கால்களைக் கழுவி விட்டு வீட்டினுள் செல்வேன். நான் தூய்மையான ஆடைகளையே உடுத்துவேன். என் பள்ளிச் சீருடைகள், காலுறைகள், காலணிகள், புத்தகப்பை ஆகியவை தூய்மையாக இருப்பதை உறுதி செய்து கொள்வேன். மேலும், ஆரோக்கியமான உணவுகளை மட்டுமே உண்ணுவேன். என் ஆரோக்கியத்தில் என் பெற்றோர்களும் ஆசிரியர்களும் மிகுந்த அக்கறை காட்டுகின்றனர். நலமாக வாழ்வோம், பிறரையும் நலமாக வாழச் செய்வோம்.

## பாடம் 2 உடல் நலம் காப்போம்

### வாசித்து மகிழ்க.


‘உடம்பார் அழியின் உயிரார் அழிவர்’ என்பது திருமூலர் வாக்கு. உடம்பை வளர்க்கும் **உபாயம்** அறிந்தவர்கள் நோயின்றி நீண்ட காலம் வாழலாம். உடம்பை **ஓம்புவதும்** உடல்நலம் பேணுவதும் ஒவ்வொருவரின் தலையாய கடமையாகும். உடல் வளர்ச்சிக்கும், **வலிமைக்கும்**, செயல்திறனுக்கும் உணவுதான் முக்கியக் காரணமாக அமைகின்றது. சீரான உணவும், சத்துள்ள உணவும், எளிதில் செரிக்கின்ற உணவும் உட்கொண்டால் நோய் நம்மை நெருங்காது. ‘பசித்துப் புசி’ என்பதும் ‘மீதூண் விரும்பேல்’ என்பதும் உணவு உண்ணும் முறைக்கான பொன்மொழிகளாகும். உடம்பைப் பாதுகாக்க வேண்டுமானால் உண்ணும் உணவிலும், பருகும் நீரிலும், **நுகரும்** காற்றிலும் கவனம் வைக்க வேண்டும். உடலுழைப்புக்கும் வயதுக்கும் ஏற்ற உணவு உண்பது சாலச் சிறந்தது.

உடலைப் பாதுகாப்பதற்கும் பராமரிப்பதற்கும் சுகாதார முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். சுகாதாரம் என்பது சுத்தமாக, தூய்மையாக இருப்பதைக் குறிக்கும். உடல் சுத்தம், உடைச் சுத்தம், உணவுச் சுத்தம், மனச்சுத்தம், இருப்பிடச் சுத்தம், சுற்றுப்புறச் சுத்தம், செயல் சுத்தம், சொல் சுத்தம் ஆகிய அனைத்தையும் கடைப்பிடித்தால் நோயற்ற வாழ்வு வாழலாம். உடலை அழிப்பது நோய் என்று அறிந்த பிறகும் நாம் அலட்சியமாக இருக்கக்கூடாது. உடலில் நோய் ஏற்படுமானால், உடல் **வலிமை** குறையும்; **தளர்ச்சி** தோன்றும்; நடமாட்டம் குறையும்; படுக்கையில் கிடத்தும்; பார்வையும் உணர்வும் மயங்கும்; உயிர் பிரியும்; உடல் **மரிக்கும்**. இதனை அறிந்த நம் முன்னோர்கள் ‘நோய்க்கு இடங்கொடேல்’ என்று கூறியுள்ளனர். உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்வதற்கு உடற்பயிற்சியும் உடலுழைப்பும் மிகவும் அவசியமாகின்றது. எனவே, கதிரவன் **துயில்** எழுவதற்கு முன்னதாகவே எழுந்து உடற்பயிற்சி செய்ய முற்பட வேண்டும். உடற்பயிற்சியின் தலையாய நோக்கம் உடலிலுள்ள கழிவுகளை வெளியேற்றுவது. ஆசனப் பயிற்சிகள், நீந்துதல், மெதுவோட்டம் ஓடுதல், நடை பயிலுதல் போன்ற பயிற்சிகளைச் செய்து வந்தால் நோயின்றி நலமாக வாழலாம்.

உடல்நலம் பேணுவதற்கு மன அழுத்தம் இல்லாத வாழ்க்கை முறையைத் தெரிவு செய்ய வேண்டும். மன அழுத்தத்திலிருந்து விடுபட இறை வழிபாடு ஓர் அற்புத **நிவாரணியாகும்.** இறைவனைத் துதித்து மன அமைதியை ஏற்படுத்திக் கொள்ள முடியும். அமைதியான மனத்தில் அழுத்தங்கள் இருக்கா. மன அழுத்தம் இல்லாத உடம்பில் நோய்கள் அண்டா. நோயின்றி நலமாக வாழத் **தியானம்** போன்ற இறைவழிபாட்டு முறைகளைக் கையாளலாம்.







| 2.3.4 | • சுகாதாரம் தொடர்பான உரைநடைப் பகுதியை வாசித்துக் கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர். |
|---|---|

## இடுபணி 1

**வாசிப்புப் பகுதியில் வண்ணமிடப்பட்ட சொற்களுக்குப் பொருள் கூறுக; எழுதுக.**

## இடுபணி 2

**வினாக்களுக்கு விடை காண்க.**

1. உடம்பைப் பாதுகாப்பதனால் ஏற்படும் நன்மைகளைக் கூறுக.
2. ஒருவருடைய உடல் ஆரோக்கியத்தில் உணவின் பங்கினை விளக்குக.
3. ஒருவருக்கு நோய் ஏற்படுமானால் அவர் எதிர்நோக்கும் சிக்கல்களைப் பட்டியலிடுக.
4. இறைவழிபாடு நலமான வாழ்வுக்கு எவ்வாறு வழிவகுக்கின்றது என்பதை விளக்குக.
5. உடல் ஆரோக்கியத்திற்கும் உடற்பயிற்சிக்கும் இடையே உள்ள தொடர்பினை ஆராய்ந்து கூறுக; எழுதுக.
6. ‘பசித்துப் புசி’, ‘மீதூண் விரும்பேல்’ ஆகிய பொன்மொழிகள் உணர்த்தும் கருத்தினை விளக்குக.

## இடுபணி 3


**உன் வசிப்பிடத்தில் நீ எவ்வாறு சுகாதார முறையைக் கடைப்பிடிப்பாய் என்று கூறுக; எழுதுக.**

## வளப்படுத்துதல்

**‘உடம்பார் அழியின் உயிரார் அழிவர்’ எனும் திருமந்திரப் பாடல் உணர்த்தும் கருத்தினை ஆராய்க.**

## குறைநீக்கல்

**ஒவ்வொரு நாளும் நீ கடைப்பிடிக்கும் சுகாதார முறைகளைக் குமிழி வரைபடத்தில் எழுதுக.**




# பாடம் 3 நலமிகு சமுதாயம்

## வாசித்து எழுதுக.



‘மூத்தோரை **மதி**’ என்று என் பெற்றோர் அடிக்கடி கூறுவதுண்டு. இரவு நேரத்தில் வானில் தோன்றும் **மதி** அனைவராலும் போற்றப்படுகின்றது. அதுபோல, பிறரை மதித்து நடப்பவரையும் இந்த உலகத்தார் போற்றுவர். ஒருவரை ஒருவர் மதித்து நடக்கும் சமுதாயமே நலமிகு சமுதாயமாகக் கருதப்படுகின்றது.


நேற்று என் வசிப்பிடத்தில் சுகாதார விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மாலை மணி 6:00க்கு **அவை**த் தலைவரின் வரவேற்புரையுடன் நிகழ்ச்சி தொடங்கியது. அக்கருத்தரங்கைச் சத்துணவு நிபுணர் டாக்டர் முருகையா அவர்கள் வழி நடத்தினார். சத்துள்ள உணவுகள் யாவை என்பதையும் **அவை** எவ்வகை உணவுகளிலிருந்து கிடைக்கப் பெறுகின்றன என்பதைப் பற்றியும் மிகத் தெளிவாக விளக்கினார். வந்திருந்த அனைவரும் மிகுந்த பயனடைந்ததாகக் கூறி மகிழ்ந்தனர்.




### இடுபணி 1

**படங்களின் துணையுடன் இருபொருள்பட வாக்கியம் அமைத்திடுக.**

i) 

ii) 

iii) 

iv) 

v) 


vi) 

### இடுபணி 2

**பின்வரும் சொற்களைக் கொண்டு இருபொருள்பட வாக்கியம் அமைத்திடுக.**

| அரை | பதி | மெய் | சமயம் |
|---|---|---|---|

3.1.4 • இருபொருள்பட வாக்கியம் அமைப்பர்.

தொகுதி 12

# பாடம் 4 இலக்கணம்

## இயற்சொல், திரிசொல் அறிக.

தமிழ்ச் சொற்கள் இலக்கிய அடிப்படையில் நான்கு வகையாகப் பிரிக்கப்படும். அவை, இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்பனவாகும்.

அ) **இயற்சொல்**

- தொன்றுதொட்டு தமிழ் மக்களிடையே இயல்பாக வழங்கி வருகின்ற சொற்கள் இயற்சொற்களாகும்
  **எ.கா:** பொன், கல், மரம், ஓடினான், பயின்றான்

ஆ) **திரிசொல்**

- கல்லாதவரால் பொருள் உணர முடியாததும், கற்றவர்க்கே விளங்கக் கூடியதுமான சொல்லே திரிசொல் எனப்படும். ஒரு பொருளை உணர்த்தும் பல சொற்களாகவும் பல பொருளை உணர்த்தும் ஒரு சொல்லாகவும் திரிசொல் அமைந்திருக்கும்.
  **எ.கா:** கிள்ளை (கிளி), படர்ந்தான் (நீங்கினான்), நௌவி (மான்), மஞ்ஞை (மயில்)

- ஒரு பொருளை உணர்த்தும் பல சொற்கள்
  **எ.கா:** கிள்ளை - கிளி, அஞ்சுகம், தத்தை

- பல பொருளை உணர்த்தும் ஒரு சொல்
  **எ.கா:** மதி - நிலவு, அறிவு, மதித்தல்

## இடுபணி 1

**வாக்கியங்களில் கோடிடப்பட்ட சொற்கள் எவ்வகைச் சொற்கள் என அடையாளம் கண்டு கூறுக; எழுதுக.**



1. நேற்று வாழைத் தோப்புக்குள் புகுந்த களிறு வாழை மரங்களைத் சேதப்படுத்தியது.
2. சாலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் காவல் துறையினரைக் கண்டவுடன் அவ்விடத்தைவிட்டு நீங்கினர்.
3. திரு. மாதவன் தோட்டத்தில் காய்கறிகளைப் பயிரிட்டார்.
4. ஆனந்தி அழகிய தத்தையைக் கூண்டில் வைத்து வளர்த்தாள்.
5. காட்டில் குயில்கள் கூவியதைக் கேட்டு மஞ்ஞைகள் ஆடின என்று கலைஞர் பேசினார்.

5.2.4 • இயற்சொல், திசைச்சொல், திரிசொல், வடசொல் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

## இடுபணி 2

**சொற்குவியலில் உள்ள சொற்களை அவற்றின் வகைக்கு ஏற்பப் பட்டியலிடுக.**

| | | | |
|---|---|---|---|
| கிள்ளை | போ | திருடன் | வீடு |
| கோழி | மண் | பொன் | படர்ந்தான் |
| மணி | அகி | ஆம்பல் | மௌவல் |
| சென்றனர் | திரு | நொய் | நெகிழி |
| இரவு | வீரன் | அகிலம் | குக்கல் |

| இயற்சொல் | திரிசொல் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

## வளப்படுத்துதல்

**அ. ஒரு பொருளைக் குறிக்கும் பல சொற்களை எழுதுக.**

1. ஞமலி = ______, ______, ______
2. பிளிறு = ______, ______, ______
3. படர்ந்தான் = ______, ______, ______
4. தருமம் = ______, ______, ______
5. அரிமா = ______, ______, ______

**ஆ. பல பொருளை உணர்த்தும் ஒரு சொல்.**

1. கழி = ______, ______
2. மறை = ______, ______
3. கவி = ______, ______
4. பதி = ______, ______
5. மெய் = ______, ______

## குறைநீக்கல்

**எவ்வகைச் சொல் எனக் குறிப்பிடுக.**


1. மனம் = ______
2. பரி = ______
3. உண்டாள் = ______
4. ஆசிரியர் = ______
5. கனி = ______
6. நூல் = ______
7. மங்கை = ______
8. கற்றார் = ______
9. கதிரவன் = ______
10. பகர்ந்தான் = ______

## தொகுதி 13 நவீன வளர்ச்சி

### பாடம் 1 மறைக்காணி

கலந்துரையாடுக.






**இடுபணி 1**

**மறைக்காணியைப் பற்றி விவரித்துக் கூறுக.**

1.4.4 • ஒரு பொருளைப் பற்றி விவரித்துக் கூறுவர்.

இடுபணி 2

'குரல்வழி இயங்கும் சக்கர நாற்காலி' (Voice Controlled Wheelchair) பற்றி விவரித்துக் கூறுக.



இடுபணி 3

**வினாக்களுக்கு விடை கூறுக.**

1. இக்கருவி யாருக்காக உருவாக்கப்பட்டுள்ளது?

2. இக்கருவியின் பயன்களைப் பட்டியலிடுக.


3. இந்நவீன குரல்வழி இயங்கும் சக்கர நாற்காலிக்கும் பழைய சக்கர நாற்காலிக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை இரட்டிப்புக்குமிழி வரைபடத்தில் எழுதி விளக்குக.


இடுபணி 4

அனைத்துலக விண்வெளி ஆய்வு மையம் பற்றி விவரித்துக் கூறுக.











தொகுதி 13

## பாடம் 2 விண்வெளிப் பயணம்

### வாசித்து மகிழ்க.

நாம் நமது அன்றாட வாழ்வில் பல்வேறு இடங்களுக்குப் பயணம் மேற்கொண்டு வருகின்றோம். ஆனால், பயணங்களில் மிகவும் **கடினமான** பயணமாகக் கருதப்படுவது விண்வெளிப் பயணமாகும். அங்குக் காற்று கிடையாது. இருண்டு போய்க் கருமையாக இருக்கும். புவி ஈர்ப்பு விசை கிடையாது. அங்கு எடையற்ற தன்மை **நிலவும்**. அதனால் அங்கு அனைத்துப் பொருள்களும் மிதக்கும். மனிதர்கள் அங்கு வாழ்வது சிரமம். பாதுகாப்பான விண்கலம் மற்றும் விண்வெளி உடை அணிந்து கொண்டு அங்கு உயிர் வாழ முடியும் என நம்பப்படுகிறது.



யூரி ககாரின்

கோளோடி (ராக்கெட்) கண்டுபிடிக்கப்பட்ட பின்னரே விண்வெளிப் பயணம் என்பது **சாத்தியமானது**. விண்வெளிக்குச் செல்ல வேண்டுமென்றால் புவியின் ஈர்ப்பு விசையை மீறி அதிவேகமாகப் பயணம் செய்ய வேண்டும். கடந்த 4.10.1957இல் சோவியத் ரஷ்யா, 'ஸ்புட்னிக் 1' என்கின்ற செயற்கைக் கோளை வெற்றிகரமாக விண்வெளியில் **ஏவியது**. 83.6 கிலோ எடை கொண்ட இது 92 நாள்கள் பூமியைச் சுற்றி வந்திருக்கிறது. இதன் மூலம், விண்வெளி **யுகம்** பிறந்தது. தொடர்ந்து 'ஸ்புட்னிக் 2' என்கின்ற விண்கலத்தை ரஷ்யா 03.11.1957இல் விண்வெளிக்கு அனுப்பியது. இது வரலாற்றுச் சிறப்புமிக்க விண்கலமாகக் கருதப்படுகிறது. ஏனெனில், இதில் 'லைக்கா' என்கின்ற பெண் நாய் பயணம் செய்தது. இது பூமியைச் சுற்றி வந்து 10 நாள்கள் விண்வெளியில் உயிர் வாழ்ந்தது. இதன் மூலம் **எடையற்ற** தன்மையில் உயிரினங்கள் வாழ முடியும் என்பதைக் கண்டுபிடிக்க முடிந்தது. மேலும், மனிதர்களும் விண்வெளிக்குச் செல்ல முடியும் என்கின்ற **சாத்தியம்** ஏற்பட்டது.

விண்வெளிக்கு மனிதனை அனுப்பும் பயணத்தில் சோவியத் ரஷ்யா வெற்றி பெற்றது. யூரி ககாரின் என்பவர் 12.04.1961இல் விண்வெளிக்குச் சென்று வந்தார். இவர் 'வோஸ்டாக் 1' என்கின்ற விண்கலத்தின் மூலம் பூமியை ஒரு முறை **சுற்றிய** பின்னர் வெற்றிகரமாகத் திரும்பினார். இதன் காரணமாகப் பூமியை முதன்முதலில் சுற்றி வந்த விண்வெளி வீரர் என்ற பெருமையைப் பெற்றார். 2015ஆம் ஆண்டு வரை 549 வீரர்கள் விண்வெளிக்குச் சென்று வந்துள்ளனர் என்று அறிய முடிகின்றது.

2.3.6 • அறிவியல் தொடர்பான உரைநடைப் பகுதியை வாசித்துக் கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.

## இடுபணி 1

**வண்ணமிடப்பட்ட சொற்களுக்குப் பொருள் கூறுக; எழுதுக.**

## இடுபணி 2

**வினாக்களுக்கு விடை கூறுக.**

1. விண்வெளி எப்படி இருக்கும் என்பதை விளக்குக.
2. விண்வெளிப் பயணம் எப்படிச் சாத்தியமானது?
3. விண்வெளிப் பயணத்தில் சோவியத் ரஷ்யா புரிந்த சாதனைகளைப் பட்டியலிடுக.
4. விண்வெளிப் பயணத்தை நீ மேற்கொள்ள விரும்புகிறாயா? ஏன்?

## இடுபணி 3

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**


கல்பனா சாவ்லா

விண்வெளி வீராங்கனை
கல்பனா சாவ்லா
விண்வெளியில் மிதந்த முதல்
இந்தியப் பெண்மணி.

**என்னை நுணுகுக**

| ஆண்டு | நிகழ்வுகள் |
|---|---|
| 01.07.1961 | இந்தியாவில் ஹரியானா மாநிலத்தில் கர்னால் என்ற சிறிய நகரில் பிறந்தார். |
| 1984 | அமெரிக்காவின் டெக்சாஸ் பல்கலைக் கழகத்தில் விண்வெளி பொறியியல் துறையில் முதுகலைப் பட்டமும் நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு முனைவர் பட்டமும் பெற்றார். |
| 1995 | விண்வெளிப் பயிற்சி முடிந்து விண்வெளி வீராங்கனையாகத் தகுதி பெற்றார். |
| 19.11.1997 | கொலம்பியா விண்கலத்தில் முதல் விண்வெளிப் பயணம் மேற்கொண்டார். |
| 16.01.2003 | கொலம்பியா விண்கலத்தில் இரண்டாவது முறையாகப் பயணம் மேற்கொண்டார். |
| 01.02.2003 | அவ்விண்கலத்தில் 16 நாள்கள் பயணம் மேற்கொண்டு, பூமியை நெருங்கும் தருவாயில் விண்கலம் சிதைந்து அகால மரணமுற்றார். |

1. விண்வெளி வீராங்கனை கல்பனா சாவ்லாவின் கல்வித் தகுதி என்ன?
2. கல்பனா சாவ்லாவின் சாதனைகளைக் கூறுக
3. 2003ஆம் ஆண்டில் நிகழ்ந்தவற்றை விளக்குக.

## வளப்படுத்துதல்


**விண்வெளிப் பயணம் மேற்கொள்வதன் அவசியத்தை ஆராய்ந்து கூறுக; எழுதுக.**

## குறைநீக்கல்

**விண்வெளியில் காணக்கூடியவற்றைப் பட்டியலிடுக.**

# பாடம் 3 நிலவிலும் சாத்தியமே!

## குழுவில் கலந்துரையாடுக.




### இடுபணி 1

**'நிலவில் ஆட்சிபுரிய நேரிட்டால்' எனும் தலைப்பில் 160 சொற்களில் குறிப்புகளின் துணையுடன் கற்பனைக் கட்டுரை எழுதுக.**

### இடுபணி 2

**'எனக்கு ஒரு விண்கலம் கிடைத்தால்' எனும் தலைப்பில் 160 சொற்களில் கற்பனைக் கட்டுரை எழுதுக.**

### இடுபணி 3

**'நான் ஒரு விண்வெளி வீரரானால்' எனும் தலைப்பில் 160 சொற்களில் கற்பனைக் கட்டுரை எழுதுக.**

### அறிந்து கொள்க



விண்வெளி வீரர் டாக்டர் சைட் முஸாபார் ஷுக்கோர்

- 27 ஜூலை 1972இல் கோலாலம்பூரில் பிறந்தவர்.
- மருத்துவத்துறையில் எலும்பியல் நிபுணராகப் பணிபுரிந்தார்.
- மலேசியாவின் முதல் விண்வெளி வீரராவார்.
- 10 அக்டோபர் 2007இல் முதன் முதலில் விண்வெளிப் பயணத்தை 11 நாள்கள் மேற்கொண்டு 21 அக்டோபர் 2007இல் பூமிக்குத் திரும்பினார்.

3.4.13 • 160 சொற்களில் கற்பனைக் கட்டுரை எழுதுவர்.

பாடம் 4 **செய்யுளும் மொழியணியும்**

## திருக்குறளையும் பொருளையும் அறிக.

தமிழர்களின் தற்காப்புக் கலைகளுள் ஒன்றான சிலம்பக் கலையில் பாண்டியன் சிறந்து விளங்கினான். அவன் சிறுவயது முதலே அக்கலையைக் கற்று வந்திருந்தான். ஒருநாள் பாண்டியன் தன் நண்பன் முரளியுடன் தோட்டத் திருவிழாவுக்குச் சென்றிருந்தான். அங்கு எதிர்பாராத விதமாக முரளி சிலருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டான். அதனை அறிந்த பாண்டியன் அவ்விடத்திலிருந்து முரளியை அழைத்து வந்து நிலைமையைச் சீர்படுத்தினான். சிறிது நேரம் கழித்து முரளியைத் தாக்க அவர்கள் கழிகளுடன் வந்தனர். முரளி எதிர்த்துப் பேசியதால் அவனைக் கழியால் அடித்தனர். செய்வதறியாது திகைத்த போது பாண்டியன் எதிராளியின் கழியைப் பிடுங்கி இலாவகமாகச் சுற்றி அவர்களைப் பதம் பார்த்தான். தப்பித்தோம் பிழைத்தோம் என்று அவர்கள் அவ்விடத்தை விட்டு ஓடி மறைந்தனர். இல்லம் திரும்பும் வழியில், “நல்ல வேளை, சிலம்பக் கலை கற்றதனால் இன்று நீ தப்பித்தாய்” என்று பாண்டியன் கூறினான்.



அதற்கு முரளி, “என்னிடம் மட்டும் கழி இருந்திருந்தால், அவர்களை அடித்து நொறுக்கியிருப்பேன்” என்று பெருமிதம் பேசினான். “கழி சுழற்றுவது என்ன சுலபமானவொன்று என்று எண்ணிவிட்டாயா?” என்றான்.

“ஆமாம், அஃதொன்றும் பெரிய விசயமன்று” என்று மறுமொழி பகன்றான் முரளி. உடனே, பாண்டியன் தான் வைத்திருந்த கழியைக் கொடுத்துச் சுழற்றும்படி கூறினான். முரளி அந்தக் கழியை எடுத்துச் சுழற்றத் தொடங்கினான். முகம், தலை, கை, கால் என்று கழியைச் சுழற்றும்போது தன்னைத் தானே அடித்துக் கொண்டான்.

“தோழா! நான் கழி சுழற்றுவது எளிது என்று எண்ணினேன். ஆனால், எவ்வளவு நுணுக்கம் தேவை என்பதை இப்பொழுதுதான் புரிந்து கொண்டேன்.

**‘சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்**
**சொல்லிய வண்ணம் செயல்’**

என்ற வள்ளுவன் கூற்றையும் உணர்ந்து கொண்டேன் நண்பா! என்னை மன்னித்துவிடு,” என்று கூறி வருந்தினான்.

4.2.2
- இரண்டாம் படிவத்திற்கான திருக்குறளையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

## திருக்குறளும் பொருளும்

**சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்**
**சொல்லிய வண்ணம் செயல். (குறள் 664)**

**பொருள்:** ஒரு செயலைச் செய்து முடித்துவிடுவதாகச் சொல்வது எல்லாருக்கும் சுலபமானது. ஆனால், அதனைச் சொன்னபடி செய்வதுதான் கடினமானது.

**கருத்து:** சொல்வது சுலபம்; செய்வது கடினம்

### இடுபணி 1

**குறளையும் அதன் பொருளையும் மனனம் செய்து கூறுக; எழுதுக.**

### இடுபணி 2

**குழுவில் குறளுக்குப் பொருத்தமான சூழல் கதை ஒன்றனை உருவாக்கி நடித்திடுக.**

### வளப்படுத்துதல்

**சொல்லுவது சுலபம். செய்வது கடினம் எனும் கருத்துக்கு ஏற்ற ஐந்து உதாரணங்களைக் கூறுக; எழுதுக.**
**எ.கா: குருவி கூடு கட்டுவது**

1. ______
2. ______
3. ______
4. ______
5. ______

### குறைநீக்கல்

**அ. குறளை நிறைவு செய்க.**

'சொல்லுதல் யார்க்கும் ______
______'

**ஆ. குறளுக்குப் பொருத்தமான கருத்தைத் தெரிவு செய்க.**

i. செய்வது சுலபம் சொல்வது கடினம். ______
ii. சொல்வது சுலபம் செய்வது எளிது. ______
iii. சொல்வதும் செய்வதும் கடினம். ______
iv. சொல்வது எளிது செய்வது கடினம். ______



தொகுதி 13

## வாசித்து மகிழ்க.

### அ நட்சத்திரங்கள்



மேகங்கள் இல்லாத தெளிவான இரவு நேரத்தில் வானத்தைப் பாருங்கள். அதில் தெரியும் எண்ணற்ற நட்சத்திரங்கள் உங்களைப் பரவசப்படுத்தும். விண்ணில் உள்ள நட்சத்திரங்களை விரல்விட்டு எண்ண முடியுமா? அவை எண்ணிக்கையில் 100 கோடிக்கு மேல் இருக்கும் என்கின்றனர் வானியல் வல்லுநர்கள்.

ஒளி சிந்தும் அழகான நட்சத்திரங்களின் வயது 10 இலட்சம் ஆண்டுகள் முதல் 1000 கோடி ஆண்டுகள் இருக்கும் என்றால் நம்ப முடியாதுதான். ஆனால், அதுதான் உண்மை. உருவத்தில் சூரியனைவிட 100 மடங்கு பெரியவைதான் இந்த நட்சத்திரங்கள்.

### ஆ பாலைவனம்



உலகத்தில் ஏழில் ஒரு பகுதி பாலைவனமாய் உள்ளது. இது வறண்ட நிலப் பகுதியாகும். ஆண்டுக்கு 25 செ.மீ. அளவே சராசரியாக மழையைப் பெறக் கூடியது. ஆப்பிரிக்காவில் உள்ள சஹாரா போன்ற பாலைவனங்கள் அதிக வெப்பமுடையவை. அதே சமயம் துருவங்களில் குளிர்ந்த பாலைவனங்களும் இருக்கின்றன. துருவப் பாலைவனங்களில் கிட்டத்தட்ட ஆண்டு முழுவதும் நீர் உறைந்துவிட்டிருக்கும்.

பாலைவனங்களில் பகலில் வெப்பம் கூடிக் கொண்டே போகும். இரவில் சீக்கிரமே குளிர்ந்துவிடும். குறைந்த அளவே மழை பெய்யும். அதுவும் மணற்பரப்பால் சீக்கிரமே உறிஞ்சப்பட்டுவிடும். பாலைவனம் நீரற்ற வறண்ட பிரதேசமாய் இருந்தாலும், அடியாழத்தில் நீர் இருக்கவே செய்யும்.

### இ கடல் எப்படி உருவானது



ஏறக்குறைய 400 கோடி ஆண்டுகளுக்கு முன் பூமியின் வெப்பம் கடுமையாயிருந்தது. அது மெல்லக் குளிர்ந்தபோது காற்றும் நீராவியும் பூமியைச் சூழ்ந்து மேலும் குளிர்ச்சியடைய நீராவி நீராகி, கடலானது என்கின்ற கோட்பாடு இன்றளவும் ஏற்கப்பட்டதாயிருக்கின்றது.


நிலப் பகுதியான கண்டங்கள் திட்டவட்டமான எல்லைகள் கொண்டவை. நீர்ப் பகுதியான கடல்களின் எல்லைகள் திட்டவட்டமாய் இருப்பதில்லை. ஆயினும், இவை பசிபிக், அட்லாண்டிக், இந்திய, ஆர்டிக், அண்டார்டிக்கா பெருங்கடல்களாகப் பிரித்து அறியப்படுகின்றன. இந்தப் பெருங்கடல்களில் கடல்கள், விரிகுடாக்கள், வளைகுடாக்கள், உட்புகுமுகங்கள் போன்றவை அடங்கும்.


**மூலம்: உலகம் பிறந்த கதை**

# தொகுதி 14 விளையாடுவோம் வாரீர்

## பாடம் 1 சதுரங்கம்

கலந்துரையாடுக.






என்னை நுணுகுக

**இடுபணி 1**

**சதுரங்கம் பற்றி விவரித்துக் கூறுக.**

1.4.4 • ஒரு பொருளைப் பற்றி விவரித்துக் கூறுவர்.

## இடுபணி 2

ஏதேனும் ஒரு விளையாட்டுக் கருவியைப் பற்றி விவரித்துக் கூறுக.



## இடுபணி 3

**பின்வரும் மலேசிய விளையாட்டாளர்களுள் ஒருவரைப் பற்றி விவரித்துக் கூறுக.**



டத்தோ நிக்கோல் டேவிட்



பண்டலேலா ரினோங்



முகமது அசீசுல் அஸ்னி ஆவாங்



செந்தில் குமரன் செல்வராஜூ

## இடுபணி 4

**பம்பரம் தொடர்பான தகவல்களை விவரித்துக் கூறுக.**



# பாடம் 2 பூப்பந்து வீரர்

**உரையாடலை வாசித்து அறிக.**

**சூழல்:**
மலேசியாவில் புகழ்பெற்ற விளையாட்டு வீரர் ஒருவரைப் பற்றி அறிந்து கொள்ள தன் தந்தையுடன் குணா உரையாடினான்.

குணா: அப்பா, மலேசியாவில் புகழ்பெற்ற ஒரு விளையாட்டு வீரரைப் பற்றிக் கூற முடியுமா?

தந்தை: கண்டிப்பாகக் கூறுகிறேன் குணா. மலேசியாவில் மட்டுமின்றி உலகிலேயே பூப்பந்து விளையாட்டில் ஒற்றையர் பிரிவில் முதல்நிலை வீரராக விளங்கும் டத்தோ லீ சோங் வேய் அவர்களைப் பற்றிப் பல தகவல்களைக் கூறலாமே!

குணா: நன்றி அப்பா. உலகிலேயே ஒற்றையர் பிரிவில் முதல் நிலை வீரரா? அவரைப் பற்றிக் கூறுங்கள் அப்பா.

தந்தை: பேராக் பாகான் செராயில் 21.10.1982 இல் பிறந்த லீ சோங் வேய் தமது 11 ஆவது வயதிலிருந்து பூப்பந்து விளையாட்டில் ஈடுபட்டு வந்திருக்கிறார். தமது தந்தையின் ஊக்கத்தால் நன்கு விளையாடிய இவரை மலேசிய முன்னாள் பூப்பந்து விளையாட்டாளரும் பயிற்றுநருமான மிஷ்புன் சிடேக் அவர்கள் தேசிய அணியில் சேர்த்துக் கொண்டு கடுமையான பயிற்சிகளை வழங்கினார்.





குணா: ஒருவருடைய முன்னேற்றத்தில் பலர் பங்காற்றுகின்றனர் என்பது உண்மைதானே அப்பா! அவருடைய சாதனைகளைப் பற்றிச் சொல்லுங்கள் அப்பா.

தந்தை: உண்மைதான் குணா. டத்தோ லீ சோங் வேய் பூப்பந்து விளையாட்டில் ஓர் உச்சத்தைத் தொட்டுவிட்டார் என்று கூறினால் அது மிகையாகாது. ஆசியான் விளையாட்டு, தென்கிழக்காசிய விளையாட்டு, காமென்வெல்த் விளையாட்டு, தோமஸ் கிண்ணம், உலகக் கோப்பை, ஒலிம்பிக் விளையாட்டு போன்ற நிலைகளில் நம் நாட்டைப் பிரதிநிதித்து அவர் விளையாடி உள்ளார். குறிப்பாக 2008 இல் பெய்ஜிங்கிலும், 2012 இல் இலண்டனிலும், 2016 இல் ரியோ டீ ஜெனிரோவிலும் நடந்த ஒலிம்பிக் பூப்பந்து விளையாட்டுகளில் தொடர்ச்சியாக நாட்டுக்கு வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றுத் தந்துள்ளார்.

குணா: அடடா! இப்படிப்பட்ட சாதனையாளரைப் பற்றி நான் இவ்வளவு காலமும் அறியாமல் இருந்து விட்டேனே!

தந்தை: லீ சோங் வேய் பூப்பந்து விளையாட்டில் சாதித்த உலகச் சாதனைகளைப் பாராட்டி அவருக்கு டத்தோ விருது வழங்கப்பட்டது. பிரதமர் டத்தோஸ்ரீ நஜீப் துன் ரசாக் அவர்கள் டத்தோ லீ சோங் வேய் அவர்களை நாட்டின் தேசிய நாயகன் (National Hero) என்று வருணித்துப் பாராட்டியுள்ளார். வலது கை ஆட்டக்காரரான டத்தோ லீ சோங் வேய் அதிரடி ஆட்டங்களிலும் நுணுக்கமான ஆட்டக் கலையிலும் வல்லவர்.

குணா: பூப்பந்து சகாப்தம் டத்தோ லீ சோங் வேய் பற்றிய தகவல்களைப் பகிர்ந்து கொண்டதற்கு மிக்க நன்றி அப்பா.

## இடுபணி 1

**மேற்காணும் உரையாடலைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசித்திடுக.**

## இடுபணி 2

**வினாக்களுக்கு விடை கூறுக.**

1. டத்தோ லீ சோங் வேய் பற்றி நீ அறிந்து கொண்ட தகவல்களைப் பட்டியலிடுக.

2. டத்தோ லீ சோங் வேய்யைப் பூப்பந்து சகாப்தம் என்று கூறக் காரணம் என்ன?

2.1.5 • உரையாடலைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர்.


**இடுபணி 3**

**உரையாடலைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசித்திடுக.**

**சூழல்:**
வேலுவும் பாலுவும் பிரம்புப் பந்து (Sepak takraw) விளையாட்டைப் பற்றிப் பள்ளி வளாகத்தில் உரையாடுகின்றனர்.




வணக்கம் வேலு, நிச்சயமாகச் சொல்கிறேன். பிரம்புப் பந்தைக் கொண்டு விளையாடும் இவ்விளையாட்டை நாம் உள்ளரங்கிலும் வெளியரங்கிலும் விளையாடலாம். மூன்று விளையாட்டாளர்கள் ஒரு குழுவில் விளையாடுவர். ஒவ்வொருவரும் ஓர் இடத்தை ஆக்கிரமிப்பர். வலது அல்லது இடது புறத்தில் உள்ளவர் பந்தை வீச பின்புறம் நடுவில் இருப்பவர் அதனைக் காலுயர்த்தி அடித்து எதிராளியின் பகுதிக்கு அனுப்புவார். எதிராளியின் பந்தை வரவேற்பவர் 3 முறைக்கு மேல் பந்தை உதைக்கக் கூடாது. மேலும், பந்தைக் கையில் பிடிக்கக் கூடாது தெரியுமா?






## வளப்படுத்துதல்

**மலேசிய இந்திய விளையாட்டு வீரர்களுள் ஒருவரைத் தெரிவு செய்து, அவரைப் பற்றிய தகவல்களைத் திரட்டி, அதனை வகுப்பில் வாசித்துக் காட்டிடுக.**




டத்தோ 'பஞ்ச்' குணாளன்




குகன் சண்முகநாதன்

## குறைநீக்கல்

**உரையாடலைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசித்திடுக.**

**சூழல்:**
மாலினி அமுதாவிடம் மாணவர்களுள் பலர் விளையாட்டுப் போட்டிகளில் ஆர்வமின்றி இருப்பதற்கான காரணங்களைக் கேட்டறிகிறாள்.



மாலினி: அமுதா, நம் நண்பர்களுள் பலர் விளையாட்டுப் போட்டிகளில் ஆர்வமின்றி இருப்பதற்கான காரணங்களைக் கூற முடியுமா?

அமுதா: கண்டிப்பாகக் கூறுகிறேன் மாலினி. கல்வியா? விளையாட்டா? என்று பார்க்கும் போது, இன்றைய மாணவர்கள் விளையாட்டுப் போட்டியின் வெற்றியால் எந்தப் பயனும் இல்லை என்று கருதுகின்றனர். அதுமட்டுமா? விளையாட்டில் ஈடுபட்டு வெற்றி பெற்றால், அதற்கும் உரிய வெகுமதி கிடைப்பதில்லை என்றும் புலம்புகின்றனர்.


மாலினி: அப்படியா! இதுவும் ஒரு காரணமாகக் கருதப்படுகின்றதா?

அமுதா: விளையாடுவதால் வேலை வாய்ப்புகள் கிடைக்குமோ இல்லையோ என்று ஐயுறுகின்றனர்; விளையாடுவதில் ஆர்வத்தைக் குறைத்துக் கொள்கின்றனர்.

# பாடம் 3 நம்மால் முடியும்

## வாசித்து எழுதுக.

2016ஆம் ஆண்டு ரியோ பிரேசிலில் நடைபெற்ற ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் மலேசிய அணியினர் பங்கெடுத்த விளையாட்டுகளும் பதக்க நிலவரங்களும்.




**குறியீடுகள்**

- வெள்ளிப் பதக்கம் (பச்சை)
- வெண்கலப் பதக்கம் (மஞ்சள்)
- பதக்கம் இல்லை (சிவப்பு)

## இடுபணி 1


**வட்டக் குறிவரைவிலுள்ள விவரங்களைத் தொகுத்து எழுதுக.**

3.3.2 • குறிவரைவிலுள்ள விவரங்களைத் தொகுத்து எழுதுவர்.

**இடுபணி 2**

**குறிவரைவிலுள்ள தகவல்களைத் தொகுத்து எழுதுக.**

2017ஆம் ஆண்டில் மலேசியாவில் நடைபெற்ற 29ஆவது தென்கிழக்காசிய விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்ட நாடுகளின் பதக்க நிலவரம்.



தொகுதி 14

# பாடம் 4 இலக்கணம்

## வேற்றுமை உருபுகளை அறிக.

திரு. முனியன் ஒரு தோட்டக்காரர். வயது முதிர்ந்திருந்த போதிலும் தம்முடைய தோட்டத்தில் பலவிதமான பயிர்களைப் பயிரிட்டிருந்தார். ஞாயிற்றுக் கிழமையன்று **தோட்டத்தினின்று** பணி முடிந்து வீட்டுக்குப் புறப்படும் வேளையில் தம்முடைய கையில் அணிந்திருந்த விலையுயர்ந்த கைக்கடிகாரம் காணாமல் போய்விட்டதை உணர்ந்தார். தோட்டத்தில் எல்லா இடங்களிலும் இயன்றவரை தேடிப் பார்த்தார். எங்குத் தேடியும் கிடைக்கவில்லை. பக்கத்துத் **தோட்டத்திலிருந்து** சில சிறுவர்களை உதவிக்கு அழைத்தார். தம்முடைய கடிகாரம் தொலைந்துவிட்டதாகவும், அதனைத் தேடித் தருபவருக்கு வெகுமதி கொடுப்பதாகவும் கூறினார். சிறுவர்கள் **அத்தருணத்திலிருந்து** கைக்கடிகாரத்தைத் தேட ஆரம்பித்தனர். ஆளுக்கொரு பக்கமாகத் தேடினர். களைப்பு மிகுதியால் பின்வாங்கினர். **முதியவரிடமிருந்து** தாழ்மையுடன் விடைபெற்றுக் கொண்டனர். ஆனால், அவர்களுள் ஒரு சிறுவன் மட்டும், “தாத்தா எனக்கு மீண்டும் ஒரு வாய்ப்புக் கொடுங்கள்,” என்று கேட்டான். அவனை வியந்து பார்த்தவாறே, “சரி தம்பி,” என்று அனுமதியளித்தார்.

சிறிது நேரம் கழித்துச் சிறுவன், “தாத்தா, உங்கள் கையைக் காட்டுங்கள்” என்று கூறி கைக்கடிகாரத்தைத் தாத்தாவின் கையில் வைத்தான். அம்முதியவர் **வியப்பினின்று** மீள முடியாமல், “தம்பி, எப்படி நீ இதனைக் கண்டுபிடித்தாய்?” என்று வினவினார். தோட்டத்தின் நடுப்பகுதிக்குச் சென்று கண்களை மூடிக் கொண்டு அமைதியாக அமர்ந்தேன். சற்று நேரத்தில் கடிகாரத்தின் ‘டிக்டிக்’ ஓசையை என்னால் கேட்க முடிந்தது. **அவ்விடத்தினின்று** எழுந்து ஓசை வரும் திசையை நோக்கிச் சென்றேன். இக்கடிகாரம் கிடைத்தது,” என மொழிந்தான்.

**அறிந்து கொள்க**

**வலிமிகா இடங்கள்**

- சொற்றொடர்களில் வருமொழி க், ச், த், ப் ஆகிய வல்லெழுத்துகளில் தொடங்கினால் நிலைமொழி ஈற்றில் சில இடங்களில் வலிமிகாது.
- ஐந்தாம் வேற்றுமை உருபுகளான இருந்து, நின்று என்பனவற்றின் பின் வலிமிகாது.

**எ.கா:**

i) கூரையிலிருந்து + குதித்தான்
= கூரையிலிருந்து குதித்தான்

ii) வீட்டினின்று + சென்றான்
= வீட்டினின்று சென்றான்

“மேலும், சற்று முன்பு நான் என் நண்பர்களோடு சேர்ந்து தேடும் பொழுது சத்தமாகவும் சலசலப்பாகவும் இருந்தது. அதனால் கடிகாரத்தின் ஓசை என் காதில் விழவில்லை,” என்று கூறினான். அமைதியான சூழலில் அனைத்தையும் நாம் அறியலாம் என்று என் அப்பா அடிக்கடி சொல்வார். அவருடைய அறிவுரையைக் கேட்டு நடந்ததால் வெற்றி பெற்றேன் என்றான் சிறுவன். முதியவர் அச்சிறுவனை ஆரத் தழுவிக் கொண்டு வெகுமதியை வழங்கினார்; பாராட்டையும் நன்றியையும் தெரிவித்துக் கொண்டார்.

5.5.3 • ஐந்தாம் வேற்றுமை உருபுகளாகிய இருந்து, நின்று என்பனவற்றின் பின் வலிமிகாது என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

## இடுபணி 1

**ஐந்தாம் வேற்றுமை உருபுகளாகிய இருந்து, நின்று ஏற்றுள்ள சொற்களை அடையாளம் கண்டு கூறுக; எழுதுக.**

## இடுபணி 2

**கொடுக்கப்பட்டுள்ள நிலைமொழியுடன் அடைப்புக் குறியிலுள்ள வேற்றுமை உருபைச் சேர்த்தெழுதுக. பின்னர் வருமொழியில் க, ச, த, ப சொற்களை இணைத்தெழுதுக.**

**எ.கா:**

கூட்டம் (நின்று) = கூட்டத்தினின்று + சென்றார்

| | | | |
|---|---|---|---|
| 1. வானம் (இருந்து) = | | + | |
| 2. காடு (நின்று) = | | + | |
| 3. வேலை (நின்று) = | | + | |
| 4. கழுத்து (இருந்து) = | | + | |
| 5. குகை (இருந்து) = | | + | |
| 6. குடும்பம் (நின்று) = | | + | |
| 7. மரம் (இருந்து) = | | + | |
| 8. தோல்வி (நின்று) = | | + | |
| 9. வனம் (இருந்து) = | | + | |
| 10. நண்பன் (நின்று) = | | + | |

## வளப்படுத்துதல்

ஐந்தாம் வேற்றுமை உருபுகளாகிய **இருந்து**, **நின்று** என்பனவற்றின்பின் வலிமிகாது என்பதை அறிந்து சொற்றொடர்களை உருவாக்குக; வாக்கியம் அமைத்திடுக.

**எ.கா:**

வீட்டி**னின்று பு**றப்பட்டான்

விபத்தி**லிருந்து த**ப்பித்தார்.

## குறைநீக்கல்

**ஐந்தாம் வேற்றுமை உருபுகளாகிய இருந்து, நின்று என்பனவற்றின்பின் க, ச, த, ப, வரின் வலிமிகாது என்பதை அறிந்து சொற்றொடர்களை உருவாக்குக.**

**எ.கா:**

சாலையி**னின்று செ**ன்றார்

1. குடும்பத்திலிருந்து
2. வானிலிருந்து
3. தோட்டத்தினின்று
4. வறுமையினின்று
5. ஏழைகளிடமிருந்து
6. நூலினின்று
7. மண்டபத்திலிருந்து
8. தண்டனையினின்று

தொகுதி 15 வரலாறு அறிவோம்

# பாடம் 1 தமிழை வளர்ப்போம்

**கலந்துரையாடுக.**

## உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு



**ஏற்பாடு:** உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

**மாநாட்டின் நோக்கம்:**

- தமிழ்மொழியின் வளர்ச்சியை ஆராய்தல்.
- தமிழ்மொழியின் சிறப்புகளையும் பெருமைகளையும் நிலை நாட்டுதல்.
- நவீன உலகத்திற்குத் தமிழ்மொழியின் தேவையை உணர்த்துதல்.
- முத்தமிழை மாநாட்டில் சிறப்பித்தல்.
- தமிழர்களையும் தமிழ்மொழியையும் சார்ந்து ஆய்வுப்பணிகளில் ஈடுபட்டுள்ள ஆராய்ச்சியாளர்களையும் கல்விமான்களையும் ஒன்றிணைத்தல்.
- மொழி இலக்கியம், பண்பாடு, கலைகள் ஆகியவற்றைப் பற்றி ஆய்வுக்கட்டுரைகளைச் சமர்ப்பித்தல்.

**இடுபணி 1**

**உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டு வரலாறு பற்றிய கூடுதல் விவரங்கள் பெறக் கேள்விகள் கேட்டிடுக.**

1.2.2 • கூடுதல் விவரங்கள் பெறக் கேள்விகள் கேட்பர்.

**இடுபணி 2**

**பாடலையொட்டி கூடுதல் விவரங்கள் பெற கேள்விகளைத் தயாரித்திடுக.**

**செம்மொழியான தமிழ்மொழியாம்**



பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்
பிறந்த பின்னர் யாதும் ஊரே யாவரும் கேளிர்
உண்பது நாழி உடுப்பது இரண்டே
உறைவிடம் என்பது ஒன்றேயென
உரைத்து வாழ்ந்தோம்
உழைத்து வாழ்வோம்

தீதும் நன்றும் பிறர் தர வாராஎனும்
நன் மொழியே நம் பொன் மொழியாம்
போரைப்புறம் தள்ளி பொருளைப் பொதுவாக்கவே
அமைதி வழி காட்டும் அன்பு மொழி
அய்யன் வள்ளுவரின் வாய்மொழியாம்
செம்மொழியான தமிழ்மொழியாம் x4

ஓரறிவு முதல் ஆறறிவு உயிரினம் வரையிலே
உணர்ந்திடும் உடலமைப்பைப் பகுத்துக் கூறும் x2
ஒல்காப் புகழ் தொல்காப்பியமும்
ஒப்பற்ற குறள் கூறும் உயர் பண்பாடு
ஒலிக்கின்ற சிலம்பும், மேகலையும்
சிந்தாமணியுடனே வளையாபதி குண்டலகேசியும்
செம்மொழியான தமிழ்மொழியாம் x4

கம்ப நாட்டாழ்வாரும் கவி அரசி ஔவை நல்லாளும்
எம்மதமும் ஏற்று புகழ்கின்ற x2
எத்தனையோ ஆயிரம் கவிதை நெய்வோர் தரும்
புத்தாடை அனைத்துக்கும் வித்தாக விளங்கும் மொழி
செம்மொழியான தமிழ்மொழியாம் x4

அகமென்றும் புறமென்றும் வாழ்வை அழகாக வகுத்தளித்து
ஆதி அந்தமிலாது இருக்கின்ற இனியமொழி
ஓதி வளரும் உயிரான உலக மொழி x2
நம்மொழி நம் மொழி...அதுவே
செம்மொழியான தமிழ்மொழியாம் x4
வாழிய வாழியவே x3

**- கலைஞர் மு. கருணாநிதி**

**மாதிரி வினாக்கள்.**

1. இப்பாடல் ஏன் இயற்றப்பட்டது?

2. இப்பாடலின் சாரம் என்ன?

3. தமிழ்மொழியின் சிறப்புகளைக் கூறுக.

**என்னை நுணுகுக**

# பாடம் 2 கல்வெட்டு எழுத்துகள்

## வாசித்து அறிக.

முற்காலத்தில் அரசர்களின் ஆணைகள் அனைத்தும் மக்கள் தெரிந்து கொள்ளும் வகையில் பாறைகளில் செதுக்கப்பட்டன. கற்பாறைகளில் அல்லது கற்களில் உளி கொண்டு செதுக்கிய எழுத்துகள் கல்வெட்டு என்று அழைக்கப்பட்டன.

தமிழ்மொழியின் வரலாற்றினை அறிய கல்வெட்டுகளில் எழுதிய எழுத்துகளே மிகப் பெரிய சான்றாக அமைந்தன. இந்த எழுத்துகளை அடித்தல், திருத்துதல், மாற்றி எழுதுதல் என்பனவற்றைச் செய்ய முடியாததால் அதன் நம்பகத்தன்மை அதிகமாகவே இருந்தது எனலாம். அதுவே கல்வெட்டு எழுத்துகளின் சிறப்புமாகும்.

இத்தகைய கல்வெட்டு எழுத்துகளில் கி.பி. மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த பிராமிக் கல்வெட்டுகளே மிகவும் பழைமையானவை எனக் கூறப்படுகின்றது. இத்தகைய கல்வெட்டுகளில் பெரும்பாலானவை குகைகளில் கண்டெடுக்கப்பட்டன.

கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் அசோகர். அவர் காலத்திலும் பல வகையான கல்வெட்டுகள் இருந்ததாகக் கூறப்படுகின்றது. பதினான்கு பாறை கல்வெட்டுகள், கலிங்க பாறை கல்வெட்டுகள், சிறு பாறை கல்வெட்டுகள், ஏழு தூண் கல்வெட்டுகள், சிறு தூண் கல்வெட்டுகள் என இருந்தன. இதில் பதினான்கு பாறை கல்வெட்டுகள் மிகவும் சிறப்பு வாய்ந்தவை எனக் கூறப்படுகின்றது. மன்னர் மக்களிடம் ஆணை பிறப்பிக்க இக்கல்வெட்டு எழுத்துகளைப் பயன்படுத்தினார்.

குகைகளிலும் கல்வெட்டு எழுத்துகள் கண்டுபிடிக்கப்பட்டன. பலர் அவை யாவும் தமிழ் எழுத்துகளே என்கின்றனர். எழுத்துகளின் வடிவம் வேறுபட்டாலும், பொருள் வேறுபட்டாலும் இவை யாவும் பழந்தமிழுக்குச் சான்றாகவே திகழ்கின்றன.




தஞ்சை பெரிய கோவில்

சோழர் காலத்தில் தமிழை அறியும் பொருட்டு பல கல்வெட்டு எழுத்துகள் பேருதவியாக இருந்தன. சோழர் காலக் கல்வெட்டுகளில் வடமொழிச் சொற்கள் தமிழாக்கம் செய்யப்பட்டிருந்தன.

பிறமொழியில் உள்ள கல்வெட்டுகளும் தமிழ்மொழியின் வரலாற்றை அறிய துணைபுரிந்தன. தமிழ்மொழியில் பேசுபவர்கள் பிற பகுதிகளிலும் சென்று வாழ்ந்து பழகும் இயல்பைப் பெற்றிருந்தனர் என்பதை இதன் மூலம் அறிய முடிகிறது.

தமிழ்மொழியின் வரலாற்றை அறிய கல்வெட்டு எழுத்துகள் மட்டுமின்றிச் செப்பேடுகளும் துணை நிற்கின்றன. செம்பினால் ஆன தகடுகளில் பொறிக்கப்பட்ட எழுத்துகளையே செப்பேடுகள் என்கின்றனர். பல்லவர் ஆட்சிக் காலம் முதலாகச் செப்பேடுகள் நிறையவே கிடைக்கப் பெற்றன. செப்பேடுகள் தமிழ்மொழி எவ்வாறு எழுதப்பட்டிருந்தது என்பதை அறிவதற்குப் பெரிதும் துணைபுரிந்தன.



**தமிழி எழுத்துக்கள் வழங்கப்பட்ட இடங்கள்:**

தமிழகத்தின் வடபகுதியில் இருந்து தென்பகுதி வரை பல இடங்களிலும் தமிழர் கல்வெட்டுக்கள் கிடைத்து வருகின்றன. மதுரைக்கு அருகில் உள்ள அரிட்டாபட்டி (மீனாட்சிபுரம்) திருவாதவூர், மேட்டுபட்டி, சித்தன்னவாசல் கருங்காலம் குடி, மறுகால்தலை, அழகர்மலை முதலான பல இடங்களில் தமிழிக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

**தமிழ்க் கல்வெட்டின் வடிவம்:**

கி.மு. 3-ஆம் நூற்றாண்டு முதல் உள்ள தமிழ்க் கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. கி.மு-3 முதல் கி.பி 8 முடிய ஐ, ஔ, என்னும் இரு எழுத்துக்களுக்கும் தனியாக எழுத்துக்கள் இல்லாமல் இருந்தன. கி. பி 9 முதல் 'ஐ' -க்கு எழுத்து காணப்படுகின்றது.

**உயிரெழுத்துக்கள்: பட்டியல் - 84**

| அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |

**மெய்யெழுத்துக்கள்: பட்டியல் - 85**

| க | ங | ச | ஞ | ட | ண | த | ந | ப | ம | ய | ர | ல | வ | ழ | ள | ற | ன |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |

**உயிர்மெய்யெழுத்துக்கள்: பட்டியல் - 86**

| 'க' கர வரிசையில் | க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை | கொ | கோ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |

'க'கர வரிசையில் வருவதைப் போலவே பிறமெய் எழுத்துக்களுக்கும் வரும்

**கல்வெட்டின் ஐந்து பகுதிகள்:**

(1) மங்கலவாசகம் (2) கல்வெட்டின் காலம், (3) கல்வெட்டுச் செய்தி (4) கையெழுத்துக்கள் (5) ஓம்படைக் கிளவி என ஐந்து பகுதிகள் கல்வெட்டின் அமைப்பாகக் காணப்படுகின்றன.

**(1) மங்கல வாசகம்:** அருளிச்செயல், சிவமயம், ஹரி நன்றாக குருவே துணை, ஸ்வஸ்தி ஸ்ரீ முதலான கல்வெட்டின் அருள் நிறைந்த தொடக்கச் சொற்கள் மங்கல வாசகம் எனப்படும்.





2.3.5 • மொழி தொடர்பான உரைநடைப் பகுதியை வாசித்துக் கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.

## இடுபணி 1

**வாசித்து தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை கூறுக.**

1. கல்வெட்டுகள் என்றால் என்ன?

2. கல்வெட்டுகள் எதற்காக உருவாக்கப்பட்டன?

3. செப்பேடுகளைப் பற்றி நீ என்ன அறிந்து கொள்ள முடிகின்றது?

4. கல்வெட்டுகள் தற்கால மனிதர்களுக்கு எவ்வாறு துணைபுரிகின்றது?

5. பழந்தமிழுக்குச் சான்றாகக் கல்வெட்டுகள் திகழ்கின்றன எனும் கருத்தை விளக்குக.



## இடுபணி 2

**வாசித்து தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை கூறுக.**


கவியரசு கண்ணதாசன்

சுயசரிதை எழுதுகிறவருக்கு இரண்டு பெருமைகள் வேண்டும். ஒன்று, அதை எழுதும்போது அவரின் புகழ் ஓங்கி நிற்க வேண்டும். இரண்டு, அவரின் வாழ்வில் வியக்கத்தக்க சாதனைகள் நிகழ்ந்திருக்க வேண்டும். இந்த இரண்டும் இருந்தால் அவரின் வரலாற்றைப் படிப்பதற்குச் சிலபேர் கிடைப்பார்கள். எனது வரலாறு ஒரு பெரிய அரசியல் தலைவனின் வரலாறுமல்ல; ஒரு மாபெரும் கவிஞனின் காவிய வாழ்க்கையுமல்ல. வாழ்க்கை வழிப்போக்கன் ஒருவனின் உயர்வு தாழ்வுகளே இந்நூல். இதில், நான் பிறந்த கதை சொல்லவில்லை. அப்படியொன்றும் நான் ராஜபோகத்திலோ, கொடிய ஏழ்மையிலோ வளர்க்கப்படவில்லை.

என்னை நுணுகுக

1. சுயசரிதையை எழுதுவதென்றால் எழுதப்படும் நபர் எவ்வாறான தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும் என்று கவிஞர் கூறுகிறார்?

2. கவிஞர் கண்ணதாசனைப் பற்றி உமது கருத்தென்ன?

3. தமிழ்மொழியின் வளர்ச்சிக்குக் கவிஞர் கண்ணதாசன் ஆற்றிய பங்கினை விளக்குக.

**இடுபணி 3**

**வண்ணமிடப்பட்ட சொற்களுக்குப் பொருள் கூறுக; எழுதுக.**

தமிழ்மொழி மிகவும் **தொன்மையான** மொழி. இதனைக் கல்வெட்டுகளும் செப்பேடுகளும் **மெய்ப்பிக்கின்றன**. பண்டைய தமிழர்கள் தமிழ்மொழியின்மீது மிகுந்த பற்றுள்ளவர்களாக இருந்தனர்; தமிழை **நேசித்தனர்;** தமிழ் இனிமையானது என்பதை உணர்ந்திருந்தனர்.

தமிழ்மொழி பழைமையானது என்றாலும் என்றும் இளமையோடு கன்னித் தமிழாக உலா வந்து கொண்டிருக்கின்றது. எட்டுத் தொகை, பத்துப்பாட்டு, ஐம்பெருங்காப்பியங்கள், நீதி நூல்கள், திருக்குறள், பிரபந்தங்கள், பக்தி இலக்கியங்கள் முதலிய ஏராளமான இலக்கியச் செல்வங்களுடையது நமது பைந்தமிழ்.

தமிழ்மொழி சொல் வளம் மிகுந்தது. நமது முன்னோர் நம் தாய்மொழியாம் தமிழ்மொழியை இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என மூன்றாகப் பகுத்துப் பொன்போலப் **போற்றி** வளர்த்துக் காத்து வந்தனர். அமிழ்தினும் மேலான தீந்தமிழை இருவிழிகளைப் போலப் பாதுகாப்பது ஒவ்வொரு தமிழரின் கடமையாகும். மொழி அழிந்தால் அந்த மொழிக்குரிய இனம் அழிந்துவிடும். அதனால், அடுத்து வரும் இளைய தலைமுறையினருக்கு நம்முடைய மொழியைப் பாதுகாத்து வைப்பது நம் **கடமையாகும்.**

எனவே, நாம் தாய்மொழியில் பேசுவோம்; நம் பிள்ளைகளுக்குத் தமிழ்மொழியின் சிறப்பை எடுத்துக் கூறுவோம். தமிழுணர்வை ஒவ்வொருவரின் மனத்திலும் **விதைப்போம்;** நம்முடைய பிள்ளைகளைத் தமிழ்ப்பள்ளிகளுக்கு அனுப்புவோம்; தமிழையும் தமிழ்ப்பள்ளிகளையும் காப்போம். தமிழ்மொழியில் பேசத் தயங்குபவர்களுக்கும் தமிழ்ப்பள்ளியைப் புறக்கணிப்பவர்களுக்கும் தமிழின் மேன்மையை உணர்த்துவோம். தமிழர்களை வாழ வைக்கும் சிறப்பை மேலோங்கச் செய்வதை நமது **தலையாய** கடமையாகக் கொள்வோம். தமிழின் இனிமையை அறியாதவர்களுக்கு, 'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்' என்று பாடிய சுப்ரமணிய பாரதியாரையும், 'தமிழுக்கு அமுதென்று பேர்' என்று பாடிய பாரதிதாசனையும் மீண்டும் **நினைவூட்டுவோம்**.

**இடுபணி 4**

**பனுவலை வாசித்து வினாக்களுக்கு விடை கூறுக; எழுதுக.**

1. தமிழ்மொழியின் தொன்மையை விளக்கும் சான்றுகள் யாவை?
2. 'மொழி அழிந்தால், அந்த மொழிக்குரிய இனம் அழிந்துவிடும்' என்று கூறப்படுவதை விளக்குக.
3. தமிழ்மொழி அழியாமல் எவ்வாறு காக்கலாம் என்பதைப் பட்டியலிடுக.
4. தமிழ்ப்பள்ளிகளைப் புறக்கணிப்பவர்களுக்கு நீ கூறும் அறிவுரை என்ன?
5. தமிழுணர்வைத் தமிழர்களின் உள்ளத்தில் எவ்வாறு விதைக்கலாம் என்பதைப் பரிந்துரைத்திடுக.

பாடம் 3 **மொழிக் கழகம்**

## வாசித்து அறிக.

**உமது பள்ளியின் தமிழ்மொழிக் கழகம் வாசிப்பு வாரத்தை முன்னிட்டு மலாயாப் பல்கலைக்கழகத்தின் தமிழ் நூலகத்திற்குக் கல்விச் சுற்றுலா ஒன்றனை மேற்கொள்ள ஏற்பாடு செய்துள்ளது. தமிழ்மொழிக் கழகத்தின் செயலாளர் எனும் முறையில் இச்சுற்றுலாவை மேற்கொள்ள நூலகப் பொறுப்பாளருக்கு 160 சொற்களில் ஒரு விண்ணப்பக் கடிதம் எழுதுக.**

சுற்றுலாவின் நோக்கம்

சுற்றுலாவின் விவரங்கள்

நூலகத்தினரிடம் உங்களின் கோரிக்கை

எதிர்பார்ப்பு

**கடித அமைப்பு முறை**

____________________
____________________ } அனுப்புநர் முகவரி
____________________

____________________
____________________ } பெறுநர் முகவரி
____________________

தேதி

__________ விளிப்பு

______________________________________ தலைப்பு

______________________________________
______________________________________ } கடிதத்தின் நோக்கம்

2.______________________________________
______________________________________
3.______________________________________ } கருத்து
______________________________________

4.______________________________________
______________________________________ } வேண்டுகோள்

______________________________________ } முடிவு

__________ இப்படிக்கு
__________ கையொப்பம்
__________ பெயர்
__________ பதவி
__________ கழகம்
__________ பள்ளியின் பெயர்



3.4.9 • 160 சொற்களில் அலுவல் கடிதம் எழுதுவர்.

## இடுபணி 1

**இடைநிலைப்பள்ளியில் தமிழ்மொழிக் கழகத்தின் ஏற்பாட்டில் தமிழ் மாத இதழ் வெளியிடத் திட்டமிட்டுள்ளீர். கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு தமிழ் மாத இதழ் வெளியீட்டின் அவசியம் குறித்துத் தமிழ்மொழிக் கழகச் செயலாளர் என்ற முறையில் பள்ளி முதல்வரிடம் அனுமதி கேட்டு 160 சொற்களில் ஒரு கடிதம் எழுதுக.**

இடைநிலைப்பள்ளியில் தமிழ்மொழிக் கழகத்தின் மாத இதழ் வெளியிடுவதன் அவசியம்.

- மாணவர்களின் படைப்புகளை வெளியிடுதல், அங்கீகரித்தல்.
- தமிழ்மொழி ஆசிரியர்கள் வழிகாட்டத் தயாராக இருத்தல்.
- மாணவர்களிடையே ஒற்றுமையையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்துதல்.
- புத்தாக்கச் சிந்தனை, ஆக்ககரமான சிந்தனை உருவாக்குதல்.
- தமிழை வளர்க்கும் முயற்சி.
- மாணவர்கள் மாத இதழ் வெளியிட ஆர்வம் காட்டுதல்.
- பள்ளியின் பெயரைப் புகழ்பெறச் செய்தல்.
- வெளியில் தமிழ் ஆர்வலர்களின் வேண்டுகோள்.

## இடுபணி 2

**கொடுக்கப்பட்ட குறிப்புகளைப் பயன்படுத்தி மாவட்டக் கல்வி அதிகாரிக்கு ஓர் அலுவல் கடிதம் எழுதுக.**

- மொழிவிழா திறப்பு விழா
- மொழிவிழா வருடாந்திர நிகழ்ச்சி
- பள்ளி மண்டபத்தில் நடைபெறும் நிகழ்ச்சி
- மாணவர்களிடத்தில் மொழிப்பற்றை வலுப்படுத்தும் நிகழ்ச்சி
- மாவட்டக் கல்வி அதிகாரியைத் திறப்புவிழாவை நிறைவு செய்ய அழைத்தல்
- நாள், நேரம், இடம்

**இடுபணி 3**

**பின்வரும் குறிப்புகளின் துணையுடன் கொடுக்கப்பட்டுள்ள அலுவல் கடிதத்தைத் தொடர்ந்து எழுதுக.**




வரலாற்றுக் கழகம்,
செம்பாக்கா இடைநிலைப்பள்ளி,
31350 ஈப்போ,
பேராக்.

---

தலைமை அதிகாரி,
தேசிய அருங்காட்சியகம்,
<u>52500 கோலாலம்பூர்.</u>

24 அக்டோபர் 20□□

ஐயா,
<u>அருங்காட்சியகக் கல்விச் சுற்றுலா</u>

வணக்கம், எங்கள் பள்ளியில் வரலாற்றுக் கழக மாணவர்கள் அருங்காட்சியகத்திற்குக் கல்விச் சுற்றுலா மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளனர். நாங்கள் இச்சுற்றுலாவை எதிர்வரும் 16 நவம்பர் 20□□இல் மேற்கொள்ளவிருக்கிறோம்...

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## பழமொழிகளையும் பொருளையும் அறிக.

என் தாத்தாவையும் பாட்டியையும் நான் நேசிக்கிறேன். என் பாட்டி மிகவும் அன்பானவர். சுத்தத்தைப் பேணுபவர். ஒவ்வொரு நாளும் காலையில் ஆலங் குச்சியிலும் வேப்பங் குச்சியிலும் பல் துலக்குவதை வழக்கமாகக் கொண்டவர். இயற்கைப் பொருள்களில் பல் துலக்கினால் பல் உறுதியாக இருக்கும் என்று அவர் அடிக்கடி கூறுவார்.

என் தாத்தா ஒரு தமிழ்ப் புலவர். தமிழ் இலக்கணத்தையும் இலக்கியத்தையும் கரைத்துக் குடித்து வைத்திருக்கின்றார். தமிழ்ச் சொற்களைத் தெளிவாக உச்சரிப்பார். அவர் பிறருடன் பேசும் போதும் மேடைப் பேச்சுகளை நிகழ்த்தும் போதும் நாலடியாரின் பாடல்களையும் திருக்குறளையும் திறம்படக் கூறிப் பாராட்டுகளைப் பெறுவார். என் தாத்தாவையும் பாட்டியையும் பார்க்கும்போது எனக்கு ஆசிரியர் சொல்லிக் கொடுத்த **ஆலும் வேலும் பல்லுக்குறுதி நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி** என்ற பழமொழிதான் நினைவுக்கு வருகின்றது.

என் அப்பா தன்னம்பிக்கையும் துணிவும் மிக்கவர். அவருடைய அயராத முயற்சியால் இன்று எங்கள் குடும்பம் மகிழ்ச்சியாக இருக்கின்றது. உழைப்பு ஒன்றே வெற்றிக்கு மூலதனம் என்று கூறுவார். வெற்றி வீடு தேடி வரும் என்று வெறுமனே இருக்கமாட்டார். **மந்திரத்தால் மாங்காய் விழுந்திடுமா?** என்று அடிக்கடி கூறுவார். கிடைக்கின்ற நேரத்தில் அரிய காரியங்களைச் செய்யும்படி எங்களைப் பணிப்பார். இளமைக் காலத்தில் சோம்பித் திரியக்கூடாது என்று அடிக்கடி வலியுறுத்துவார். மேலும், சிறுவயதில் முயற்சி செய்யாமல் இருப்பவர்கள் முதுமையில் அல்லல்பட நேரிடும், வறுமை சூழ்ந்திடும் என்று **‘இளமையிற் சோம்பல் முதுமையில் மிடிமை’** என அறிவுறுத்துவார். என் அப்பாவை நினைத்து நான் பெருமைப்படுகின்றேன்.



### பழமொழியும் பொருளும்

- **ஆலும் வேலும் பல்லுக்குறுதி நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி**
  - ஆலமர, வேப்பமர குச்சியைக் கொண்டு பல் துலக்கினால் பல் உறுதியாக இருக்கும். நான்கடி கொண்ட நாலடியாரையும் இரண்டடி கொண்ட திருக்குறளையும் நன்முறையில் ஓதினால் சொல்வன்மை பெருகும்.
- **மந்திரத்தால் மாங்காய் விழுந்திடுமா?**
  - வாழ்க்கையில் நாம் நினைத்ததை அடைய பல்வேறு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.
- **இளமையிற் சோம்பல் முதுமையில் மிடிமை**
  - இளமையில் சோம்பல் கொண்டு உழைக்காமல் இருந்தால், முதுமையில் வறுமையில் வாட நேரிடும்.

4.7.2 • இரண்டாம் படிவத்திற்கான பழமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

## இடுபணி 1

**பழமொழிகளையும் அவற்றின் பொருளையும் மனனம் செய்து கூறுக; எழுதுக.**

## இடுபணி 2

**பழமொழி தொடர்பான வினாக்களுக்குப் பதில் கூறுக.**

அ. ஆலமரமும் வேப்பமரமும் மனிதர்களுக்கு எவ்வாறு பயன்படுகின்றன என்பதை எழுதுக.

ஆலமரம்

வேப்பமரம்

ஆ. நாலடியாருக்கும் திருக்குறளுக்கும் இடையே உள்ள ஒற்றுமைகளைக் குறிப்பிடுக.

இ. மந்திரத்தால் மாங்காய் விழுந்திடுமா? எனும் பழமொழியிலிருந்து நீ என்ன அறிந்து கொள்கின்றாய்?

ஈ. இளமையில் சோம்பலாக இருப்பவர்கள் முதுமையில் எவ்வாறான துன்பங்களை அனுபவிப்பார்கள் என்பதைப் பட்டியலிடுக.

i)

ii)

iii)

iv)

## வளப்படுத்துதல்

**ஏதேனும் ஒரு பழமொழிக்கு ஏற்ற சூழல் கதையைக் கூறுக; எழுதுக.**

## குறைநீக்கல்

**பழமொழியை நிறைவு செய்க.**

1. ஆலும் வேலும் ________ .
2. ________ விழுந்திடுமா?
3. ________ சோம்பல் ________ மிடிமை.

# தொகுதி 16 புவியியலும் அறிஞர்களும்

## பாடம் 1 நமது பூமி

கலந்துரையாடுக.




1.4.4 • ஒரு பொருளைப் பற்றி விவரித்துக் கூறுவர்.

தொகுதி 16

இடுபணி 1

**கோளுரு (Globe) பற்றி விவரித்துக் கூறுக.**

இடுபணி 2

**நில அதிர்வை அளக்கும் கருவியைப் (Richter) பற்றி விவரித்துக் கூறுக.**




இடுபணி 3

**பூமியின் காற்று மண்டல அழுத்தத்தை அளக்கும் கருவியைப் பற்றி விவரித்துக் கூறுக.**




## அறிந்து கொள்க


**பாதரச வெப்பமானி**

- உடல் வெப்பநிலையை அளக்கப் பயன்படும் கருவி.
- டேனியல் கேப்ரியல் ஃபெரண்ஹைட் என்பவரால் உருவாக்கப்பட்டது.
- கண்ணாடிக்கோல் வடிவத்தில் இருக்கும்.
- பாதரசம் அடைக்கப்பட்டிருக்கும்.
- வெளிப்புற வெப்ப நிலைக்கு ஏற்ப பாதரசம் மேலும் கீழுமாகவும், விரிந்தும் சுருங்கியும் போகும்
- கோட்டளவுக்கு ஏற்ப வெப்பநிலை அளக்கப்படும்.



## பாடம் 2 அறிவியல் அறிஞர்கள்

**வாசித்து அறிக.**



வில்லியம் கெல்வின்
William Kelvin

நவீன இயற்பியலுக்கு அடித்தளமிட்ட மிக முக்கிய விஞ்ஞானிகளுள் வில்லியம் கெல்வின் (1824 - 1907) என்பவரும் ஒருவராவார். இங்கிலாந்தைச் சேர்ந்த கெல்வின் தம் பெயருக்குப் பின்னால் அதிக பட்டங்களைச் சேர்த்துக் கொண்டவர் என்ற பெருமை உண்டு. ஏனென்றால், ஐரோப்பியப் பல்கலைக் கழகங்கள் பலவும் கெல்வினின் ஆய்வுகளைப் போற்றி அவருக்குப் போட்டி போட்டுக் கொண்டு பட்டங்களை வழங்கின. லார்டு பட்டமும் அவருக்கு வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. லார்டு கெல்வின்தான் முதன்முதலில் பூமியின் வயதைக் கணக்கிட்டவர். அதற்கு அவர் தட்பவெப்ப மாற்றத்தை அடிப்படையாகக் கொண்டார். எனவே, அவருடைய பெயரிலேயே 'டிகிரி கெல்வின்' என்று இன்றுவரை தட்பவெப்ப நிலைகள் அளக்கப்படுகின்றன.



பிளைசி பாஸ்கல்
Blaise Pascal

பாஸ்கல் என்ற பெயர் கணிதத்தில் இன்றும் மிகப் பிரபலமான ஒன்றாக விளங்குகின்றது. பிளைசி பாஸ்கல் (1623 - 1662) பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த ஒரு கணித வல்லுநர், இயற்பியல் வல்லுநர், தத்துவ மேதை மற்றும் எழுத்தாளர் ஆவார். 'ஜியோமெட்ரி' எனப்படும் வடிவியலில் பாஸ்கல் பல பங்களிப்புகளைச் செய்துள்ளார். சம்பவத்தன்மை (Probability) என்ற படிப்பிலும் பல அரிய விளக்கங்களை அறிமுகப்படுத்தியுள்ளார். மேலும், கணிப்பொறி (Calculator) எனும் கணக்கியல் கருவியையும் உருவாக்கியுள்ளார். பாஸ்கல் காற்று, வெற்றிடம் ஆகியவற்றைப் பற்றியும் அறிய முற்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.



ராபர்ட் பாயல்
Robert Boyle

வாயுக்களைப் பற்றி நாம் இன்று அறிந்தவற்றுக்குத் தந்தையாக விளங்குபவர் அயர்லாந்தைச் சேர்ந்த ராபர்ட் பாயல் (1627 - 1691) பாயல் கோட்பாடு (Boyle's Law) என்ற கோட்பாட்டினை வழங்கிப் புகழ்பெற்றார். வாயுவின் அழுத்தத்திற்கும் கொள்ளளவுக்கும் வெப்பத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்பதைத் தமது ஆராய்ச்சியில் விளக்கினார்; செயல்படுத்திக் காட்டினார்.

இந்த மூன்று அறிவியல் அறிஞர்களும் தங்களது சமயத்தையும் மதத்தையும் போற்றி அவற்றுள் மிகுந்த ஈடுபாடு காட்டியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**மூலம்: உயர் ஞான தீபம் (செப்டம்பர் 2016)**

2.3.6 • அறிவியல் தொடர்பான உரைநடைப் பகுதியை வாசித்துக் கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.

## இடுபணி 1

**வினாக்களுக்கு விடை கூறுக.**

1. இயற்பியல் துறையில் வில்லியம் கெல்வினின் சாதனை யாது?

2. பிளைசி பாஸ்கல் அறிவியல் உலகத்திற்கு ஆற்றிய பங்களிப்பினைக் கூறுக; எழுதுக.

3. பாயல் கோட்பாடு எதனை உணர்த்துகின்றது?

4. மூன்று அறிஞர்களுள் உன்னைக் கவர்ந்தவர் யார்? ஏன்?

## இடுபணி 2

**வாசித்துக் கருத்துணர் கேள்விகளுக்கு விடை எழுதுக.**

பூமியில் உள்ள மலைகளை நான்கு வகையாகப் பிரிக்கலாம். அவை மடிப்பு மலைகள், தடுப்பு மலைகள், எரிமலைகள், சிதைவு மலைகள் எனப்படும். மடிப்பு மலைகள் என்பன, பூமியின் அழுத்தத்தினால் வளைந்து, மடிந்து உருவானவையாகும். பூமியின் புரணிப்பகுதியில் ஏற்படும் அழுத்தத்தால் ஒன்றின் மீது ஒன்றாக அடுக்குகள் தோன்றும்.



மடிப்பு மலை

தடுப்பு மலைகள் என்பன பூமியில் விழுந்த விரிசல் அல்லது கீறல்களை ஒட்டிய பகுதிகள் செங்குத்தாக உயிர்த்தெழுவதன் விளைவாகத் தோன்றியவை. இருபக்கமும் தாழ்ந்த பிரதேசங்களைக் கொண்டு மத்தியில் உயர்ந்து காணப்படும் நிலப்பகுதியே தடுப்பு மலையாகிறது.



தடுப்பு மலை

புவிக்கடியில் உருகிய நிலையிலுள்ள பாறைக்குழம்பு, தப்பிப் புவியின் மேற்பரப்புக்கு வருவதால் ஏற்படுவது எரிமலை. எரிமலைகள் என்பன குமுறி வெடிக்கும் உட்பாறைக் குழம்புகள் வழிந்து, சுற்றுப்புறங்களில் படிந்துயர்ந்து கெட்டியாவதால் எரிமலைக்குன்றுகள் எழுகின்றன. அவற்றின் கூம்பிய உச்சியில் வாய் போல் வட்டக்குழிவு ஒன்றும் காணப்படும். ஜப்பான், இந்தோனேசியா இத்தாலி போன்ற நாடுகளில் எரிமலைகள் உள்ளன.



எரிமலை

சில மலைகள் பருவ மாற்றங்களால் சிதைவுண்டு, ஆறுகளினால் அரிக்கப்பட்டுத் தேய்ந்து வெறும் மேட்டு நிலமாக மட்டும் காணப்படும். இவையே சிதைவு மலைகள் எனப்படுகின்றன.




சிதைவு மலை

**வினாக்களுக்கு விடை எழுதுக.**


1. மலைகளின் வகைகள் யாவை?
2. எரிமலைகள் வெடிப்பதனால் ஏற்படும் விளைவுகள் யாவை?
3. உனக்குத் தெரிந்த சில மலைகளின் பெயர்களையும் அவற்றின் விதம் பற்றியும் எழுதுக.

## வளப்படுத்துதல்

**அறிவியல் அறிஞர்களுள் ஒருவரைத் தெரிவு செய்து அவரைப் பற்றிய குறிப்புகளைத் திரட்டி வகுப்பில் விவரித்திடுக.**



கலிலியோ கலிலி
(1564 - 1642)
Galileo Galilei



மைக்கேல் ஃபாரடே
(1791 - 1867)
Michael Faraday




லூயிஸ் பாஸ்டர்
(1822- 1895)
Louis Pasteur

## குறைநீக்கல்

**பனுவலை வாசித்து வினாக்களுக்கு விடை கூறுக.**

அறிவியல் மேதை தாமஸ் ஆல்வா எடிசன் மாதத்திற்கு இரண்டு கண்டுபிடிப்புகள் வீதம் 40 ஆண்டுகளில் தொடர்ந்து 1093 புதிய பொருள்களைக் கண்டுபிடித்து அவற்றுக்கான கண்டுபிடிப்பு உரிமையையும் பெற்றார். உலகில் வேறு எந்தக் கண்டுபிடிப்பாளருக்கும் இத்தகைய பெருமை இல்லை.

மின்விளக்கு, புகைப்படக் கருவி, ஒலிப்பெருக்கி, ஒலிப்பதிவு நாடா போன்ற கண்டுபிடிப்புகள் இன்றைய நவீன வாழ்வுக்கு உற்ற துணைபுரிகின்றன என்பதை யாரும் மறுத்திட இயலாது. சுயமாகக் கல்வி கற்று முன்னேறிய இந்த மேதை விடாமுயற்சி, தன்னம்பிக்கை, அஞ்சா நெஞ்சம் போன்ற நற்பண்புகளைக் கடைப்பிடித்ததால்தான் இன்று உலகம் போற்றும் சாதனையாளராகத் திகழ்கின்றார்.



தாமஸ் ஆல்வா எடிசன்
(1847- 1931)
Thomas Alva Edison

1. தாமஸ் ஆல்வா எடிசனின் சாதனைகளைக் கூறுக.
2. தாமஸ் ஆல்வா எடிசன் கடைப்பிடித்த பண்புகள் யாவை?

தொகுதி 16

# பாடம் 3 நேசிப்போம் சுவாசிப்போம்

## வாசித்து எழுதுக.

அ

பஞ்சபூதங்களே உலகை இயக்குகின்றன. இறைவன் படைத்த **அரிய** வரமாக இதனை மாந்தன் கருத வேண்டும். பஞ்ச பூதங்களுள் ஒன்றுதான் காற்று. காற்றை நம்மால் உணர முடியுமே தவிர பார்க்க முடியாது. காற்றுக்கு நிறம், உருவம், சுவை கிடையாது. ஆனால், வெற்றிடத்தை நிரப்பவல்லது காற்று என்பதை நாம் **அறிய** வேண்டும். மனிதர்களும் மிருகங்களும் தாவரங்களும் சுவாசிப்பதற்குக் காற்றே **பெரும்** பங்காற்றி வருகின்றது. மனிதர்களும் மிருகங்களும் உயிர்வளியை உள்ளே சுவாசித்துக் கரிவளியை வெளியே விடுகின்றனர். தாவரங்களோ இதற்கு நேர்மாறாகக் கரிவளியைச் சுவாசித்து உயிர்வளியை வெளியாக்குகின்றன. காற்று உயிரினங்களுக்கு மிகவும் அவசியம் என்பதை நாம் உணர முடிகின்றது. இன்று அறிவியல் வளர்ச்சியடைந்துள்ளது. ஆனால், காற்றின் தூய்மைத் தரம் குறைந்து வருகின்றது. இந்நிலை மாற வேண்டும். நாம் சுவாசிக்கும் காற்றை நேசிக்க மறுத்தால் நமக்குத் துன்பமே கிடைக்கப் **பெறும்.**



ஆ



ஆயிரக்கணக்கான கிலோவாட் மின்சக்தி பூமியில் உயரமான பொருளுடன் அனற்பொறி அடிக்கும்போது பாயும் மின்சாரம்தான் இடி. இரண்டு மேகங்களுக்கிடையே உள்ள மின்சாரம் ஓரளவிற்கு மேல் சேர்ந்து போய் **பொறி** அடிப்பதுதான் மின்னல். அது வளைந்து நெளிந்து தோன்றக் காரணம் ஈரம், தூசு, உயிர்வளி, **கரி**வளி ஆகிய வாயுக்களின் கலவை ஆங்காங்கே வேறுபட்டு நிற்பதுதான். இடியும் மின்னலும் வளி மண்டலத்தின் கடுமையான குழப்ப அறிகுறிகள் என்றால் அது மிகையாகாது.

### இடுபணி 1

**பனுவலில் வண்ணமிடப்பட்ட ரகர, றகரச் சொற்களைப் பொருள் வேறுபாடு விளங்க வாக்கியத்தில் அமைத்துக் காட்டுக.**

3.1.3 • ரகர, றகரப் பொருள் வேறுபாடு விளங்க வாக்கியம் அமைப்பர்.

## இடுபணி 2

**ரகர, றகரச் சொற்களின் பொருள் வேறுபாடு விளங்க வாக்கியத்தில் அமைத்திடுக.**

- அரி - அறி
- கரி - கறி
- உரை - உறை
- உரி - உறி
- தெரி - தெறி
- அரை - அறை

## இடுபணி 3

**சொற்குவியலில் மறைந்துள்ள ரகர, றகரச் சொற்களை அடையாளங்கண்டு, பொருள் வேறுபாடு விளங்க வாக்கியம் அமைத்திடுக.**



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| க | த | அ | ம | ச | தி | பி | கு |
| டி | ப | றி | ண் | கு | ரு | வி | பொ |
| பொ | ரி | மு | து | ம | ர | ம் | றி |
| கு | பு | து | ம் | ற | அ | வ | டி |
| ப | தி | அ | ர | ம் | வு | ம | ன் |
| க | ரை | சு | ரி | வு | கு | தி | டு |
| க | கு | மு | உ | ம | ட | உ | றி |
| தி | ரை | கு | ற | வ | ன் | கீ | ரி |



1) ____________ 2) ____________
3) ____________ 4) ____________
5) ____________ 6) ____________
7) ____________ 8) ____________
9) ____________ 10) ____________

## இடுபணி 4

**அகராதியின் துணையுடன் சொற்களுக்கு ஏற்ற பொருளை எழுதுக.**

அருகு - ____________ குரு - ____________ அரவு - ____________
அறுகு - ____________ குறு - ____________ அறவு - ____________
கருவி - ____________ ஒரு - ____________ கோரல் - ____________
கறுவி - ____________ ஒறு - ____________ கோறல் - ____________

ஆசிரியர் | ஒன்று | பக்கம் | ஆயுதம் | பாம்பு | விரும்புதல்
குட்டையான | தண்டி | ஒருவகைப் புல் | கோபித்து | நீக்கம் | கொல்லுதல்

தொகுதி 16

# பாடம் 4 இலக்கணம்

## வடசொல், திசைச்சொல் அறிக.

### வடசொல்

- சமஸ்கிருத மொழியின் சொல் தமிழில் வந்து வழங்குவது வடசொல் எனப்படும்
- வடசொல், வடமொழிக்கும் தமிழுக்கும் உரிய பொதுவான ஒலிகளால் தமிழில் வழங்குவதாகும்.
- வடசொல் இரண்டு வகைப்படும்

i) தற்சமம் - வடமொழிக்கும் தமிழ்மொழிக்கும் பொதுவான எழுத்தொலிகளால் அமைந்த வடசொல் தமிழில் வந்து வழங்குவது தற்சம வடசொல்லாகும்.

எ.கா: கமலம், அனுபவம், நியாயம்

ii) தற்பவம்- வடமொழிக்குரிய சிறப்பெழுத்துகளாலும் இரு மொழிகளுக்கும் உரிய பொது எழுத்துகளாலும் அமைந்த வடசொல் தற்பவ வடசொல். வடசொற்களைத் தமிழில் எழுதும் பொழுது தமிழினிமைக்கு ஏற்றவாறு வடமொழி எழுத்துகளுக்கு ஈடாகத் தமிழெழுத்தை எழுதுவது வழக்கம்.

எ.கா:
- வருஷம் - வருடம்
- ஜலம் - சலம்
- மீனாக்ஷி - மீனாட்சி
- ஹனுமன்- அனுமன்
- விவாஹம் - விவாகம்

### திசைச்சொற்கள்

- பல திசைகளிலிருந்து தமிழ்மொழியில் வந்து கலந்த பிற மொழிச் சொற்கள் திசைச்சொற்கள் எனப்படும்.

எ.கா:

**ஆங்கிலம்**
பென்சில்
டயர்
பேனா

**கன்னடம்**
அக்கடா
அக்கறை
கோசரம்

**அரபு**
அபின்
பாக்கி
ஆபத்து

**இந்துஸ்தானி**
குல்லா
குஷி
இலாகா

**போர்த்துக்கீசியம்**
அலமாரி
சாவி
ஜன்னல்

**பாரசீகம்**
அலாதி
கம்மி
கிஸ்தி

**தெலுங்கு**
அப்பட்டம்
ஆஸ்தி
கெட்டியாக



5.2.4 • இயற்சொல், திசைச்சொல், திரிசொல், வடசொல் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

## இடுபணி 1

**வடசொற்களைத் தற்சம வடசொல் தற்பவ வடசொல் என வகைப்படுத்தி எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| குஷ்டம் | கிரகம் | கோத்திரம் | சந்தேகம் |
| சகஜம் | கோஷ்டி | கல்யாணம் | சந்தோஷம் |
| சமுதாயம் | சமீபம் | சபதம் | சீதோஷ்ணம் |
| ஹரிஹரன் | சமத்துவம் | ஜலதோஷம் | சாதம் |

## இடுபணி 2

**திசைச்சொற்களைக் கொண்டு வாக்கியம் அமைத்திடுக.**

1. அண்டா
2. ஆபத்து
3. சராசரி
4. பிரியாணி
5. வாரிசு
6. அக்கறை
7. பென்சில்
8. இலாகா
9. ஜன்னல்

## வளப்படுத்துதல்

**வடசொல்லையும் திசைச்சொல்லையும் உருவாக்குக; வகைப்படுத்தி எழுதுக.**

- வடசொல்
  - தற்சமம்
  - தற்பவம்

- திசைச்சொல்
  - தெலுங்கு: 1) 2)
  - கன்னடம்: 1) 2)
  - ஆங்கிலம்: 1) 2)
  - பாரசீகம்: 1) 2)
  - போர்த்துகீசியம்: 1) 2)
  - இந்தி: 1) 2)
  - அரபு: 1) 2)

## குறைநீக்கல்

**வடசொற்களைக் கொண்டு வாக்கியம் அமைத்திடுக.**

1. அனுபவம்
2. குங்குமம்
3. நியாயம்
4. பூஜை
5. வருடம்
6. விஷம்
7. நஷ்டம்
8. பஞ்சாங்கம்
9. பௌர்ணமி

# தொகுதி 17 இறையருள் பெறுவோம்

## பாடம் 1 வழிபாட்டுத்தலங்கள்

**கலந்துரையாடுக.**



- தொழுகையுரை ஆற்றுதல்
- தொழுகையில் ஈடுபடுதல்
- திருக்குர்ஆன் ஓதுதல்
- புனிதப் பயணப் பயிற்சிகள்
- தெராவே தொழுகை
- ஜகாத் நிதியில் ஏழைகளுக்கு உதவுதல்
- நோன்பு கஞ்சி வழங்குதல்



- வழிபாடு செய்தல்
- வேண்டுதல், நேர்த்திக்கடனை நிறைவேற்றுதல்
- ஆன்மிகச் சொற்பொழிவுகள் நடைபெறுதல்
- பன்னிரு திருமுறை, வேதம் ஓதுதல்
- சாத்திரம், சரித்திரம், தோத்திரம் அறியச் செய்தல்
- தியானம், யோகப்பயிற்சி செய்தல்
- கலை பண்பாட்டு நிகழ்வுகள் நடத்துதல்
- பிரசாதம் பெறுதல்
- திருமண வைபவங்கள் நிகழ்த்துதல்



- வழிபாடு செய்தல்
- சற்சங்கம் செய்தல்
- அன்னதானம் வழங்குதல்
- பண்பாட்டு நிகழ்ச்சிகள் நடத்துதல்
- தியானம் செய்தல்
- கலைகளைக் கற்றுத் தருதல்



- பிரார்த்தனை செய்தல்
- விவிலியம் (பைபில்) வாசித்தல்
- பாவமன்னிப்பு வழங்குதல்
- ஞானஸ்நானம் கொடுத்தல்
- விருந்தோம்பல்
- திருமண வைபவங்கள் நிகழ்த்துதல்

**1.4.3** • தகவல்களை விவரித்துக் கூறுவர்.

## இடுபணி 1

**வழிபாட்டுத் தலங்களைப் பற்றியும் அங்கு நடைபெறும் செயல்பாடுகளைப் பற்றியும் விவரித்துக் கூறுக.**

## இடுபணி 2

**பிரார்த்தனையால் ஏற்படும் பயன்களைப் பற்றிய தகவல்களை விவரித்துக் கூறுக.**

**பிரார்த்தனையின் பயன்கள்**

- மனிதனின் சுயகட்டுப்பாட்டுத் திறன் அதிகரிக்கிறது.
- மன்னிக்கக்கூடிய தன்மை அதிகரிக்கின்றது
- மனிதன் உடலாலும் உள்ளத்தாலும் தூய்மைத் தன்மை அடைய முடிகின்றது.
- மனித மனத்தில் இறைவன் மீதான நம்பிக்கை வலுவடைகின்றது.
- மன அழுத்தம், மன உளைச்சல் போன்ற நெருக்குதலில் இருந்து விடுபடச் செய்கின்றது.

**மூலம்: துங்கீசம் (2017)**

## இடுபணி 3

**பின்வரும் செயல்பாடுகளின் நோக்கங்களை விவரித்துக் கூறுக.**


காவடி எடுத்தல்


தியானம் செய்தல்


அர்ச்சனை செய்தல்


யோகப் பயிற்சி


கரும்புத் தொட்டில் தூக்குதல்


பால் குடம் ஏந்துதல்

## பாடம் 2 அன்பே கடவுள்

**பாகமேற்று வாசித்திடுக.**



அன்பிற்கினிய அவைத் தலைவர் அவர்களே, அறிவுசால் பள்ளி முதல்வர் அவர்களே, ஆசிரியப் பெருந்தகையினரே, மாணவ நண்பர்களே உங்கள் அனைவருக்கும் என்னுடைய இனிய வணக்கத்தை உரியதாக்கிக் கொள்கின்றேன். 'அன்பே கடவுள்' எனும் தலைப்பில் உங்கள் முன் உரையாற்ற வந்துள்ளேன்.

அன்பார்ந்த வருகையாளர்களே,

அன்பு என்பது தெய்வமானது என்று நாம் கேள்விப்பட்டிருக்கின்றோம். இறைவன் அன்பானவர் என்பதை விளக்கவே அவ்வாறு கூறப்பட்டிருக்கின்றது. மனிதன் என்பவன் தெய்வமாகலாம் என்பதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? இறைவனின் படைப்பாகிய மனிதன், அந்தப் பரம்பொருளின் தன்மையைப் பெற்றிருப்பான் என்பது உண்மைதானே? அன்புதான் இவ்வுலகை அழகுபடுத்துகின்றது; மக்களிடையே ஒற்றுமையை வலுப்படுத்துகின்றது. புரிந்துணர்வையும் இணக்கத்தையும் உருவாக்குகின்றது. குடும்ப மகிழ்ச்சிக்கு வித்திடுகின்றது. அனைத்து உயிரினங்களையும் நேசிக்க வழிவகுக்கின்றது. அன்பு உள்ளம் கொண்டவர்களை அனைவரும் விரும்புவர். ஆனால், அன்பில்லாதவர்களை யாரும் விரும்ப மாட்டார்கள்.

அவையோரே,

அன்பே கடவுள் என்ற மகத்துவத்தை உணர்ந்து அன்புவழியில் வாழ்ந்தவர்கள் இன்று பலருடைய மனத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்; போற்றப்படுகிறார்கள். திருவண்ணாமலை ரமணர், தாய்மை குணசீலர் தாயுமானவர், அன்பின் சிகரம் அன்னை தெரசா, விவேகம் மிகுந்த சுவாமி விவேகானந்தர், கருணைமிகு புத்தர், வாடிய பயிரைக் கண்டு வாடிய வள்ளலார் போன்றோர் அன்பினால்தான் உலக மக்களின் மனத்தில் இடம்பிடித்துள்ளனர் என்றால் மிகையாகாது.

சபையோரே!

'அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்' என்ற திருமந்திரப் பாடல் அன்பும் இறைவனும் ஒன்றே என்றுதான் பகர்கின்றது. இறைவன் மீது கொண்ட அன்பினால்தான் பக்தர்கள் கோவில்களை அமைத்து வழிபாடுகளைச் செய்து வருகின்றனர். தேசியக் கோட்பாட்டில் 'இறைவன் மீது நம்பிக்கை வைத்தல்' எனும் கோட்பாட்டை முதன்மையாக மொழிகின்றனர். பெற்றோர்கள் தங்களின் சுக துக்கங்களை மறந்து குழந்தைகளின் நலத்திற்காகவும் வளத்திற்காகவும் பாடுபட்டு வருகின்றனர். அதனால்தான் பிள்ளைகள் அன்பு தெய்வங்களான தங்கள் பெற்றோரைப் போற்றி வணங்குகின்றனர். தனி மனிதன், குடும்பம், தேசம், உலகம், பிரபஞ்சம் முழுமையும் அன்புதான் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றது. எனவே, அன்பு கலந்த வாழ்வை வாழ்வோமாக! அன்பால் அனைவரையும் அரவணைப்போமாக! அன்பு தான் கடவுள் என்பதை உலகுக்குப் பறைசாற்றுவோமாக! அன்பே கடவுள்!

வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகின்றேன்.

2.1.4
- உரையைச் சரியான, வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர்.

### இடுபணி 1

**உரையைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக் குறிகளுக்கேற்ப வாசித்திடுக.**

### இடுபணி 2

**வினாக்களுக்கு விடை கூறுக.**

1. அன்பின் தன்மைகளைப் பட்டியலிடுக.

2. அன்புக்கு இலக்கணமாக வாழ்ந்தவர்களைக் குறிப்பிடுக.

3. மனிதர்கள் ‘அன்பே கடவுள்’ என்பதை எவ்வாறு வெளிப்படுத்துகின்றனர்?

4. உன் அன்றாட வாழ்வில் நீ அன்பை எவ்வாறு வெளிப்படுத்துகின்றாய்?

### இடுபணி 3

**தேசியக் கோட்பாட்டின் முதல் வாக்கியம் உணர்த்தும் கருத்தை விளக்குக.**

‘இறைவன் மீது நம்பிக்கை வைத்தல்’

### வளப்படுத்துதல்

**சமய நடவடிக்கைகள் ஒருவரை நற்பண்புகள் நிறைந்தவராக உருவாக்குகின்றதா? கருத்துரைத்திடுக.**

### குறைநீக்கல்

**கருத்துரையைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக் குறிகளுக்கேற்ப வாசித்திடுக.**

உலக உயிர்கள் யாவும் இன்புற்று வாழ வேண்டும். இந்த வையகம் சாந்தியும் சமாதானமும் அடைய வேண்டும். சமாதானம் எவ்வாறு ஏற்படும்? அறியாமை எனும் இருளை விலக்கி, அறிவு எனும் ஒளியை ஏற்றினால் சமாதானப் பாதை கண்ணுக்குப் புலப்படும். மெய்யுணர்வு பெற்ற ஒருவர் எல்லாச் சூழலிலும் விட்டுக் கொடுத்து வாழ முற்படுவார். விட்டுக் கொடுப்பவர்கள் கெட்டுப் போவதில்லையே! ஆனால், கெட்டுப் போக நினைப்பவர்கள் ஒரு போதும் விட்டுக் கொடுப்பதில்லை. இருட்டில் இருக்கும்வரை நம் நிழல் நமது கண்ணுக்குத் தெரியாது. அது போலத்தான், ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் கொண்டிருப்பவர்கள் சமாதானம் ஏற்படத் துணை புரிய மாட்டார்கள். மெய்யுணர்வைப் பெற்றுச் சமாதானத்தை ஏற்படுத்துவோம். அறியாமை எனும் இருட்டை விலக்கி அறிவு எனும் ஒளியை ஏற்றுவோம்.

# பாடம் 3 நம்பிக்கை வேண்டும்

## வாசித்து எழுதுக.

அந்த ஊரில் நீண்ட நாள் மழை பெய்யவில்லை. → மக்கள் அவதிப்படுதல். → அவ்வூருக்கு ஞானி ஒருவர் வருதல். → மக்கள் அவரிடம் முறையிடுதல். → மறுநாள் யாகம் வளர்ப்பதாக முடிவெடுத்தல். → அனைவரும் குறிப்பிட்ட நேரத்தில் வந்து அமர்ந்தனர். → ஒரு பக்தன் மட்டும் கையில் குடையுடன் வந்தான். → எதற்குக் குடை என்று ஞானி அவனைக் கேட்கிறார். → மழைக்காக யாகம் வளர்க்கிறோம். கண்டிப்பாக மழை வரும் என்றான். → ஞானி அவனுடைய நம்பிக்கையைப் பாராட்டினார். → இறைவன் மீது முழுமையான நம்பிக்கை வைத்தால் மட்டுமே அருள் கிட்டும்.

### இடுபணி 1

**நிரலொழுங்கு வரைபடத்தில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைத் துணையாகக் கொண்டு 160 சொற்களில் கதை எழுதுக.**

### இடுபணி 2


**கீழ்க்காணும் குறிப்புகளின் துணையுடன் 160 சொற்களில் ஒரு கதை எழுதுக.**

இளம் வயதில் ஆணவம் - கோபம் - முரட்டுத்தனம் - சண்டை சச்சரவு - தனிமை - குருவைச் சந்தித்தல் - குருகுலக் கல்வி - பயிற்சிகளைப் பெறுதல் - மெய்யுணர்வு பெறுதல் - இறைச்சேவை செய்தல் - அனைவருக்கும் உதவுதல் - பாராட்டுப் பெறுதல் - உறவுகள் தேடி வருதல் - நல்லுரை வழங்குதல் - தொடர்ந்து இறைப்பணி செய்தல்

### அறிந்து கொள்க

**கதையின் கூறுகள்**

- தொடக்கம்
- வளர்ச்சி
- சிக்கல்
- உச்சம்
- சிக்கல் அவிழ்ப்பு
- முடிவு




3.4.14 • 160 சொற்களில் கதை எழுதுவர்.

தொகுதி 17

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தை அறிக.

**சூழல்:**




முதலில் திருக்கோவலூர் வந்தவர் பொய்கையாழ்வார். அவர் மிருகண்டு முனிவரின் ஆசிரமத்தில் உள்ள ஒரு மிகச் சிறிய அறையில் தங்கிச் சயனித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது அங்கு வந்த பூதத்தாழ்வார் தனக்கும் அங்குத் தங்க இடம் இருக்குமா என்று வினவினார். அதற்குப் பொய்கையாழ்வார், இங்கு ஒருவர் படுக்கலாம் இருவர் இருக்கலாம் என்று கூறி வரவேற்றார். இருவரும் ஒருவரை ஒருவர் வணங்கி உரையாட ஆரம்பித்தார்கள். அப்பொழுது அங்கு வந்த பேயாழ்வார் அவரும் தங்க இடம் கேட்டார். இங்கு ஒருவர் படுக்கலாம், இருவர் இருக்கலாம், மூவர் நிற்கலாம் என்று கூறி அவ்விருவரும் பேயாழ்வாரை வரவேற்றனர்.

நெருங்கி நின்று கொண்டு மூவரும் இறைவனின் பெருமையைச் சொல்லியும் கேட்டும் மகிழ்ந்தனர். இந்த மகிழ்ச்சியான சூழ்நிலையில் அங்கிருக்க விரும்பி எம்பெருமானும் அந்த இடத்திற்கு வந்து சேர்ந்தார். அந்தச் சிறிய இடத்தில் வந்த அவரும் நெருக்க ஆரம்பித்ததும், யார் தங்களை நெருக்குவது என்ற கேள்வி அவர்களின் மனத்தில் எழுந்தது. இரவு நேரம் சுத்தமாக வெளிச்சம் இல்லை. எப்படிக் காண்பது? விளக்கு ஏற்ற முயற்சி நடக்கிறது. சாதாரண விளக்கில்லை. ஞான விளக்கு. ஏன்? நான்காவது ஆளைத் தொட்டு உணர முடியவில்லை. உணர முற்பட்டு மூவரும் இறைவன்பால் திவ்விய பிரபந்தப் பாடல்களைப் பாட ஆரம்பித்தனர். முதலில் பொய்கையாழ்வார் அந்தாதி தொடங்குகிறார்.

**மூலம்: இணையம் (சில மாற்றங்களுடன்)**

### நாலாயிரத் திவ்வியப்பிரபந்தமும் பொருளும்

**வையம் தகளியா வார்கடலே நெய்யாக**
**வெய்ய கதிரோன் விளக்காக - செய்ய**
**சுடராழி யானடிக்கே சூட்டினேன் சொன்மாலை**
**இடராழி நீங்குகவே யென்று**

**பொருள்:**
இறைவனின் அருளைப் பெறத் தடையாக உள்ள துன்பங்கள் நீங்க பூமியை அகல் விளக்காகவும் கடலை அகல் விளக்குக்கு நெய்யாகவும் சூரியனை விளக்கின் சுடரொளியாகவும் பாவித்து ஒளி வீசும் சக்கரத்தைக் கையில் ஏந்திய திருமாலின் திருவடிகளுக்குப் பாமாலையைச் சூட்டுகிறேன்.

4.3.2 • இரண்டாம் படிவத்திற்கான பல்வகைச் செய்யுளையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

## இடுபணி 1

**செய்யுளையும் அதன் பொருளையும் மனனம் செய்து கூறுக; எழுதுக.**

## இடுபணி 2

**பொருள் எழுதுக.**

வையம் -

தகளி -

வார்கடல் -

நெய் -

கதிரோன் -

விளக்கு -

சூட்டினேன் -

சுடராழி -

இடராழி -

சொன்மாலை -

## இடுபணி 3

**செய்யுளடியின் விளக்கத்தைக் கூறுக; எழுதுக.**

அ. சுடராழி யானடிக்கே சூட்டினேன் சொன்மாலை

ஆ. வையம் தகளியா வார்கடலே நெய்யாக

இ. இடராழி நீங்குகவே என்று

## வளப்படுத்துதல்

**பாடல் உருவான சூழலை நடித்துக் காட்டுக.**

## குறைநீக்கல்


**செய்யுளில் உவமைப்படுத்தப்பட்டுள்ள இணையுடன் இணைத்திடுக.**

| | |
|---|---|
| 1. வையம் • | • விளக்கிலுள்ள நெய் |
| 2. வார்கடல் • | • அகல் விளக்கு |
| 3. கதிரோன் • | • விளக்கொளி |

தொகுதி 17


தொகுதி 17

# விளையாடி மகிழ்வோம்




**விதிமுறைகள்**

- தாயக்கட்டை உருட்டி விளையாடவும்.
- 4 பேர் வரை விளையாடலாம்.
- விடையைக் கூறவில்லை என்றால் வேறு கட்டத்திற்கு நகர இயலாது.
- சரியான முறையில் விளையாடி வெற்றிக் கட்டத்திற்குச் செல்பவரே வெற்றியாளர்.


உணர்ச்சி வாக்கியம் ஒன்றனைச் சைகை மொழியில் காட்டுக.
உவ்யானை என்ற சொல்லைப் பிரித்துக் கூறுக.
உரிச்சொல் உணர்த்துவது யாவை?
அ + பகுதி =
கூட்டம் (நின்று) உருபு சேர்த்துக் கூறுக.
ஐந்தாம் வேற்றுமை உருபுகளைக் கூறுக.
திசைச் சொல் வாக்கியம் ஒன்றனைச் சைகை மொழியில் கூறுக.
இ + படகு = வாக்கியம் அமைத்திடுக.
ஏதாவது ஒரு வழியைத் தெரிவு செய்க.
அக்குடம் என்ற சொல்லைப் பிரித்துக் கூறுக.
தாயம் விழுந்தால் ஜெயம் நிச்சயம்.
வெற்றி
வடசொல் இரண்டைக் கூறுக.
ஆறு (புள்ளி) விழுந்தால் வெற்றி உறுதி.

# தொகுதி 18 பாதுகாப்பும் நாமும்

## பாடம் 1 உயிரை மதிப்போம்




### கலந்துரையாடுக.



நாம் நம்முடைய உயிரை மதிக்க வேண்டும் நம்முடைய உயிரைத் தீ விபத்தில் வெறுமனே பலியாக்கிக் கொள்ளக்கூடாது. தீச்சம்பவத்தின்போது தாமதிக்கும் ஒவ்வொரு வினாடியும் உயிருக்கு ஆபத்தாகிவிடும். வீட்டில் பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையை ஒவ்வொருவரும் அறிந்து தயார் நிலையில் இருக்க வேண்டும்.

வீட்டில் தீ விபத்து ஏற்பட்டால் நாம் சில பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். வீடு முழுமையும் புகை மூட்டம் ஏற்படும் போது மண்டியிட்டு ஓர் அங்குலத்திற்கு மூக்கை தரையிலிருந்து உயர்த்தி நகர்ந்து வெளியேற வேண்டும். வெளியே வந்தவுடன் அருகிலுள்ள தீயணைப்பு நிலையத்திற்கு 999 எனும் எண்ணைத் தொடர்பு கொள்ள வேண்டும்.





நாம் அவசர வழியைப் பயன்படுத்திக் குடும்பத்தினரையும் காப்பாற்றிக் கொண்டு வெளியேற வேண்டும். வெளியேறும்போது கதவைச் சாத்திவிடுவது சிறப்பு. அப்பொழுதுதான் வெளியிலுள்ள உயிர்வளி உள்ளே செல்லாமல் தடுக்க இயலும். நம்முடைய ஆடையில் தீப்பற்றிக் கொண்டால் தீ மேலும் பரவாமல் இருக்க தரையில் உருண்டு புரள வேண்டும்.

நாம் நம்முடைய முக்கியமான பொருள்களை எடுத்துக்கொண்டு வெளியேற மறக்கக்கூடாது. அதே வேளையில், மீண்டும் வீட்டினுள்ளே நுழைய முயற்சிக்கக்கூடாது. தொடர்ந்து, பதற்றமின்றி நிதானத்துடன் ‘தீ! தீ!’ என உரக்கக் கத்திப் பிறரை விழிப்புறச் செய்யலாம்.







வீட்டுக்கு வெளியே வந்த பிறகு வீட்டு உறுப்பினர்களைக் கணக்கிட்டுக் கொள்ள வேண்டும். தீயணைப்புப் படையினர் வந்தவுடன் அவர்கள் தங்களது கடமையைச் செய்ய வழிவிடுவது சாலச் சிறந்தது.

**மூலம்: மலேசியத் தீயணைப்புத் துறை**

**இடுபணி 1**

**செவிமடுத்தவற்றிலுள்ள கருத்துகளைத் தொகுத்துக் கூறுக.**

**1.1.2** • செவிமடுத்தவற்றிலுள்ள கருத்துகளைத் தொகுத்துக் கூறுவர்.

**இடுபணி 2**

**செவிமடுத்தவற்றிலுள்ள கருத்துகளைத் தொகுத்துக் கூறுக.**

அ.

மாணவர்கள் அனைவருக்கும் வணக்கம். ஒரு முக்கியமான தகவலை உங்களிடம் பகிர்ந்து கொள்ள விழைகின்றேன். நேற்று நம் பள்ளி மாணவி, பள்ளி முடிந்து வீடு திரும்பும்பொழுது பள்ளி நுழைவாயிலுக்கு வெளியே தனியாக நின்றிருந்தபோது சில ஆடவர்கள் அவரிடம் தகாத முறையில் நடந்து கொள்ள முயற்சி செய்திருக்கின்றனர். நல்லவேளையாக நம் பள்ளி பாதுகாவலர் அவர்களை விரட்டியடித்திருக்கின்றார். எல்லா வேளையிலும் பாதுகாவலர்கள் உங்களைக் கண்காணித்துக் கொண்டிருக்க இயலாது. நீங்கள்தான் உங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். பள்ளி முடிந்து உங்கள் பெற்றோர் உங்களை அழைத்துச் செல்லும் வரை நீங்கள் பள்ளிச் சிற்றுண்டிச் சாலையிலேயே அமர்ந்திருங்கள். இனிமேல் நுழைவாயிலுக்கு வெளியே பேருந்துக்காகக் காத்திருப்பவர்கள் உங்கள் நண்பர்களுடன் சேர்ந்து இருங்கள். தனிமையில் நிற்க வேண்டாம். அறிமுகம் இல்லாதவர்களுடன் உரையாட வேண்டாம். எப்பொழுதும் எச்சரிக்கையுடன் இருங்கள். நன்றி.




ஆ.

கோடைக் காலத்தில் பிள்ளைகளை நீச்சல் குளத்திற்கு அழைத்துச் சென்று நீச்சல் பழக்குவது பெற்றோர்களின் வழக்கம். நீச்சல் குளத்திற்குச் செல்லும் பிள்ளைகளுக்குப் பாதுகாப்பு நடவடிக்கைகளை அறிவுறுத்த வேண்டும். நீச்சல் குள பாதுகாவலர் நீச்சல் குளத்தின் சுற்றுப்புறத்திற்குள்தான் இருக்கிறாரா என்பதைக் கண்காணிக்க வேண்டும். பிள்ளைகளுக்கு நீச்சல் குளத்தில் பாதுகாப்பாகக் குளிப்பது குறித்துச் சொல்லிக் கொடுக்க வேண்டும். பாதுகாப்பு உபகரணங்களைப் பயன்படுத்தி நீச்சல் கற்றுக் கொடுக்க வேண்டும். நீச்சல் குளத்தின் அருகில் பிள்ளைகள் நின்றிருக்கும் போதோ நீச்சல் அடித்துக் கொண்டிருக்கும்போதோ அவர்களைத் தனியாக விட்டுச் செல்லக் கூடாது. நீச்சல் குளம் போதுமான அடிப்படை வசதிகள் மற்றும் சுகாதாரமான சூழலில் உள்ளதா எனக் கவனிக்க வேண்டும். நீச்சல் குளத்தில் அலாரம் இருப்பது அவசியம். நீச்சல் குளத்தில் தண்ணீரை அடிக்கடி மாற்றுகிறார்களா, சுத்தமாகப் பராமரிக்கிறார்களா எனக் கட்டாயம் கவனிக்க வேண்டும். நீச்சல் கற்றுக் கொள்ளச் செல்லும்போது தூய்மையான நீச்சல் உடைகளை அணிய வேண்டும்.


# வீட்டில் பாதுகாப்பு

## உரையாடலை வாசித்து அறிக.

**சூழல்:**
வீட்டில் கடைப்பிடிக்க வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பற்றிக் கண்மணி தனது பாட்டியுடன் உரையாடுகின்றாள்.


கண்மணி: வணக்கம் பாட்டி. என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?

பாட்டி: வணக்கம் கண்மணி. இன்று தாத்தாவுக்கு மருத்துவமனையில் கொடுக்கப்பட்ட மருந்துகளை நிலைப்பேழையில் அடுக்கி வைத்துக் கொண்டிருக்கிறேன். தாத்தா மருந்துகளை உட்கொண்டுவிட்டு உணவருந்தும் மேசை மேலேயே மறதியாக வைத்துவிட்டார். நல்லவேளை உன் தம்பி பார்த்திருந்தால் மிட்டாய் என்று நினைத்துச் சாப்பிட்டிருப்பான்.




கண்மணி: அடேயப்பா! சமையலறையில் இவ்வளவு பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதா பாட்டி?

2.1.5 • உரையாடலைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர்.




**இடுபணி 1**

**உரையாடலைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசித்திடுக.**

## இடுபணி 2

**வினாக்களுக்கு விடை கூறுக.**

1. கண்மணியிடம் பாட்டி கூறிய பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பட்டியலிடுக.

| சமையலறை | குளியலறை | வீட்டிலுள்ள பிற இடங்கள் |
|---|---|---|
| | | |
| | | |

2. பாட்டி கூறியவற்றிலிருந்து நீ என்ன அறிந்து கொண்டாய்? விளக்குக.

3. நீ உன் வீட்டில் எவ்வாறான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கிறாய்?

4. வீட்டில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதனால் ஏற்படும் நன்மைகளைக் கூறுக.


## இடுபணி 3

**வீட்டில் பின்வரும் இடங்களில் எவ்வாறான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்பதைக் கூறுக; எழுதுக.**

| வரவேற்பறை | படுக்கையறை | வழிபாட்டறை |
|---|---|---|

## வளப்படுத்துதல்

**உன் வீட்டிலும் உன் நண்பரின் வீட்டிலும் ஏற்படுத்தப்பட்டுள்ள பாதுகாப்பு நடவடிக்கைகளில் காணும் ஒற்றுமை வேற்றுமைகளைக் கலந்துரையாடி இரட்டிப்புக் குமிழி வரைபடத்தில் எழுதுக.**




## குறைநீக்கல்

**உன் பெற்றோர் உனக்குக் கற்றுக் கொடுத்த பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பட்டியலிடுக.**

தொகுதி 18

# பாடம் 3 சுற்றுச் சூழல் பாதுகாப்பு

**வாசித்து எழுதுக.**

## சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் பொறுப்பு

### கருத்து 1: தனி மனிதன்

- குப்பைகளைக் கண்ட இடங்களில் வீசக் கூடாது.
- திறந்தவெளியில் குப்பைகளை எரிக்கக் கூடாது.

### கருத்து 2: குடும்பம்

- பிள்ளைகளுக்குச் சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதன் அவசியத்தைக் கற்றுத் தர வேண்டும்.
- வீட்டையும் நாட்டையும் நேசிக்கச் செய்ய வேண்டும்.

### கருத்து 3: சமூக அமைப்புகள்

- சுற்றுச் சூழல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.
- கருத்தரங்கம், கலந்துரையாடல், பிரச்சாரம் போன்றவற்றைச் செய்ய வேண்டும்.
- கூட்டுப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

### கருத்து 4: அரசாங்கம்

- ஊடகத்தின் வாயிலாகப் பரப்புரை,செய்தி, தகவல்கள் வெளியிட வேண்டும்.
- பள்ளியில் கற்றல் கற்பித்தலில் சுற்றுச் சூழல் பாதுகாப்புப் பற்றிப் போதிக்க வேண்டும்.

## இடுபணி 1

**கருத்துகளைத் துணையாகக் கொண்டு கட்டுரைத் தலைப்பிற்கேற்ற முன்னுரையையும் முடிவுரையையும் பத்தியில் எழுதுக.**

3.2.4
3.4.12
- கட்டுரைத் தலைப்பிற்கேற்ற முன்னுரையையும் முடிவுரையையும் பத்தியில் எழுதுவர்.
- 160 சொற்களில் கருத்து விளக்கக் கட்டுரை எழுதுவர்.

### இடுபணி 2

'சுற்றுச் சூழல் பாதுகாப்பு' எனும் தலைப்பில் 160 சொற்களில் கருத்து விளக்கக் கட்டுரை எழுதுக.

### இடுபணி 3

விளையாட்டு மைதானத்தில் கடைப்பிடிக்க வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் எனும் தலைப்புக்கு ஏற்ற முன்னுரையையும் முடிவுரையையும் பத்தியில் எழுதுக.

### இடுபணி 4

படங்களின் துணையுடன் 'காடுகளைப் பாதுகாப்பதன் அவசியம்' எனும் தலைப்பில் 160 சொற்களில் கருத்து விளக்கக் கட்டுரை எழுதுக.




### வளப்படுத்துதல்

**கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளுக்கு முன்னுரை முடிவுரைகளைச் சுயமாக எழுதிக் காட்டுக.**

- பள்ளியில் பாதுகாப்பு
- சாலைப் பாதுகாப்பின் அவசியம்
- வீட்டில் பாதுகாப்பு

பாடம் 4 **இலக்கணம்**

## வலிமிகுதலை அறிக.

கபிலனின் மாமா மூன்று ஏக்கர் நிலப் பரப்பில் பழத்தோட்டம் வைத்திருக்கிறார். அத்தோட்டத்தில் மாமரங்களும் பலா மரங்களும் அதிகமாக இருந்தன. ஒரு நாள் தன் மாமாவுடன் கபிலன் பழத் தோட்டத்திற்கு **உலாச் சென்றான்.** மாந்தோப்பில் காய்த்துப் பழுத்திருந்த பழங்களைப் பார்த்து உவகை அடைந்தான். **விலாப் புடைக்க** அப்பழங்களைச் சுவைத்து உண்ண வேண்டும் என்று மனத்தில் நினைத்துக் கொண்டான். அவனுடைய மாமா சில பழங்களைப் பறித்துக் கொடுத்தார். ஒரு மாம்பழத்தைச் சுவைத்து உண்டான். பழங்கள் மிகவும் இனிப்பாக இருப்பதாகக் கூறினான்.

தொடர்ந்து **பலாத் தோட்டத்திற்குச்** சென்றனர். **பலாப் பழங்கள்** பெருத்துக் காய்த்திருந்தன. **பலாப் பழம்** ஒன்றனை வெட்டி அதிலிருந்து சில **பலாச் சுளைகளைச்** சாப்பிடச் சொன்னார். சில சுளைகளைச் சாப்பிட்டதுமே வயிறு நிறைந்துவிட்டதாகக் கூறினான். சிறிது நேரம் குடிலில் ஓய்வெடுத்தான்.

தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருக்கும்போது கபிலன் தன் மாமாவின் தோட்டம் தூய்மையாக இருப்பதாகவும் மரங்கள் செழிப்பாக வளர்ந்திருப்பதாகவும் கூறினான். அதன் இரகசியத்தை அறிய மேலும் **வினாத் தொடுத்தான்**. விடா முயற்சியும் ஈடுபாடும் இருந்தால் நல்ல விளைச்சலைக் காணலாம் என்று மறுமொழி பகன்றார் மாமா. அன்றைய பொழுது கபிலனுக்கு இன்பமாக இருந்ததாகவும் தன்னுடைய நீண்ட நாள் **கனாப் பலித்ததாகவும்** கூறிப் பெருமிதம் அடைந்தான்.



5.4.3 • தனிக்குற்றெழுத்தை அடுத்து வரும் ஆகாரத்திற்குப் பின் வலிமிகும் என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

## இடுபணி 1

**வண்ணமிடப்பட்ட சொற்றொடர்களை எழுதுக; பின்னர் பிரித்தெழுதுக.**

**எ.கா:**

உலாச் சென்றான்= உலா+சென்றான்

## இடுபணி 2

**சேர்த்தெழுதுக.**

1. வினா + தாள் =
2. புறா + தலை =
3. விழா + தலைவர் =
4. உலா + போனார் =
5. அரா + புற்று =
6. இரா + பொழுது =
7. கிடா + கொட்டகை =
8. பலா + சுளை =

## வளப்படுத்துதல்

**பின்வரும் சொற்றொடர்களை வாக்கியத்தில் அமைத்துக் காட்டுக.**

1. புறாக் கூண்டு
2. அராத் தீண்டியது.
3. சுறாக் கூட்டம்
4. நிலாச் சோறு
5. கிடாக் கொம்பு
6. கனாக் கண்டேன்
7. விழாக் கோலம்
8. சகாச் சகவாசம்

## அறிந்து கொள்க

**வலிமிகும் இடங்கள்**

தனிக் குற்றெழுத்தை அடுத்து வரும் ஆகாரத்தின் பின் வலிமிகும்.

**எ.கா:**

i) கனா +கண்டான்= கனாக் கண்டான்

ஆகாரம் (ன்+ஆ)

தனிக்குற்றெழுத்து

ii) பலா +பழம்= பலாப்பழம்

ஆகாரம் (ல்+ஆ)

தனிக்குற்றெழுத்து

## குறைநீக்கல்

**வாக்கியங்களில் காணும் குற்றெழுத்தை அடுத்து வரும் ஆகாரச் சொற்களை அடையாளம் கண்டு எழுதுக.**

1. திரு. மு. சங்கர் ஒரு கலாப் பிரியர் என்பதால் எங்குக் கலைநிகழ்ச்சி நடந்தாலும் அதனைக் கண்டு இரசிப்பார்.
2. திருமதி வைதேகி மன அழுத்தத்தைப் போக்க பூங்காவில் உலாச் செல்வார்.
3. அறிவியல் மேதை ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்கள் இளைஞர்களைக் கனாக் காணச் சொல்லி மனத்தில் தன்னம்பிக்கையை ஏற்படுத்தியவர்.
4. பாட வேளையில் சதாப் பேசிக் கொண்டிருந்த மாணவர்களை ஆசிரியர் கண்டித்தார்.



## வாசித்து உணர்க.


“அழாதே! அருந்ததி, உனக்கு ஒன்றும் இல்லை, நீ நன்றாகவே இருக்கிறாய். அங்கே பார். நம் நண்பர்கள், அனைவரும் நமது அருகில் நிற்கின்றனர்,” என்று என் தோழிக்கு ஆறுதல் கூறினேன்.

என் தோழியின் கண்களில் கண்ணீர் ஆறாய் ஓடுகிறது. காரணம் வலி. நானும் அவளும் இணை பிரியாத் தோழிகள். எங்குச் சென்றாலும் ஒன்றாகவே செல்வோம். நேற்று மாலையும் அப்படித்தான். நானும் என் தோழியும் கிராமத்தில் உள்ள உறவினர் வீட்டிற்குச் சென்றோம். என் தோழி வாகனத்தைச் சிறப்பாகவே செலுத்தினாள். நான் அவள் அருகில் அகம் மகிழ்ந்து அமர்ந்திருந்தேன்.

“வாகனத்தை இன்னும் கொஞ்சம் வேகமாகச் செலுத்து,” என்று அவளை உற்சாகப்படுத்தினேன். அவளும் அதற்கு இசைந்தவளாய் இறக்கை கட்டி பறப்பது போலப் பறக்க ஆரம்பித்தாள். “ஏய் கனகா! உனக்கு எத்தனை தடவ சொல்றது, வாகனத்துல உட்கார்ந்த உடனே பாதுகாப்புப் பட்டை போடணும் தெரியுமா?” என்றாள் சற்றுக் கடிந்தவளாக.

“அட இரு அருந்ததி, அப்புறமா போட்டுக்கிறேன். நீ ரோட்டப் பார்த்து வண்டிய சூப்பரா அழுத்து,” என்றேன். முன்னே ஒரு கனவுந்து. என் தோழி கனவுந்தை முந்திச் செல்ல பலமுறை முயற்சித்தாள், ஆனாலும், தோல்விதான். நான் அவளை விடுவேனா! “என்ன அருந்ததி இப்படிப் பயப்படுற. வேகமாப் போ” என்று சொல்லி வாயை மூடுவதற்குள் வண்டியைக் காற்றாய்ப் பறக்க விட்டாள். “ஏய்! ஏய்! அங்கப்பாரு ஒரு பேருந்து... பேருந்து,” என்று அலறினேன். அடுத்து என்ன நடந்தது என்று தெரியாமலே போனது.

இப்போது என் அன்புத் தோழி அருந்ததி மருத்துவமனையில். அவள் கால் முறிந்து கட்டுப் போடப்பட்டிருந்தது. தலையிலும், கைகளிலும் கட்டுகள் தான். உடலில் இரத்தம் வேறு செலுத்தப்பட்டுக் கொண்டிருந்தது. பாவம் என் தோழியால் பேச முடியவில்லை. நான் அவளை அத்தனை முறை கூப்பிட்டும் ஏனோ தெரியவில்லை என்னைப் பார்க்க மறுக்கிறாள். ஒருவேளை அவளுக்குக் கேட்காமல் போனதோ! அவள்தான் அப்படி என்றால், அவளின் பெற்றோர் அவள் அருகில் நின்று கொண்டிருந்தாலும் ஏனோ என்னிடம் பேசவில்லையே! என்மேல் அவர்களுக்கு என்ன கோபம்? என்னைத் தங்களின் மகள் போல் அல்லவா உபசரித்தார்கள். இன்று மட்டும் ஏன்? என்ன ஆயிற்று இவர்களுக்கு?



“கனகா! கனகா! என்னம்மா இப்படிப் பண்ணிட்ட. ஐயோ! கனகா! கனகா! என்னால தாங்க முடியவில்லையே,” என்று அலறியது அக்குரல். உற்றுக் கேட்கிறேன். அது என் அம்மாவின் குரல் ஆயிற்றே! தலையில் அடித்துக் கொண்டு துடிப்பது என் அம்மாதான். என் பெயரைச் சொல்லிச் சொல்லிக் கதறுகிறாரே! அப்படியென்றால்... நான் எங்கே? நான்... நான்... வாகனத்தில் பாதுகாப்புப் பட்டையைப் போட்டிருந்தால் எனக்கு இந்நிலை வந்திருக்காதல்லவா!

# தொகுதி 19 பயனீட்டாளர் கல்வியும் சுகாதாரமும்

## பாடம் 1 மலேசியச் சுகாதார அமைச்சு

**கலந்துரையாடுக.**

**மலேசியச் சுகாதார அமைச்சின் நிருவாகம்**

- சுகாதார அமைச்சர்
  - சுகாதாரத் துணை அமைச்சர்
  - சுகாதார அமைச்சின் தலைமைச் செயலாளர்
    - பிற பிரிவுகள்
    - சுகாதாரத் தலைமை இயக்குநர்
      - சுகாதாரத் துணைத் தலைமைச் செயலாளர் (சுகாதாரப் பிரிவு)
      - துணைத் தலைமை இயக்குநர் (மருத்துவப் பிரிவு)
      - துணைத் தலைமை இயக்குநர் (ஆய்வு மற்றும் தொழில்நுட்பப் பிரிவு)
      - முகாமை இயக்குநர் (பல் சுகாதாரப் பிரிவு)
      - முகாமை இயக்குநர் (மருந்தகச் சேவைப் பிரிவு)
      - முகாமை இயக்குநர் பாதுகாப்பு மற்றும் உணவுத் தரக் கட்டுப்பாட்டுப் பிரிவு
      - சுகாதாரத் துணைத் தலைமைச் செயலாளர் (பொருளாதாரப் பிரிவு)
      - மாநில சுகாதார இயக்குநர்

**என்னை நுணுகுக**

மூலம்: மலேசியச் சுகாதார அமைச்சு (22.12.2016)

1.5.2 • வரிபடக் கருவியிலுள்ள தகவல்களையொட்டிக் கருத்துரைப்பர்; முடிவு கூறுவர்.

## இடுபணி 1

**வரிபடக் கருவியிலுள்ள தகவல்களையொட்டிக் கருத்துரைத்திடுக; முடிவு கூறுக.**

## இடுபணி 2

**தாதிமைத் தொழில் பற்றிய தகவல்களையொட்டிக் கருத்துரைத்திடுக; முடிவு கூறுக.**

**தன்னலம்** கருதாமலும் கால நேரம் பார்க்காமலும் அரிய சேவையைத் தாதியர்கள் ஆற்றி வருகின்றனர். பிறருடைய ஆரோக்கியத்தையும் சுகாதாரத்தையுமே முன்னிறுத்திக் கடமையைச் செவ்வனே செய்து வருகின்றனர்.

தாதிமைத் தொழில் ஒரு புனிதமான போற்றுதற்குரிய தொழில். தாதியர்களின் **அர்ப்பணிப்புக்கு** ஈடு இணை இல்லை. பொறுமை, நிதானம், சகிப்புத் தன்மை, விடாமுயற்சி, பணிவு, அன்பு போன்ற உயரிய பண்புகளைத் தாதியர்கள் **கடைப்பிடித்து** நோய்வாய்ப்பட்டவர்களின் உடல் ஆரோக்கியத்திலும் சுகாதாரத்திலும் கவனம் செலுத்துகின்றனர்; அக்கறை காட்டுகின்றனர்.

நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்கும்போது மிக முக்கியமான **அம்சங்கள்** தூய்மையும் தூய்மையான காற்றும் என்பதை உணர்ந்து சுகாதாரத்திற்குரிய மருத்துவக் கருவிகளைக் கழுவிச் சுத்தம் செய்து, குப்பைகளை அகற்றி பல வேலைகளையும் தாமாகவே செய்கின்றனர்.

அனைத்து நோயாளிகளின் அறையையும் சுற்றிப் பார்த்துவிட்டு, நோயாளிகள் அனைவரும் அமைதியாக உறங்குவதை உறுதி செய்கின்றனர். நோயாளிகளின் வாழ்க்கையில் **விளக்கேற்றும்** தியாகச் சுடர்களாகத் தாதியர் விளங்குகின்றனர்.

மாணவர்கள் சுயமாகக் கருத்துரைத்து முடிவு கூறுதல்.



**இடுபணி 3**

**வினாக்களுக்கு விடை கூறுக.**


1. தாதிமைத் தொழிலின் சிறப்புகளைப் பட்டியலிடுக.

2. தாதியர்கள் எவ்வாறான பண்புநலன்களைக் கடைப்பிடிக்கின்றனர். அவ்வாறு கடைப்பிடிப்பதன் நோக்கம் யாது?

3. உனக்குத் தாதியராகும் எண்ணம் இருக்கிறதா? ஏன்?

**இடுபணி 4**

**வரிபடக் கருவியின் துணையுடன் பயனீட்டாளர் சங்கத்தின் செயல்பாடுகளைப் பற்றிக் கருத்துரைத்திடுக; முடிவு கூறுக.**




**இடுபணி 5**

**சுகாதார அமைச்சின் பின்வரும் நடவடிக்கைகளைப் பற்றிக் கருத்துரைத்திடுக; முடிவு கூறுக.**





பாடம் 2 நெகிழியால் ஆபத்து!

**உரைநடையை வாசித்து அறிக.**

நம் அன்றாட வாழ்வில் உபயோகப்படுத்தும் பெரும்பாலான பொருள்களில் நெகிழி உள்ளது. நம்மை அறியாமலேயே அவற்றை நாம் உட்கொண்டுவிடுகிறோம். அறியாமல் செய்யும் இத்தவற்றினால் நாம் பல இன்னல்களுக்கு ஆளாகின்றோம். நெகிழிப் பாத்திரங்களில் வைக்கப்பட்டிருக்கும் உணவுப் பொருள்கள், பானங்கள் ஆகியவற்றை உட்கொள்ளும்பொழுது நெகிழிப் பொருள்களும் நம் உடலுக்குள் செல்கின்றன. சூடான உணவுகளை நெகிழிப் பாத்திரங்களில் இடும்பொழுது அதிலுள்ள இரசாயனங்கள் அந்த உணவில் கலக்கின்றன. இவை நம் உடலுக்குள் சென்று பல்வேறு உபாதைகளை உண்டாக்கும் என்பது உறுதி.

அன்று நம்முடைய பாரம்பரிய உணவுகளை வாழை இலை, தாமரை இலை, பலா இலை, மூங்கில் ஆகியவற்றைப் பயன்படுத்தி உண்டனர். நவீனமும் மேம்பாடும் இம்முறைகளை மாற்றிவிட்டன என்றால் அது மிகையாகாது.

நுரைப்பம் பயன்படுத்துவோருக்குப் பலவகையில் அவை தீங்கு விளைவிக்கின்றன. சூடான உணவுகளைப் பாலித்தீன் பாத்திரங்களில் வாங்கிச் செல்வது நம் நாட்டில் அதிகமாகவே காணப்படும் காட்சியாகும். உணவை நெகிழிப் பைகளில் கிடத்தி வைக்கும் பொழுதும் சமைக்கும்பொழுதும் பொட்டலமாக்கப்படும்போதும் அதிலுள்ள இரசாயனங்கள்



உணவுக்குள் ஊடுருவுகின்றன. நம்முடைய உடலுக்குள் இவை சென்று ஆரோக்கியத்திற்குக் கேடு விளைவிப்பதாக அறிவியலாளர்கள் கூறுகின்றனர்.



பெரும்பாலான நெகிழிப் பைகளைப் பயன்படுத்திய பிறகு தூக்கி எறிகிறோம். நெகிழியை மறுசுழற்சி செய்வதும் முறையாக அப்புறப்படுத்துவதும்கூட அவசியமான ஒன்றாகும். நெகிழிகளை மறுசுழற்சி செய்வதும் சுற்றுச்சூழலை மாசுபடச் செய்கின்றது. மறுசுழற்சிச் செய்யப்பட்ட நெகிழி உணவுப் பாத்திரங்கள், தண்ணீர் புட்டிகள் போன்றவற்றைக் குழந்தைகள் பயன்படுத்தும்போது அவர்களின் உடல் ஆரோக்கியத்திற்கும் ஊறு விளைவிக்கின்றன என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.




குப்பைத் தொட்டிகளில் சேரும் நெகிழிப் பைகள்கூட சில நாள்களுக்குப் பிறகு நிலத்தடி நீரை மாசுபடுத்தவே செய்கின்றன. கச்சா எண்ணெய் அல்லது இயற்கை வாயு ஆகியவற்றைச் சூடாக்கி, நிறைய இரசாயனங்கள் சேர்ந்து மீச் சேர்ம இணைவு என்ற முறையில் நெகிழிப் பைகள் தயாரிக்கப்படுகின்றன.

நெகிழியின் ஆபத்துகளைக் கருத்தில் கொண்டு தற்சமயம் சில மாநிலங்களில் நெகிழியில்லா வாழ்வு எனும் முறையை அமல்படுத்துகின்றனர். எனவே, பயனீட்டாளர்கள் அனைவரும் தம்முடைய நலனையும் எதிர்காலத் தலைமுறையினரின் நலனையும் கருத்தில் கொண்டு செயல்படுவது மிகச் சிறப்பாகும்.




**(நன்றி: பயனீட்டாளர் குரல், பினாங்கு)**

**2.3.4** • சுகாதாரம் தொடர்பான உரைநடைப் பகுதியை வாசித்துக் கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.

### இடுபணி 1

**கருத்துணர் கேள்விகளுக்கு விடை எழுதுக.**

1. நெகிழியால் நமக்கு ஏற்படும் விளைவுகள் யாவை?

2. நெகிழியின் இரசாயனம் நம்மை அறியாமல் எவ்வாறு உடலுக்குள் செல்கின்றது?


3. நுரைப்பம் பைகள் எவ்வாறு நமக்குத் தீங்கு விளைவிக்கின்றன?

4. நமது பாரம்பரிய சமையல் முறை தீங்கில்லாமல் இருந்ததன் காரணம் யாது?

5. நெகிழியின் மறுசுழற்சி பயனீட்டாளர்களுக்கு எவ்வாறு தீமையைத் தருகின்றது?

### வளப்படுத்துதல்

**நெகிழிப் பயன்பாட்டைத் தவிர்க்கும் வழிமுறைகளைக் குமிழி வரைபடத்தின் மூலம் எழுதி விளக்குக.**




### குறைநீக்கல்

**ஒரு பொருளை வாங்கும் முன் நீ செய்யும் நடவடிக்கைகள் பற்றி எழுதிக் கூறுக.**

## அலுவல் கடிதத்தை வாசித்திடுக.

கமலநாதன் த/பெ பொன்னுசாமி,
தெலுக் டத்தோ குடியிருப்புச் சங்கம்,
எண் 12, ஜாலான் இம்பியான்,
தெலுக் டத்தோ,
42700 பந்திங்,
சிலாங்கூர் டாருள் ஏசான்.

---

மாவட்ட சுகாதார அதிகாரி,
மாவட்ட சுகாதார இலாகா,
42700 பந்திங்,
சிலாங்கூர் டாருள் ஏசான்.

01 ஆகஸ்ட் 20□□

ஐயா,

சுகாதாரக் கேட்டிற்கு வழிவகுக்கும் குப்பைக் கூளங்களை அகற்றுதல்.

வணக்கம். எங்கள் வசிப்பிடமான தெலுக் டத்தோ பகுதியில் கடந்த ஒரு மாத காலமாகக் குப்பைகள் அகற்றப்படாமல் தேங்கிக் கிடக்கின்றன. இரவு வேளைகளில், இவ்வட்டாரத்தில் சுற்றித் திரியும் நாய்கள், இக்குப்பைக் கூளங்களையெல்லாம் இறைத்துவிடுவதால், இடமெல்லாம் குப்பைகள் சிதறி, அலங்கோலமாகக் காட்சி அளிக்கின்றன. துர்நாற்றம் வீசுகின்றது; சுகாதாரக் கேட்டுக்கு வித்திடுகிறது.

2. இக்குப்பைக் கூளங்களினால் ஈக்கள், கொசுக்கள், எலிகள், கரப்பான் பூச்சிகள் பெருகியுள்ளன. கடந்த ஒரு மாத காலமாக நாங்கள் வெளியில் நடமாட முடியாமல் இருக்கிறோம். பிள்ளைகள் வெளியில் விளையாடவும் அஞ்சுகிறார்கள். எங்களால் வீட்டில் நிம்மதியாகவும் உறங்க முடிவதில்லை. இத்தூய்மைக் கேட்டினால் நோய்வாய்ப்பட்ட மக்கள் சிகிச்சை பெற பணம் செலவு செய்ய வேண்டியுள்ளது. இந்த ஆரோக்கியமற்ற சூழலை உடனே மாற்றியமைக்க வேண்டும்.

3. எனவே, தாங்கள் அன்பு கூர்ந்து உடனே செயல்பட்டு, இந்தக் குப்பைக் கூளங்களை அப்புறப்படுத்த ஏற்பாடு செய்வீர்கள் என்ற நம்பிக்கையுடன் இந்தக் கடிதத்தை நிறைவு செய்கிறேன். உங்களின் தொடர்பு நடவடிக்கைக்காகக் காத்திருக்கின்றோம்.

நன்றி.

இக்கண்,

பொன். கமலநாதன்

(பொன். கமலநாதன்)
செயலாளர்

**3.4.9** • 160 சொற்களில் அலுவல் கடிதம் எழுதுவர்.

இடுபணி 1

**உன் பள்ளியில் சுகாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள இருக்கிறீர்கள். பள்ளி முதல்வருக்கு அந்நடவடிக்கைகளை விளக்கி ஒரு கடிதம் எழுதுக.**




இடுபணி 2

**உன் பள்ளியின் சிற்றுண்டிச்சாலை நடத்துநர் சுகாதாரத்தைப் பேணுவதில்லை என்பதை அறிகின்றாய். அவர் மீது நடவடிக்கை எடுக்கும்படி பள்ளி முதல்வருக்குப் பின்வரும் குறிப்புகளைத் துணையாகக் கொண்டு 160 சொற்களில் ஒரு புகார் கடிதம் எழுதுக.**

| | | |
|---|---|---|
| உடுத்தும் உடை | உணவு பரிமாறும் முறை | பயன்படுத்தப்படும் பொருள்கள் |
| உணவு வகைகள் | சிற்றுண்டிச் சாலையின் தளவாடப் பொருள்களின் நிலை | சிற்றுண்டிச்சாலையின் தோற்றம் |

## பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

### பழமொழிகளையும் பொருளையும் அறிக.



பணி ஓய்வு பெற்ற ஆசிரியர் திரு. இரவி உயர்ந்த உள்ளம் படைத்த ஓர் உன்னத மனிதர். எங்கள் கிராமத்தில் உள்ள அனைவருக்கும் அவரைப் பிடிக்கும். ஏழை எளியவர்களுக்குத் தம்மால் இயன்ற உதவிகளைத் தயங்காமல் செய்வார். கிராமத்திலுள்ள இளைஞர்களுக்கு நல்ல ஆலோசனைகளையும் தன்னம்பிக்கையான வார்த்தைகளையும் கூறுவார். பணி ஓய்வு பெற்ற ஆசிரியர் என்பதால் கிராமத்திலுள்ள சிறுவர்களுக்கு இலவசமாகக் கல்வி கற்பிப்பார். ஒவ்வொருவர் வீட்டிலும் நடைபெறுகின்ற பிறந்தநாள், திருமணம் போன்ற நிகழ்ச்சிகளில் கலந்து சிறப்பிப்பார்; பாராட்டு மழை பொழிவார். துன்பம் நேர்ந்துள்ள வீட்டிற்குச் சென்று ஆறுதலையும் வருத்தத்தையும் தெரிவிப்பார். ஒருபோதும் பிறர் மனம் புண்படும்படி பேச மாட்டார். கடுஞ்சொற்களை வெளியிட மாட்டார். கோபப்படாமல் நிதானமாகச் செயல்படுவார். தமக்கு இன்னல் நேர்ந்தாலும் வெளியில் காட்டிக் கொள்ள மாட்டார். யாரிடமும் உதவி கேட்டு கையேந்த மாட்டார். **'புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது'** எனும் பழமொழிக்கு உதாரணமாக வாழ்ந்து வருகின்றார்.

அதே கிராமத்தில் திரு. முத்துவும் வாழ்ந்து வந்தார். அவர் ஒரு கருமி. யாருக்கும் எந்தப் பொருளையும் ஈய மாட்டார். சுயநலமிக்கவர். மேலும், முரட்டுக் குணமுடையவர். அவருடைய மனைவியையும் பிள்ளைகளையும் கடுமையான வார்த்தைகளால் திட்டுவார். கோபம் மிகும்போது அடித்துத் துன்புறுத்துவார். மனைவி, பிள்ளைகளை அடிமையாக நடத்துவார். கிராமத்திலுள்ளவர்களை மதிக்க மாட்டார். அதனால், அவரை யாருக்கும் பிடிக்காது. ஒரு நாள் பட்டணத்திற்குச் சென்று வீடு திரும்பும்பொழுது சாலை விபத்தில் சிக்குண்டு இரு கால்களையும் இழந்தார். வீட்டில் மனைவி, பிள்ளைகளின் உதவியின்றி நடமாட இயலாமல் மனம் வருந்தினார். **'அடாது செய்பவன் படாது படுவான்'** என்ற பழமொழிக்கு ஏற்ப தனது வாழ்க்கை அமைந்துவிட்டதை எண்ணிப் புலம்பினார்; துன்புற்றார்.



### பழமொழிகளும் பொருளும்

**புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது**
பொருள்:
உயர்ந்த பண்புள்ளவர்கள் சிறந்த காரியங்களையே செய்வார்களேயன்றி, எந்நிலையிலும் தங்களுக்கு இழிவு தரக்கூடிய காரியங்களைச் செய்ய மாட்டார்கள்.

**அடாது செய்பவன் படாது படுவான்**
பொருள்:
தகாத செயல்களைச் செய்பவர்கள் அதற்குரிய தண்டனைகளைப் பெற்றே தீருவர்.

4.7.2
- இரண்டாம் படிவத்திற்கான பழமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

தொகுதி 19

இடுபணி 1

**பழமொழிகளையும் அவற்றின் பொருளையும் மனனம் செய்து கூறுக; எழுதுக.**

இடுபணி 2

**சூழலுக்கு ஏற்ற பழமொழியை எழுதுக.**

1. பல ஆண்டுகளாகக் கடத்தல் வேலைகளில் ஈடுபட்டிருந்த மருதன் சென்ற வாரம் காவல் அதிகாரிகளின் பிடியில் சிக்கினான். அவன் இதுநாள் வரை செய்த தீய காரியங்களுக்குத் தண்டனை கிடைத்தே தீரும்.

2. விமலன் பண்புள்ள குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவன். ஒவ்வொரு நாளும் இறைவழிபாடு செய்யத் தவறமாட்டான். அவன் தன்னுடைய அன்பான பேச்சாலும் பண்பான செயலாலும் ஊர் மக்களைக் கவர்ந்திருந்தான். விமலன் தன்னுடைய மேற்படிப்புக்காகப் பட்டணத்திலுள்ள பல்கலைக்கழகத்தில் சேர்ந்து அங்கேயே தங்கிப் படிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. விமலனுடன் மூன்று நண்பர்களும் சேர்ந்து ஒரே அறையில் தங்கினர். அவர்கள் தினந்தோறும் புகைப்பிடிப்பதும் மது அருந்துவதுமாக இருந்தனர். விமலனையும் அச்செயலில் ஈடுபடும்படி வற்புறுத்தினர். ஆனால், விமலன் தான் கடைப்பிடித்து வந்த கொள்கையிலிருந்து மாறாமல் அவர்களைப் புறக்கணித்தான்.

3. வழிப்பறிக் கொள்ளைகள் செய்த அந்த இரு ஆடவர்கள் ஊர்மக்களிடம் பிடிபட்டனர். பல நாள் தப்பிய போதிலும் இன்று கையும் களவுமாய்ப் பிடிபட்டனர். இனி அவர்களுக்குத் தண்டனை கிடைப்பது உறுதியே.

4. ஏழைக் குடும்பத்தில் பிறந்ததனால் மாறனால் கல்வியைத் தொடர இயலவில்லை. ஓர் உணவகத்தில் வேலை செய்தான். நேர்மையாகவும் நாணயமாகவும் நடந்து கொள்வான். முதலாளி, உணவகத்தில் இல்லாத வேளையில் பணத்தை நாணயமாகக் கையாள்வான். எந்தச் சூழ்நிலையிலும் பணத்தைக் களவாட மாட்டான். கொடுக்கப்பட்ட பொறுப்பிலிருந்து விலக மாட்டான்.

வளப்படுத்துதல்

**ஒரு பழமொழியைத் தெரிவு செய்து அதனை விளக்கும் சூழல் கதை ஒன்றனைக் கூறுக; எழுதுக.**

குறைநீக்கல்

**பழமொழியை நிறைவு செய்க.**

1. புலி ______________________ தின்னாது.
2. அடாது ______________________ படுவான்.
3. மந்திரத்தால் ______________________ விழுந்திடுமா?
4. இளமையிற் ______________________ மிடிமை.

வாசித்து மகிழ்க.

## தேனீக்களின் முக்கியத்துவம்



இயற்கை விவசாயத்தில் தேனீக்கள் ஒரு முக்கியமான அங்கமாகும். அவை, பயிர்களின் மகரந்தச் சேர்க்கைக்கு உதவுகின்றன. தேனீக்கள் ஒரு பூவிலிருந்து இன்னொரு பூவுக்குப் பறந்து சென்று தேனையும் மகரந்தத்தையும் சேகரிக்கின்றன. இப்படி ஒரு பூவிலிருந்து இன்னொரு பூவுக்குப் பறக்கும்பொழுது ஒரு பூவில் உள்ள மகரந்தம் இன்னொரு பூவில் உள்ள சூல்முடியில் ஒட்டிக் கொள்கிறது. அதனால், மகரந்தச் சேர்க்கையில் தேனீக்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

தேனீ ஒரு மணி நேரத்தில் 24 கிலோ மீட்டர் தூரம் வரை செல்லும். அவை ஒரு நாளில் அவற்றின் கூட்டிலிருந்து பூக்களைத் தேடிக் குறைந்தது 900 முறையாவது சென்று வரும். பல முறை ஒரு பூவிலிருந்து இன்னொரு பூவிற்குச் செல்லும். இதன்மூலம் மகரந்தச் சேர்க்கை மட்டுமின்றி தாவரங்களின் வளர்ச்சியையும் அதிகரிக்கும். மேலும், அவற்றின் நோய் எதிர்ப்புச் சக்தியையும் அதிகரித்து வலுப்படுத்தும்.

தேன் அருமையான மருத்துவத் தன்மைகளைக் கொண்டது. அது பன்னெடுங்காலமாகப் பல நோய்களுக்கு அருமருந்தாகப் பயன்பட்டு வந்துள்ளது. அளவுக்கு அதிகமான பூச்சிக் கொல்லி உபயோகமே தேன் கூடுகள் குறைந்து வருவதற்குக் காரணம் என ஆய்வுகள் கூறுகின்றன. பூச்சிக்கொல்லி தெளிக்கப்பட்ட ஒரு பூவில் அமரும் ஒரு தேனீ அதன் தேனைக் கூட்டுக்குள் கொண்டு வந்து சேகரிக்கின்றது. இதனை இராணித் தேனீ தொழிலாளர் தேனீக்குக் கொடுக்கும்பொழுது ஒட்டுமொத்த தேனீக்கள் நச்சுக்குள்ளாகி இறக்கின்றன. இதனால், கடந்த 20 ஆண்டுகளில் தேனீக்கள் திடீரெனக் குறைந்துள்ளன.

மனிதர்கள் தேனீக்களைப் பற்றி அறிந்து கொள்ளாததும் இதன் அழிவுக்கு மற்றொரு காரணமாகத் திகழ்கிறது. சிலர் தேன் கூட்டினைப் பார்த்ததுமே கடித்துவிடுமோ என்ற பயத்தில் ஒட்டுமொத்த கூட்டையே தீ வைத்துக் கொளுத்திவிடுகிறார்கள். எல்லாத் தேனீக்களும் ஆபத்தானவை அல்ல. ஒரு சில மலைத்தேனீக்களைத் தவிர்த்து அடுக்குத்தேனி, கொசுத்தேனீ போன்ற வகைகளை முறையாகக் கையாண்டால் அவை பாதுகாப்பானவையே.

சொந்தத் தேனீக் கூட்டை உருவாக்க விரும்புபவர்கள் இயற்கையான தேன் கூட்டினைக் கண்டுபிடித்து அதில் உள்ள இராணித் தேனீயைத் தன்னுடைய சொந்தத் தேனீப் பெட்டிக்கு மாற்ற வேண்டும். இராணித் தேனீயானது தொழிலாளர் தேனீ, ஆண் தேனீயைவிட 2.8 மடங்கு பெரிதாகும். இராணித் தேனீயைத் தேனீப் பெட்டிக்குள் வைத்த உடனே, மற்ற தேனீக்களும் இராணித் தேனியைத் தேடி வந்துவிடும்.

தேனீக்கள் விவசாயிகளின் விளைச்சலை அதிகரிப்பதில் முக்கியப் பங்காற்றுகின்றன என்பதை அவர்கள் மறந்துவிட்டனர். பூச்சிக் கொல்லிகள், களைக் கொல்லிகள் இன்னும் பல இரசாயனங்களைப் புறந்தள்ளிவிட்டு இயற்கை விவசாயத்தை நாடுவதே மிகச் சிறப்பு. இதன்மூலம் விவசாயிகளின் தோட்டத்தில் தேனீக்கள் அடைக்கலம் புகும். அதே வேளையில் விவசாயிகளுக்கு நன்மை செய்யும் பூச்சிகளும் நிறைய உருவாகும். விவசாயிகள் இறுதியில் நல்ல பலன்களையும் அடைவர் என்பது உண்மையே.

**(நன்றி: பினாங்கு பயனீட்டாளர் சங்கம்)**

# தொகுதி 20 மலேசியர்களின் பண்பாடுகள்

## பாடம் 1 பண்பாட்டைக் காப்போம்

**கலந்துரையாடுக.**

**சூழல்:**
மலேசிய மக்களும் பண்பாடும் எனும் தலைப்பில் மாணவர்கள் மேடையில் விவாதம் செய்கின்றனர்.




மலேசிய மக்கள் ஒற்றுமையுடனும் பண்புடனும் புரிந்துணர்வுடனும் வாழ்வதற்குப் பண்பாட்டுக் கூறுகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன என்றால் மிகையாகாது. மலேசியர்கள் பண்டிகைகளை விமரிசையாகக் கொண்டாடுகின்றனர். திறந்த இல்ல உபசரிப்புகளைச் செய்கின்றனர். அனைவரையும் அழைத்து அரவணைக்கின்றனர். கலை, பண்பாட்டு நிகழ்ச்சிகளை நடத்துகின்றனர்.

தீபாவளி கலை நிகழ்ச்சி, சிங்க நடனம், நோன்புப் பெருநாள் சிறப்பு நிகழ்ச்சி போன்றவற்றை நிகழ்த்தி அனைவரும் பிற சமயப் பண்பாட்டுக் கூறுகளை அறிய வழிவகுக்கின்றனர்.



ஆமாம், உண்மைதான். ஒவ்வொரு சமயத்தவரும் பெருநாள் காலங்களில் பாரம்பரிய உடைகளை உடுத்தி தங்களின் பண்பாட்டைப் பேணுகின்றனர். இன்று மலேசியர்கள் அனைவருக்கும் பிற இனத்தவரின் பாரம்பரிய ஆடைகள் பற்றி நன்கு தெரிந்திருக்கின்றது. மேலும், அவற்றை வாங்கி உடுத்திக் கொண்டு தங்களின் ஒற்றுமையை வெளிப்படுத்துகின்றனர். பிற இனத்தவரின் நடனங்களைக் கற்றுக் கொண்டு, மேடை நிகழ்ச்சிகளில் படைக்கின்றனர். மலேசியர்கள் ஒற்றுமையாகவும், நல்லிணக்கத்துடனும் வாழ்கின்றனர் என்பதற்கு இதுவே சான்று.




**1.3.4** • தலைப்பையொட்டிப் பண்புடன் விவாதம் செய்வர்.

தொகுதி 20

## இடுபணி 1

மலேசியாவில் வாழும் மூவின மக்களின் இணக்கப் போக்கினைப் பண்புடன் விவாதித்திடுக.

## இடுபணி 2

'மஞ்சு விரட்டு' எனும் தமிழர் பாரம்பரிய விளையாட்டைப் பற்றிப் பண்புடன் விவாதம் செய்திடுக.



## இடுபணி 3

'சைவ உணவு உங்களுக்கு நல்லது' எனும் தலைப்பையொட்டிப் பண்புடன் விவாதம் செய்திடுக.



## இடுபணி 4

**'திருவிழா கொண்டாட்டம் பண்பாட்டை வளர்ப்பதற்கு போதுமானவை' எனும் தலைப்பையொட்டிப் பண்புடன் விவாதம் செய்திடுக.**

சமயம் வளர்கின்றது.

இளைய தலைமுறையினருக்கு வழிகாட்டுகின்றது.

கடவுள் நம்பிக்கை மேலோங்குகிறது.



மக்கள் மத்தியில் ஒற்றுமை வளர்கிறது.

மன அமைதி ஏற்படுகின்றது.

பாரம்பரியம் காக்கப்படுகின்றது.

## இடுபணி 5

**இன்றைய இளைஞர்கள் இந்தியர்களின் சமயப் பண்பாட்டைக் கட்டிக் காக்கின்றனர். இத்தலைப்பையொட்டிப் பண்புடன் குழுவில் விவாதம் செய்திடுக.**

தொகுதி 20

பாடம் 2 தீபாவளித் திருநாள்

## வாசித்து அறிக.



பல்லின மக்கள் வாழும் மலேசியத் திருநாட்டில் பல பண்டிகைகளும் விழாக்களும் கொண்டாடப்பட்டு வருகின்றன. அவற்றுள் தீபத் திருநாளும் ஒன்றாகும். மகிழ்ச்சிக்கும் குதூகலத்திற்கும் உரிய ஒரு திருநாளாகத் தீபத் திருநாள் விளங்குகின்றது. தீபாவளி என்றாலே அனைவரின் மனத்திலும் மகிழ்ச்சி பெருக்கெடுக்கும். இல்லங்கள் பிரகாசமாகக் காட்சியளிக்கும்.

தீபம் என்றால் விளக்கு. ஆவளி என்றால் வரிசை. இத்திருநாளில் நாம் விளக்குகளை வரிசை வரிசையாக அடுக்கி வைத்து தீபம் ஏற்றி, வீட்டைப் பிரகாசமாக வைத்திருப்போம். இவ்வாறு செய்யும் பொழுது நம் மனத்தில் உள்ள இருள் நீங்கி, ஒளி பெருகுவதை நம்மால் உணர முடிகின்றது. துன்பத்திற்கு வழிவகுக்கின்ற கோபம், பொறாமை, அகங்காரம் போன்ற குணங்களை நீக்கி நம்மை நல்வழிப்படுத்துகின்ற ஒரு சிறந்த திருநாளாக இந்தத் தீபத் திருநாள் விளங்குகின்றது.



இப்பண்டிகை ஐப்பசி மாதத்தில் கொண்டாடப்படுகின்றது. தீபாவளிப் பண்டிகைக்கு முன்னர் இந்தியர்களின் வீடுகளில் முறுக்கு, அதிரசம், கெட்டி உருண்டை போன்ற பாரம்பரிய பலகாரங்களைச் செய்வர். தீபாவளிக்கு முதல் வாரத்தில் வீடுகளை அழகுபடுத்துவர். தீபாவளிப் பண்டிகையன்று அதிகாலையில் எண்ணெய் தேய்த்துக் குளிப்பர். பாரம்பரிய உடைகளை அணிந்து கொண்டு கோவிலுக்குச் சென்று இறைவனை வழிபடுவர்.

2.2.3 • வாசிப்புப் பகுதியிலுள்ள முக்கியக் கருத்துகளை அடையாளம் காண்பர்.

இறை வழிபாட்டுக்குப் பிறகு, வீட்டிலுள்ள பெரியவர்களிடம் பிள்ளைகள் ஆசிர்வாதம் பெறுவர். வீட்டுக்குப் பெரியவர்கள் தங்கள் பிள்ளைகள் எல்லா நலங்களும் பெற்று நீடூழி வாழ வேண்டுமென்று வாழ்த்துவர். அன்பைப் பரிமாறிக் கொள்வர். பின்னர், அனைவரும் ஒன்றாக அமர்ந்து மகிழ்ச்சியாக உணவு உண்பர். விருந்தோம்பல் ஏற்பாடு செய்வர்.



விருந்தோம்பல் மலேசியர்களிடையே உள்ள ஒரு சிறந்த பண்பாகும். ஒவ்வொரு விழாக் காலத்திலும் திறந்த இல்ல உபசரிப்பு ஏற்பாடு செய்யப்படும். இத்தீபத் திருநாளில் இல்லங்கள்தோறும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் திறந்த இல்ல உபசரிப்பில் மலேசியர்கள் அனைவரும் கலந்து சிறப்புச் சேர்ப்பர்.

மலேசியர்கள் ஒருவரை ஒருவர் நன்றாகப் புரிந்து கொள்ளவும் ஒற்றுமையை வலுப்படுத்தவும், நல்லுறவையும் நல்லிணக்கத்தையும் உருவாக்கவும் இத்தீபத் திருநாள் வழிவகுக்கின்றது என்றால் மிகையாகாது. மேலும், இத்தீபத் திருநாளின் வழி இந்தியர்களின் பாரம்பரியம், கலாச்சாரம், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றைப் பிற இனத்தவர்கள் அறிந்து கொள்ள வாய்ப்பாக அமைகின்றது. தீபத் திருநாள் ஒவ்வொருவரின் மன இருளை நீக்கிய ஓர் இன்பத் திருநாளாக கருதிக் கொண்டாடப்படுகின்றது.





**இடுபணி 1**

**தீபாவளிப் பண்டிகை பற்றிய முக்கியக் கருத்துகளை அடையாளம் கண்டு கூறுக; எழுதுக.**

**இடுபணி 2**

**வினாக்களுக்கு விடையளித்திடுக.**

1. தீபாவளி என்றால் என்ன என்பதை விளக்குக.
2. தீபாவளியைக் கொண்டாடும் காரணங்களைச் சுருக்கமாக எழுதுக.
3. விருந்தோம்பல் நிகழ்த்தப்படும் காரணத்தைக் கூறுக.
4. பண்டிகைகள் எவ்வாறு நமது பாரம்பரியத்தை வளர்க்க உதவுகின்றன?

இடுபணி 3

**பொங்கல் திருநாள் பற்றிய வாசிப்புப் பகுதியிலுள்ள முக்கியக் கருத்துகளை அடையாளங்கண்டு கூறுக.**

உலகம் முழுவதும் உள்ள தமிழர்களால் தை மாதம் முதலாம் நாள் உற்சாகமாகக் கொண்டாடப்படும் திருநாள் பொங்கல் திருநாளாகும். பொங்கல் என்பதற்குப் பொங்கி வழிதல் அல்லது பொங்குதல் என்பது பொருளாகும். வயல்களில் விளைந்து அறுவடைக்குத் தயாராக இருக்கும் நெற்கதிர்களில் சிறிதளவைக் கொண்டு வந்து வீட்டில் படைத்து வணங்குவது வழக்கம். அறுவடை தொடங்கியதைக் குறிக்கும் வகையில், பயிர் விளைச்சலுக்கு உதவிய மழை, சூரியன், கால்நடைகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் நாளே தைப் பொங்கல் திருநாள்.



தைப்பொங்கல் திருநாளுக்கு முதல் நாள் கொண்டாடப்படுவது போகிப் பண்டிகை. பழையன கழிதலும் புதியன புகுதலும் போகியின் தத்துவமாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. இந்தப் பண்டிகை, துயரங்களைப் போக்குவதாகக் கருதப்படுவதால் அதனைப் 'போக்கி' என்றார்கள். அந்தச் சொல்லே நாளடைவில் மருவிப் போகி என்றாகிவிட்டது. தாழ்ந்த உலகியல் ஆசையாகிய போக புத்தியை, ஞானம் என்னும் அக்கினியால் எரிக்க வேண்டும் என்பதே இந்தப் பண்டிகையின் தத்துவம்.



போகிக்கு மறுநாளான தை முதல் தேதி பொங்கல் திருநாளாகும். அன்று, புதுப்பானையில் புது அரிசியிட்டுப் பொங்கலிடுவது வழக்கம். மஞ்சள், கரும்பு, நெல், வாழை என்று வயலில் விளைந்தவற்றை எல்லாம் சூரிய பகவானுக்குப் படைப்பார்கள். தொடர்ந்து, பொங்கல் வைத்துப் பொங்கி வந்த பொங்கலைத் தலை வாழையிலையில் இட்டு முதலில் சூரிய பகவானுக்குப் படைப்பார்கள்.

பொங்கலுக்கு அடுத்த நாள் மாட்டுப் பொங்கல். உழவுத் தொழில் சிறப்பாக நடைபெற மனிதனுக்கு உதவியாக இருப்பவை மாடுகள். அந்த வாயில்லா ஜீவன்களுக்கு இந்த நாளில் நன்றி தெரிவிக்கப்படுகின்றது. அதோடு, பசுவையும் அதன் கன்றையும் நீராட்டி, கொம்புகளுக்கு வண்ணம் தீட்டி, அவற்றின் கொம்புகளிலும் கழுத்திலும் சலங்கைகளையும் மாலைகளையும் அணிவித்துப் பூஜை செய்வார்கள். சுவைமிகு பொங்கலையும் உண்ணக் கொடுப்பார்கள்.



பொங்கல் கொண்டாட்டத்தின் கடைசி நாள் காணும் பொங்கல். இது உறவினர்களையும் நண்பர்களையும் காணும் நாளாகும். தீபாவளியைப் போன்று பொங்கலும் ஒரு வகை ஒளித் திருவிழாவே. ஒளியை ஏற்றி மகிழ்ச்சி காண்பது தீபாவளித் திருநாள். சூரிய ஒளியைக் கண்டு மகிழ்ச்சி காண்பது பொங்கல் திருநாள். தமிழர் திருநாளான பொங்கல் திருநாளைக் கொண்டாடி மகிழ்வோம்.

**(மூலம்: அஞ்சலி 2012 - சில மாற்றங்களுடன்)**

## இடுபணி 4

**வினாக்களுக்கு விடை கூறுக; எழுதுக.**

1. பொங்கல் திருநாள் எதற்காகக் கொண்டாடப்படுகிறது?
2. போகிப் பண்டிகையின் தத்துவம் என்ன?
3. சூரியப் பொங்கல் ஏன் கொண்டாடப்படுகிறது?
4. மாட்டுப் பொங்கல் கொண்டாடப்படுவதைப் பற்றி உன்னுடைய கருத்தென்ன?
5. உங்கள் வீட்டில் பொங்கல் திருநாளை எவ்வாறு கொண்டாடுவீர்கள் என்று நண்பரோடு கலந்துரையாடுக.

## வளப்படுத்துதல்

**பின்வரும் பொங்கல் திருநாள் காலங்களில் என்னென்ன செய்வார்கள் என்பதைக் கூறுக; எழுதுக.**

போகிப் பண்டிகை

மாட்டுப் பொங்கல்

காணும் பொங்கல்

## குறைநீக்கல்

**பனுவலிலுள்ள முக்கியக் கருத்துளை அடையாளங்கண்டு கூறுக.**



மலேசியர்கள் பல்வேறு பண்பாடுகளை உடையவர்கள் என்பதைக் காட்டுகின்றது. ஒவ்வோர் இனத்தவரும் தங்களின் பாரம்பரிய பண்பாட்டு ஆடைகளை அணிவதைப் பெருமையாகக் கருதுகின்றனர். ஒவ்வோர் இனத்தவரின் ஆடைகளிலும் தனித்தன்மையையும் வரலாற்றுப் பின்னணியையும் காண முடியும். மலேசியத் தமிழர்கள் அணியும் பாரம்பரிய உடை சேலை, வேட்டி, ஜிப்பா ஆகும். பொதுவாகவே இந்த ஆடைகளைத் தமிழர்கள் கோவிலுக்குச் செல்லும்போதும் திருமண வைபவங்களிலும் விழாக் காலங்களிலும் அணிவர். இவற்றைத் தவிர சுடிதார், பாவாடை, தாவணி, பட்டுப் பாவாடை போன்ற ஆடைகளும் மலேசியாவில் வாழும் தமிழர்களின் பாரம்பரிய உடைகளாகும். பண்பாட்டு நிகழ்ச்சிகளில் இம்மாதிரியான ஆடைகளை அணிவதைப் பெற்றோர்கள் ஊக்குவிக்க வேண்டும்.


தொகுதி 20

# பாடம் 3 திருமண வைபவம்

## கலந்துரையாடி எழுதுக.









### இடுபணி 1

**மேற்காணும் படங்களைத் துணையாகக் கொண்டு இந்தியர்களின் திருமண வைபவத்தை விளக்கி வெளிநாட்டிலுள்ள உன்னுடைய அத்தை மகனுக்கு 160 சொற்களில் ஒரு கடிதம் எழுதுக.**

3.4.10 • 160 சொற்களில் உறவுக் கடிதம் எழுதுவர்.

## இடுபணி 2

**மலாய்க்காரர்களின் திருமண ஏற்பாட்டு முறைகளை விளக்கி சகோதரிக்கு 160 சொற்களில் ஒரு கடிதம் எழுதுக.**




## இடுபணி 3

**மலேசியர்கள் அவரவர் முன்னோர்கள் கடைப்பிடித்து வந்த கட்டுப்பாடுகளைப் பின்பற்றி வாழ்கின்றனர். அக்கட்டுப்பாடுகளுள் சிலவற்றைக் குறித்து விளக்கி உன் அண்ணன் மகளுக்கு 160 சொற்களில் ஒரு கடிதம் எழுதுக.**

## இடுபணி 4

**நம்முடைய நாட்டில் கொண்டாடப்படும் முக்கியப் பண்டிகைகளையும் கொண்டாடும் விதம் பற்றியும் இலண்டனில் வசிக்கும் உன் அண்ணனுக்கு ஒரு கடிதம் எழுதுக.**

தொகுதி 20

# பாடம் 4 இலக்கணம்

## ஆறாம் வேற்றுமை உருபுகளை அறிக.

ராமு: ஐயா, **எனது தங்கைக்கு** கணக்கே தெரியல?

ஐயா: ஏன் அப்படிச் சொல்கிறாய்?

ராமு: நேற்று 7 + 3 =10 என்று சொன்னாள். ஆனால், இன்று தனது பேச்சை மாற்றி 5 + 5 =10 என்று சொல்கிறாள்.




முத்து: **என்னுடைய பிஞ்சு மனமே** உடைந்து விட்டது டாக்டர்.

டாக்டர்: எது உடைந்தாலும் மாவு கட்டுப் போட்டுச் சரி செய்திடலாம். கவலைப்படாதீர்கள்.

முத்து: **உங்களது பாசத்திற்கு** மிக்க நன்றி டாக்டர்.



சிரிக்க
சிந்திக்க



மீனா: **அவருடைய தலையில்** அவ்வளவு கொட்டியும் அவருக்கு வலி தெரியவில்லையாம்.

மாலா: என்ன ஆச்சரியம்?

மீனா: ஆச்சரியம் ஒன்றுமில்லை. கொட்டியது, **அவரது தலைமுடிதானே**...



ரகு: இன்று **நமது தோழர்களின்** உயிரை இந்த மருத்துவர் காப்பாற்றிவிட்டார்.

ரவி: எப்படிக் காப்பாற்றினார்?

ரகு: இன்று **அவருடைய தலைமையில்** நடைபெறவிருந்த அறுவைச் சிகிச்சை தள்ளி வைக்கப்பட்டுவிட்டது.

5.5.4
- ஆறாம் வேற்றுமை உருபுகளாகிய அது, உடைய என்பனவற்றின் பின் வலிமிகாது என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

## இடுபணி 1

**நகைச்சுவைத் துணுக்கில் வண்ணமிடப்பட்ட சொற்றொடர்களை எடுத்து எழுதுக.**

## இடுபணி 2

**பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.**

1. இராமனுடைய + தேர்=
2. இறைவனது + படைப்பு=
3. தோழருடைய + கடிதம்=
4. பண்புடைய + செயல்=
5. அவரது + பேச்சு=
6. பெரியவரது + குடும்பம்=
7. தலைவருடைய + பணிவு=
8. ஏழையினது + கண்ணீர்=
9. சிறுவனுடைய + சிரிப்பு=
10. ஆசிரியரது + போதனை=

### அறிந்து கொள்க

ஆறாம் வேற்றுமை உருபுகளான அது, உடைய என்பனவற்றின் பின் வலிமிகாது.

**எ.கா:**

i) பாலனது + கை = பாலனது கை

ii) என்னுடைய + தட்டு = என்னுடைய தட்டு

## வளப்படுத்துதல்

**பின்வரும் சொற்றொடர்களைக் கொண்டு வாக்கியம் அமைத்திடுக.**

1. கவிஞருடைய கவிதை
2. குருவியினது கூடு
3. பேச்சாளரது சொற்பொழிவு
4. பிறருடைய பொருள்
5. மாணவருடைய படைப்பு
6. ஏழைகளது பணம்
7. இயற்கையினது சீற்றம்
8. பணக்காரருடைய பையன்

## குறைநீக்கல்

**ஆறாம் வேற்றுமை உருபுகளுடன் சொற்களை இணைத்து எழுதுக.**

| உடைய | அது |
|---|---|
| **எ.கா:**<br>தம்பி + உடைய = தம்பியுடைய | **எ.கா:**<br>மனிதன் + அது = மனிதனது |
| | |
| | |
| | |
| | |
| | |

தொகுதி 20

# தொகுதி 21 மொழியும் நாமும்

## பாடம் 1 டேவான் பஹாசா டான் புஸ்தாக்கா

### தகவல்களை அறிக.

**இலக்கு**
மொழியை இயக்கவும் வலுப்படுத்தவும்

**படைப்புகள்**
- அகராதிகள்
- இலக்கிய நூல்கள்
- கலைக் களஞ்சியங்கள்
- மொழிபெயர்ப்பு நூல்கள்
- மற்றும் பிற

**தோற்றம்**
22 ஜூன் 1956

**சேவை**
தேசிய மொழியை வளப்படுத்துதல்; வலுப்படுத்துதல்

**தத்துவம்**
மொழி இனத்தின் உயிர் (BAHASA JIWA BANGSA)




**நோக்கம்**

- எல்லாத் துறைகளிலும் தேசிய மொழியை வளப்படுத்துதல்; மேம்படுத்துதல்.
- மொழியின் இயல்புத் தன்மை சீரழியாமல் பாதுகாத்தல்.
- மொழியின் தனித்தன்மையைக் காத்தல்.
- அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப புதிய சொற்களை உருவாக்குதல்.
- பிறமொழிப் படைப்புகளை மொழிபெயர்த்தல்.
- புதிய நூலாக்கங்கள் உருவாக வாய்ப்பு வழங்குதல்; உருவாக்குதல்.
- நூல்களை வெளியீடு செய்தல்; அச்சிடுதல்.
- சுற்றறிக்கை, சஞ்சிகை போன்றவற்றை அச்சேற்றுதல்.
- தேசிய மொழியைப் பரவலாகப் பயன்படுத்த வழிவகுத்தல்.
- இலக்கிய மொழித் திறனை மேம்படுத்துதல்.
- மொழி தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளுதல்.

**1.5.2** • வரிபடக் கருவியிலுள்ள தகவல்களையொட்டிக் கருத்துரைப்பர்; முடிவு கூறுவர்.

## இடுபணி 1

**'டேவான் பஹாசா டான் புஸ்தாக்கா' பற்றி கருத்துரைத்திடுக; முடிவு கூறுக.**

## இடுபணி 2

**'டேவான் பஹாசா டான் புஸ்தாக்கா'வைப் போன்று மலேசியாவில் தமிழ்மொழிக் காப்பு மன்றம் அமைப்பது பற்றிக் கருத்துரைத்திடுக; முடிவு கூறுக.**

## இடுபணி 3

**தமிழ் மாணவர்கள் மொழியின் மீது ஈடுபாட்டையும் ஆர்வத்தையும் ஏற்படுத்தும் வழிமுறைகளைப் பற்றிக் கருத்துரைத்திடுக; முடிவு கூறுக.**

மொழி விளையாட்டுகள் நடத்துதல்.

போட்டிகளை ஏற்பாடு செய்தல்.
- கட்டுரைப் போட்டி
- பேச்சுப் போட்டி
- கதை சொல்லும் போட்டி
- திரட்டேடு தயாரிக்கும் போட்டி
- கவிதை சொல்லும் போட்டி

தமிழ் சார்ந்த நிகழ்ச்சிகளுக்கு அழைத்துச் செல்லுதல்.

கற்றல் கற்பித்தல் மாணவர்களை ஈர்க்கும் வண்ணம் அமைதல்.


நூலகத்தை முழுமையாகப் பயன்படுத்த வழிவகுத்தல்.

பெற்றோர்கள் சிறந்த தமிழ் நூல்களைப் பிள்ளைகளுக்கு வாங்கிக் கொடுத்தல்.

வசிப்பிடங்களில் பொதுத் தமிழ் நூலகம் அமைத்தல்.

## இடுபணி 4

**மொழி விளையாட்டுகளின் மூலம் கற்றல் நடவடிக்கை மிகச் சிறப்பான பயன்களைத் தரும். இக்கூற்றினை ஏற்று குமிழி வரைபடத்தில் மொழி விளையாட்டுகளின் பயன்களை எழுதுக.**



## பாடம் 2 தாய்மொழிக் கல்வி

### வாசித்து அறிக.

தாயின்வழி வந்த மொழி தாய்மொழி என்கின்றோம். நாம் பிறந்ததிலிருந்து **ஐம்புலன்களில்** உணரக் கூடிய உணர்வுகளோடு ஊறிய, சிந்திக்கக் கற்றுக் கொடுக்கும் மொழியாகத் தாய்மொழி விளங்குகின்றது. தாய்மொழி என்பது சிந்தனை மொழியாகும். தாய்மொழிக் கல்வி என்பது நாம் சிந்திக்கின்ற மொழியில் பயிற்றுவிக்கப்படுகின்ற கல்வியாகும்.

தாய்மொழி வழியில் தொடக்கக் கல்வியை வழங்கும் போது குழந்தைகள் தாம் நினைக்கும் **எண்ணங்களையும்** தாமறிந்த தகவல்களையும் தமக்குத் தெரிந்த மொழியில் உடனே வெளிப்படுத்துகின்றனர். தாய்மொழியில் கற்கும்போது ஒன்றைப் பற்றிய முழுமையான தகவல்களைத் தெளிவாக மாணவர்களால் அறிந்து கொள்ள முடிகின்றது. ஒரு மாணவன் தான் உணர்ந்தவற்றைத் தங்கு தடையின்றி வெளிப்படுத்தும் **வாய்ப்புத்** தாய்மொழிக் கல்வியால் ஏற்படுகின்றது. மேலும், தன்னம்பிக்கையுடன் பல புதுச் சிந்தனைகள், கண்டுபிடிப்புகள், ஆய்வுகள் எனத் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள முடிகின்றது.

நாம் யார் என்பதன் அடையாளத்தையும் நமக்கான முகவரியையும் தாய்மொழிதான் கொடுக்கின்றது. நமது மூதாதையர்கள் நமக்கு விட்டுச் சென்ற வாழ்வாதாரங்களையும் பாரம்பரியங்களையும் இலக்கியச் செழுமைகளையும் வரலாற்றுப் பதிவுகளையும் அறிந்து கொள்ள தாய்மொழி துணை புரிகின்றது.

நாம் நமது அடையாளத்தைப் பேண அடிப்படையில் செய்ய வேண்டியது என்னவென்றால், நமது தாய்மொழியைக் கற்பதேயாகும். நம்மையும் நமது பண்பாட்டையும் இணைக்கும் முக்கியமான **கருவியாகத்** தாய்மொழி விளங்குகின்றது. தாய்மொழியில் பேசுவதாலோ கற்பதாலோ பிறமொழிகளில் பின்தங்கிவிடுவோம் என்று பொருள்படாது. தாய்மொழி அறிவுடன் பள்ளிக்குச் செல்லும் பிள்ளை பிற மொழிகளையும் **இலகுவாகக்** கற்றுக் கொள்ள முடிகின்றது என்று ஆய்வுகள் கூறுகின்றன. மேலும், சிறுவயதில் பல மொழிகளைக் கற்கும் ஆற்றலைப் பிள்ளைகள் இயல்பாகவே கொண்டிருக்கிறார்கள். தாய்மொழியைக் கற்பதற்கும் பேசுவதற்கும் இலாப நட்டக் கணக்கைப் பார்க்கும் சிந்தனையை முதலில் **அகற்ற** வேண்டும். 'உன் தாய்மொழி மதிக்கப்படவில்லையென்றால், உன் குரல்வளை நெரிக்கப்படுகின்றது என்று பொருள்' என்னும் பிரெஞ்சுப் பழமொழியை எண்ணிப் பார்ப்போம். தாய்மொழியைப் போற்றி வணங்குவோம்.



2.3.5 • மொழி தொடர்பான உரைநடைப் பகுதியை வாசித்துக் கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.

## இடுபணி 1

**வண்ணமிடப்பட்ட சொற்களுக்குப் பொருள் கூறுக.**

## இடுபணி 2

**வினாக்களுக்கு விடை கூறுக; எழுதுக.**

1. தாய்மொழி என்றால் என்ன? அது நமக்கு என்ன உணர்த்துகின்றது?


2. தாய்மொழிக் கல்வி கற்பதால் ஏற்படும் நன்மைகள் யாவை?

3. தாய்மொழியை ஒருவர் எவ்வாறு பேணிக் காக்கலாம்?

4. தாய்மொழிக் கல்வி கற்பதன் அவசியத்தைப் பற்றி நண்பருடன் பகிர்ந்து கொள்க.

## வளப்படுத்துதல்

**தாய்மொழிக் கல்வியைப் பெறாத ஒருவர் எதிர்நோக்கும் சிக்கல்களைக் குமிழி வரைபடத்தில் எழுதுக.**




## குறைநீக்கல்

**தமிழ்மொழியை வளர்ப்பதிலும் காப்பதிலும் இவர்கள் எவ்வாறு துணை புரியலாம் என்று மர வரைபடத்தில் எழுதுக.**

**தமிழ்மொழியை வளர்த்தலும் காத்தலும்**

| பெற்றோர்கள் | ஆசிரியர்கள் | தமிழ் இயக்கங்கள் |
| --- | --- | --- |
| ______ | ______ | ______ |
| ______ | ______ | ______ |
| ______ | ______ | ______ |

தொகுதி 21

## பாடம் 3 தமிழ் எழுத்தாளரானால்...

### கலந்துரையாடி எழுதுக.

- இன்றைய தமிழ்ச் சமூகத்தினருக்கு ஏற்ற நல்லுரைகளைத் தினமும் நாளிதழில் எழுதுவேன்.
- இறைச் சிந்தனை தொடர்பான ஆன்மிகக் கட்டுரைகளை எழுதுவேன்.
- வாழ்க்கையில் எதிர்கொள்ளும் சவால்கள் சிக்கல்கள் ஆகியவற்றைக் களையும் வழிமுறைகளையும் நாளிதழ் கேள்வி பதில் அங்கத்தில் வெளியிடுவேன்.
- தன்னம்பிக்கை ஊட்டக்கூடிய சிந்தனைக் கட்டுரைகளை எழுதி நூலாக வெளியிடுவேன்.
- பள்ளி மாணவர்களுக்கான பாடப் பயிற்சி நூல்களை உருவாக்குவேன்.
- நகைச்சுவைத் துணுக்குகளை எழுதி மக்களின் மன அழுத்தத்தைப் போக்குவேன்; சிந்திக்கச் செய்வேன்.
- இலக்கியம், வாழ்வியல் தொடர்பான கட்டுரைகளை எழுதுவேன்.
- தமிழில் பிழையின்றி எழுத இலக்கணப் பயிற்சி நூல்களை உருவாக்குவேன்.



### இடுபணி 1

**'நான் தமிழ் எழுத்தாளரானால்' எனும் தலைப்பில் 160 சொற்களில் கற்பனைக் கட்டுரை ஒன்றனை எழுதுக.**

3.4.13 • 160 சொற்களில் கற்பனைக் கட்டுரை எழுதுவர்.

## இடுபணி 2

**'நான் ஒரு தமிழாசிரியரானால்' எனும் தலைப்பில் 160 சொற்களில் கற்பனைக் கட்டுரை எழுதுக.**

## இடுபணி 3

**'எனக்குத் தமிழ் நூலகம் அமைக்க வாய்ப்புக் கிடைத்தால்' எனும் தலைப்பில் பின்வரும் குறிப்புகளின் துணையுடன் 160 சொற்களில் கற்பனைக் கட்டுரை எழுதுக.**

- தமிழ் நூல்கள் பலவற்றைத் தருவிப்பேன்.
- ஒவ்வொரு துறைக்கும் ஏற்ற பிரிவுகளை உருவாக்குவேன்.
- தமிழ் இலக்கணப் பயிலரங்குகளை இலவசமாக நடத்த ஏற்பாடு செய்வேன்.
- பழங்கால நூல்களைக் குறிப்பு நூற்பிரிவில் வாங்கி வைப்பேன்.
- வாசகர்களுக்குக் கதை, சிறுகதை எழுதும் போட்டிகளை நடத்துவேன்.
- சமய நூல்களையும் புராண, இதிகாச நூல்களையும் வாங்கி வைப்பேன்.
- ஆன்மிக நெறியாளர்களின் ஆன்மிகச் சொற்பொழிவுகளை நிகழ்த்த ஏற்பாடு செய்வேன்.
- வாசகர்களுக்கு வழிகாட்ட தமிழ் அறிஞர்களை ஆலோசகர்களாக நியமிப்பேன்.



## இடுபணி 4

**கற்பனைக் கட்டுரையைத் தொடர்ந்து எழுதுக.**

என்ன ஆனந்தமாகப் பறக்கிறேன். ஆனால், என்னைக் கட்டுப்படுத்திக் கொண்டல்லவா இருக்கிறார் என் முதலாளி. என் உருவத்தையும் மேனி அழகையும் பார்க்கும் போது அடடா! அழகோ அழகு!

காற்று அடிக்கும் திசையில் நான் முந்திக் கொண்டு அசைகிறேன். காற்றோடு பேசுகிறேன்... பறக்கும் பறவையோடு பேசுகிறேன்... அதோ! அங்கே என்னைப் போன்று மேலும் சில நண்பர்கள் அழகாகப் பறக்கின்றனரே! ஆமாம்! அவர்களையும் என்னைப் போல பல வடிவத்தில் உருவாக்கிப் பறக்க விடுகின்றனரே! என் வேகம் மேகக் கூட்டங்களை உரசுவது போல் இருக்கிறதே! ஆனாலும் நூலைக் கட்டி என்னை இழுத்துப் பிடிக்கிறார், என்னை உருவாக்கிய இளைஞர்...

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்


## திருக்குறளையும் பொருளையும் அறிக.

திரு. முரளியும் திருமதி விமலாவும் ஒரு கிராமத்தில் எளிமையான வாழ்க்கை வாழ்ந்து வந்தனர். திரு. முரளி ஒரு தொழிற்சாலையில் பாதுகாவலராகப் பணிபுரிகிறார். திருமதி விமலா இல்லத்தரசி. அவர்களுக்கு மூன்று பிள்ளைகள். மூத்தவன் கருமுகிலன் ஐந்தாம் படிவம் பயில்கிறான். இரண்டாவது குமுதினி படிவம் இரண்டில் படிக்கிறாள். கடைக்குட்டி சாந்தி படிவம் ஒன்றில் பயில்கிறாள். பெண் பிள்ளைகள் கல்வியில் கவனம் செலுத்திப் பயின்று வருகின்றனர். ஆனால், மூத்தவன் கருமுகிலன் கல்வியில் நாட்டமின்றி இருக்கின்றான். பாடங்களில் அக்கறை செலுத்துவதில்லை. அதனால், அடிக்கடி அவனுடைய அப்பாவிடம் பேச்சு வாங்குவான். ஒரு நாள் தன் அம்மாவிடம் தனக்குப் புதிய மோட்டார் சைக்கிள் வேண்டும் என்று அடம் பிடித்தான். அப்பாவிடம் அம்மா தகவலைச் சொன்னதும் அப்பா, "படிக்கிற வயதில் உனக்கு எதற்கு மோட்டார் சைக்கிள்? இன்னும் மோட்டார் சைக்கிள் ஓட்டக் கூடிய தகுதி உனக்கு வரவில்லை. மேலும், உனக்கு வாகனம் ஓட்டும் உரிமமும் கிடைக்காது. முதலில் நன்றாகப் படி" என்று அறிவுரை கூறினார்.



"என் நண்பர்களில் சிலர் மோட்டார் சைக்கிளில்தான் பள்ளிக்கு வருகின்றனர்..." என்று மறுமொழி கூறினான். மேலும், நண்பர்களின் பெற்றோரைப் பற்றிப் பெருமையாகப் பேசினான். அப்பாவின் மனம் நோகும்படி சில கடுமையான வார்த்தைகளைப் பேசிவிட்டுக் கோபத்துடன் தன் அறைக்குள் புகுந்துகொண்டு கதவை ஓங்கிச் சாத்தினான்.

அப்பா இவ்வளவு தூரம் எடுத்துக் கூறியும் கேட்க மறுக்கின்றானே... குடும்பச் சூழ்நிலை பற்றிச் சிறிதும் அக்கறையில்லாமல் இருக்கின்றானே என்று அம்மா மனம் வருந்தினார். மறுநாள் காலையில், கருமுகிலன் பள்ளிக்குச் செல்லவில்லை. தன் நண்பனுடன் வெளியே சென்று சுற்றிவிட்டு மாலையில் ஒரு மோட்டார் சைக்கிளை ஓட்டிக் கொண்டு வந்தான்.




“யாருடைய மோட்டார் சைக்கிள் இது?” என்று அப்பா கேட்டார். “என் வாழ்க்கையைப் பற்றி யாரும் கவலைப்படத் தேவையில்லை. நான் இனிமேல் பள்ளிக்குச் செல்ல மாட்டேன்” என்று ஆணவம் கலந்த கோபத்தோடு திமிராகப் பதிலளித்தான். அண்ணனின் பேச்சைக் கண்டிக்க முயன்ற தங்கைகளுக்கு அறை விழுந்ததுதான் மிச்சம். தாய் தந்தையரின் பேச்சைப் பொருட்படுத்தாமல் மோட்டார் சைக்கிளை எடுத்துக் கொண்டு வேகமாகப் புறப்பட்டான். இரவு வெகு நேரம் ஆகியும் வீடு திரும்பவில்லை. விடியற்காலை 4:00 மணிக்கு மருத்துவமனை அவசரச் சிகிச்சைப் பிரிவிலிருந்து வந்த தொலைபேசி அழைப்பைக் கேட்டுக் குடும்பத்தினர் பதறியடித்து விரைந்தனர். மகனின் நிலையைப் பார்த்துக் கதறியழுதனர்.

**தன்னைத்தான் காக்கின் சினம்காக்க காவாக்கால்**
**தன்னையே கொல்லும் சினம். (குறள் 305)**

என்ற குறளுக்கொப்ப சினம் என்கிற உணர்ச்சியை வளர விட்டால் அது வளர்த்தவனையே கொல்லும் என்பது மெய்ப்பிக்கப்பட்டிருந்தது.

### திருக்குறளும் பொருளும்

**தன்னைத்தான் காக்கின் சினம்காக்க காவாக்கால்**
**தன்னையே கொல்லும் சினம். (குறள் 305)**

**பொருள்:**
ஒருவன் தன்னைத்தான் காத்துக் கொள்வதானால், சினம் வராமல் காத்துக் கொள்ள வேண்டும்; காக்காவிட்டால், சினம் தன்னையே அழித்துவிடும்.

**கருத்து:**
கோபம் ஒருவரை அழிக்க வல்லது.

**4.2.2** • இரண்டாம் படிவத்திற்கான திருக்குறளையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

## இடுபணி 1


**திருக்குறளையும் அதன் பொருளையும் அறிந்து கூறுக; எழுதுக.**

## இடுபணி 2

**கோபம் ஏற்பட்டால் அதனால் ஏற்படும் பாதிப்புகளைப் பற்றிக் குழுவில் கலந்துரையாடுக; எழுதுக.**

## இடுபணி 3

**கோப உணர்ச்சியைக் கட்டுப்படுத்த ஒருவர் எவ்வாறான பயிற்சிகளை மேற்கொள்ளலாம் என்பதைக் குமிழி வரைபடத்தில் எழுதுக.**




## வளப்படுத்துதல்

**திருக்குறளையும் அதன் பொருளையும் மனனம் செய்து கூறுக; எழுதுக.**

## குறைநீக்கல்

**அ. திருக்குறளை நிறைவு செய்க.**

தன்னைத்தான் காக்கின் ______________________

______________________

**ஆ. பொருள் எழுதுக.**

1. தன்னை ______________________
2. காக்க ______________________
3. சினம் ______________________
4. காவாக்கால் ______________________
5. கொல்லும் ______________________

# அகர நிரல் குறிப்பு


**அ**
அடித்தளமாக 1
அமர்ந்து 3
அறுவடை 33
அளப்பரியது 33
அற்புதமான 106
அரவணைப்பு 179

**ஆ**
ஆரோக்கியம் 18, 21
ஆற்றல் 109
ஆழமாக 111

**இ**
இணையம் 25
இயைந்து 81
இலக்கியம் 118

**உ**
உடல் எடை 49
உறைவிடம் 90

**ஊ**
ஊட்டினார் 35

**எ**
எண்ணங்கள் 222
எள்ளளவும் 124
எதிர்நோக்கும் 124
எட்டாத 189

**ஏ**
ஏற்பாடு 124
ஏச்சு 125

**ஐ**
ஐயுறுகின்றனர் 151

**க**
கணப்பொழுது 25
கட்டுவதற்கான 70
கணினி 85
கண்காட்சி 93
கல்வெட்டுகள் 159

**கா**
காணொளி 30

**ச**
சகோதரிகள் 70
சமாதானம் 180

**சா**
சாத்திரங்கள் 108
சாத்தியம் 138

**செ**
செப்பேடுகள் 159

**சொ**
சொற்பொழிவு 21

**த**
தன்னலம் 198
தகவல் 222
தலையாய 161

**தொ**
தொன்மையான 161

**ப**
பழச்சாறு 48
பராமரிப்பு 74
பரிணமித்து 82
பணியாற்றி 109

**பா**
பாதுகாத்தல் 67

**பு**
புகைப்படங்கள் 73
புற்புதர் 74

**பெ**
பெருமிதம் 35

**பொ**
பொற்காலம் 120
பொங்கல் 214

**ஞா**
ஞானம் 214

**ந**
நறுமணம் 70
நல்லுரை 224
நகைச்சுவை 224

**நே**
நேர்காணல் 95

**ம**
மகிழ்ச்சி 59
மனக்கவலை 47
மறுசுழற்சி 201
மருவி 214
மருதாணி 217

**மா**
மாலுமி 62
மாபெரும் 160

**மி**
மின்விசை 190

**மு**
முதலுதவி 190

**மெ**
மெய்நிகர் 25
மெய்யுணர்வை 180

**மை**
மையப்படுத்தி 25

**வ**
வலைத்தளம் 27
வழிவகுத்து 47
வடிவம் 82
வட்டெழுத்து 82
வளர்ச்சி 110

**வா**
வாடிவதங்கி 51
வாகனம் 93
வாரம் 189
வாயுக்கலன் 189

**வி**
விரிசல்கள் 5
விஞ்ஞானம் 32
விண்வெளி 32
விமானி 62
விரைந்து 227

**வெ**
வெறுமனே 106
வெகுமதி 154

# துணை நூல் பட்டியல்


1. கி. ஜெயமணி. (2016). உயர் ஞான தீபம். 3ஜி கிரியேசன். ஈரோடு.
2. கா.நா. சந்திரன். (2012). அஞ்சலி. அஞ்சலி பதிப்பகம். கோலாலம்பூர்.
3. க. இராமச்சந்திரன். (2006). இனிய தமிழ் இலக்கணம். குமரன் பதிப்பகம். சென்னை.
4. மு. கணேசன். (2015). உயிர்த்தெழும் மௌனங்கள். ஓரிசோன் வேவ்ஸ். ரவாங்.
5. சு.கி. சிவம். (2007). வாழ்வியல் சிந்தனைகள். கற்பகம் புத்தகாலயம். சென்னை.
6. மங்கையர் யுகம். (2016). உணவு. துங்கீசம் வெளியீடு. சைலோக் அச்சகம். சிலாங்கூர்.
7. இணைப்பேராசிரியர் எஸ். குமரன் குழுவினர். (2015). ஒன்பதாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு. குமுதம் அச்சகம். சென்னை.
8. அ.கி. பரந்தாமனார். (2002). நல்ல தமிழ் எழுத வேண்டுமா? அல்லி நிலையம். சென்னை.
9. மூ.ஆ. அப்பன். (2015). நோயின்றி வாழ. பாப்புலர் பப்ளிகேஷன்ஸ். சென்னை.
10. கோ. பரமசிவம். (2017). துங்கீசம். சைலோக் அச்சகம். சிலாங்கூர்.
11. இன்பத் தமிழ் இலக்கிய விழா மலர். (2011). கோலாலம்பூர்.
12. வீ. சந்திரன். (2010). பகலில் இரவா? பூர்ணமா அச்சகம். சிலாங்கூர்.


## இணையத் தளம்


http://www.oliviassolutions.com/blog/advantages-disadvantages-of-hydroponics/ பக்கம் 34
http://www.itstamil.com/a-p-j-abdul-kalam.html பக்கம் 35
http://tamil.oneindia.com/cj/puniyameen/2009/0512-international-nurses-day.html பக்கம் 38
https://senthilvayal.com/2014/11/25/தினம்-ஒரு-கீரை-ஒரு-கம்ப்ள/ பக்கம் 43
http://www.unavulagam.in/2012/01/blog-post_17.html பக்கம் 49
https://www.youtube.com/watch?v=Yg9GEarMBAs பக்கம் 91
http://ponmolikal.blogspot.my/p/01_1022.html பக்கம் 109
https://www.thirukkural.net/history.php?lang=ta பக்கம் 118
http://tamil.oneindia.com/news/india/remembering-kalpana-chawla-on-her-12th-death-anniversary-245727.html பக்கம் 139
https://vidhai2virutcham.com/2011/11/14/சதுரங்கம்-விதிமுறைகள்/ பக்கம் 145
https://www.youtube.com/watch?v=lRITPjraXgA பக்கம் 157
https://www.moh.gov.my பக்கம் 197